Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Special Commissioner and Commissioner of
Stationery and Printing, Chennai-600 002.

1563
25-3-09

வெளியீடு: 28-8-2008 Issued: 28-8-2008

19 மார்
சென்னை-600 008

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 22, 2008—தொகுதி 49—எண் 1**

**Tuesday, the 22nd April 2008 —Volume 49—No. 1**

D
V211,31'p08.
p08.49.1
228379

...ன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
...ve Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

## 22-4-2008

### உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | v-x |
| Governor and Council of Ministers | xi-xv |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xvii-xix |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xxi-xxxi |
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-42 |
| **2. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| கொடைக்கானல் மலைப் பகுதியில் காவல் துறையினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதல் | 43-62 |
| திரு. ஓ. பன்னீர்செல்வம் | 43-46 |
| *திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் | 46-50 |
| திரு. கி. ஆறுமுகம் | 51-52 |
| செல்வி கே. பாலபாரதி | 52-54 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 54-56 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 57-62 |
| **3. விதி 110-ன்கீழ் அறிக்கை—** | |
| ஊராட்சித் தலைவர்களின் தேசிய மாநாட்டில் தமிழ்நாட்டுப் பிரதிநிதிகள் பங்கேற்காதது குறித்து மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் அறிக்கை | 62-65 |
| *மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் | 62-65 |

பக்கங்கள்

**4. தகவல் கோரல்—**

(அ) ஊராட்சித் தலைவர்களின் தேசிய மாநாட்டில் தமிழ்நாட்டுப் பிரதிநிதிகள் பங்கேற்க, மத்திய பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் அனுப்பிய தகவல் 65-72

*திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் 65,66

திரு. ஓ. பன்னீர்செல்வம் 67-68

திரு. ஜி.கே. மணி 70

திரு. சி. கோவிந்தசாமி 70-71

திரு. வை. சிவபுண்ணியம் 71-72

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி 67,68-69

*மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் 66-67,72

(ஆ) மதுரை, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சிலையை அவமரியாதை செய்தது 72-73

திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன் 73

**5. கவன ஈர்ப்பு—**

வேலூர் மாவட்டம், ஜவ்வாது மலை, வனத் துறைப் பள்ளிகளைப் பள்ளிக் கல்வித் துறையின்கீழ் கொண்டு வருதல் 73-79

திரு. தி.க. ராஜா 74,76,78-79

மாண்புமிகு திரு. என். செல்வராஜ் 74-75, 77-78,79

**6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—**

(அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 79-80

(ஆ) தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையச் சட்டமுன்வடிவு, 2008 80-81



பக்கங்கள்

**7. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 3–நீதி நிருவாகம்
(ஆ) கோரிக்கை எண் 33–சட்டத் துறை 81-172

*மாண்புமிகு திரு. துரைமுருகன் 81,99,110,123, 124,144 153-168,169,170

*திரு. எம்.வி.ஆர். வீரகபிலன் 110-116

திரு. த. மகேஷ் கிருஷ்ணசாமி 117-122

திரு. சி. ஞானசேகரன் 88-89,105,122-129

திரு. த.அ. மேகநாதன் 86-87,102,129-134

*திரு. ப. டில்லி பாபு 96,104,134-138

*திரு. எஸ். இராசசேகரன் 87-88,103-104,138-141

*திரு. வீர. இளவரசன் 98,109,141-144

டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத் 144-148

திரு. ரெ. நெடுஞ்செழியன் 148-153

**8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 172-173

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் .. **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

   பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல், தொழில்கள், தகவல் தொழில் நுட்பவியல், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு, கடவுச் சீட்டுகள் மற்றும் சிறப்பு முயற்சிகள்

2. நிதி அமைச்சர் .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

   நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை மற்றும் தேர்தல்கள்

3. மின்சாரத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

   மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம்

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228379
சென்னை-600 008
நூலகம்

**4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

**5. கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:**

கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்

**6. வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

**7. பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**

பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம், செயற்திட்டப் பணிகள், சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்

**8. உயர் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் தொழில்நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்.



**9. போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.என். நேரு:**

போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

**10. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

**11. ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:**

குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

**12. வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், சிறைச்சாலைகள், எடைகள்-அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள், நிறுவனங்களைப் பதிவு செய்தல், வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு

**13. சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:**

சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

**14. செய்தித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு, அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

**15. உணவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எ.வ. வேலு:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

**16. குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:**

குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு

**17. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள்

**18. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு



**19. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

**20. கைத்தறித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்

**21. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல்

**22. வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:**

வணிக வரிகள்

**23. சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு மற்றும் இஸ்லாமிய அறக்கட்டளைகள் (வக்ஃபு)

**24. வனத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:**

வனங்கள் மற்றும் சின்கோனா

**25. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

**26. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள்

**27. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு

**28. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

**29. மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

**30. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

**31. கதர்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**

   Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture, Passports and Special Initiatives

2. **Minister for Finance** .. **The Hon. Prof. K. Anbazhagan:**

   Finance, Planning, Legislative Assembly and Elections

3. **Minister for Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veeraswami:**

   Electricity, Non-Conventional Energy Development and Personnel and Administrative Reforms

4. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru M.K. Stalin:**

   Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

5. **Minister for Co-operation** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**

   Co-operation, Statistics and welfare of Ex-Servicemen

18. **Minister for Labour** .. **The Hon. Thiru T.M. Anbarasan:**

Labour, Population, Employment and Training, Steel Control, Newsprint Control, Census and Urban and Rural Employment

19. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru K.R. Periakaruppan:**

Hindu Religious and Charitable Endowments

20. **Minister for Handlooms** .. **The Hon. Thiru NKK. P. Raaja:**

Handlooms and Textiles

:.**Minister for School Education** .. **The Hon. Thiru Thangam Thenarasu:**

School Education and Archaeology

22. **Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru S.N.M. Upayathulla:**

Commercial Taxes

23. **Minister for Environment** - **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:**

Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs

24. **Minister for Forests** - **The Hon. Thiru N. Selvaraj:**

Forests and Cinchona



25. **Minister for Highways** - **The Hon. Thiru M.P. Saminathan:**

Highways and Ports

26. **Minister for Social Welfare** - **The Hon. Dr. (Tmt.) Poongothai:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes

27. **Minister for Animal Husbandry** - **The Hon. Tmt. P. Geetha Jeevan:**

Animal Husbandry

28. **Minister for Adi Dravidar Welfare** - **The Hon. Tmt. A. Tamilarasi:**

Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour

29. **Minister for Fisheries** - **The Hon. Thiru K.P.P. Samy:**

Fisheries and Fisheries Development Corporation

30. **Minister for Dairy Development** - **The Hon. Thiru U. Mathivanan:**

Milk and Dairy Development

31. **Minister for Khadi** - **The Hon. Thiru K. Ramachandhiran:**

Khadi and Village Industries Board, Bhoodhan and Gramadhan

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

I 9 ... 600 006

## பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்

## பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி

## மாற்றுத் தலைவர்கள் #

திரு. கு. பிச்சாண்டி

திரு. குத்தாலம் க. அன்பழகன்

திருமதி டி. யசோதா

திரு. கி. ஆறுமுகம்

திரு. என். நன்மாறன்

திருமதி பி. பத்மாவதி

## செயலாளர்

திரு. மா. செல்வராஜ்

---

# 26-3-2008 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். - இணைச் செயலாளர்

திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். - இணைச் செயலாளர்

திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். - இணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. தி. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எட்., பி.எல். - துணைச் செயலாளர்

திரு. அமு.பி. ஜமாலுதீன், எம்எஸ்சி., பி.எல். - துணைச் செயலாளர்

திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். - துணைச் செயலாளர்

திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். - துணைச் செயலாளர்

திருமதி சீ. நிர்மலா, பி.காம்., பி.ஜி.எல். - துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திருமதி ப. சரசுவதி, எம்.ஏ., பி.ஜி.எல். - துணைச் செயலாளர்

திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். - துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். - துணைச் செயலாளர்

திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.எல்., பி.ஜி.டி.சி.ஏ. - துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். - துணைச் செயலாளர்

திரு. து. சீனிவாசன், பி.ஏ. - குழு அலுவலர்

திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். - பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர்

திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். - குழு அலுவலர்



திரு. ம. பன்னீர் செல்வம் - தலைமை நிருபர்

திருமதி இரா. சந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்

திரு. கி. மாதவன், எம்.ஏ., பி.ஜி.எல். - தலைமை நிருபர்

திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். - தலைமை நிருபர்

திருமதி ஓ.வி. கல்யாணி, பி.எஸ்சி., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்

திரு. கே. இராமகிருஷ்ணா, பி.எஸ்சி., பி.எல். - சார்புச் செயலாளர்

திருமதி கோ. காயத்ரி, பி.எஸ்சி., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்

திரு. கே. பாலசுப்ரமணியன், எம்.ஏ., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்

திருமதி கு. இந்துமதி, பி.எஸ்சி., எம்.எட்., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்

திரு. ம.ச. சந்திரமௌலி, எம்.ஏ., பி.காம்., பி.ஜி.எல். - தலைமை நிருபர்

செல்வி எஸ். பிலோமினா, எம்.எஸ்.டபிள்யூ., பி.எட்., பி.எல். - சார்புச் செயலாளர்

திரு. பா. அன்பழகன், பி.எஸ்சி., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்

திருமதி வி.வி. ரமா, எம்.ஏ., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்

திரு. இரா. பழனிசாமி, பி.ஏ., பி.எல். - சார்புச் செயலாளர்

திரு. சு. சந்திரன், பி.ஏ., பி.எல். - சார்புச் செயலாளர்

திரு. பா.சி.க. சிங்காரவேலு, எம்.ஏ., பி.எல். - சார்புச் செயலாளர்

திருமதி மு. சுப்புலட்சுமி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல். - சார்புச் செயலாளர்

## பேரவை உறுப்பினர்கள்
### (அகர வரிசைப்படி)
### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அங்கையற்கண்ணி, செல்வி ஆ. | - சங்கராபுரம் |
| 2. | அப்துல் பாசித், திரு. எச். | - வாணியம்பாடி |
| 3. | அப்பாவு, திரு. மு. | - ராதாபுரம் |
| 4. | அமரமூர்த்தி, திரு. து. | - அரியலூர் |
| 5. | அரி, திரு. கோ. | - திருத்தணி |
| 6. | அருண்மொழிதேவன், திரு. ஆ. | - சிதம்பரம் |
| 7. | அருள் அன்பரசு, திரு. | - சோளிங்கர் |
| 8. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | - திருச்செந்தூர் |
| 9. | அன்பரசன், திரு. தா.மோ. | - ஆலந்தூர் |
| 10. | அன்பழகன், திரு. எம். | - பழனி (செ.வ.) |
| 11. | அன்பழகன், திரு. கே.பி. | - பாலக்கோடு |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | - துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு. | - திருச்சிராப்பள்ளி–I |
| 14. | ஆவுடையப்பன், திரு. இரா. | - அம்பாசமுத்திரம் |
| 15. | ஆறுமுகம், திரு. கி. | - செங்கல்பட்டு |
| 16. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | - அண்ணா நகர் |
| 17. | இராசசேகரன், திரு. எஸ். | - ஆலங்குடி |
| 18. | இராணி, திருமதி இரா. | - உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 19. | இராமகிருஷ்ணன், திரு. நா. | - கம்பம் |
| 20. | இராமசாமி, திரு. கரி. | - திருவாடனை |

21. இராமசாமி, திரு. தி. - ஸ்ரீவில்லிபுத்தூர்
22. இராமசுவாமி, திரு. கே.பி. - ராசிபுரம்
23. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
24. இராமச்சந்திரன், திரு. டி. - தளி
25. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். - பள்ளிப்பட்டு
26. இராம்பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
27. இராஜா, திரு. எஸ்.ஆர். - தாம்பரம்
28. இராஜேந்திரன், திரு. ஆ. - வீரபாண்டி
29. இராஜேந்திரன், திரு. இரா. - பனமரத்துப்பட்டி
30. இராஜேந்திரன், திரு. க. - ஜெயங்கொண்டம்
31. இராஜேந்திரன், திரு. சபா. - நெல்லிக்குப்பம்
32. இராஜ்குமார், திரு. ம. - பெரம்பலூர் (செ.வ.)
33. இளமதி சுப்பிரமணியன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
34. இளவரசன், திரு. வீர. - திருமங்கலம்
35. இளவழகன், திரு. கே.எல். - ஆற்காடு
36. உதயசூரியன், திரு. தா. - சின்னசேலம்
37. உதயம் சண்முகம், திரு. - அறந்தாங்கி
38. உபயதுல்லா, திரு. சி.நா.மீ. - தஞ்சாவூர்
39. உலகநாதன், திரு. கே. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
40. எதிரொலி மணியன், திரு. கோ. - பெரணமல்லூர்
41. ஐயப்பன், திரு. கோ. - கடலூர்
42. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)



43. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
44. கண்ணப்பன், திரு. மு. - தொண்டாமுத்தூர்
45. கண்ணன், திரு. பெ. - தாரமங்கலம்
46. கண்ணன், திரு. வே. - செஞ்சி
47. கமலாம்பாள், திருமதி பெ. - காஞ்சிபுரம்
48. கருணாநிதி, கலைஞர் மு. - சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. - தென்காசி
51. கலியவரதன், திரு. வீ.ஏ.டி. - முகையூர்
52. கலீலூர் ரஹ்மான், திரு. ம.அ. - அரவக்குறிச்சி
53. கலைராஜன், திரு. வி.பி. - தியாகராய நகர்
54. காந்தி, திரு. ஆர். - இராணிப்பேட்டை
55. காமராஜ், திரு. பெ. - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
56. காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. - மதுராந்தகம்
57. காவேரி, திரு. வை. - எடப்பாடி
58. கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ். - கலசப்பாக்கம்
59. கீதா ஜீவன், திருமதி பி. - தூத்துக்குடி
60. குணசேகரன், திரு. சு. - சிவகங்கை
61. குணசேகரன், திரு. ம. - மானாமதுரை (செ.வ.)
62. குத்தாலம் க. அன்பழகன், திரு. - குத்தாலம்
63. குமரகுரு, திரு. இரா. - திருநாவலூர்

| | | |
|---|---|---|
| 64. | குருசாமி, திரு. செ. | - அந்தியூர் (செ.வ.) |
| 65. | கோபாலன், திரு. போ. | - உதகமண்டலம் |
| 66. | கோபிநாத், திரு. கே. | - ஓசூர் |
| 67. | கோவிந்தசாமி, திரு. சி. | - திருப்பூர் |
| 68. | கோவை தங்கம், திரு. | - வால்பாறை (செ.வ.) |
| 69. | சக்கரபாணி, திரு. அர. | - ஒட்டன்சத்திரம் |
| 70. | சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி | - அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 71. | சண்முகம், திரு. சி.வி. | - திண்டிவனம் |
| 72. | சண்முகவேலு, திரு. சி. | - உடுமலைப்பேட்டை |
| 73. | சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. | - வாசுதேவநல்லூர் (செ.வ) |
| 74. | சந்திரகாசி, திரு. மா. | - வரகூர் (செ.வ.) |
| 75. | சந்திரா, திருமதி மு. | - ராஜபாளையம் (செ.வ.) |
| 76. | சாமி, திரு. ஆர். | - மேலூர் |
| 77. | சாமி, திரு. கே.பி.பி. | - திருவொற்றியூர் |
| 78. | சாமிநாதன், திரு. மு.பெ. | - வெள்ளக்கோவில் |
| 79. | சிவசங்கர், திரு. எஸ்.எஸ். | - ஆண்டிமடம் |
| 80. | சிவபுண்ணியம், திரு. வை. | - மன்னார்குடி |
| 81. | சிவராஜ், திரு. சு. | - ரிஷிவந்தியம் |
| 82. | சிவானந்தம், திரு. ஆர். | - ஆரணி |
| 83. | சிவாஜி, திரு. இ.ஏ.பி. | - திருவள்ளூர் |
| 84. | சின்னசாமி, திரு. அ. | - போளூம்பட்டு (செ.வ.) |
| 85. | சின்னசாமி, திரு. ஆர். | - சிங்காநல்லூர் |



| | | |
|---|---|---|
| 86. | சின்னச்சாமி, திரு. செ. | - மருங்காபுரி |
| 87. | சின்னதுரை, திரு. கு. | - தலைவாசல் (செ.வ.) |
| 88. | சின்னப்பன், திரு. போ. | - விளாத்திகுளம் |
| 89. | சின்னராஜ், திரு. ஓ.கே. | - மேட்டுப்பாளையம் |
| 90. | சீனிவாசன், திரு. கு. | - பூங்கா நகர் |
| 91. | சுதர்சனம், திரு. டி. | - பூந்தமல்லி |
| 92. | சுந்தரம், திரு. எம்.ஆர். | - ஆத்தூர் |
| 93. | சுந்தரம், திரு. ந. | - காரைக்குடி |
| 94. | சுந்தர், திரு. க. | - உத்திரமேரூர் |
| 95. | சுப்பிரமணியம், திரு. ஓ. | - பவானிசாகர் |
| 96. | சுப்புராம், திரு. ராம. | - திருமயம் |
| 97. | சுப்ரமணியன், திரு. ந. | - குளத்தூர் (செ.வ.) |
| 98. | சுரேஷ் ராஜன், திரு. என். | - கன்னியாகுமரி |
| 99. | சூரியகுமார், திரு. என்.கே.ஆர். | - நாட்ராம்பள்ளி |
| 100. | செங்குட்டுவன், திரு. டி. | - கிருஷ்ணகிரி |
| 101. | செங்கோட்டையன், திரு. கே.ஏ. | - கோபிசெட்டிப்பாளையம் |
| 102. | செந்தமிழன், திரு. ஞா. | - சைதாப்பேட்டை |
| 103. | செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. | - மேல்மலையனூர் |
| 104. | செந்தில் பாலாஜி, திரு. வே. | - கரூர் |
| 105. | செல்வம், திரு. கு. | - மங்களூர் (செ.வ.) |
| 106. | செல்வராஜ், திரு. என். | - முசிறி |
| 107. | செல்வராஜ், திரு. து. | - ஸ்ரீவைகுண்டம் |
| 108. | செல்வி ராமஜெயம், திருமதி | - புவனகிரி |

109. சேகரன், திரு. கூ.ந. - திருவெறும்பூர்
110. சேகர், திரு. எஸ்.வி. - மயிலாப்பூர்
111. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
112. சையது கௌஸ் பாஷா, திரு. சை. - மதுரை மத்தி
113. சௌந்தரபாண்டியன், திரு. அ. - லால்குடி
114. சௌந்திரபாண்டியன், திரு. அ. - குன்னூர் (செ.வ.)
115. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
116. ஞானதாஸ், திரு. ஆர். - சிவகாசி
117. டில்லி பாபு, திரு. ப. - அரூர் (செ.வ.)
118. தங்கமணி, திரு. பி. - திருச்செங்கோடு
119. தங்கம் தென்னரசு, திரு. - அருப்புக்கோட்டை
120. தங்கவேலன், திரு. சுப. - கடலாடி
121. தண்டபாணி, திரு. மா. - வேடசந்தூர்
122. தமிழரசி, திருமதி ஆ. - சமயநல்லூர் (செ.வ.)
123. தமிழரசு, திரு. அ. - ஓமலூர்
124. தமிழ்செல்வன், திரு. சி. - ஏற்காடு (ஆ.வா.)
125. தம்பிதுரை, முனைவர் மு. - பர்கூர்
126. தர்மலிங்கம், திரு. எல்.பி. - சத்தியமங்கலம்
127. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
128. தியோடர் ரெஜினால்டு, திரு. த. - பத்மநாபபுரம்
129. திருநாவுக்கரசு, திரு. கே. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
130. துரைக்கண்ணு, திரு. இரா. - பாபநாசம்



131. துரை சந்திரசேகரன், திரு. - திருவையாறு
132. துரைசாமி, திரு. வீ.பெ. - சங்கரி (செ.வ.)
133. துரைமுருகன், திரு. - காட்பாடி
134. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி
135. தேன்மொழி, திருமதி எஸ். - நிலக்கோட்டை (செ.வ.)
136. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
137. நெடுஞ்செழியன், டாக்டர் க. - கபிலர்மலை
138. நெடுஞ்செழியன், திரு. ரெ. - புதுக்கோட்டை
139. நேரு, திரு. கே.என். - திருச்சிராப்பள்ளி–2
140. பதர் சயீத், திருமதி - திருவல்லிக்கேணி
141. பத்மாவதி, திருமதி பி. - நன்னிலம் (செ.வ.)
142. பரஞ்ஜோதி, திரு. மு. - ஸ்ரீரங்கம்
143. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
144. பலராமன், திரு. பி. - பொன்னேரி (செ.வ.)
145. பழனிசாமி, திரு. ஆர்.எம். - மொடக்குறிச்சி
146. பன்னீர்செல்வம், திரு. எம். - சீர்காழி (செ.வ.)
147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
148. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
149. பாண்டுரங்கன், திரு. கு. - அணைக்கட்டு
150. பாபு, திரு. வி.எஸ். - புரசைவாக்கம்
151. பாரதி மோகன், திரு. ஆர்.கே. - திருவிடைமருதூர்
152. பாலபாரதி, செல்வி கே. - திண்டுக்கல்
153. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை

200. ராஜன், திரு. அ. - நாகர்கோவில்
201. ராஜா, திரு. என்கேகேபி. - ஈரோடு
202. ராஜா, திரு. தி.க. - திருப்பத்தூர்
203. ராஜேந்திரன், திரு. கே.எஸ்.கே. - மதுரை மேற்கு
204. லட்சுமணன், திரு. ச. - போடிநாயக்கனூர்
205. லதா, திருமதி ஜி. - குடியாத்தம்
206. லீமா றோஸ், திருமதி ரா. - திருவட்டாறு
207. வசந்தகுமார், திரு. எச். - நாங்குநேரி
208. வரதராஜன், திரு. ரா. - விருதுநகர்
209. விசுவநாதன், திரு. இரா. - நத்தம்
210. விடியல் எஸ். சேகர், திரு. - காங்கேயம்
211. விஜயகாந்த், திரு. - விருத்தாசலம்
212. விஜயகுமார், திரு. கே.எஸ். - கும்மிடிப்பூண்டி
213. விஜயகுமார், திரு. பெ.சு. - போளூர்
214. விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. - செய்யாறு
215. வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். - பேராவூரணி
216. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. - சேலம்—2
217. வேதரத்தினம், திரு. எஸ்.கே. - வேதாரண்யம்
218. வேலு, திரு. எ.வ. - தண்டராம்பட்டு
219. வேலுசாமி, திரு. இல. - தருமபுரி
220. வேலுசாமி, திரு. செ.ம. - பல்லடம்
221. வேலுமணி, திரு. சு.ப. - பேரூர்
222. வேல்துரை, திரு. பா. - சேரன்மகாதேவி



223. வேல்முருகன், திரு. தி. - பண்ருட்டி
224. வைத்திலிங்கம், திரு. ஆர். - ஒரத்தநாடு
225. ஜாண் ஜேக்கப், திரு. எஸ். - கிள்ளியூர்
226. ஜாண் ஜோசப், திரு. ஞா. - விளவங்கோடு
227. ஜெகன்மூர்த்தி, திரு. மு. - அரக்கோணம் (செ.வ.)
228. ஜெயக்குமார், திரு. டி. - இராயபுரம்
229. ஜெயக்குமார், முனைவர் கு. - நாமக்கல் (செ.வ.)
230. ஜெயபால், திரு. எஸ். - குளச்சல்
231. ஜெயராமன், திரு. எஸ்.பி. - வந்தவாசி (செ.வ.)
232. ஜெயலலிதா, செல்வி ஜெ - ஆண்டிப்பட்டி
233. ஸ்டாலின், திரு. மு.க. - ஆயிரம் விளக்கு
234. ஹசன் அலி, திரு. கு. - இராமநாதபுரம்
235. ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் - நியமனம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. ஜி. மாசிலாமணி .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

154. பிரபாவதி, திருமதி பெ. - தாராபுரம் (செ.வ.)

155. பிரேமா, திருமதி ஆர். - அவினாசி (செ.வ.)

156. பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். - கடையநல்லூர்

157. புஷ்பராஜ், திரு. செ. - கண்டமங்கலம் (செ.வ.)

158. பூங்கோதை, டாக்டர் (திருமதி) - ஆலங்குளம்

159. பெரியகருப்பன், திரு. கே.ஆர். - திருப்பத்தூர்

160. பெரியசாமி, திரு. இ. - ஆத்தூர்

161. பெரியசாமி, திரு. மு.க. - பூம்புகார்

162. பெரியண்ணன், திரு. பி.என். - பெண்ணாகரம்

163. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. - கோயம்புத்தூர் கிழக்கு

164. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. - பொள்ளாச்சி

165. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்

166. பொன்னுசாமி, திரு. கே. - சேந்தமங்கலம் (ஆவா.)

167. பொன்னுதுரை, திரு. செ. - பெருந்துறை

168. போளூர் ம. வரதன், திரு. - செங்கம் (செ.வ.)

169. போஸ், திரு. ஏ.கே. - திருப்பரங்குன்றம்

170. மகேந்திரன், திரு. இ. - உசிலம்பட்டி

171. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)

172. மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. - திருவோணம்

173. மணி, திரு. எஸ். - பொங்கலூர்

174. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்

175. மணி, திரு. ஜி.கே. - மேட்டூர்

176. மதிவாணன், திரு. உ. - திருவாரூர் (செ.வ.)



177. மலரவன், திரு. தா. - கோயம்புத்தூர் மேற்கு

178. மாணிக்கம், திரு. இரா. - குளித்தலை

179. மாரிமுத்து, திரு. வே. - நாகப்பட்டினம்

180. மாலைராஜா, திரு. என். - திருநெல்வேலி

181. முருகவேல், திரு. கே. - முதுகுளத்தூர்

182. முல்லைவேந்தன், திரு. வ. - மொரப்பூர்

183. மூர்த்தி, திரு. டி. - திருப்போரூர் (செ.வ.)

184. மூர்த்தி, திரு. பி. - சோழவந்தான்

185. மேகநாதன், திரு. த.அ. - காவேரிப்பட்டினம்

186. மோகன், திரு. பெ. - ஒட்டப்பிடாரம் (செ.வ.)

187. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை

188. யசோதா, திருமதி டி. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

189. ரங்கநாதன், திரு. ப. - வில்லிவாக்கம்

190. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை

191. ரவிக்குமார், திரு. து. - காட்டுமன்னார்கோவில் (செ.வ.)

192. ரவிச்சந்திரன், திரு. எல். - சேலம்–I

193. ராணி வெங்கடேசன், திருமதி - சாத்தான்குளம்

194. ராதாகிருஷ்ணன், திரு. ல. - கோவில்பட்டி

195. ராமச்சந்திரன், திரு. கா. - கூடலூர்

196. ராமநாதன், திரு. கே.வீ. - பவானி

197. ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். - இளையான்குடி

198. ராஜகுமார், திரு. எஸ். - மயிலாடுதுறை

199. ராஜசேகரன், திரு. மா. - தொட்டியம்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2039, சித்திரை 10

## 2008 ஏப்ரல் 22, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின்."

ஓர் அரசுக்கு வெற்றியைத் தருவது, பகைவரை வீழ்த்தும் வேலல்ல; குடிமக்களை வாழ வைக்கும் வளையாத செங்கோல்தான்.

### 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 131, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**131—**

### குடிநீர்

***20753—திரு. இ. மகேந்திரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியப் பகுதி மக்களுக்கு மண்ணாடிமங்கலம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2008 ஏப்ரல் 22

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளுக்குட்பட்ட 95 குடியிருப்புகளுக்கு மண்ணாடிமங்கலத்தைத் தலைமைப் பணியிடமாகக் கொண்ட செல்லம்பட்டி-வாடிப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயலாக்கத்தில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியப் பகுதிக்கு, மண்ணாடிமங்கலத்திலிருந்து, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் 575 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 99 குடியிருப்புகளுக்கான குடிநீர்த் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால், இடையில் ஒப்பந்ததாரரால் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டு, மறு டெண்டர் விடப்பட்டு, இப்போது பணி நடைபெற்று வருகின்றது. ஆனால், பணி மந்தமாக நடைபெற்று வருகிறது. இப்பணியைத் துரிதப்படுத்தி மக்கள் பயன்பாட்டுக்கு உடனடியாகக் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எடுத்துக்காட்டியதைப்போல, 2003 ஆம் ஆண்டு செல்லம்பட்டி-வாடிப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. ஒப்பந்ததாரருக்குப் பணி உத்தரவு 14-10-2004 அன்று வழங்கப்பட்டு, 4-2-2005-ல்தான் பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. 16-3-2006 வரை 85 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், மீதம் இருக்கக்கூடிய பணிகள் முடிவு பெறாத காரணத்தால், 20-12-2007-ல் பணி ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டு, இப்போது மீண்டும் 2008-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, எஞ்சியிருக்கக்கூடிய பணிகளுக்குப் புதிய ஒப்பந்ததாரர்கள் நியமிக்கப்பட்டுப் பணிகள் முடியும்தறுவாயில் இ[illegible] தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. மகேந்திரன்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம் சென்னை-600 008



2008 ஏப்ரல் 22]

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியம், செல்லம்பட்டிக்கு அணைப்பட்டியிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில், சுமார் 371 இலட்சம் ரூபாய் செலவில் 85 குடியிருப்புகளுக்கு வழங்கப்பட்டது. இப்பணி மிகவும் மந்தமாக நடைபெறுகிறது. இப்பணி எப்போது முடிவடைந்து மக்கள் பயன்பாட்டுக்கு அளிக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலமாக உசிலம்பட்டி தொகுதியில் இருக்கக்கூடிய செல்லம்பட்டி மற்றும் உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 85 குடியிருப்புகளில் இருக்கக்கூடிய 33,025 மக்கள் பயன்படக்கூடிய வகையில் இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டது. 3 கோடியே 71 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் வைகை நதியை நீராதாரமாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வரக்கூடிய இந்தத் திட்டத்தின் பெரும்பாலான பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததுபோல, பணிகள் மந்தமாக நடைபெறவில்லை; வேக வேகமாக இந்த ஆட்சியில் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அது மட்டுமல்ல; சோதனை ஓட்டத்தில் உள்ள இந்தத் திட்டம், மே 2008-க்குள் முழுமையாக முடிக்கப்பட்டு, மக்களுடைய பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 132, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இவ்வினா பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

அடுத்து, வினா எண் 133, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**133—**

## கயிறு தொழிற்சாலை

***35145—திரு. ஞா. ஜாண் ஜோசப்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விளவங்கோடு தொகுதி, கலிங்கராஜபுரத்தில் கயிறு மற்றும் கயிற்று மெத்தை தயாரிக்கும் தொழிற்சாலையைத் துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கயிறு மெத்தை தயாரிக்கும் தொழிலினை அரசே ஆரம்பிக்க கருத்துரு ஏதும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப்.*

*முற்பகல் 9-35*

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி, அந்தத் தொழிற்சாலையைத் துவக்க வேண்டும் என்பதல்ல. அங்கே ஏற்கெனவே கயிறு தொழிற்சாலை இருக்கிறது; அதை இயக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய கேள்வி. அந்தப் பகுதியில் ஒரு கயிறு தொழிற்சாலை, அதாவது, கயிற்று மெத்தை, கயிற்றுப் பாய் போன்ற பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய ஒரு தொழிற்சாலை இருந்துகொண்டிருக்கிறது. கடந்த 4 ஆண்டுக் காலத்திற்கு முன்னால்வரையிலும், மிகச் சிறப்பாக அது செயல்பட்டு வந்தது. கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பிலான பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு, வெளி மாவட்டங்களுக்கும், வெளி மாநிலங்களுக்கும் கொண்டு சென்று, அவை விற்பனை செய்யப்பட்டு வந்தன. 4 ஆண்டுகளுக்கு முன்னால் அந்த உற்பத்தி நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தத் தொழிற்சாலையை—100 பேருக்கும் அதிகமானவர்களுக்கு வேலைவாய்ப்பைத் தந்து கொண்டிருந்த அந்தத் தொழிற்சாலையை--மீண்டும் தொடங்கி, இயக்க வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத்தான் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட கலிங்கராஜபுரம் என்று அழைக்கப்படும் ஏழுதேசத்தில், தமிழக அரசின் தொழில் வணிகத் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வரும் ஏழுதேசம் ஆதி திராவிடர் கைத்தொழில்கள் கூட்டுறவுச் சங்கம், தேங்காய் நார் உற்பத்தி மற்றும் கயிறு உற்பத்தியில் 1994 முதல் ஈடுபட்டு வருகிறது. இச்சங்கம், இப்பகுதியில் கிடைக்கும் தேங்காய் மட்டைகளை வாங்கி, நார் உற்பத்தி செய்து, தனியாருக்கும், தொடக்கக் கயிறு கூட்டுறவுச் சங்கத்திற்கும் விற்பனை செய்து வருகிறது. மேலும், தேங்காய் நாரின் ஒரு பகுதியினைச் சங்க உறுப்பினர்களுக்குக் கயிறு உற்பத்திக்காகக் கொடுத்து, உற்பத்தியாகும் கயிறு வகைகளை விற்பனை செய்து வருகிறது. இச்சங்கத்தில் ரூ.10 இலட்சம் முதலீட்டில் இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன. 300 உறுப்பினர்களையும், 20 பணியாளர்களையும் கொண்டு நிறுவனத்தின் உற்பத்திப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பகுதியில் கயிற்று மெத்தை தயாரிக்கும் தொழிலினை அரசே ஆரம்பிக்க கருத்துரு இல்லை. எனினும், இப்பகுதியைச் சேர்ந்த தொழில் ஆர்வலர்கள் மற்றும் உறுப்பினர்களுக்குத் தனியார் தொண்டு நிறுவனங்கள் மற்றும் கயிறு வாரியம்மூலமாக, கயிறு திரிப்புப் பணிகளில் போதிய பயிற்சி வழங்கி, இப்பகுதி மக்களின் வாழ்வாதார மேம்பாட்டை அதிகரிக்கும்விதமாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கன்னியாகுமரி மாவட்ட கயிறு தொழிற்சங்கம்மூலமாக, கயிறுசார் தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டிற்காக, 'SFURTI' என்ற தொழிற்குழும மேம்பாட்டுத் திட்டத்தில், ரூ.1.00 கோடி முதலீட்டுடன் திட்டம் ஒன்று செயலாக்கப்பட வாய்ப்புள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்தும்போது, கலிங்கராஜபுரம் சங்கம் மற்றும் கயிறு தொழில் நிறுவனங்களுக்கு விற்பனை வாய்ப்பும், தொழில் மேம்பாடும், தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பும் ஏற்பட வழிவகை செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப்.*

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ரூ.10 இலட்சத்திற்கும் அதிகமான மதிப்புடைய கருவிகள் அங்கேயிருப்பதாகக்

[2008 ஏப்ரல் 22

குறிப்பிட்டிருந்தார்கள். அந்தக் கருவிகள் எல்லாம் இப்போது பயன்பாடற்று, துருப்பிடித்துக் கொண்டிருக்கின்றன. அதுபோல, அங்குள்ள தளவாடச் சாமான்களைச் சிலர் கொஞ்சம் கொஞ்சமாகத் திருடிக் கொண்டும் சென்றிருக்கிறார்கள். அங்கே நடந்த நிருவாகச் சீர்கேடும், முறைகேடும்தான் அந்தத் தொழிற்சாலையின் அழிவிற்குக் காரணமாக மாறியிருக்கிறது. ஆகவே, இதுகுறித்து முழுமையான ஒரு விசாரணை நடத்தவும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆய்வுக்கு வருகின்றபோது, இந்தத் தொழிற்சாலையைப் பார்வையிடவும், இதை நல்ல முறையில் செயல்படவைக்கவும் அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளையேற்று, விரைவிலே அந்தப் பகுதிக்கு வருகை தந்து, அந்தத் தொழிற்சாலை இயங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்வேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மொடக்குறிச்சி தொகுதியிலே, பொள்ளாச்சிக்கு அடுத்தபடியாக அதிகபட்சமாகக் கயிறுகள் தயாரிக்கின்ற தொழிற்சாலைகள் உள்ளன. மத்திய, மாநில அரசுகள் சேர்ந்து, Coir Cluster—அதாவது, 'கயிறு குழுமம்' அங்கே ஏற்படுத்துகிற எண்ணம் அரசுக்கு உண்டா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 76 கயிறு கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இதன்மூலம், ஆண்டுக்குச் சுமார் 10 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை நிகழ்த்தப்பட்டு வருகிறது.



2008 ஏப்ரல் 22]

இதில் 10,700 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். மத்திய அரசின் சந்தை மேம்பாட்டு நிதியுதவித் திட்டத்தின்கீழ், மொத்தக் கயிறு விற்பனைத் தொகையில் தமிழக அரசு 5%, மத்திய அரசு 5% என்ற விகிதாச்சாரத்தில் கயிறு விற்பனையை மேம்படுத்த மானியம் வழங்கப்படுகிறது. 2006-2007 ஆம் ஆண்டு ரூ.37.86 இலட்சமும், 2007-2008 ஆம் ஆண்டு ரூ.39.56 இலட்சமும், கயிறு விற்பனை மேம்பாட்டு மானியத்தின் பங்காகத் தமிழக அரசு வழங்கியுள்ளது. அதேபோல, தனியார்கள் கயிற்று மெத்தை தயாரிக்கும் தொழிற்சாலைகள் அமைக்க முன்வந்தால், அத்தொழிலை ஆரம்பிப்பதற்கான வழிமுறைகள், திட்ட அறிக்கை தயாரித்தல், வங்கிக் கடன் உதவி, துறை சார்ந்த ஒப்புதல்கள் பெறுதல், மானிய உதவி மற்றும் சந்தை உதவி ஆகியவற்றிற்குத் தேவையான முழு உதவிகளும் அங்கே செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரகத் தொழில் துறைமூலமாக, தேங்காய் நாரைக் கொண்டு, மெத்தை, தலையணை போன்ற பொருட்களைத் தயாரிப்பதற்கான தொழில் நிறுவனம், தஞ்சை மாவட்டம், பனையக்கோட்டையிலே செயல்பட்டு வருகிறது. அதனால், அதிலேயிருந்து உற்பத்தி செய்யக்கூடிய அந்த மெத்தை, தலையணைகளைப் போதுமான அளவிற்கு அவர்களால் விற்பனை செய்ய முடியவில்லை. அதனால், அதில் பணிபுரிகிறவர்களுக்கும் அந்த நிருவாகத்திற்கும் நஷ்டம் ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது. இதற்கு ஒரு மாற்றுத் தீர்வாக, நமது அரசு மருத்துவமனைகளுக்குத் தேவையான மெத்தை, தலையணைகளையும் அரசு சார்பிலே, மற்ற நிறுவனங்களுக்கு தேவைப்படுகிற மெத்தை, தலையணைகளையெல்லாம் நமது துறையின் மூலமாக வழங்குவதற்கான முயற்சிக்கு ஏற்பாடு செய்தால், அந்த நலிவுற்ற தொழில் சிறப்பாகச் செயல்படுவதற்குரிய வாய்ப்பு இருக்கும். அதைச் செய்வதற்கு இந்தத் துறையின் அமைச்சர் அவர்கள் முயற்சி மேற்கொள்வாரா என அறிய விரும்புகிறேன்.

[2008 ஏப்ரல் 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு தாலுகாவில், பனையக்கோட்டை கிராமத்தில் 1990 ஆம் ஆண்டு நமது மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் தமிழ்நாடு தொழில் கூட்டுறவு இரப்பர் பால் கலந்த கயிற்று நார் மெத்தை உற்பத்தித் தொழிற்சாலை ரூ. 1.31 கோடி முதலீட்டில் ஆரம்பிக்கப்பட்டது. இத்தொழிற்சாலை சுமார் 2½ ஏக்கர் நிலப் பரப்பில் அமைந்துள்ளது. இங்கு 38 பணியாளர்கள் இப்பொழுது பணிபுரிந்து வருகின்றனர். இத்தொழிற்சாலையில் பிரத்தியேகமாக இரப்பர் பால் கலந்த கயிற்று நார் மெத்தை உற்பத்தி செய்யப்படுகிறது. 2007-2008 ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட இலக்கான ரூ. 220 இலட்சம் என்ற நிலையில், ரூ. 181 இலட்சம் அளவிற்குச் சாதனை நிகழ்த்தப்பட்டு, ரூபாய் 12 இலட்சத்தை இந்தத் தொழிற்சாலை இலாபமாக ஈட்டியுள்ளது. இந்தத் தொழில் கூட்டுறவுத் தொழிற்சாலையை மேலும் சிறப்பாக செயல்படவைக்க, சந்தை வாய்ப்பிற்கு உதவிடும் வகையில், இவ்வாண்டு தமிழக அரசின் மருத்துவ சேவைக் கழகத்தின்மூலம் கொள்முதல் செய்யப்படும் இரப்பர் பால் கலந்த கயிற்று மெத்தைகளை ரூ. 1.8 கோடி மதிப்பீட்டில் இந்தத் தமிழ்நாடு கூட்டுறவு இரப்பர் பால் கலந்த கயிற்று நார் மெத்தை உற்பத்தித் தொழிற்சாலைமூலமாகவே தயாரித்து வழங்க, தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தொழில் கூட்டுறவுத் தொழிற்சாலையில் ஒரு மாதத்திற்கு 2,500 மெத்தைகள் தயாரிக்கும் அளவிற்கும், ஆண்டிற்கு 30,000 மெத்தைகள் தயாரிக்கும் அளவிற்கும் உற்பத்தி வசதி இப்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 134, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**134—**

## கட்டடம்

***2558—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2008 ஏப்ரல் 22]

உடுமலைப்பேட்டை தொகுதியில் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய விடையை அளிக்கின்றேன்.

உடுமலைப்பேட்டை வட்டாட்சியர் அலுவலகத்தை நடப்பு நிதியாண்டில் 2008-2009 பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ. 25.40 இலட்சம் செலவில் புதுப்பிக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையிலே, உடுமலைப்பேட்டை வட்டாட்சியர் அலுவலகம் புதுப்பிக்கக்கூடிய வகையிலே நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று கூறினார்கள். உடுமலைப்பேட்டை வட்டாட்சியர் அலுவலகத்தைப் பொறுத்தவரை, சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்புள்ள பழைமையான ஒரு கட்டடத்தில் உள்ளது; அந்தக் compound-க்குள்ளேயே Sub-Registrar அலுவலகம் உள்ளது; அதேபோல, Magistrate Court உள்ளது; Treasury அலுவலகம் உள்ளது. புள்ளியல் துறை இருக்கிறது; சிறைத் துறை இருக்கிறது. இந்த அனைத்துத் துறைகளைச் சேர்ந்த கட்டடங்களும் அங்கே இருப்பதால், அனைத்துக் கட்டடங்களுமே மிகவும் பழமையான கட்டடங்களாக இருப்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த நிதியைக் கூடுதலாக ஒதுக்கி அந்தப் பணியைச் செய்வதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து தருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப் போல, உடுமலைப்பேட்டையில் அந்த வட்டாட்சியர் அலுவலகம் பழமையானது என்பது உண்மைதான். ஆனால், அதற்குப் புதியதாகக் கட்டடம் கட்டுவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கருத்துரு கேட்டபோது, அவர் அனுப்பிய பதிலிலே, "the existing building of

[2008 ஏப்ரல் 22

Taluk Office, Udumalpet is old one, but good in structural soundness" என்று சொல்லியிருக்கிறார். அது பழமையாக இருந்தாலும், அந்தக் கட்டடம் உறுதியாக இருக்கிறது என்பதை அவர் தெரிவித்திருக்கிறார். அதைப் புதுப்பிக்க வேண்டுமென்பதற்காக அவருடைய பரிந்துரையை அனுப்பியிருக்கிறார்கள். இந்த ஆண்டுகூட, நம்முடைய முதல்வர் அவர்கள் தமிழகத்தில் உள்ள மிகவும் பழமையான 10 வட்டாட்சியர் அலுவலகங்களைப் புதுப்பிப்பதற்காகப் பணம் 1.5 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிதாகக் கட்டவேண்டுமென்று சொல்கின்றார்கள். தற்காலிகமாக அரசு எடுத்த முடிவின்படி, எதிர்காலத்திலே தேவைப்பட்டால் கட்டுவோம். நிச்சயமாக அரசு அதைப் பரிசீலிக்கும்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, அங்கு record rooms எல்லாம் இல்லாமல் இருக்கின்றன. அதேமாதிரி, Magistrate Court அங்கு இருக்கிறது. அதை மட்டும் Sub-court இருக்கிற பக்கம் மாற்றிவிட்டாலுங்கூட ஓரளவுக்கு அந்த இடத்திலே போதிய வசதிகள் இருக்கும். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, உடுமலைப்பேட்டை பகுதியிலே வீட்டு மனைப் பட்டாக்கள் சில இடங்களிலே இன்னும் கொடுக்கப்படாமல் உள்ளன. குறிப்பாக எடுத்துக்கொண்டால், உடுமலைப்பேட்டை பகுதியிலே, நகரப் பகுதிகளிலே, அன்பு நகர், எம்.ஜி.ஆர். நகர், யு.கே.பி. குட்டை, ஏரிப்பாளையம் வார்டு-1, அதேபோல, சாதிக் நகர், ஒன்றியப் பகுதிகளிலே குங்குராார்க்குட்டை ஆகிய இடங்களில் சில இடங்களிலே பட்டா கொடுக்கப்படாமல் உள்ளது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துரிதப்படுத்தி, அந்த இடங்களிலே பட்டா கிடைப்பதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, இந்தக் கேள்விக்குச் சம்பந்தமில்லை என்றாலுங்கூட, எங்களது உடுமலைப்பேட்டை தொகுதியானது, கோயம்புத்தூர் மாவட்டத்திலேயே இருக்க வேண்டும்.



2008 ஏப்ரல் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்விக்குச் சம்பந்தமில்லாததை ஏன் கேட்கிறீர்கள்? (குறுக்கீடு) No, no. மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதி அமைச்சர் அவர்கள், கேள்விக்குச் சம்பந்தம் உள்ளதற்கு மட்டும் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கோரிக்கையை அரசு கண்டிப்பாக கவனத்திலே கொள்ளும். பட்டாவைப்பற்றி உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். கோயம்புத்தூர் மாவட்டத்திலே, உடுமலைப்பேட்டையிலே, தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்து அறிவித்த அந்தச் சிறப்புத் திட்டத்திலே—அநேகமாக உறுப்பினருக்குத் தெரியும்—அதிகமான பட்டா, உடுமலைப்பேட்டை வட்டத்திலேதான் கொடுக்கப்பட்டிருக்கின்றது. நகராட்சிகளிலே, மற்ற இடங்களிலே. அந்த விவரங்கள் எல்லாம் என்னிடத்திலே தற்சமயம் இல்லை. இருந்தாலும், அதிகமான பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இன்னும் சில இடங்களைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்றார்கள். அங்கும் இந்த அரசு பட்டா வழங்குவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பொள்ளாச்சியில் இயங்கி வருகின்ற வட்டாட்சியர் அலுவலகம் மிகவும் பழமையானது. இந்த அலுவலகத்தில்தான் கோர்ட்டு வளாகமும், பத்திரப் பதிவு அலுவலகமும் உள்ளது. இந்த வட்டாட்சியர் அலுவலகத்தைப் புதுப்பிக்க முடியாத ஒரு சூழ்நிலை இருப்பதால், அங்கேயே அதை இடித்துவிட்டு, இரண்டு அடுக்குகொண்ட வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழமையான கட்டடத்தில் இயங்குகின்றது என்றார். தமிழகத்தில் வட்டாட்சியர் அலுவலகங்கள் பெரும்பாலும் பழமையான கட்டடங்களில்தான் இயங்குகின்றன. கடந்த இரண்டு ஆண்டுக் காலத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்கள்

[2008 ஏப்ரல் 22

ஏறத்தாழ 32 கட்டடங்களுக்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள். இந்த ஆண்டு, பழமையான கட்டடங்களைப் புதிய கட்டடங்களாக மாற்றுவதற்கு, 10 வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு அனுமதி வழங்கி, நிதியும் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அடுத்த ஆண்டு, வருகிற நிதியாண்டிலே அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன்.

**திரு. அ. சௌந்திரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகப் பழமையான, ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட, குன்னூரில் உள்ள வட்டாட்சியர் அலுவலகமானது, பழைய ஓடுகள் போட்ட, வில்லை ஓடுகள் போட்ட கட்டடமாக இருப்பதால், அருகிலேயே நடுவர் நீதிமன்றமும் இருக்கின்ற காரணத்தால், ஆவணங்களைப் பாதுகாக்கும்வண்ணமாக புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதோடு, மாண்புமிகு முதல்வர் அய்யா அவர்கள் 10 வட்டாட்சியர் அலுவலங்களை இவ்வாண்டு புதுப்பிக்க அனுமதி வழங்கப்பட்டிருப்பதில், மலைப் பிரதேசம் என்ற காரணத்தால், அந்தப் பத்து கட்டடங்களில் இதுவும் இடம்பெறுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழமை என்பதிலே இரண்டு விதம் இருக்கின்றது. ஒன்று, பயன்படுத்த முடியாத வட்டாட்சியர் அலுவலகங்கள். மழை பெய்து, மூழ்கி, அது இடிந்துவிழும் தறுவாயில் இருப்பது dilapidated condition-இல் இருப்பது. அவ்வாறு பயன்படுத்த முடியாத அளவுக்கு இருக்கிற பத்து கட்டடங்களைத்தான் முன்னுரிமை கொடுத்து அரசு எடுத்துக்கொண்டிருக்கின்றது. அவ்வாறு பயன்படுத்த முடியாமல் இருக்கின்ற மற்ற வட்டாட்சியர் அலுவலங்களை வருகிற ஆண்டிலே எடுப்பதற்கு அரசு முயற்சி செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா.



2008 ஏப்ரல் 22]

**திரு. என். மாலைராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட திருநெல்வேலி வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே, கூடுதல் கட்டடம் கட்ட வேண்டுமென்று கேட்டு, அங்கே கூடுதல் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இரண்டு மாதங்களுக்கு முன்னால் திறப்பு விழா செய்திருக்கிறார்கள். உடனே அங்கே வட்டாட்சியர் அலுவலகம் புதுப்பிக்கப்பட வேண்டுமென்று உறுப்பினர் கோரிக்கை வைக்கிறார். அதுபற்றி எதிர்காலத்திலே அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

**திரு. அ. ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள், கடந்த ஆண்டு நாகர்கோவில் வந்தபோது, "நாகர்கோவிலில் இருக்கக்கூடிய வட்டாட்சியர் அலுவலகம் மிகவும் மோசமாக இருக்கிறது. எனவே, நிச்சயமாக நான் அதை சரி செய்து, புதிய கட்டடம் கட்டித் தருவேன்" என்று சொன்னார்கள். ஆனால், பிறகு சொன்னார்கள், "கட்டாயம் இந்த ஆண்டு நான் உங்களுக்குச் செய்து தருவேன்" என்று குறிப்பிட்டார்கள். எனவே, இருக்கக்கூடிய அந்த இடத்தின் சூழ்நிலை, கருதி, போக்குவரத்து நெரிசலைக் கருதி, கூட்டத்தைக் கருதி, இந்த ஆண்டே அந்தப் பத்து கட்டடங்களில் ஒன்றாக அதை அமைச்சர் அவர்கள் செய்து தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 ஏப்ரல் 22

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மாவட்டமான கன்னியாகுமரி மாவட்டத்தில், கடந்த ஆண்டு பத்மநாபபுரத்திற்கு வட்டாட்சியர் அலுவலகம் தந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றார்கள். அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் மாண்புமிகு தமிழக முதலமைச்சருடைய உத்தரவிற்கிணங்க வட்டாட்சியர் அலுவலகங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அங்கே வட்டாட்சியர்களுக்கான குடியிருப்புகள் கட்டப்படுவதில்லை. அதேபோல், மாண்புமிகு தமிழக முதலமைச்சருடைய உத்தரவிற்கிணங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வட்டாட்சியர்களுக்கு எல்லாம் jeep-கள் வழங்கியிருக்கிறார்கள். ஒரு சில வட்டாட்சியர்களுக்கு விடுபட்டிருக்கிறது. அவருக்கு அடுத்த நிலையில் இருக்கிற—D.T. அளவில் இருக்கின்ற துணை வட்டாட்சியர்களுக்கு jeep வழங்கப்பட்டு, வட்டாட்சியர்களுக்கு வழங்கப்படாமல் இருப்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மாறுபட்ட நிலையைக் களைவதற்கும், குறிப்பாக என்னுடைய பண்ருட்டி தொகுதியிலுள்ள பண்ருட்டி வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் குடியிருப்பு இல்லாமல் இருப்பதற்கும், அவருக்கென்று jeep இல்லாமல் இருப்பதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுத்து அவற்றை வழங்குவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது, அறிவிப்பிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வட்டாட்சியர் குடியிருப்புகள் அமைப்பதை ஒரு தொகுப்பு நடவடிக்கையாக மேற்கொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் மொத்தமாக மூன்றாண்டுகளுக்கு 60 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, அதிலே தமிழ்நாட்டிலே இருக்கின்ற வட்டாட்சியர் குடியிருப்புகள் அத்துணையும் கட்டுவதற்கு அரசு தற்சமயம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இது அறிவிப்பிலே



2008 ஏப்ரல் 22]

இருக்கிறது. அதேபோல, வருவாய்த் துறை ஆய்வாளர்கள் அனைவருக்கும் குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுப்பதற்கு அறிவிப்பு வந்திருக்கிறது. Jeep எல்லோருக்கும் நாம் கொடுத்திருக்கிறோம், கடந்த முறை. ஏதாவது விடுபட்டுப் போய் இருக்கிறது என்று சொன்னால், நிச்சயமாக வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூரிலே இருக்கின்ற வட்டாட்சியர் அலுவலகம் வெள்ளைக்காரன் காலத்தில் கட்டப்பட்டு, ஓட்டுக் கொட்டகையில் இயங்கி வருகின்றது. அமைச்சர் அவர்கள் புதிதாகப் பத்து வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் கட்டுவதற்கு அரசு நிதி ஒதுக்கியுள்ளதாகச் சொன்னார்கள். அந்தப் பத்திலே, மேலூரிலே இருக்கின்ற ஓட்டுக் கொட்டகையிலே இயங்கி வருகின்ற வட்டாட்சியர் அலுவலகம், மழைக் காலங்களிலே ஒழுகி ஃபைல்கள் எல்லாம் நனையக்கூடிய ஒரு சூழ்நிலை உள்ளது; ஆகவே, அதையும் சேர்த்துப் புதிய கட்டடம் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய அலுவலகம் கட்ட வேண்டுமென்று கேட்கிறார். ஏற்கெனவே பல உறுப்பினர்கள் இந்த மன்றத்திலே கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இது தொடர் நடவடிக்கை. ஒரே ஆண்டிலே எல்லா வட்டாட்சியர் அலுவலகங்களும் கட்டி முடிக்கப்படும் என்பதல்ல. தமிழ்நாட்டில் அரசுக் கட்டடங்களிலே இருக்கக்கூடிய 191 அலுவலகங்கள் உட்பட இன்றைக்கு 208 வட்டாட்சியர் அலுவலகங்கள் இருக்கின்றன. இந்த 208 வட்டாட்சியர் அலுவலகங்களிலே புதிதாக அறிவிக்கப்பட்ட வட்டாட்சியர் அலுவலகங்கள் முழுவதும் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட அலுவலகங்களுக்கும் கட்டடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. பழைய கட்டடங்களிலே பழுதுபட்டிருந்தால், அதற்காகவும் இந்த ஆண்டு பத்து வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு நம்முடைய

மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதி தந்திருக்கிறார்கள். வருகிற ஆண்டிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அப்படிப் பழுதடைந்திருந்தால், நிச்சயமாக அரசு அதுசம்பந்தமாகப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *132*, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**132—**

**வேளாண்மைப் பயிலகங்கள்**

***986—திரு. நா. இராமகிருஷ்ணன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இயற்கை வேளாண்மை சாகுபடியை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் வேளாண்மைப் பயிலகங்களை நடத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒவ்வொரு மாவட்டத்திலும் வேளாண்மைப் பயிலகங்கள் அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து நிலத்திற்கு இரசாயன உரமிட்டு வருவதால், அதனுடைய கட்டமைப்பு—physical structure—சீர்குலைந்திருக்கின்றது. மேலும், அது தன் பொலிவை இழந்திருக்கின்றது; வளத்தை இழந்திருக்கின்றது, நிலம் இறுக்கமும், கெட்டியும் அடைந்து, காற்று உட்புக இயலவில்லை. அதனால் வேர் தடைப்பட்டு, பயிருக்குத் தேவையான சத்தை எடுத்துக்கொள்ள இயலவில்லை. நிலத்திலுள்ள Micro Organism—நுண்ணுயிர்கள் மற்றும் earth worms—மண் புழுக்கள் இறந்துவிடுகின்றன. தாய்ப் பாலில் நஞ்சு சேர்ந்து பிறக்கின்ற குழந்தைகள், மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளாகப் பிறக்கின்றார்கள்.



சுற்றுப்புறச் சூழல் பாதித்திருக்கின்றது. இவ்வளவு கேடுகள் விளைவிக்கின்ற இராசாயன உரத்தை இடுபொருளாகப் பயன்படுத்தும் விவசாய முறைகளை மாற்றி, விவசாயிகள் மத்தியில் இயற்கை வேளாண்மை குறித்த பயிலகங்கள் மாவட்டந்தோறும் நடத்துவதற்கு அரசு முன்வருமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 9-55*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள், இங்கே கேட்ட கேள்வியின் அடிப்படையிலே, தமிழக அரசால் *2006-2007* ஆம் ஆண்டிலிருந்து, வேளாண்மைப் பல்கலைக்கழகமும், வேளாண்மைத் துறையும் சேர்ந்து, தமிழ்நாட்டில் இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்கும்பொருட்டு, தேசிய இயற்கை வேளாண்மைத் திட்டத்தின்கீழ், சில பயிற்சிகள் தரப்படுகின்றன. இயற்கை வேளாண்மை ஆய்வு மற்றும் சான்றிதழ் தரும் நிறுவனங்களுக்கான பயிற்சி, இயற்கை வேளாண் இடுபொருட்கள் உற்பத்தி மற்றும் தரக் கட்டுப்பாடு குறித்த பயிற்சி, விரிவாக்க அலுவலர்கள் மற்றும் களப் பணியாளர்களுக்கான இயற்கை வேளாண்மை குறித்த பயிற்சி, விவசாயிகளுக்கான இயற்கை வேளாண்மை குறித்த பயிற்சி, இயற்கை வேளாண்மை இடுபொருட்கள் தொடர்பான செயல் விளக்கத் திடல்கள் அமைப்பது குறித்த பயிற்சி, மாதிரி இயற்கை வேளாண்மைப் பண்ணைகள் அமைப்பது குறித்த பயிற்சி, மாநில அளவிலான மற்றும் மண்டல அளவிலான கருத்தரங்குகள் நடத்துதல், மண் புழு உரம் தயாரிப்பதற்கான மாதிரிப் பிரிவுகள் அமைக்கின்ற பயிற்சிகளெல்லாம், *2006* ஆம் ஆண்டிலிருந்து இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு வழங்கப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக நாடுகள் முழுவதும் இயற்கை விவசாயத்திற்குத் திரும்பி வருகின்ற காலம். தமிழ்நாட்டில் இயற்கை விவசாயம் குறித்து விவசாயிகள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டுமென்று,

வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் அவர்கள் கடும் முயற்சி செய்து வருகின்றார்கள். நவீனமயமாக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில்கூட, இயற்கை முறை வேளாண்மையில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்குத்தான் ஏற்றுமதி செய்கின்றபொழுது அதிக கிராக்கியும், நல்ல விலையும் கிடைக்கின்றது. இதன் அடிப்படையில் 1980 ஆம் ஆண்டு, புளியங்குடியில், இயற்கை வேளாண் விவசாயிகள், திரு. கோமதிநாயகம் மற்றும் திரு. அந்தோணிசாமி ஆகியோர் சிறப்பாகச் செய்து வருகின்றார்கள். அதனையே அடிப்படையாக வைத்து, அவர்களுடைய சேவா சங்கம், தேசிய தோட்டக் கலை ஆணையத்தின்மூலமாக, தமிழகம் முழுவதுமிருந்து விவசாயிகள் வரவழைக்கப்பட்டு, வருடந்தோறும் பயிலரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதைப்போல, சத்தியமங்கலத்தையும் தலைமையிடமாக வைத்து, அங்கேயும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. இந்தச் சூழ்நிலையில், எய்ட்ஸ் நோயைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு தீவிர நடவடிக்கை எடுப்பதைப்போல, மக்கள் பெருக்கத்தைக் குறைப்பதற்கு அரசு தீவிர நடவடிக்கை எடுப்பதைப்போல, இயற்கை வேளாண்மை விவசாயம் குறித்து, விவசாயிகள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும், போதிய அறிவு பெற்றிடவும், அதே நேரத்தில் தொழிற்திறனை அதிகரித்திடவும், ஒவ்வொரு மாவட்டத்திலும் வட்டந்தோறும், வருடந்தோறும் இயற்கை வேளாண்மை குறித்த பயிலரங்குகளை நடத்துவதற்கு அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கை உரங்களைக் கொண்டு பயிர் செய்த உணவுப் பொருட்களைச் சாப்பிடக்கூடியவர்களுக்கு உடல் நலம் பாதிக்காமல் இருக்கும். இரசாயன உரத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மண் வளம் காப்பற்றப்பட வேண்டுமெனில், இயற்கை உரத்தைப் பயன்படுத்துவது முக்கியம் என்று விஞ்ஞானிகள் தங்களுடைய ஆய்வில் தெரிவித்ததன் அடிப்படையில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமும், வேளாண்மைத் துறையும் கடந்த இரண்டாண்டுகளாக இயற்கை உரத்திற்கான பல்வேறு கூறுகளை விவசாயிகள் மத்தியில் எடுத்துச் சொல்லி, அலுவலர்களுக்கும் உரிய பயிற்சி தந்து, அதன்பின் அவர்கள் விவசாயிகளை அழைத்து, அதனுடைய முக்கியத்துவத்தை எடுத்துச் சொல்லி, மண் புழு உரம் போன்றவற்றைத் தயாரிப்பதற்கு, பிற இயற்கை உரங்களைத் தயாரிப்பதற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்காகக் கோடிக்கணக்கான ரூபாயை அரசு செலவு செய்து வருகிறது.





*முற்பகல் 10-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 135, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.

**135—**

### தொழிற்பிரிவுகள்

***25811—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சூரத் நகரின் சரிகை தயாரிக்கும் தொழில்நுட்பத்தைப் பின்பற்றி வடிவமைக்கும் தொழிற்பிரிவுகளை நிறுவும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சூரத் நகர சரிகை தயாரிக்கும் தொழில்நுட்பத்தைப் பின்பற்றி வடிவமைக்கும் புதிய தொழிற்சாலைகளை நிறுவும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே, பொதுவாக தென்னகத்தைப் பொறுத்தவரையிலே, பட்டுப் புடவைக்குக் கொடுக்கின்ற முக்கியத்துவம் அதிகமாக இருக்கின்றது. தனியார் நிறுவனங்களோடு போட்டி போட்டுக்கொண்டு இப்பொழுது நம்முடைய கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் இலாபம் ஈட்டி வருவதாக

[2008 ஏப்ரல் 22

அறிகின்றேன். அதற்காக என்னுடைய பாராட்டுக்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதே வேளையில், பட்டுச் சேலை உற்பத்திக்குத் தேவையான சரிகைப் பொருள்களை நம்முடைய தமிழகத்திலேயே தயார் செய்கின்ற செயற்குறிப்பு அரசிடம் வரவேண்டுமென்று நான் வேண்டுகின்றேன். ஏனென்று சொன்னால், முழுக்க முழுக்க சூரத் நகரையே நம்பியிருக்கக்கூடிய நிலைமை இப்போது இருக்கிறது. சூரத் நகரத்திலே ஏதாவது ஒது பாதிப்பு ஏற்பட்டால், இங்கே இருக்கின்ற பட்டுச் சேலையினுடைய விலை உயருகிறது. உதாரணமாகச் சொல்லப் போனால், சென்ற முறை 'பிளேக்' நோய் வந்தபோது, சூரத் நகரத்திலே பட்டு சரிகை உற்பத்தி நின்று போன நிலையிலே, நம்முடைய தமிழகத்திலே பட்டுச் சேலையினுடைய விலையேற்றம் அதிகமாகக் காணப்பட்டது. அதை நிவர்த்தி செய்வதற்காக, காஞ்சிபுரம், குடந்தை மற்றும் ஆரணி போன்ற நகரங்களிலே சரிகை உற்பத்தி செய்வதற்கான திட்டத்தை அரசாங்கம் செயல்படுத்துமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இதற்கு முந்தைய பதிலின்போது புதிய தொழிற்சாலைகள் அமைக்கிற எண்ணம்தான் அரசிடம் இல்லையென்று சொன்னேனேயொழிய, செய்துகொண்டிருக்கிற சரிகை நிறுவனங்களை அல்ல. அவற்றில், சூரத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தித்தான் சரிகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது, நடைமுறையிலே வருகிற சில பிரச்சினைகளைப்பற்றி. அது உண்மையாக இருந்தாலும், நமக்குத் தேவையான சரிகையிலே ஒரு 48 சதவீதத்தை நம்முடைய தமிழகத்திலேயே, நம்முடைய சரிகை நிறுவனத்திலேயே உற்பத்தி செய்து, ஓரளவிற்குப் பிரச்சினை வராத அளவிற்குப் பாதுகாப்பை நெசவாளர்களுக்கு உருவாக்கிக்கொண்டிருக்கிறோம். இருந்தாலும், வருங்காலங்களிலே இதற்கும், இன்னும் தொழில்நுட்பத்தைப் புகுத்துகிற நிலைக்கும், புதிய சரிகை நிறுவனங்களைத் தொடங்குகிற நிலைக்கும் சாத்தியக்கூறுகள் என்ன என்பதைத் துறையின்மூலமாகவும் யோசித்துப் பார்த்து இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதையும் இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.



2008 ஏப்ரல் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரத்திலேயும், கும்பகோணத்திலேயும் ஏற்கெனவே 4 table-கள், 2 table-கள் என்று போடப்பட்டு, அங்கே ஒரு 4,000 மேக் என்று சொல்லப்படுகிற அளவிலே சரிகை உற்பத்தி செய்வது எனக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும்கூட, ஆரணியிலே புதிதாக ஒரு உற்பத்திக் கூடம் ஆரம்பிப்பதற்கான செயற்குறிப்பு அரசிடம் இருந்து, அது கைவிடப்பட்டிருக்கிறது. ஆகவே, ஆரணியிலே அந்த உற்பத்திக் கூடம் நிறுவப்படுமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன். அதேபோல, Half-Fine சரிகை என்று சொல்லப்படுகின்ற போலி சரிகைகளின் நடமாட்டம் அதிகமாக இருக்கிறது. அதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் செயற்குறிப்பு ஏதாவது வைத்திருக்கிறதா என்பதையும் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஆரணி பகுதியிலே சரிகை நிறுவனம் ஒன்று கண்டிப்பாகத் தேவை என்கிற நிலை இருக்கிறது. அதனுடைய சாத்தியக்கூறுகளை அரசு, இந்தத் துறை ஆராய்ந்து அதற்குரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். Half-Fine சரிகை என்பது, போலியான சரிகை அல்ல. உண்மையான சரிகையைப் போடுகிறபோது ரூ.25,000 வருகிற அந்தப் புடவை, இன்றைய சூழ்நிலையிலே வியாபார நோக்கத்திற்காக 5,000 ரூபாயிலே நம்முடைய பொது மக்கள், அது தேவை என்று உணர்கிற நிலையின் காரணமாக, அதையும் தனியாரும், நாமும் உபயோகப்படுத்துகிறோம். ஏமாற்றுகிறபொழுது அதற்குரிய பாதுகாப்பைத் துறையின்மூலமாகக் கொடுப்பதற்காகத் தற்பொழுது காஞ்சிபுரம், கோயம்புத்தூர் பகுதிகளிலே அந்த இயந்திரம் அங்கே வெளியிலே வைக்கப்பட்டு, ஒரு புடவைக்கு இவ்வளவு என்று அந்த இடத்திலேயே வாடிக்கையாளர்கள் அதனுடைய தரத்தைத் தெரிந்துகொள்கிற நிலையையும், இந்தத் துறை உருவாக்கியிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மதுரையிலேகூட, அடுத்த

மாதத்திலே இதுபோன்ற ஓர் இயந்திரத்தை அங்கே இந்தத் துறை வைக்கும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 136, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**136—**

**பராமரிப்பு நிதி**

***23194—திரு. என். நன்மாறன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை, திருமலை மன்னர் மகாலைப் பராமரிப்பதற்கு நிதி ஒதுக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். திருமலை நாயக்கர் அரண்மனையின் பராமரிப்புப் பணிகள் 11-வது நிதிக் குழுவின் பரிந்துரையின்பேரில் ரூ.1.00 கோடி செலவில் பொதுப் பணித் துறைமூலம் மேற்கொள்ளப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளன. 12-வது நிதிக் குழுவின் பரிந்துரையின்பேரில் ரூ.3.00 கோடி செலவில் முழுமையான சீரமைப்புப் பணிகள் பொதுப் பணித் துறைமூலம் மேற்கொள்ள அரசு நிருவாக ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. மேலும், 2006-2007 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் மதுரை திருமலை நாயக்கர் அரண்மனையில் வருடாந்திர பராமரிப்புப் பணிகளின் அடிப்படையில் வெளிப்புறத்தில் அமைந்துள்ள செடி, கொடிகளை அகற்றுவதற்கு ரூ.7,600/-க்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

முற்பகல் 10-05

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி





தெரிவித்துக்கொள்கிறேன். மதுரையைப் பொறுத்தவரையில், அதற்குச் சிறப்பு சேர்ப்பதாக மன்னர் திருமலை நாயக்கருடைய அரண்மனை இருந்து வருகிறது. அதற்குக் கூடுதலான நிதி ஒதுக்கி அரசு எடுக்கும் முயற்சியை வரவேற்கிற அதே சமயத்தில், இந்தப் பணிகள் விரைந்து நிறைவேறுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதையும், மகாலினுடைய சுற்றுப்புறப் பகுதி மிகவும் சுகாதாரக் கேடு நிறைந்துள்ளதாக அந்த வட்டார மக்கள் துன்பப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதையும், உள்ளேயே முன்னாள் நகரசபையினுடைய Chairman எல்.கே. துளசிராம் அவர்களுடைய பெயரில் ஒரு பூங்கா இருந்து வந்தது. மீண்டும் அந்தப் பூங்கா பராமரிக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டிற்கு வரவேண்டுமென்கிற கருத்தும் அந்தப் பகுதி மக்களுக்கு இருக்கிறது. இவற்றையும் அரசு நிறைவேற்றித் தரவேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஜனவரி மாதம் 6 ஆம் தேதி நானே அந்த மகாலுக்கு நேரடியாக அதிகாரிகளை அழைத்துச் சென்று, அந்தப் பணிகள் எவ்வாறு நடைபெறுகின்றன என்பதை அங்கே பார்வையிட்டு வந்தேன். மிகத் தொன்மையான, பழமையான சின்னங்களைப் பராமரிக்கின்றபோது, அதற்காகச் சிறப்பு ஏற்பாடுகளை எடுக்க வேண்டியிருக்கிறது. அந்தக் கலவைகள், உபயோகப்படுத்தக்கூடிய பொருட்கள், சுதை சிற்ப வேலைப்பாடுகள், இவற்றையெல்லாம் செய்கிறபோது மிகுந்த கவனத்தோடு செய்ய வேண்டியிருக்கிறது. எனவே, அதிலே சிறிது தாமதம் ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும், உறுப்பினர் அவர்கள் கோரியவாறு அந்தப் பணிகளை மிக வேகமாகச் செய்வதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. இன்னொன்றையும் அவர்கள் குறிப்பிட்டார்கள். மகாலைச் சுற்றியிருக்கக்கூடிய பகுதிகள் அழகுபடுத்தப்பட வேண்டுமென்பது. மகால் தொல்பொருள் துறையினுடைய கட்டுப்பாட்டிலே இருக்கிறது. சுற்றியிருக்கக்கூடிய பகுதிகளில், மகாலுக்கு வரக்கூடிய நம்முடைய துளசிராம் அவர்களுடைய பெயரால் அமைந்து இருக்கக்கூடிய பூங்காவைச் சுற்றி நடைமேடைகள் உருவாக்க வேண்டும் என்பதற்காக மதுரை மாநகராட்சி, JNNURM திட்டத்தின்கீழே ஏறத்தாழ 1¾ கோடி

[2008 ஏப்ரல் 22

ரூபாய்க்குத் திட்டங்களை விரிவாக உருவாக்கி, மத்திய அரசுக்கு அனுப்பி இருக்கிறது. அந்தத் திட்டங்களுக்கான ஒப்புதல் விரைவில் வரும் என்று எதிர்பார்க்கிறோம். அது வருகிறபோது, மிக அழகான முறையிலே செயல்படுத்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சுற்றிலும் நடைமேடை அமைப்பதற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் மாமன்றத்தின்மூலம் நிறைவேற்றப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, மன்னர் திருமலை நாயக்கருக்குச் சிறப்பு செய்வதற்காக, மதுரை அனுப்பானடியைச் சேர்ந்த மரியாதைக்குரிய திரு. வெங்கடசுப்பு அவர்கள் ஒரு சிலையை அமைக்க ஏற்பாடு செய்து வருகிறார்கள். முறையாக விண்ணப்பிக்கிறபோது, அதன்மீதும் உரிய நடவடிக்கை எடுத்து, மதுரை மக்களுக்குப் பெருமை சேர்க்க வேண்டுமென்பதையும் பேரவையின்வாயிலாக நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) சரி. மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தொல்லியல் துறை சார்பாக, பூம்புகாரிலே தொன்மை வாய்ந்த நமது பண்பாடு, கலை, நாகரிகம் ஆகியவற்றைப் பாதுகாக்கும்வகையில், அங்கு அகழ்வாராய்ச்சிப் பொருட்கள் எல்லாம் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அது சுற்றுலாத் துறைக் கட்டடம் பயணிகள் தங்கும் இடத்தில் இவையெல்லாம் வைத்துப் பாதுகாக்கப்படுகின்றன. ஆனால், அயல்நாட்டவரும், நம்முடைய மக்களும் அதைப் பார்த்துப் பயனுறும் வகையில் வழி செய்ய அங்கே நிதியொதுக்கி கட்டடம் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தக் கேள்வி சுற்றுலாத் துறையிடம் கேட்க வேண்டிய கேள்வி; நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்.



2008 ஏப்ரல் 22]

**திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை திருமலை நாயக்கர் மகாலுக்கு அரசின் நிதி நிறைய ஒதுக்கீடு செய்யப்படுகின்ற காரணத்தினால், மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அந்தத் திருமலை நாயக்கர் மகாலில் ஒலி-ஒளிக் காட்சியை மாலை நேரக் காட்சியாக ஒளிபரப்பிக் கொண்டிருக்கிறார்கள். இனி வருங்காலங்கள் கோடை விடுமுறை ஆதலால், சுற்றுலாப் பயணிகளும், பள்ளி, கல்லூரி மாணவர்களும் நிறைய பேர் நாயக்கரின் வரலாற்றைக் காணுகின்றவகையிலே, அந்த ஒலி-ஒளிக் காட்சியைப் பகல் நேரக் காட்சியாக ஒளிபரப்ப அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறபோதே, ஒலி-ஒளிக் காட்சி என்று சொல்கிறார். அதனை இரவில் பார்த்தால்தான் light and sound effect-ஆக இருக்கும். தவிர, அந்தக் காட்சி எங்கே நடைபெறுகிறது என்று சொன்னால், மகாலினுடைய முற்றம் என்று சொல்லக்கூடிய ஒரு திறந்தவெளியிலே அமைத்து, மகாலினுடைய பல்வேறு பத்திகளிலே ஒலி-ஒளி விளக்குகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. காலையில் light போட்டால், அதற்கு effect இருக்காது. அதற்கு அவ்வளவு தூரம் வரவேற்பு இருக்காது. இப்போது இருக்கக்கூடியவகையிலே, அது இரவிலே நடப்பதாக இருந்தால்தான் சிறப்பாக இருக்கும். நிறைய சுற்றுலாப் பயணிகளையும் கவரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, 1939 ஆம் ஆண்டு கட்டப்பட்ட பழமைவாய்ந்த பள்ளியாகும். அந்தப் பள்ளிக் கட்டடம் தற்பொழுது பொலிவிழந்த நிலையில் உள்ளது. ஆகவே, அந்தக் கட்டடத்தைப் புதுப்பித்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவர்ரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2008 ஏப்ரல் 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொல்லியல் என்ற ஒரு பொருளை எடுத்துக்கொண்டால், குறைந்தபட்சம் அதற்கு 100 வயது ஆகியிருக்க வேண்டும். 100 வயதிற்குக் குறைந்த எந்தவொரு கட்டடத்தையும் தொல்லியல் துறை எடுத்துக்கொள்வது இல்லை. 1939-லே கட்டியிருக்கிறார்கள் என்று நீங்கள் சொல்கிறீர்கள். அது பள்ளிக் கல்வித் துறை சார்பில் நீங்கள் கேட்கக்கூடிய கேள்வியாக இருந்தாலும், நிச்சயமாக வரக்கூடிய ஆண்டுகளிலே—நிறைய கட்டடங்களுக்குப் பள்ளிக் கல்வித் துறையின் சார்பிலே இந்த ஆண்டு நிதி ஒதுக்கியிருக்கிறோம், நபார்டு திட்டத்தின்கீழே, அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழே என்று 24 ஆம் தேதி வரக்கூடிய மானியக் கோரிக்கையிலே அறிவிப்புகள் வர இருக்கின்றன. எனவே, அப்படி வருகிறபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடக்கூடிய அந்தப் பள்ளியையும் எடுத்துக்கொள்வதற்கு அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 137, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**137—**

## விளையாட்டுத் திடல்

***28075—திருமதி பெ. கமலாம்பாள்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், பெரும்பாக்கம் நடுநிலைப் பள்ளிக்கு விளையாட்டுத் திடல் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2008 ஏப்ரல் 22]

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், பெரும்பாக்கத்தில் நடுநிலைப் பள்ளியில் விளையாட்டுத் திடல் அமைக்கும். செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், பெரும்பாக்கம் நடுநிலைப் பள்ளிக்கு விளையாட்டுத் திடல் இல்லாத காரணத்தால், சுற்றியுள்ள கிராமத்தில் படிக்கும் மாணவர்களுக்குள் ஒளிந்திருக்கும் திறமையை வெளிப்படுத்த விளையாட்டுத் திடல் அவசியம் ஆகிறது. விளையாட்டுமூலம் மாணவர்களுக்கு ஆரோக்கியம், வளர்ச்சி, புத்துணர்ச்சி, அறிவு, சுறுசுறுப்பு ஏற்படுகிறது. தவிர, இப்போது படிக்கும் மாணவர்களுக்குச் சிறு வயதிலேயே சர்க்கரை, இரத்த அழுத்த நோய்கள் எல்லாம் ஏற்படுகின்றன. அதனால், மாணவர்கள் ஆரோக்கியமாக இருக்கவும், நோய்நொடி இல்லாமல், வராமல் பாதுகாக்கவும், கட்டாயம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் விளையாட்டுத் திடல் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு விளையாட்டு ஆணையத்தினுடைய நோக்கம், குறிக்கோள், மாவட்டத்தில் விளையாட்டு மையங்களை அமைத்து, அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதுதான். அனைத்துப் பள்ளிகளிலும் என்பது நடைமுறைக்குச் சாத்தியக்கூறானது அல்ல. இருந்தாலும், உறுப்பினர் அவர்கள் விரும்பினால், அவர் சொல்கிற மைதானத்தை அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்மூலமாக விளையாட்டுத் துறைக்குப் பரிமாற்றம் செய்தால், அன்றைக்கு இருக்கிற நிதியினைப் பொறுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் அனுமதி பெற்று, அதற்கான ஏற்பாடு செய்யப்படும். இன்னொன்று; இப்போது தொலைநோக்குத் திட்டத்தோடு,

இந்தியாவில் எங்கும் இல்லாத அளவில், நம்முடைய தமிழ்நாட்டில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்மூலமாக பெரியதொரு பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதில் முக்கியமான பணி, ஒவ்வொரு கிராமத்திற்கும், கிராம மையங்களில் ஒரு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விளையாட்டு மையமும், ஒருவேளை அதிலே மேல்நிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி இருந்தால், அங்கே ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் விளையாட்டு மையமும் அமைத்துக் கொடுத்து, அது மட்டுமல்லாமல், வருடந்தோறும் அதற்கு 10,000 ரூபாய் செலவு செய்யலாம் என்று ஊராட்சி மன்றத் தலைவருக்கு அனுமதியும் கொடுத்து, இப்போது நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்மூலமாக, நல்ல முறையில் பயன்பெறுகின்ற வகையில் அதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதையும், இதன்மூலம் கிட்டத்தட்ட எல்லாப் பகுதிகளிலும் விளையாட்டு வீரர்கள் உருவாவதற்கான ஒரு வாய்ப்பை இந்த அரசு தொலைநோக்கோடு செய்துகொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், கிராமங்களிலே விளையாட்டு அவசியம் இல்லை என்று சொன்னாலும், எங்கள் மாவட்டத்திலே பெரிய அளவிலே, மாநிலத்திலேயே முதல் விளையாட்டு அரங்கமாக காஞ்சிபுரம் மாவட்ட விளையாட்டு அரங்கம் இருக்கிறது. ஆனால் அங்கு கான்கிரீட் மேல் தளம் பழுதடைந்து ஆபத்தான நிலையில் உள்ளது. மழைக் காலத்தில் கீழேயுள்ள அலுவலகத்தில் நீர் நிறைந்து உள்ளது. எனவே, கான்கிரீட் தளத்தை அப்புறப்படுத்தி, மேல் தளம் அமைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். தவிர, மழைக் காலத்தில் விளையாட்டு அரங்கம் முழுவதும் நீர்த்தேக்கம் ஏற்படுவதால், பிள்ளைகள் விளையாடுவதற்கு அங்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதனால், இந்த நேரத்திலாவது அந்த விளையாட்டுத் தளத்தை மேம்படுத்தி, அமைச்சர் அவர்கள் கான்கிரீட் மேல் தளம் அமைத்துக் கொடுப்பார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, காஞ்சிபுரத்தில் ஒரு திறந்தவெளி விளையாட்டு அரங்கம் உள்ளது. அதிலே 400 மீட்டர் தடகள ஓடுபாதை, கால் பந்து ஆடுகளம், வளைகோல் பந்து ஆடுகளம், கூடைப் பந்து ஆடுகளம், கையுந்துப் பந்து ஆடுகளம்-2, கபடி ஆடுகளம்-1, குத்துச் சண்டை வளையம்-1, செயற்கை டென்னிஸ் ஆடுகளம்-2, பூப் பந்து ஆடுகளம்-1, ஸ்குவாஷ் ஆடுகளம் மற்றும் இறகுப் பந்து உள் விளையாட்டு அரங்கங்கள் ஆகியவை ஏற்படுத்தப்பட்டுப் பயன்பாட்டில் உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, குறைபாடுகள் இருக்குமேயானால், அவற்றை முறையாகத் தீர்ப்பதற்கான முயற்சியை இந்த அரசு உடனடியாக எடுத்துக்கொள்வதோடு மட்டுமல்லாமல், ஏற்கெனவே இந்த விளையாட்டு ஆணையத்தின்மூலமாக கிராம விளையாட்டுப் பயிற்சி மையம் என்று ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கிராமத்தைத் தேர்ந்தெடுத்து, இப்போது செயல்பாட்டில் இருக்கிறது. அதற்காக, இப்போது காஞ்சிபுரம் மாவட்டத்தில் 'மால்வா சாலை' என்ற கிராமத்தில் taekwondo என்ற ஒரு விளையாட்டினை எடுத்து, அதற்காக 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிதியினையும் ஒதுக்கி இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 138, மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**138—**

## மூலிகைப் பண்ணை

***34204—திரு. வ. முல்லைவேந்தன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதி, சித்தேரி மலையில் மூலிகைப் பண்ணை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை' அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2008 ஏப்ரல் 22

மொரப்பூர் தொகுதி, சித்தேரி மலையில் மூலிகைப் பண்ணை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன்.

**திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்திலே உள்ள சித்தேரி மலை மிக உயர்ந்த மலைப் பகுதியாக இருக்கின்றது. கடந்த காலங்களிலே அங்கே சந்தன வளர்ப்புக் காடுகள் உருவாக்கப்பட்டு, ஆசியாவிலேயே மிக உயர்ந்த சந்தன மரங்கள் விளைவிக்கப்பட்டன. தற்போது அந்த நிலை இல்லாத நிலையில், சுமார் 20, 25 மகளிர் வனக் குழுக்களும், ஆடவர்களைக்கொண்ட வனக் குழுக்களும் வேலையில்லாமல் இருக்கின்றன. மூலிகைப் பண்ணைகள் அமைப்பதற்கான எல்லா வாய்ப்பு, வசதிகளும் அந்த மலைப் பகுதியில் இருக்கின்ற காரணத்தால், அரசு ஒரு மூலிகைப் பண்ணையை உருவாக்கி, அங்கே இருப்பவர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரவும், அதேபோன்று, சித்த வைத்தியத்தை விரிவாக்குவதற்குத் தேவையான மூலப்பொருட்கள் கிடைப்பதற்கான வழிவகைகளைச் செய்யவும் அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புவதோடு, பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகின்ற இந்தக் காலக்கட்டத்தில், அங்கே அரசின் சார்பாக வனத் துறையின் சார்பாக ஒரு மூலிகைப் பண்ணையை உருவாக்கி, அதற்கு அண்ணா மூலிகைப் பண்ணை என்று பெயர் சூட்ட அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையின் சார்பாக மூலிகைப் பண்ணைகள் அமைப்பதில்லை. அதற்காகத் தனியாக மூலிகைப் பண்ணைக் கழகம் ஒன்று இருக்கின்றது. அவர்கள்தான் மூலிகைப் பண்ணையை அமைக்கின்றார்கள். இருந்தாலும்கூட, மூலிகைத் தாவரங்கள் மலைப் பகுதிகளிலே இருந்தாலும் சரி, மற்ற பகுதிகளிலே இருந்தாலும் சரி, அவற்றை வனத் துறை பாதுகாத்து வருகின்றது. தமிழ்நாட்டிலே 74 இடங்களில் வன ஆராய்ச்சி மையங்கள் இருக்கின்றன். அவற்றிலே 42 இடங்களிலே வன ஆராய்ச்சி மையங்களின்மூலம் மூலிகைச் செடிகளை நாங்கள் நட்டு வைத்திருக்கின்றோம். அதேபோல, 30



2008 ஏப்ரல் 22]

மாவட்டங்களிலும் வன விரிவாக்க மையங்கள் இருக்கின்றன. அவற்றில் 19 வன விரிவாக்க மையங்களில் இந்த மூலிகைத் தாவரங்களை நடவு செய்து, விளக்கத் தோட்டங்களாக மக்கள் வந்து பார்க்கின்றபோது அவர்களுக்குக் காண்பிக்கின்றோம். எனவே, நாங்கள் தனியாக மூலிகைப் பண்ணைகளை அமைப்பதில்லை. பொதுவாக, மேற்குத் தொடர்ச்சி மலைகளிலும், கிழக்குத் தொடர்ச்சி மலைகளிலும் அரிய வகை மூலிகைத் தாவரங்கள் காணப்படுகின்றன. எனவே, அவற்றை வனத் துறை மிகவும் கவனமாகப் பாதுகாத்து வருகின்றது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன்.

**திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையின் சார்பாக மூலிகைப் பண்ணையை அமைக்காவிட்டாலும்கூட, மன்னர் காலங்களில், அதிலும் அசோக மன்னர் காலத்தில் சாலையோரங்களில் மரக் கன்றுகளை நடவேண்டுமென்று சொன்னார்கள். அதன் பிறகு, மக்களாட்சி நடைபெறும் இக்காலத்தில், இந்தியாவிலேயே தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் காலத்தில்தான், கலைஞர் அவர்களின் பிறந்த நாளன்று மரக் கன்றுகளை நடவேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதையொட்டி இந்த ஆண்டு 25 ஆயிரம் ஏக்கரில் ஒரு கோடி மரக் கன்றுகளை நடுவதற்கு அரசு 10 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கின்ற இந்த நிலையில், மூலிகையின் அவசியத்தைக் கருதி, தனியார் மூலிகைப் பண்ணையை அமைப்பதற்கு வனத் துறை அவர்களை ஊக்கப்படுத்தி, உதவி செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புவதோடு, தமிழ்நாட்டில் எத்தனை இடங்களில் மூலிகைப் பண்ணைகள் நடத்தப்படுகின்றன; அவற்றில் உற்பத்தியாகும் மூலிகைப் பொருட்களை விற்பதற்கான விற்பனை மையங்கள் இருக்கின்றனவா; அதனால் ஆண்டுதோறும் அரசுக்கு வருமானம் வருகின்றதா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில், 12 இடங்களில் அரிய வகை மூலிகைகள் கண்டறியப்பட்டு, அவை மதுரை மாவட்டத்தில்

அழகர்மலையிலும், திண்டுக்கல் மாவட்டத்தில் கொடைக்கானலிலும், நாமக்கல் மாவட்டத்தில் கொல்லிமலையிலும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் கோடியக்கரையிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் குற்றாலம், நம்பிகோயில் மற்றும் முண்டந்துறை ஆகியவற்றிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறையிலும், விருதுநகர் மாவட்டத்தில் தானிப்பாறையிலும், வேலூர் மாவட்டத்தில் தென்மலையிலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் டாப் ஸ்லிப்பிலும் விழுப்புரம் மாவ்ட்டத்தில் குரும்பரத்திலும் என 12 இடங்களில் அரிய வகை மூலிகைகள் இருப்பதாகக் கண்டறியப்பட்டு, அவை பாதுகாக்கப்படுகின்றன.

அதைப்போல, 8 இடங்களிலே தனியார் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, அவர்களுக்காக செங்கல்பட்டு, வேலூர், தருமபுரி, சேலம், ஆத்தூர், கோயம்புத்தூர், தொட்டபெட்டா மற்றும் மதுரை என 8 இடங்களில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு உதவி செய்து, அவர்கள் அங்கே நாற்றுகளை உருவாக்கி, மூலிகைத் தாவரங்களை உருவாக்கி விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் 1,559 மூலிகைகள் வனத் துறையின்மூலம் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றையெல்லாம் பாதுகாத்து வருகிறோம். அவற்றில் 21 மூலிகைகள் மிக முக்கியமானவை என்று கருதப்பட்டு, அவை மிகவும் கவனமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி.

**திரு. கே. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியம், சித்தர்கள் வாழ்ந்த பகுதி. அதிக மூலிகைச் செடிகளைக் கொண்டதும் கொல்லிமலைப் பகுதியாகும். அங்கே, வனப் பகுதியிலே அதிகமான மூலிகைச் செடிகள் இருக்கின்றன. ஆகவே, வனத் துறையின்மூலமாக மூலிகைப் பண்ணையை அமைக்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.





**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன், நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையிலே அரிய மூலிகைகள் இருக்கின்ற காரணத்தால், அதை வனத் துறை பாதுகாப்பான பகுதியாகக் கருதி, அந்த மூலிகைகளைப் பாதுகாத்து வருகிறது. மேலும், இன்னும் அந்தப் பகுதிகளிலே அதிகமான மூலிகைகளை வளர்ப்பதற்கும் ஆவன செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, வனத் துறையின்மூலம் பராமரிக்கப்படுகின்ற பண்ணைகளில், ஒட்டுமொத்த வனத்தைப் பாதுகாக்கக்கூடிய வனத் துறையிலே பணியாற்றி வருகிற வனப் பாதுகாவலர்கள் சற்றேறக்குறைய இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் 20 ஆண்டு, 25 ஆண்டுக் காலமாக, தினக் கூலி அடிப்படையில் அல்லது தொகுப்பூதிய அடிப்படையிலே பணியாற்றி வருகிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஐந்தாம் முறையாகப் பொறுப்பேற்ற பிறகு, பல்வேறு துறைகளில் பணியாற்றுகின்ற, தொகுப்பூதியத்திலே பணியாற்றக்கூடியவர்கள், தினக் கூலியிலே பணியாற்றக் கூடியவர்களுக்கெல்லாம் காலமுறை ஊதியம் வழங்கப்பட்டு அவர்களுக்குப் பணி நிரந்தரமும் பணிப் பாதுகாப்பும் வழங்கப்பட்டு வருகின்ற இந்த நல்ல சூழலில், வனக் காவலர்களாகப் பணியாற்றக்கூடிய சுமார் இரண்டாயிரம் பேர் இப்போது 20 ஆனடு, 25 ஆண்டுகளைக் கடந்துவிட்டார்கள். 30 வயதிலே வேலைக்குச் சேர்ந்தவர்கள், ஓய்வு வயதை எட்டிவிட்டார்கள். அவர்கள் ஓய்வுபெற்றுச் செல்கின்றபோது, பணி நிரந்தரம் இல்லாமல், அரசினுடைய எந்தப் பயனும் இல்லாமல், வெறுங்கையோடு வீட்டிற்குச் செல்கிற ஒரு நிலைமை தொடர்கிறது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணையோடு பல பணிகளை, இதுபோன்ற அறிவிப்புகளை வெளியிட்டு வரக்கூடியவர்கள்; அந்த இரண்டாயிரம் குடும்பங்களுக்கு வாழ்வளிக்கின்ற வகையில், பணி நிரந்தரம் செய்ய முன்வருவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவிந்தசாமி, மூலக் கேள்வி மூலிகைப் பண்ணை அமைப்பது பற்றியது.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் நீங்கள் குறிப்பிடுவதைப்போல மூலக் கேள்விக்கு அது தொடர்பில்லாத ஒன்று என்றாலும்கூட, அவர்கள் குறிப்பிடுகின்ற ஊழியர்கள் எல்லாம் தற்காலிக ஊழியர்கள், இரண்டாயிரம், மூன்றாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் மாதம் 830 ரூபாய் வாங்கிக் கொண்டிருந்தார்கள், கடந்த 8 ஆண்டுக் காலமாக. எப்போதுமே அரசு அலுவலர்கள், சமுதாயத்தின் அனைத்து மக்கள்மீதும் ஆர்வம் கொண்டிருக்கின்ற அல்லது அவர்கள்மீது அக்கறைகொண்டிருக்கின்ற, அக்கறையோடு செயலாற்றுகின்ற நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள்தான், 830 ரூபாய் வாங்கிக்கொண்டு அவர்களெல்லாம் எப்படிக் காலத்தை ஓட்டுவார்கள் என்பதை உணர்ந்து பார்த்து, ஐந்தாவது முறையாகத் தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றவுடன், அவர்களுக்காக 2,245 ரூபாய், வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு அவர்களுக்கு மூன்று மடங்கு ஊதிய உயர்வைத் தந்து, அவர்களுடைய நலன் காப்பாற்றப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) வனத் துறையிலே எப்பொழுதெல்லாம் அந்த இடங்கள் காலியாகின்றனவோ, அந்த இடங்களிலே அந்த ஊழியர்கள்தான் அங்கிருந்து அவர்கள் promote செய்யப்படுகிறார்கள்; பதவி உயர்வு அளிக்கப்படுகிறது என்பதை தான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம். (குறுக்கீடு)

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு சின்னக் கேள்வி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவிந்தசாமி, நீங்கள் மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாமல் கேட்கிறீர்கள்; உட்காருங்கள். அதற்கு அவர்கள் பதிலும் சொல்லிவிட்டார்கள்; உட்காருங்கள். நீங்கள் அப்புறம் office-ல் போய்க் கேட்டுக்கொள்ளுங்கள். அடுத்து, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு, இப்போது காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ், இலவசமாகக் கழனிகளிலே பல்வேறு மரங்களை வளர்ப்பதற்கான வாய்ப்புகளைக் கொடுத்துக்கொண்டிருக்கிறது. அதேபோன்று, இப்போது மக்கள் பொதுவாக ஆங்கில மருந்தைப் பயன்படுத்துவதைத் தவிர்த்து, இதுபோன்ற மூலிகை மருந்துகளைப் பயன்படுத்துவதற்குத்





தயாராக இருந்துகொண்டிருக்கிறார்கள். எனவே, நோயைத் தடுக்கின்ற வகையிலும், நோய் எதிர்ப்பு சக்தியைக் கொடுக்கின்ற வகையிலும் உள்ள மூலிகைகளைக் கண்டறிந்து, அந்த மூலிகைச் செடிகளை வளர்த்து, இலவசமாகப் பொது மக்கள் வளர்ப்பதற்கான முயற்சியை அரசு எடுக்குமா என்பதைத் தங்கள்மூலமாக அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமான மூலிகைகள் என்று கண்டறிந்த நித்திய கல்யாணி, ஆடாதொடா, அதைப்போல மஞ்சள் கரிசலாங்கண்ணி, கற்பூரவள்ளி, அதைப்போல வசம்பு, திருநீற்றுப் பச்சிலை, குண்டுமணி, குப்பைமேனி, வில்வம், சித்தரத்தை, சிறியா நங்கை, இரத்த சூரி, சீமை அகத்தி, வல்லாரை, நன்னாரி, விலா, சிந்தல், அமுக்கரான் போன்ற 21 வகைகளை நாங்கள் முக்கியமானதாகக் கருதி, அவற்றையெல்லாம் பாதுகாத்து வருகிறோம். இன்னும் நீங்கள் ஏதாவது முக்கியமான மூலிகைகளைப் பற்றிச் சொன்னால், அதையும் நாங்கள் பாதுகாப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 139, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**139—**

## இரு வழிச் சாலை

***28842—திருமதி ராணி வெங்கடேசன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளம் தொகுதி, சாத்தான்குளம்-பேய்க்குளம் வழியாகத் திருநெல்வேலி செல்லும் சாலையை இரு வழிச் சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஏப்ரல் 22

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய விடை அளிக்கத் தங்களின் அனுமதியைக் கோருகிறேன்.

(அ) மற்றும் (ஆ) சாத்தான்குளம், பேய்க்குளம் வழியாகத் திருநெல்வேலி வரையுள்ள சாலைப் பகுதியானது, மெய்ஞானபுரம்-முனைஞ்சிப்பட்டி சாலையாகும். இது ஒரு மாவட்டச் சாலையாக வகைப்படுத்தப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்தச் சாலையில் ஏற்கெனவே 2 கிலோ மீட்டர் தூரம் இரு வழிச் சாலையாகவும், மீதமுள்ள சாலை ஒரு வழிச் சாலையாகவும் பராமரிக்கப்பட்டு வந்தது. மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பிறகு, ஏறத்தாழ 6 கிலோ மீட்டர் சாலை இப்போது போக்குவரத்திற்கு ஏற்ற அளவில் இடைவழித் தடமாக மாற்றப்பட்டுள்ளது. மீதமுள்ள 12 கிலோ மீட்டர் சாலை சாத்தான்குளம் தொகுதியில் அமைந்துள்ள அந்தப் பகுதி, எதிர்காலத்திலே போக்குவரத்தின் செறிவு கணக்கிடப்பட்டு, அது இரு வழித் தடமாகப் போக்குவரத்திற்கு உகந்த சாலையாக மாற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன்.

**திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளம், பேய்க்குளம் வழியாகத் திருநெல்வேலி செல்லும் சாலை எங்கள் தொகுதிக்கு மிக முக்கியமான சாலை. செட்டிக்குளம், இளமான்குளம், கருங்கல், பனைக்குளம், பேய்க்குளம், முனைஞ்சிப்பட்டி, மூலக்கரைப்பட்டி, ரெட்டியார்பட்டி வழியாகத் திருநெல்வேலி செல்வது மிகச் சுருக்கமான வழி. ஆகவே, பக்கத்தில் இருக்கும் கிராமமாகிய பழனியப்பபுரம் போன்ற கிராம மக்களும் இந்த வழியைத்தான் பயன்படுத்துவார்கள். இந்த வழியாக 35-க்கும் மேற்பட்ட பேருந்துகள் செல்கின்றன. அதனால் போக்குவரத்து சிரமமாக இருப்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதை இரு வழிச் சாலையாக மாற்றித் தருவாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வழிச் சாலையை இடைவழிச் சாலையாக



2008 ஏப்ரல் 22]

மாற்றுகின்ற நேரத்தில், அதனுடைய போக்குவரத்துச் செறிவு, P.C.U. என்கிற கணக்கு 6,000 அளவிற்கு மேற்பட வேண்டும். அதே நேரத்திலே, இரு வழிச் சாலையாக மாற்றுகிறோம் என்று சொன்னால், 15,000 அளவிற்கு மேலே அந்தச் சாலையிலே போக்குவரத்துச் செறிவு இருக்க வேண்டும். இந்த வழியிலே பேய்க்குளம் இருப்பதாலோ, என்னவோ தெரியவில்லை, அந்த அளவிற்கு அதிலே போக்குவரத்துச் செறிவு இல்லை. எனவே, போக்குவரத்துச் செறிவு இருக்கிற அளவிற்கு அது இடைவழித் தடமாக மாற்றப்பட்டிருக்கிறது. எதிர்காலத்திலும், மீதமிருக்கிற பகுதியும் இடைவழித் தடமாக மாற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன்.

**திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இதற்குச் சிறப்புக் கவனம் செலுத்தி, எதிர்காலத்தில் இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையிலிருந்து திருப்பூர், ஈரோடு மற்றும் எனது தொகுதி அரூர் வரை—திருவண்ணாமலை மாவட்டம் முழுவதும் இரு வழிச் சாலையாகப் புதுப்பிக்கப்பட்டு ஒரு வருட காலம் ஆகிறது—எனது தொகுதியினுடைய எல்லையிலிருந்து அரூர் வரை ஏறக்குறைய 40 கிலோ மீட்டர் தூரம் வரையிலான திட்டம் ஒரு ஆண்டு காலமாகக் கிடப்பிலே போடப்பட்டிருக்கிறது. திட்டம் எல்லாம் தீட்டப்பட்டு, அதற்கான ஏற்பாடுகள் நிலுவையில் இருக்கின்றன. ஏறக்குறைய திருப்பூர் வரை 30 கிலோ மீட்டர் தூரத்திற்கும் குறைவாகவுள்ள வழித் தடம் அது. ஆகவே, இந்த ஆண்டிலாவது திருவண்ணாமலையிலிருந்து அரூர் வரை இரு வழிச் சாலை அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று தங்கள்வாயிலாக கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்த அளவிலே, மிக முக்கியமான சாலை மஞ்சவாடிக்கணுவாயிலிருந்து அரூர்

வழியாக ஊத்தங்கரை வரக்கூடிய அந்தச் சாலை, கடந்த காலங்களிலே மிகவும் பழுதடைந்திருந்து, நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞருடைய அரசு பொறுப்பேற்ற பிறகுதான், அந்தச் சாலை நல்ல தரமுள்ள சாலையாக மாற்றப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற சாலை, சேலம் வழியாகத் திருப்பூர் போன்ற பகுதிக்கு வரக்கூடிய வகையிலே அது சுருக்கமான வழி என்கிற முறையிலே அந்தச் சாலை புதுப்பிக்கப்படுமா என்று குறிப்பிட்டிருக்கின்றார். திட்டமிடப்பட்டிருக்கின்றது என்று சொல்லியிருக்கின்றார்கள். திட்டமிடப்பட்டிருந்தாலும், நிதி ஆதாரத்தைக் கணக்கில் எடுத்துத்தான் பல திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. வரக்கூடிய 28 ஆம் தேதி மானியக் கோரிக்கை வர இருக்கின்ற காரணத்தினால், அதற்குப் பிறகு அதனுடைய விளக்கத்தை இந்த அவையிலே தெரிவிக்கவிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையிலே இருந்து விளாக்குறிச்சிக்குச் செல்கின்ற வழியில் இரயில்வே ரோடு வருகிறது. அதற்கு அருகிலே 'Tidel Park' அமைக்கப்பட்டு வருகிறது. வருங்காலத்தில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்குமென்ற காரணத்தினால், அங்கு மேம்பாலம் அமைத்துத் தர அமைச்சர் முன்வருவாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி எழுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. குருசாமி.

**திரு. செ. குருசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் தொகுதியில் பர்கூர் மலையடிவாரத்திலிருந்து தட்டக்கரை





வரையில் இருக்கக்கூடிய ஒரு வழிப் பாதையை இரு வழிப் பாதையாக அரசு . அமைத்துக் கொடுக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி எழுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெற்ற சித்ரா பௌர்ணமியன்று திருவண்ணாமலையிலே 15 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வந்து, அங்கே மிக அதிக அளவு நெருக்கடி ஏற்பட்டது. வாகனங்களும் அதிக அளவில் வருகின்றன. ஏற்கெனவே அமைக்கப்பட்டிருக்கிற bye-pass சாலையிலே, இரயில்வேக்கு மேலே வருகிற மேம்பாலப் பணிகள் இன்னும் துவக்கப்படாமல் இருக்கின்றன. அதையும், அதேபோல் திருக்கோவிலூர் சாலை வரை bye-pass சாலை முடிந்திருக்கிறது; அதிலேயிருந்து செங்கம் செல்கிற சாலைக்கு bye-pass சாலையை இணைக்க வேண்டும். அதற்கும் அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேற்று மாலைதான் எனது அலுவலகத்திலே வந்து இதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற, திருவண்ணாமலையிலே புறவழிச் சாலை அமைக்கின்ற பணிக்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்து, சாலையினுடைய பணி ஓரளவிற்கு முடிந்திருக்கிறது. அதிலே வரக்கூடிய இரயில்வே மேம்பாலத்தைப் பொறுத்த அளவில், மாநில நெடுஞ்சாலைத் துறையும், மத்திய அரசினுடைய இரயில்வே துறையும் இணைந்து, அந்த மேம்பாலம் அமைப்பதற்கு ஒப்புதல் தந்திருக்கின்றன. அந்த அடிப்படையில், இரு அரசுகளுக்கும் ஒத்த கருத்து ஏற்பட வேண்டும். G.A.D.—General Alignment Drawing என்கிற ஒரு பொது நேர்பாடு வடிவமைப்பை உருவாக்குகிற நேரத்திலே, கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது.

அந்தப் பணியைப் பொறுத்த அளவில் இறுதிக் கட்டத்திற்கு வந்துவிட்டது. இப்போது இருக்கக்கூடிய வேலையையும் ஏற்கெனவே இருக்கக்கூடிய அந்த இரயில்வே மேம்பால வேலையையும் இர்க்கான் கம்பெனி—இரயில்வே துறையினைச் சார்ந்த அந்த கம்பெனி—செய்வதற்கு ஒப்புதல் தந்துவிட்டது. எனவே, அதன்மூலம் அந்தப் பணி மேற்கொள்ளப்பட இருக்கிறது. புறவழிச் சாலையைப் பொறுத்த அளவிலே, அந்தப் போக்குவரத்தினுடைய செறிவைப் பொறுத்து, அந்தப் பகுதியினுடைய போக்குவரத்தினுடைய அடர்வைப் பொறுத்து, அதற்கேற்ப அரசு அதைப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 140, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா. மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**140—**

## பள்ளிக் கட்டடம்

***22944—திரு. எஸ்.ஆர். இராஜா:**

*மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தாம்பரம் தொகுதி, நாகல்கேணியில் ஆதி திராவிடர் பள்ளிக் கட்டடம் மற்றும் கழிப்பிடத்தைச் சீரமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் வட்டம், நாகல்கேணி, ஆதி திராவிடர் நலப் பள்ளிக் கட்டடம், ரூபாய் 2 இலட்சத்து 99 ஆயிரத்து 809 செலவில் சீரமைக்கப்பட்டு, மேலும் 2006-2007 ஆம் ஆண்டில் இப்பள்ளிக்குப் புதிய கழிவறை 80 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு, தற்போது மாணவ, மாணவியர் பயன்பெற்று வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.



**திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் தொகுதியில் ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் சற்றேறக்குறைய 6, 7 பள்ளிகள் இருந்தாலும், நாகல்கேணி பகுதி, பம்மல் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் இருக்கிற காரணத்தினால், 1,367 மாணவர்கள் அந்தப் பள்ளியிலே படிக்கின்றார்கள். அந்தப் பள்ளியிலே படிக்கின்ற மாணவ, மாணவிகளுக்குச் சற்றேறக்குறைய 29 வகுப்பறைகள் தேவைப்படுகின்றன. அவற்றிலே 15 வகுப்பறைகள்தான் இருக்கின்றன. இன்னும் 14 வகுப்பறைகள் தேவைப்படுகின்றன. அதைப்போல, மாணவ, மாணவிகள் பயன்படுத்துகின்ற கழிப்பிட வசதிகள் அங்கு போதுமான அளவிலே இல்லை. அங்கே இருக்கிற ஆதி திராவிடர் நலப் பள்ளி சற்றேறக்குறைய 3 ஏக்கருக்கு மேல் உள்ள நிலப் பரப்பில் இருக்கிறது. விளையாடுவதற்குத் தேவையான மைதானம் இருக்கிறது. ஆனால், பள்ளி சரியான முறையிலே பராமரிக்கப்படாத காரணத்தினால், இன்னும் வசதிகள் தேவையாக இருக்கிற காரணத்தினால், நம்முடைய அமைச்சர் அவர்கள் இன்னும் வசதிகளைச் செய்து தருவார்களா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம், நாகல்கேணி ஆதி திராவிடர் நலப் பள்ளியில் சுமார் 1,367 மாணவ, மாணவிகள் பயின்று வருகிறார்கள். இப்பள்ளிக்கு 29 வகுப்பறைகள் தேவைப்படுகின்றன. ஆனால் 15 வகுப்பறைகள்தான் அங்கு உள்ளன. மீதமுள்ள 10 ஆஸ்பெஸ்டாஸ் போடப்பட்ட வகுப்பறைகள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. மற்றும் இந்தப் பள்ளிகளில் மேலும் 24 வகுப்பறைகள் கொண்ட கட்டடங்கள் கட்டுவதற்கு 75 இலட்சம் ரூபாய் செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. தற்போது பொதுப் பணித் துறையால் அந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் உயர்த்தப்பட்டுள்ளதால், 'தாட்கோ'-வால் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, அந்தப் பள்ளியில் புதிதாக 24 வகுப்பறைகள்கொண்ட கட்டடங்கள் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் சொல்லிய அந்த பதிலை நான் ஏற்றுக்கொள்கிறேன். நம்முடைய தமிழகத்தினுடைய தலைவர் கலைஞர் அவர்கள் பல நல்ல காரியங்களைச் செய்து வருகிறார்கள். இன்றைக்கு அந்தப் பள்ளிக்குத் தனியாகக் கணினி ஆய்வகம் தேவைப்படுகிறது. அதைப்போல, பாலவாக்கம், தாம்பரம், அனகாபுத்தூர், பதுவஞ்சேரி, பொழிச்சலூர், சிட்லப்பாக்கம் பகுதிகளில் ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் இருக்கின்றன. குறிப்பாக, பாலவாக்கம் பள்ளிக்குத் தேவையான கழிப்பிட வசதிகள் அந்தப் பகுதியிலே இல்லாத காரணத்தினால் மாணவ, மாணவிகளுக்கு மிகவும் சிரமம் ஏற்படுகிறது. வரி வசூலிலே போதுமான நிதி ஆதாரம், நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் புதிய சட்டத்தின்மூலமாக நகராட்சிகளுக்குப் பெருகி இருக்கின்றது. ஆகவே, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள், நகராட்சியை அணுகி, உள்ளாட்சித் துறை அமைச்சர் மூலமாக, நகராட்சியிலே இருக்கின்ற ஆதி திராவிடர் நலப் பள்ளிகளுக்குத் தேவையான வசதிகளைச் செய்வாரா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டத்தில் மட்டும் பள்ளி மற்றும் விடுதிகளுக்கு, இந்த இரண்டாண்டுகளில் மட்டும் ரூ.35.93 இலட்சம் செலவில் மராமத்துப் பணிகள் செய்யப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கணினி தேவைப்படுவதாகக் குறிப்பிட்டு இருந்தார்கள். அதேபோல், பாலவாக்கம் பள்ளியில் கழிப்பிட வசதி வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்கள். அவற்றை இந்த நிதி ஆண்டில் பரிசீலித்து செய்து தரப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]





## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### கொடைக்கானல் மலைப் பகுதியில் காவல் துறையினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 19-4-2008 அன்று கொடைக்கானலில் காவல் துறையினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதல் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள், அ.இ.அ.தி.மு.க.வின் சார்பாக திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி. ஜெயக்குமார், திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. செ.ம. வேலுசாமி ஆகியோர் விதி 56-ன்கீழ் ஒத்திவைப்புத் தீர்மானமாக அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், திரு. சி. ஞானசேகரன், திரு. விடியல் எஸ். சேகர், டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு. பெ.சு. விஜயகுமார், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக திரு. ஜி.கே. மணி, திரு. கி. ஆறுமுகம், திரு. தி. வேல்முருகன் ஆகியோரும், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியின் சார்பாக திரு. சி. கோவிந்தசாமி மற்றும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக திரு. வை. சிவபுண்ணியம் ஆகியோரும் விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்பாக அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கின்றேன். இது குறித்து, அறிவிப்புக் கொடுத்த உறுப்பினர்களில் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில் யார் பேசுவது? திரு. வை. சிவபுண்ணியம், உங்கள் பக்கம் இருந்து குரல் வருகிறது; நீங்கள் ஆரம்பியுங்கள். (குறுக்கீடு) சரி, முதலில் பிரதான எதிர்க்கட்சி; நீங்கள் ஆரம்பியுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள், நீங்கள் தயாராகத்தானே இருக்கிறீர்கள்? பேசுங்கள். (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 19-4-2008 அன்று திண்டுக்கல் மாவட்டம், பெரியகுளம் சட்டமன்றத் தொகுதி, கொடைக்கானல் மலைப் பகுதியில் போலீசாருக்கும், நக்ஸலைட் தீவிரவாத இயக்கத்திற்கும் நடந்த துப்பாக்கிச் சண்டையில், நவீன் பிரசாத் என்ற தீவிரவாதி சுட்டுக் கொல்லப்பட்டதாகவும், அந்தக் கும்பலில் இருந்த ஏறத்தாழ 15, 16 பேர் தப்பி ஓடிவிட்டதாகவும் பத்திரிகையின் 'வாயிலாகச் செய்திகள் வந்து. இன்றைக்குத் தமிழகத்தில் தீவிரவாத இயக்கம்

எந்த அளவுக்குக் காலூன்றி இருக்கிறது என்பதற்கு உதாரணமாக இந்த நிகழ்வு, தமிழக மக்களிடையே பெரும் கவலையை உருவாக்கி இருக்கின்றது. கடந்த சில மாதங்களுக்கு முன்பாக, அதே பெரியகுளம் முருகமலைப் பகுதியில் தீவிரவாத இயக்கங்கள் அங்கு முகாம்களை அமைத்து, பயங்கரவாத ஆயுதங்களைப் பதுக்கி வைத்து, அங்கு பயிற்சி கொடுக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டு, பொது மக்கள் அவர்களுடைய நடமாட்டத்தை அறிந்து, அவர்கள் தீவிரவாத இயக்கங்களை விரட்டிப் பிடிக்கின்றபோது, சுந்தரமூர்த்தி என்ற நக்ஸலைட் தீவிரவாத இயக்கத்தினுடைய தலைவர் அங்கு பிடிபடுகின்ற ஒரு சூழ்நிலை.

*முற்பகல் 10-40*

அதற்குப் பின்னாலே, தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி தொகுதி, நீண்ட நாட்களாக நொண்டி மகாலிங்கம் என்ற தீவிரவாதி. தலைமறைவாக இருந்த அந்தத் தீவிரவாதி, வருசநாட்டு மலைப்பகுதியில் தன்னுடைய கும்பலோடு தீவிரவாத இயக்கத்திற்கு ஆதரவாக அந்த இயக்கத்திற்காகப் பிரச்சாரம் செய்வதும், அங்கு களம் அமைத்து, தீவிரவாத இயக்க உறுப்பினர்களுக்குப் பயிற்சி கொடுப்பதும் போன்ற நிகழ்வுகள் நடைபெறுகின்றபோது, அந்தப் பகுதியில் நொண்டி மகாலிங்கம் பிடிபடுகின்ற ஒரு சூழ்நிலை. ஆந்திர மாநில நக்சலைட் தீவிரவாதிகள், பக்கத்தில் இருக்கின்ற தருமபுரி மாவட்டத்தில் அவர்களுடைய தீவிரவாத இயக்கத்திற்கு ஆதரவுக் களம் அமைத்துப் பயிற்சி கொடுக்கின்ற ஒரு சூழ்நிலை என்று இருப்பது மாறி, இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கின்ற 9 மாவட்டங்களுக்கு, தமிழகத்தின் உள் பகுதியில் இருக்கின்ற 9 மாவட்டங்களுக்கு இந்தத் தீவிரவாத இயக்கத்தினுடைய நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்பட்டிருக்கின்றன என்பதனை நான் இங்கு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். 5 ஆண்டு காலம் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் இம்மாதிரியான தீவிரவாத இயக்கங்களை இரும்புக் கரம் கொண்டு அடக்கி, ஒடுக்கி, அவர்களுடைய நடமாட்டம் இல்லாத அளவுக்கு, ரௌடிகள், குண்டர்கள், காட்டுக் கொள்ளையன் வீரப்பனுடைய கொட்டத்திற்கு முடிவு கட்டி, தமிழகத்தை ஒரு அமைதிப் பூங்கா மாநிலமாக மாண்புமிகு அம்மா அவர்கள் ஆக்கி, தமிழக மக்களுக்கு ஒரு நிம்மதியான சூழ்நிலை ஒன்றை ஏற்படுத்தி, ஒரு நல்லாட்சியை மாண்புமிகு அம்மா அவர்கள் தந்தார்கள். ஆனால், இப்போது





ஆட்சிப் பொறுப்பேற்ற 2 வருட காலத்தில், தொடர்ந்து தீவிரவாத இயக்கங்கள்; ஆந்திர எல்லையோடு மட்டும் நிற்காமல், தமிழகத்தில் இருக்கின்ற 9 மாவட்டங்களுக்கும் தங்களுடைய நடவடிக்கைகளை விரிவுபடுத்தியிருப்பதும், இந்த 9 மாவட்டங்களிலும் 16,000-க்கும் மேற்பட்ட அவர்களுடைய ஆதரவாளர்கள் இந்த இயக்கத்தினுடைய பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கின்றார்கள் என்ற செய்திகளும், தமிழகத்தினை, தமிழக வாழ்வினுடைய, மக்களினுடைய நல்வாழ்வினை எதிர்காலச் சந்ததியினருடைய நிம்மதியான வாழ்வினை, ஒரு பெரும் கேள்விக் குறியாக உருமாற்றியிருக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. சட்டம்-ஒழுங்கைக் காப்பாற்ற வேண்டிய காவல் துறை, இப்போதுள்ள அவர்களுடைய நடவடிக்கை—இம்மாதிரியான தீவிரவாத நக்சலைட் தீவிரவாத இயக்கங்களை ஒழிப்பதில், கட்டுப்படுத்துவதில் அவர்கள் முனைப்புக் காட்டுவதில்லை. அதற்கு மாறாக ஆளுங்கட்சியினுடைய உத்தரவைப் பெற்று, எதிர்க்கட்சியில் இருக்கின்ற, அரசியல் ரீதியாக எதிர்க்கட்சியில் இருக்கின்றவர்களுடைய செயல்பாடுகளை முடக்குவது ஒன்றைத்தான் தங்களுடைய கடமையாகக் கொண்டிருக்கிறார்கள் என்ற நிலைமை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. இது ஒருபுறம் இருக்க, நடைபெற்ற சம்பவம் வேறு மாதிரியாகவும் இன்றைக்குப் பேசப்பட்டுக்கொண்டிருக்கிறது. சுட்டுக் கொல்லப்பட்ட நவீன் பிரசாத் பற்றி ஒரு செய்தி; அவரோடு 15, 16 நபர்கள் பிடிபட்டதாகவும், அதாவது 12 ஆம் தேதியே அவர்கள் பிடிபட்டதாகவும், விசாரணையின்போது அவர்கள் தப்பியோடியதாகவும், தப்பியோடிய நிகழ்ச்சி நடைபெறுகின்றபோது, நவீன் பிரசாத் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. சென்னை, உயர் நீதிமன்றத்தில் வக்கீல் செங்கொடி என்பவர் இதுபற்றி ஒரு வழக்கைத் தாக்கல் செய்திருக்கிறார். அதாவது, நவீன் பிரசாத் 12 ஆம் தேதியே போலீஸ் காவலில் வைக்கப்பட்டு, 19 ஆம் தேதி சுட்டுக் கொல்லப்பட்டார்; அதற்கு மீண்டும் ஒரு பிரேதப் பரிசோதனை நடத்தி, நல்ல தீர்ப்பு வழங்க வேண்டுமென்று வக்கீல் செங்கொடி அவர்கள் ஒரு வழக்கையும் அங்கே தொடர்ந்திருக்கிறார். ஆக, இரு மாறுபட்ட கருத்துகள், இன்றைக்குப் பத்திரிகைவாயிலாகச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. இதில் உண்மை நிலை என்ன? அரசு, ஆந்திர மாநில எல்லையான தருமபுரி மாவட்டப் பகுதியிலிருந்து தீவிரவாத இயக்கங்கள் தமிழகத்தினுடைய உள் பகுதியில் அனைத்து மாவட்டங்களிலும் அவர்களுடைய நடவடிக்கைகளைக்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2008 ஏப்ரல் 22

கட்டுப்படுத்துவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது? எடுத்து, தமிழக மக்களினுடைய நிம்மதியான வாழ்க்கைக்கு இந்த அரசு என்ன உத்தரவாதம் தரப் போகிறது என்பதைக் கேட்டு, அமர்கின்றேன்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழகத்தை மட்டுமல்லாமல், அகில இந்திய அளவிலும், தேசத்தை, தேசத்தினுடைய இறையாண்மையை, ஏன் நமது ஜனநாயகத்தையே கேள்வி கேட்டு வருகின்ற ஒரு பெரிய தீவிரவாத அமைப்பினுடைய நடமாட்டம் தமிழகத்திலும் காணப்படுவதைக் குறித்துக் கவலைகொண்டவர்களாகவும், இந்த முக்கியமான பிரச்சினை குறித்து இந்த அவையினுடைய கவனத்தையும், அரசினுடைய கவனத்தையும், இவை எல்லாவற்றுக்கும் மேலாக, இந்தத் தீவிரவாத இயக்கத்தில் தங்களை இணைத்துக்கொண்டிருக்கக்கூடிய இளைஞர்களுக்கு ஜனநாயகப் பாதைக்குத் திரும்ப வேண்டிய அவசியத்தை நினைவூட்டவேண்டிய கடமையுள்ளவர்களாகவும் நாம் இன்று நின்றுகொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், மாவோயிஸ்ட் அல்லது நக்சலைட் தீவிரவாத அமைப்பினுடைய நடமாட்டத்தைப்பற்றிச் சொல்கின்றபோது, இது அரசாங்கத்திற்கு மட்டுமேயுள்ள தனிப்பட்ட பிரச்சினையாக ஒரு கோணத்திலே அவர்கள் பார்த்தார்கள். ஆனால், காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரை, இந்த மாவோயிஸ்ட் தீவிரவாதத்தையும், நக்சலைட் தீவிரவாதத்தையும் ஒரு அரசாங்கத்தினுடைய பிரச்சினையாகவோ அல்லது தனிப்பட்ட காவல் துறையினுடைய பிரச்சினையாகவோ இந்தப் பிரச்சினையை நாங்கள் அணுக விரும்பவில்லை. இந்த தேசத்தினுடைய பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் கடந்த மாதம் பேசுகின்றபோது, இந்த மாவோயிஸ்ட் தீவிரவாதத்தை அவர்கள் சுட்டிக் காட்டுகின்ற வேளையிலே, "The Naxalite movement, the Maoist terrorism is the greatest challenge to the Indian internal security" என்கிற கருத்தை வலியுறுத்தி, ஏறக்குறைய இன்று இந்தியாவிலே 135 மாவட்டங்கள் இந்த மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுடைய



2008 ஏப்ரல் 22] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

நடமாட்டத்தாலும், அவர்களுடைய அதிகாரப் பரவலாலும் தேசத்தினுடைய எதிர்காலத்தையே கேள்விக் குறியாக்கிக் கொண்டிருக்கிறது என்பதை மிக வருத்தத்தோடு குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அது மட்டுமல்லாமல், பஞ்சாப் மாநிலத்தினுடைய முன்னாள் Director General of Police Thiru K.P.S. Gill அவர்கள் இந்த மாவோயிஸ்ட் தீவிரவாதத்தால் கடந்த ஆண்டு இந்தியாவிலே ஏற்பட்டிருக்கின்ற வன்முறைச் சாவுகளிலே 27 விழுக்காடு வன்முறைச் சாவுகள், மாவோயிஸ்ட் இயக்கத்தால் ஏற்பட்டன என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்த மாவோயிஸ்ட் இயக்கம் அல்லது இந்த நக்சலைட் தீவிரவாத இயக்கம், ஏதோ சாதாரணக் குற்றவாளிகளைப் போல, கொள்ளைக்காரர்களைப் போல, கடத்தல்காரர்களைப் போல, இன்னும் சொல்லப் போனால், சந்தனக் கடத்தல் வீரப்பனைப் போல, ஒரு குற்றவாளியைப் போல அணுகப்படக்கூடியவர்கள் அல்லர். அந்த இளைஞர்களில் சில பேர், இந்தச் சமூகத்தில் பல்லாண்டுகளாக நடந்த சமூக அநீதியின் காரணமாக, நாடெங்கிலும் மலிந்திருக்கின்ற வேலையில்லாத் திண்டாட்டத்தின் காரணமாக, சமுதாயத்திலுள்ள நமது அமைப்பால் ஒருவேளை இவற்றையெல்லாம் சரி செய்ய முடியாது; ஜனநாயகம் அதற்குத் தீர்வல்ல; ஆயுதம் தாங்கிய புரட்சி; இவை மட்டுமே அதற்குத் தீர்வு என்று நம்பிக்கைகொண்டவர்களாக, கொள்கை வழிப்பட்ட இளைஞர்களாக இருக்கின்ற காரணத்தினால், அவர்களை அடையாளம் கண்டு, அதனுடைய ஆணிவேரை அறுத்து, நாம் வேண்டி, விரும்பிப் பெற்றிருக்கின்ற நம்முடைய ஜனநாயகத்திற்கு ஊறு நேர்ந்துவிடாமல் பாதுகாக்கின்ற பொறுப்பு நமக்கிருக்கிறது. ஆகவே, அந்தக் கோணத்தில்தான் காங்கிரஸ் கட்சி இதை அணுகுகிறது.

கடந்த சனிக்கிழமை நடந்த ஒரு சம்பவம்; அது ஏதோ இப்போதுதான் புதிதாக நடந்ததைப்போல நான் இந்த அவையிலே சொல்லமாட்டேன். 1969-ல் தமிழகத்திலே காலூன்ற ஆரம்பித்த அந்த நக்சலைட் இயக்கம், பல்வேறு காலக்கட்டங்களிலேயும் ஒவ்வொரு ஆட்சியின்போதும், யார் முதலமைச்சராக இருந்தபோதும், யார் ஆட்சி நடந்தபோதும், இந்த இயக்கங்கள் தலைதூக்குவதும், இந்த இயக்கங்களை அழிப்பதற்குக் காவல் துறை அரசுமூலமாக முயற்சி எடுப்பதும், ஒருசில பேரைச் சுட்டுக் கொல்வதும், அல்லது ஒரு சில பேர் இறந்து போவதும், சற்றுக் காலம் அது அமைதியாக

இருப்பதும், மீண்டும் அவர்கள் கிளம்பி வருவதும், கடந்த 1969-லிருந்து 2008 வரை, 40 வருடங்களாக ஒரு தொடர் சரித்திரமாகவே நடந்து வருகிறது. கடந்த 1995-ல்கூட அதியமான்கோட்டை என்ற காவல் நிலையத்திற்குப் பின்னால், இந்த நக்சலைட் இளைஞர்கள் காவல் நிலையத்திற்குப் பின்னாலேயிருந்த மின் கோபுரத்தையே வெடிகுண்டு வைத்துத் தகர்த்தார்கள். அப்போதுகூட ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். ஏன் 2002-ல்கூட இதைப்போன்ற மாவோயிஸ்ட் தீவிரவாத இயக்கத்தினுடைய நடவடிக்கைகள் கண்டுபிடிக்கப்பட்டு, அப்போதும் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். ஆகவே, இது தொடர்ந்து ஒவ்வொரு காலக்கட்டமாக நடந்து வருகிறது. இதை எப்படி அடக்குவது, இந்த இளைஞர்களை எப்படி ஜனநாயகப் பாதைக்கு அழைத்து வருவது என்பதற்கு நேபாளம் ஒரு முன்னுதாரணமாக இருக்கும் என்றே நான் எண்ணுகிறேன். நேபாளத்திலேயிருந்த அந்த மாவோயிஸ்ட் தீவிரவாத இளைஞர்கள் ஜனநாயகத்தில் நம்பிக்கைகொண்டதன் காரணமாக, ஜனநாயகப் பாதைக்குத் திரும்பி, ஜனநாயக இயக்கத்தை வலுவடைய வைத்த காரணத்தினால், இன்று அவர்கள் பிரதமராக முடியும் என்கிற சூழ்நிலை அந்த நாட்டிலே ஏற்பட்டிருக்கிறது.

அதைப்போல, எந்த சமூக அநீதியை எதிர்த்து இவர்கள் போராடுகிறார்களோ, எந்த சமூகத்திலே நியாயம் வேண்டும் என்று இவர்கள் போராடுகிறார்களோ, அந்தப் போராட்டத்தை ஜனநாயகப் பாதைக்குக் கொண்டு வரவேண்டும் என்பதுதான் காங்கிரஸ் கட்சியினுடைய கோரிக்கையாக இருக்க முடியும். எனவே, இந்த இடத்திலே, அரசாங்கத்தினுடைய தனிப்பட்ட கடமையாக இதைச் சுமத்திவிட்டு, இதிலே அரசியல் ரீதியாகக் குளிர் காய்வதற்குக் காங்கிரஸ் கட்சி விரும்பவில்லை. இதில் அரசு என்ன செய்யவேண்டும் என்று சுட்டிக் காட்டவேண்டிய கடமை எங்களுக்கு இருக்கிறது. இந்த இளைஞர்களை வளர்ச்சியான பாதைக்கு எப்படிக் கொண்டு வரவேண்டும் என்பதை, ஆயுதம் தாங்கிய காவல் துறை நடவடிக்கையால் மட்டுமல்ல; ஒரு சமூக இயக்கமாகக்கூட நடத்த வேண்டும்.

*முற்பகல் 10-50*

என்னுடைய அருமை நண்பர் வேலூர் ஞானசேகரன் அவர்கள்கூட பேசும்போது சொன்னார்; தற்போது வேலூர் மாவட்டத்திலேகூட 40, 45 இடங்களிலே அந்தப் பயிற்சி முகாம்களை





அமைப்பதற்காக அவர்கள் களம் கண்டிருக்கிறார்கள் என்று சொன்னார். இன்று சுடப்பட்ட இளைஞர்கூட, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் தொகுதிக்கு மிக நெருக்கமாக இருக்கக்கூடிய மலைப் பகுதிகளிலே போய், அதற்கான. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நெருக்கமாக இருக்கக்கூடிய தொகுதியைத்தான் அவர் சொல்கிறார்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** அந்த இடத்திற்குப் போய், அந்த ஆயுதக் களங்களை அமைப்பதற்கான முயற்சியிலே ஈடுபட்டு இருந்தார் என்று காவல் துறையினுடைய குறிப்பு சொல்கிறது. தப்பித்துச் சென்ற ஒரு 7, 8 பேர் கையிலே மிக வலுவான ஆயுதங்கள் இருந்தன; மிக ஆபத்தான ஆயுதங்கள் இருந்தன என்றுகூட காவல் துறை அறிக்கை தந்த தகவலாக இருக்கிறது. இதற்கிடையிலே, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னதுபோல, சுட்டுக் கொல்லப்பட்ட அந்த இளைஞர் எப்போது அங்கு சுட்டுக் கொல்லப்பட்டார் என்பதைப்பற்றி இரண்டு மாறுபட்ட கருத்துகள் இருக்கின்றன. அதிலே காங்கிரஸ் கட்சியும் அந்தக் கருத்தை உற்றுப் பார்த்திருக்கிறது. ஏனென்றால், உயர் நீதிமன்றத்திலே ஒரு வழக்கு, ஆள் கொணர்வு ஒப்படைப்பு என்கிற Habeas Corpus Writ Petition-ஐ, அதுவும் வியாழக்கிழமை அன்று அவர்கள் தாக்கல் செய்கிறார்கள். ஆனால் காவல் துறை, சனிக்கிழமை அன்று சுட்டுக் கொல்லப்பட்டதாகச் சொல்கிறது. இதற்குப் பின்னால் என்ன நடக்கிறது என்கிற உண்மையை அறிந்துகொள்ளக்கூடிய பொறுப்பு எங்களுக்கும் இருக்கிறது; நாட்டு மக்களுக்கும் இருக்கிறது. ஆனால் இதையெல்லம் எப்படிச் சரி செய்வது என்கிற அந்தக் கோணத்திலே அரசு பார்க்கும்போது, அந்த இளைஞர்கள் அடிக்கடி கைது செய்யப்பட்டு, மிக இலகுவாக அவர்கள் ஜாமீனில் வெளி வந்துவிடுகிறார்கள். மேலும், "அவர்களை, எங்களால் மீண்டும் அந்தப் பாதைக்குத் திரும்புவதைத் தடுக்கமுடியவில்லை" என்று காவல் துறையினர் கருத்துத் தெரிவிப்பதிலும் நியாயம் இருப்பதாகவே நாம் நினைக்கிறோம். அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால், இப்படி அடையாளம் காணப்பட்ட தீவிரவாதிகளை, அதாவது கொள்கை ரீதியாக, மிகத் தைரியமாகத் தங்களை அந்த இடத்தில் இணைத்துக்கொண்டு, யாருக்கும் பயம் இல்லாமல் ஆயுத முகாம்களை

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2008 ஏப்ரல் 22

அமைக்கின்ற அந்த இளைஞர்களை, இவர்கள் தேடப்படுகின்றவர்கள் என்று பட்டியலிட்டு அரசு அறிவித்து, அவர்களை நீதிமன்ற விசாரணை இல்லாமல், நீதிமன்ற விசாரணைக்குக் கொண்டு போகாமலேயே அவர்களைத் தடுப்புக் காவலிலே வைப்பதற்கான சூழ்நிலை உருவாகவேண்டும் என்று அந்தக் காவல் துறையிலே இருக்கின்ற சில முன்னாள் அதிகாரிகள், இந்தத் துறையிலே உழைத்தவர்கள் சொல்கிறார்கள். நாம் பார்க்கிறோம்; நேற்றைய தினம் அந்த இளைஞருடைய உடல் அவர் சொந்த ஊருக்குக் கொண்டு செல்லப்படுகின்றபோது சுமார் 12 கிலோ மீட்டர் தூரத்திற்கு அந்த உடலுக்கு வரவேற்புக் கொடுக்கப்பட்டது என்று சொல்கிறார்கள். 1,000 பேருக்கு மேல் அந்த இறந்த உடலுக்குப் பின்னால் சென்றதாகச் சொல்கிறார்கள். இந்தத் தகவல்கள் ஜனநாயகத்திற்கு நல்லதல்ல. நாம் பெற்றிருக்கின்ற மிகப் பெரிய கொடை, நம்முடைய சுதந்திரம் தந்திருக்கின்ற மிகப் பெரிய வரம், ஜனநாயகம். இந்த ஜனநாயகத்தை ஆயுதம் தாங்கிய புரட்சிக்குப் பலிகொடுக்க இந்த மன்றத்திலே இருக்கக்கூடிய எல்லாக் கட்சிகளும் தயாராக இல்லை. இந்த மன்றத்திலே இருக்கக்கூடிய அரசியல் கட்சிகளுக்குக் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், நம் எல்லோருக்கும் அடிப்படையான ஒரு ஒற்றுமை என்னவென்று சொன்னால், இந்த மன்றத்திலே இருக்கிற அனைத்துக் கட்சிகளுக்கும் ஜனநாயகத்திலே நம்பிக்கை உண்டு. அந்த ஜனநாயகத்தைக் கேள்விக் குறியாக்குகின்ற ஒரு இயக்கத்தை வளரவிடுவது, ஜனநாயகத்திற்கு மட்டுமல்ல; தமிழகத்தினுடைய எதிர்காலத்திற்கு மட்டுமல்ல; ஏன், இன்னும் சொல்லப் போனால் மனிதனுடைய எதிர்காலத்திற்கே நல்லதல்ல என்கிற உணர்வோடு, அந்தத் தீவிரவாதத்தின் வேர்களை ஆய்ந்து, அறிந்து, அந்த வேர்கள் இருக்கின்ற இடத்தை அடையாளம் கண்டு, அதை அகற்றுவதற்கு எத்தனை கடுமையான நடவடிக்கை வேண்டுமோ, அத்தனை கடுமையான நடவடிக்கையும் எடுக்கின்ற அதே நேரத்திலே, சமூகத் தரப்பிலே அந்த இளைஞர்களுக்குக் கிடைக்கின்ற ஆதரவிற்கு என்ன காரணம் என்பதை ஆராய்ந்து, அந்தக் காரணங்களைச் சரி செய்கின்ற அரசியல் சமூக இயக்கத்தையும் நடத்துவதற்கு அரசு வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று காங்கிரஸ் கட்சியின் சார்பில் கேட்டு, அமைகின்றேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.



2008 ஏப்ரல் 22]

*முற்பகல் 10-55*

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே தொடர்ந்து பல்வேறு செய்திகள் வந்தவண்ணம் இருந்துகொண்டிருக்கின்றன. அதிலே குறிப்பாக, மாவோயிஸ்ட் தீவிரவாதிகளின் நடமாட்டம் தமிழகத்திலே பல்வேறு மாவட்டங்களிலே, குறிப்பாகப் பல்வேறு மாவட்டங்கள் என்றால், திருவள்ளூரிலிருந்து தேனி மாவட்டம் வரை இருக்கின்ற, நம்முடைய மாநிலத்தின் எல்லையோரம் இருக்கின்ற காட்டுப் பகுதியிலே இந்த நடமாட்டம் அதிகமாக இருக்கிறது என்று, தொடர்ந்து பல மாதங்களாக அந்தச் செய்திகள் வந்தவண்ணம் இருந்துகொண்டிருக்கின்றன. இதனாலே கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னாலே நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையிலே மாவோயிஸ்ட் தீவிரவாதி நவீன் பிரசாத் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார். அவரோடு வந்த சிலரும் தப்பித்ததாகச் செய்திகள் வந்திருக்கின்றன. இதைத் தொடர்ந்து, இரண்டு நாட்களாகப் பத்திரிகையிலே செய்திகள் வந்தவண்ணம் இருந்துகொண்டிருக்கின்றன. இதுபோன்ற தீவிரவாதம் உருவாவதற்குக் காரணம், படித்த இளைஞர்கள்தான் அதிலே அதிகமாக இருந்துகொண்டிருக்கிறார்கள். அப்படி அவர்கள் அதிலே மாறுவதற்கான காரணத்தைச் சொல்கிறபொழுது, அவர்களுக்கு வருமானம் இல்லாததும், வறுமையும், அதேபோன்று நீதியும் மறுக்கப்பட்ட காரணத்தினாலே அவர்கள் இதுபோன்ற தீவிரவாத அமைப்புகளுக்குச் சென்று கொண்டுள்ளதாகத் தகவல் சொல்லப்படுகிறது. இதை நம்முடைய அரசாங்கம் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்கின்றேன். அது மட்டுமல்லாமல், நம்முடைய தமிழகத்திலே மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் என்ற பெயரிலே அந்தந்தப் பகுதியிலே வேறு சில தீவிரவாதக் குழுக்களும் சிறு சிறு குழுக்களாகச் செயல்படுவதாகச் சொல்லப்படுகிறது. அந்தக் குழுக்கள், இப்போது கொலை, கொள்ளை, ஆட்கடத்தல், திருட்டு போன்ற சம்பவங்களில் ஈடுபடுவதாகவும் தகவல் தெரிகிறது. எனவே, இதுபோன்ற தீவிரவாத அமைப்புகளோடு தொடர்பு இருப்பதாகச் சொல்லிக்கொண்டும், நாங்களும் மாவோயிஸ்டுகள் என்று சொல்லிக்கொண்டும், சிற்சில தீவிரவாதக் குழுக்கள் இதுபோன்ற பணியிலும் ஈடுபட்டுக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. எனவே, நம்முடைய தமிழக அரசாங்கம் மிகக் கடுமையாக, இதுபோன்ற குழுக்களையும் கண்காணிக்க வேண்டும். இதுபோன்ற படித்த இளைஞர்கள் வேறு திசைக்குச் செல்வதை, ஆயுதம் ஏந்திப்

போராடுவதைத் தடுப்பதற்கான முயற்சியை, நடவடிக்கையை நம்முடைய அரசாங்கம் உடனடியாக எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, நம்முடைய மாநிலத்தின் எல்லைப் பகுதி ஒரு பக்கம் கடலால் சூழப்பட்டிருக்கிறது. எஞ்சியிருக்கிற மூன்று பகுதிகளைப் பார்த்தால் ஆந்திரம், கர்நாடகம், கேரளம் ஆகியவற்றின் எல்லைப் பகுதிகளாக, நம்முடைய மலைப் பகுதிகளாக, அடர்ந்த காடுகள் நிறைந்த பகுதிகளாக இருக்கின்றன. எனவே, அந்தப் பகுதிகளை நம்முடைய காவல் துறை தீவிரக் கண்காணிப்போடு கண்காணிக்க வேண்டும் என்றும், இதுபோன்ற நிகழ்வுகளை அறவே கட்டுப்படுத்த வேண்டும் என்றும், இதுபோன்ற தீவிரவாதங்களில் ஈடுபடுகிற இளைஞர்களை நல்வழிப்படுத்துவதற்கான முயற்சியை நம்முடைய அரசாங்கம் எடுக்க வேண்டும் என்றும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமிக்குப் பதிலாக மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய திண்டுக்கல் மாவட்டத்தில், கொடைக்கானல், வடகவுஞ்சி போன்ற மலைப் பகுதிகளில் மாவோயிஸ்ட் என்ற பெயரில் செயல்பட்டுக்கொண்டிருந்த தீவிரவாதிகளைக் கண்காணித்து, தமிழகக் காவல் துறை, அவர்கள் மீதான நடவடிக்கையை இப்போது உறுதிப்படுத்தி, செயல்பட்டு இருக்கிறது. இத்தகைய தீவிரவாதிகளினுடைய செயல்பாடு என்பது ஒவ்வொரு அரசியல் கட்டத்திலும் தமிழகம் மட்டுமல்ல; உலக நாடுகளிலும், இந்தியாவிலும் இருந்து வந்திருக்கிறது என்பது வரலாறு அறிந்தது என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆகவே, இத்தகைய தீவிரவாதக் குழுக்கள் இருக்கிறார்கள் என்பதற்காகவே அதிகமாகப் பதற்றம் கொள்வது அல்லது இதன்மூலமாக சட்டம்-ஒழுங்கு முற்றிலும் சீர்குலைந்துவிட்டது என்று கூச்சல் போடுவது இவையெல்லாம் இன்றைய அரசியல் சூழலுக்குப் பொருத்தமற்றது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக நான் தெரிவிக்கின்றேன். உலக அரசியல் சூழ்நிலை என்பது இதனுடைய பின்னணியில் இருக்கிறது என்பதை நாங்கள் கவனப்படுத்த விரும்புகின்றோம். உலகத்தில் பயங்கரவாதம் எந்த அளவிற்கு இரட்டைக் கோபுரத்தைத் தகர்த்தது என்பதிலிருந்து இன்று வரை ஒவ்வொரு நாட்டிலும் இத்தகைய தீவிரவாதங்களை வளர்த்துவிடுவது, மதத்தின் பெயரால், இன்னும் பல்வேறு அரசியல் பெயரால், தீவிரவாதக் குழுக்களுக்கு ஆயுதங்களைக் கொடுப்பது, வளர்ப்பது, ஒரு அமைதியான அரசியல் பொருளாதாரச் சூழ்நிலையைச் சீர்குலைப்பது என்பது எல்லாம் உலக ஏகாதிபத்திய அரசியலோடு இணைந்தது என்று நாங்கள் பார்க்கின்றோம்.





மேலும், மேற்கு வங்க மாநிலத்தில், நந்தி கிராமத்தில் எங்களுக்கு நேரடியான அனுபவம் கிடைத்திருக்கிறது. அங்கே அதிதீவிரவாதக் குழுக்கள், மாவோயிஸ்டுகள் ஒரு கிராமத்தையே தங்களுடைய கைவசத்தில் பல மாத காலமாக வைத்திருந்தார்கள். அங்கு இருக்கக்கூடிய மக்களை, அங்கு இருக்கக்கூடிய அரசியல் கட்சிகளையெல்லாம் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, அது விவசாயிகளினுடைய பிரச்சினையாக மாற்றப்பட்டது. உலகத்திலே இருக்கக்கூடிய மீடியாக்களும், இந்தியாவிலே இருக்கக்கூடிய மீடியாக்களும் ஈவு, இரக்கம் இல்லாமல், அங்கு இருக்கக்கூடிய மாநில அரசின்மீது, "விவசாயிகளின்மீது துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டார்கள்" என்ற பிரச்சாரத்தைத் தொடர்ந்து நடத்திக்கொண்டிருந்தார்கள். சென்னைக்கு அருகிலே இருக்கக்கூடிய கிராமத்தின் பெயரைக் கேட்டால்கூட தெரியாது. ஆனால், இந்தியாவிலே நந்தி கிராமம் என்ற கிராமத்தின் பெயரைச் சாதாரணப் பாமரர்கூட சொல்லக்கூடிய அளவிற்கு அந்தப் பிரச்சினையை வளர்த்துவிட்டார்கள். இன்னும் சொல்லப் போனால், மிக வேதனையோடு பகிர்ந்துகொள்கிறோம். எங்களோடு இருக்கக்கூடிய அரசியல் கட்சிகள்கூட அந்த நேரத்திலே ஒரு பிரச்சினைக்கு இரண்டு பக்கம் இருக்கிறது என்பதை அறியாமல், எங்களை விமர்சனம்கூட செய்தார்கள். ஆனால், அப்படிப்பட்ட சூழ்நிலையிலேகூட தமிழகத்திலே அந்த நந்தி கிராமம் பிரச்சினையின்மீது தமிழக அரசும், திராவிட முன்னேற்றக் கழக இயக்கமும் அத்தகைய பிரச்சினையிலே எதிர் விமர்சனம் செய்யாமல், அந்த மாநில அரசு எடுக்கக்கூடிய நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்தார்கள் என்பதையும் நாங்கள் நிச்சயமாக நன்கு அறிவோம்.

*முற்பகல் 11-00*

அத்தகைய மாவோயிஸ்டுகள்மீது கவனமான நடவடிக்கை எடுத்து, அந்த மக்களை அத்தகைய பிடிப்பிலிருந்து வெளியே கொண்டு வந்து, எதிராக இருந்த அரசியல் கட்சிகளையெல்லாம் தனிமைப்படுத்தி, இப்பொழுது நந்தி கிராமத்திலே அமைதி நிலைநாட்டப்பட்டிருக்கிறது என்று சொன்னால், மேற்கு வங்கத்தில்

ஆட்சியிலே இருக்கக்கூடிய இடது முன்னணி அரசான, மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சியினுடைய நடவடிக்கை என்பதை இந்த நேரத்திலே நான் பகிர்ந்துகொள்வதற்கு விரும்புகின்றேன். அந்த முறையிலேதான் தமிழகத்திலே இன்றைக்கு மாவோயிஸ்டுகள் மலைப் பகுதிகளிலே ஊடுருவியிருக்கிறார்கள்; அங்கு இருக்கக்கூடிய இளைஞர்களைத் திசை திருப்புகிறார்கள் என்ற பிரச்சினை எழுந்திருக்கிறது. தமிழக அரசும், காவல் துறையும் உரிய, கறாரான நடவடிக்கையை எடுத்துக்கொண்டிருக்கின்றன. அந்த இளைஞர்கள், விவசாயிகள், ஜனநாயக இயக்கத்தோடு இன்னமும் இருக்கிறார்கள். கொடைக்கானல் மலை ஒன்றும் தீவிரவாதத்தின் பக்கமாகச் சென்றுவிடவில்லை. ஆகவே அத்தகைய விவசாயிகளைப் பல்வேறு அரசியல் இயக்கங்களில் இருக்கக்கூடிய இளைஞர்களை நம்மால் நிச்சயமாக வென்றெடுக்க முடியும். ஆகவே, காவல் துறை என்பது உஷார்படுத்தப்பட வேண்டுமென்பது எங்களுடைய கருத்து.

குறிப்பாக, சில media-க்களில் செங்கொடியை, அரிவாள், சுத்தியல் கொடி வைத்திருப்பதைப் போன்று காட்டப்படுகிறது. அதிதீவிரவாதம் என்பதே, அடையாளங்களைக் காட்டிக்கொள்ள மாட்டார்கள். அது நாம் அனைவரும் அறிந்த ஒன்று. ஜனநாயகத்தில்தான் கொடி ஏற்றுவது, கொடியைக் காட்டுவது என்ற விளம்பரங்களுக்குள் நம் ஜனநாயக உணர்வு இருக்கும். ஆனால் இத்தகைய அதிதீவிரவாதக் குழுக்கள், கொடிகளையெல்லாம் வைத்திருக்க மாட்டார்கள். ஆகவே, காவல் துறை என்பது இன்னமும் கவனமாகச் செயல்பட வேண்டும். அந்த வகையிலே அந்தத் தீவிரவாதக் குழுக்களின்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். மக்களை ஜனநாயகப்பூர்வமான நடவடிக்கைக்குக் கொண்டு வருவதற்கு மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சி, தமிழக அரசோடு, திராவிட முன்னேற்றக் கழக அரசோடு தோழமையோடு ஒத்துழைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) அறிவிப்புக் கொடுக்காமல் எழுந்திருக்கக் கூடாது, உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே எழுப்பப்பட்டிருக்கிற பிரச்சினை என்பது, நக்சலைட் தீவிரவாதத்தைத் தமிழகத்திலே வளரவிட்க் கூடாது என்கின்ற அக்கறையின் காரணத்தினாலே பேசப்பட்டுக்கொண்டிருக்கிறது. கொடைக்கானலிலே நடந்த சம்பவம்பற்றி இங்கே விரிவாகப்





பேசப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதிலே எனக்கு உடன்பாடு இருக்கிறது. நக்சலைட் தீவிரவாதிகளுடைய, அவர்களுடைய கொள்கைகளும், கோரிக்கைகளும், அவர்களுடைய போராட்டம் என்பது வேறு; ஆட்சி மாற்றத்திற்கு அவர்கள் ஆயுதம் தாங்கிய புரட்சி என்கிறார்கள். அதிலே உடன்பட மறுப்பவர்கள், கம்யூனிஸ்டு கட்சிகளாகிய நாங்கள் இடதுசாரிக் கட்சிகள். எங்களுக்கும், அவர்களுக்கும் நிரம்ப வித்தியாசம் இருக்கிறது. நாங்கள் அதை மறுக்கிறோம்; ஏற்றுக்கொள்ளவில்லை. அந்தப் பாதை தவறு என்பதுதான் எங்களுடைய நிலைப்பாடு. அதே நேரத்தில், அது இந்தியாவிலே வேகமாக வளர்ந்து, பல மாவட்டங்களைப் பிடித்துக்கொண்டிருக்கிறது என்பது யதார்த்தமான உண்மை. அதற்கு இருக்கிற சமூக, பொருளாதாரக் காரணங்கள் மாற்றப்பட வேண்டும். இங்கே தத்துவார்த்த விமர்சனமோ, அதற்குரிய வியாக்யானமோ செய்கிற இடமாக இதை நான் பார்க்கவில்லை. ஆனால், இங்கே தமிழகத்தில் வந்திருக்கிற இந்தப் பிரச்சினைமீது தீர்வு காண்பதற்கான முயற்சி நமது அரசின் சார்பில் எடுக்கப்படுகிறது. அதிலே எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. இப்பொழுதுகூட நக்சலைட்டுகளைப்பற்றிப் பேசுகிறபோது, அதுதான் இப்போது நமது ஆசியக் கண்டத்திலேயே நேபாளத்திலே இப்போது ஆட்சிக்கே வந்துவிட்டது. ஆயுதக் கலாச்சாரப் புரட்சி என்று போராட்டம் நடத்தியவர்கள், இப்பொழுது நாங்கள் ஜனநாயக ரீதியாக ஆட்சிக்கு வந்திருக்கிறோம்; ஆயுதத்தைக் கைவிட்டுவிட்டோம்; மக்களுக்கான இயக்கங்களையும், அதற்குரிய திட்டங்களையும் நிறைவேற்றுவோம் என்று அதன் தலைவரே அறிவிப்புச் செய்திருக்கிறார். இதையெல்லாம் சொல்கிறபோது, இதை நியாயப்படுத்துவதற்காகச் சொல்லவில்லை. ஆனால் இந்த நக்சலைட்டுகளை ஒடுக்குவது என்ற பெயரால், காவல் துறையிலே இருக்கிற சில அதிகாரிகளுடைய விருப்பு, வெறுப்பு அமைந்துவிடக் கூடாது என்பதுதான் இதிலே சொல்லப்படுகிற கருத்து. இதிலே பல செய்திகள் வந்திருக்கின்றன. தொலைக்காட்சிகளிலே வந்த செய்திகளைப் பார்க்கிறபோது, அதிலே கம்யூனிஸ்டு கட்சியினுடைய கொடி, அரிவாள், சுத்தியல் பொறித்த கொடி அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. நக்சலைட்டுகள் அழகாக அடுக்கி வைத்து, அவர்களுடைய போராட்டத்தை நடத்திக்கொண்டிருப்பார்கள் என்று என்னால் சொல்ல முடியவில்லை. அதுவும் கொடி பிடித்து—அவர்கள் தலைமறைவாக இயக்கம் நடத்துகிறவர்கள், கொடியைப் பிடிக்க வாய்ப்பே இல்லை.

[திரு. வை. சிவபுண்ணியம்] [2008 ஏப்ரல் 22

ஆனால் அப்படியெல்லாம் போலீஸ் காட்டுகிறது. இதையெல்லாம் கொஞ்சம் பரிசீலிக்க வேண்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்பது என்னுடைய பணிவான கருத்து.

*முற்பகல் 11-05*

இன்னொரு விஷயத்தைப் பார்க்கிறபோது, தமிழகத்தில் இதைப்பற்றிப் பேசுகிறபோதும், கருத்துகள் வருகிறபோதும், அரசியல் கட்சிகள் சொல்கிறபோதும், ஏதோ சட்டம்-ஒழுங்கு கெட்டுவிட்டதைப்போன்ற ஒரு தோற்றத்தைத் தமிழகத்திலே உருவாக்குவதற்கான முயற்சியை எடுக்கிறார்கள். அதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நான் வன்மையாக மறுக்கிறேன்; கண்டிக்கிறேன். அப்படிப்பட்ட நிகழ்வு என்பது தமிழ்நாட்டில் கண்டிப்பாக ஏற்படவில்லை. இதிலே உறுதியாக இருக்கலாம். ஆனால் ஒரு சில சம்பவங்கள் எந்த ஆட்சியிலும் நடைபெறவில்லை என்று யாரும் வாதிடமுடியாது. எல்லா ஆட்சிகளிலும் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடந்திருக்கின்றன; அப்படிப்பட்ட தீர்வுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பது யதார்த்தமான உண்மை. ஆனால் ஏதோ ஒரு விதமாகச் சொல்லப்படுகிறது. எனக்குக்கூட சந்தேகம் இருக்கிறது. இப்போதுகூட தென் மாவட்டத்திலே வேறு ஒரு பிரச்சினை இருக்கின்றது. இதையெல்லாம் பார்க்கிறபோது, ஏதோ ஒரு சக்தி இதிலே புகுந்து விளையாடுவதற்கான முயற்சி, தமிழகத்தில் முயற்சி எடுக்கப்படுகிறதோ என்று நான் அச்சப்படுகிறேன்; சந்தேகப்படுகிறேன். தயவுசெய்து அந்த மாதிரியான காரியங்கள்மூலமாக அரசியல் ஆதாயம் தேடுவது என்பது, குறுகிய இலாப நோக்கத்தோடுகூடிய ஆதாயமாக அது அமைந்துவிடும். அரசியலாகத்தான் நாம் சந்திக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து. ஆகவே, இதன்மீது உரிய முறையிலே நடவடிக்கை எடுத்து, இது தடுக்கப்பட வேண்டும். அதிலே காவல் துறையினுடைய தலையீடு அத்துமீறலாக இருக்குமானால், அதைத் தடுப்பதற்குரிய முயற்சியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுக்க வேண்டும். இதை அமைதியை நிலைநாட்டுவதற்கான முயற்சியாகப் பார்க்க வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.



2008 ஏப்ரல் 22]

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. பன்னீர்செல்வம் அவர்களும், அவரைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக திரு. ஆறுமுகம் அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக செல்வி பாலபாரதி அம்மையார் அவர்களும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக திரு. சிவபுண்ணியம் அவர்களும் இங்கே இந்த அவையில் வைத்து எடுத்துக் கூறிய கருத்துகளைப்பற்றி என்னுடைய கருத்துகளையும் அவற்றோடு இணைத்து வழங்கிட விரும்புகின்றேன்.

இங்கே பேசப்பட்ட தீவிரவாதம் என்பது, அருமை நண்பர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப்போல, ஒரு கட்சியை இன்னொரு கட்சி குறை கூறுவதற்காக எழுப்பப்பட்ட சொற்றொடர் அல்ல. இன்னும் சொல்லப் போனால், ஒரு அரசுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்ட வார்த்தையும் அல்ல. தீவிரவாதம் என்பது, பொதுவாக எந்த ஆட்சி நடைபெற்றாலும், அந்த ஆட்சியை நடத்துகின்றவர்கள், எதிர்த் தரப்பிலே இருக்கின்றவர்கள், அந்த ஆட்சியினுடைய பரிபாலனத்திற்குட்பட்ட பொது மக்கள், எல்லோருமே தீவிரவாதத்தினுடைய பலனை அனுபவிக்க வேண்டியவர்கள்தான். எப்படி வெள்ளம் வந்தால், புயலடித்தால், பெருமழை பெய்தால்—ஏன் பூகம்பமே ஏற்பட்டால்—அந்த நேரங்களில் எல்லாக் கட்சிகளும் ஒன்றாக இணைந்து, அதனுடைய பாதிப்புகளைத் தாங்கிக்கொள்ளக்கூடிய அளவிற்கு மக்களிடத்திலே தங்களுடைய அனுகுமுறையை நடத்திக் காட்டுவதும், பாதுகாப்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் பொதுவானதாக இருப்பதைப் போலவே, தீவிரவாதம் தலையெடுக்கிற நோத்தில் அதைத் தவிர்ப்பது, தடுப்பது, இதையும் எல்லாக் கட்சிகளும் பொதுவானதாகக் கருதித் தடுப்பதற்கு முன்வர வேண்டும். அந்த வேண்டுகோளைத்தான் இந்த அவையிலே நான் முதலில் இந்த நேரத்தில் வைக்க விரும்புகின்றேன்.

இப்போது ஒன்றிரண்டு சம்பவங்கள் நடைபெற்று, அதன் காரணமாக இன்று எழுப்பப்பட்டுள்ள கவன ஈர்ப்புத் தீர்மானம் பற்றிய விவரங்களைக் கேட்ட நேரத்தில், காவல் துறைமூலமாக, அதிகாரிகள்மூலமாக அரசுக்கு வந்துள்ள அல்லது அரசின் சார்பில் சேகரித்த அறிக்கையின் சில பகுதிகளை இங்கே நான் வெளியிட விரும்புகின்றேன்.

முற்பகல் 11-10

இந்த அரசு பதவியேற்றதிலேயிருந்து, மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கைப் பராமரிக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து, அண்டை மாநிலங்கள் உள்பட பல மாநிலங்களில் வளர்ந்து வரும் தீவிரவாதச் செயல்களைக் கருத்தில்கொண்டு, அந்தச் செயல்கள் தமிழகத்தில் நுழையாமல் பார்த்துக்கொள்ள அனைத்துத் தடுப்பு நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

தமிழக அரசின் அறிவுரைப்படி, காவல் துறையினர் இதுபோன்ற தீவிரவாத அமைப்புகளின் நடவடிக்கைகளையும், தடை செய்யப்பட்ட இயக்கங்களின் நடவடிக்கைகளையும் கண்காணித்து, மாநிலம் முழுவதும் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்தியும், மாநில எல்லைகளில் சோதனைச் சாவடிகளை அமைத்தும், கடலோர மாவட்டங்களில் சோதனைகளைத் தீவிரப்படுத்தியும், காட்டுப் பகுதிகளில் அடிக்கடி தீவிர சோதனைகள் நடத்தியும், தீய சக்திகள் தமிழகத்தில் வேரூன்றிவிடாவண்ணம் பார்த்தும் வருகின்றார்கள்.

இதுபோன்ற நடவடிக்கையின் விளைவாக, 2006 ஆம் ஆண்டு, ஆந்திர மாநிலம், கிருஷ்ணா மற்றும் பிரகாசம் மாவட்டங்களில், கிராந்தி போக்குவரத்துக் கம்பெனிக் கிடங்கில், அதிக அளவு rocket launcher உதிரி பாகங்கள் கைப்பற்றப்பட்டு, அவை கிராந்தி போக்குவரத்து கம்பெனி, சென்னைக் கிளையிலேயிருந்து அனுப்பப்பட்டவை என்ற தகவல் கிடைத்தவுடன் 'Q' பிரிவினர் உடனடியாகச் செயல்பட்டு, இரண்டு நாட்களுக்குள், மேற்படி உதிரி பாகங்களைத் தயாரித்த lathe உரிமையாளர்கள் 7 பேரைக் கைது செய்து, அவற்றைத் தயாரிப்பதற்கு அவர்கள் பயன்படுத்திய இயந்திரங்களையும் கைப்பற்றினார்கள். மேற்படி உபகரணங்கள், 2003 ஆம் ஆண்டிலிருந்தே ஒரு தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த ரகு என்பவரால் தயாரிக்கப்பட்டு, ஆந்திர மாநிலத்திற்கு அனுப்பி வந்ததைக் கண்டறிந்து, அந்தத் தீவிரவாதியைக் கைது செய்து, அவர்களுடைய இயக்கத்தின் சதியை அப்போது முறியடித்தார்கள்.

இதனைத் தொடர்ந்து, மாநிலம் முழுவதும் தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கை மற்றும் தேடுதல் வேட்டை மேற்கொண்டு வந்தார்கள். இதன் விளைவாக, தேனி மாவட்டம், பெரியகுளம் அருகே, முருகமலைக் காட்டில், 25-6-2007 அன்று ஆயுதப் பயிற்சி



செய்வதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்த 6 நக்சலைட்டுகள் மற்றும் அவர்களுக்குத் தஞ்சம் அளித்து வந்த ஒருவர் கைது செய்யப்பட்டார்கள். 1992 ஆம் ஆண்டு முதல், கொலை, கொள்ளை, குண்டு வெடிப்பு சம்பந்தப்பட்ட பல்வேறு வழக்குகளில் காவல் துறையினரால் 15 ஆண்டுகளாகத் தேடப்பட்டு வந்த முக்கிய நக்சலைட் தலைவன் சுந்தரமூர்த்தி, 9-7-2007 அன்று கைது செய்யப்பட்டவர்களுள் ஒருவராவார். அவர்களிடமிருந்து சில துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன. விசாரணையில், அத்துப்பாக்கிகள் ஒரிசா மாநிலம், கோராப்பட்டினம் நகரத்தில், போலீஸ் ஆயுதக் கிடங்கிலேயிருந்து கொள்ளையடிக்கப்பட்ட சுமார் 500 துப்பாக்கிகளில் சில என்பதும் தெரிய வந்துள்ளது.

காவல் துறையினர் தொடர்ந்து கண்காணித்து வந்ததையடுத்து, தேனி மாவட்டம், வருசநாடு வனப் பகுதியில் சந்தேகப்படும்படியாகச் சிலர் நடமாடி வருவதாகத் தகவல் கிடைக்கப்பெற்று, சிறப்பு அதிரடிப் படையினர் அப்பகுதியில் தேடுதல் வேட்டை மேற்கொண்டு வந்தபோது, 19-12-2007 அன்று மேற்படி நபர்களைச் சுற்றி வளைத்து, துப்பாக்கிப் பிரயோகம் செய்து, 5 நக்சலைட்டுகளைக் கைது செய்தார்கள். இதில் நொண்டி பழனி என்பவர், 1980 ஆம் ஆண்டு முதல் தேடப்பட்டு வந்த முக்கியத் தீவிரவாதி ஆவார். இதன்மூலம், நக்சலைட் தீவிரவாதிகள் காட்டுப் பகுதியிலே தொடங்கப்படவிருந்த பயிற்சி முகாம்களைக் காவல் துறை முன்கூட்டியே தகவலறிந்து தடுத்துள்ளது. மேலும், 'Q' பிரிவினர் சேகரித்த தகவலின் அடிப்படையில், 6-12-2007 அன்று திருவள்ளூர் மாவட்டம், சுங்கம்பேடு கிராமத்தில் தங்கி சிசிக்சை பெற்று வந்த, கொலை, குண்டு வெடிப்பு போன்ற 6 வழக்குகளில் சம்பந்தப்பட்டு, ஆந்திர மாநிலக் காவல் துறையால் தேடப்பட்டு வந்த, தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த பிரதாப் என்பவரின் மனைவி கவிதாவைக் கைது செய்தார்கள்.

முற்பகல் 11-15

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் மலைப் பகுதியில், திண்டுக்கல் மாவட்டக் காவல் துறை மற்றும் சிறப்பு அதிரடிப் படையினர் தேடுதல் வேட்டையிலே ஈடுபட்டு வந்தபோது, 19-4-2008 அன்று, ஏழாம்பாறை, மூலையாறு ஓடைப் பகுதியில் நக்சலைட் தீவிரவாதிகளினுடைய நடமாட்டம் இருப்பதாகத் தெரிந்து, அந்த இடத்திற்கு விரைந்து சென்று பார்த்தபோது, அங்கிருந்த சிலர், காவல் துறையினர்மீது துப்பாக்கியால் சுட்டும், கையெறி குண்டுகளை

வீசியும் தாக்குதல் நடத்தியுள்ளார்கள். காவல் துறையினர் தற்காப்புக்காகவும், அவர்களைக் கைது செய்வதற்காகவும் எச்சரிக்கை செய்து, வானத்தை நோக்கிச் சுட்டும், அவர்கள் தொடர்ந்து தாக்குதல் நடத்தியதையடுத்து, காவல் துறையினர் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள அவர்களை நோக்கிச் சுட்டதில், அங்கிருந்து தப்பியோடிவிட்டார்கள். அவர்களைப் பிடிக்க முயற்சி செய்து, பிடிக்க இயலாமல் சம்பவ இடத்திற்குச் சென்று பார்க்க, அந்த இடத்தில் நவீன் என்கிற பிரசாத் என்ற நக்சலைட் தீவிரவாதி குண்டுக் காயம் அடைந்து, இறந்து கிடந்துள்ளார். இதுசம்பந்தமாக வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது. காவல் துறையினர், தப்பியோடிய தீவிரவாதிகளைக் காட்டுப் பகுதியிலே தீவிரமாகத் தேடி வருகின்றார்கள். இறந்துபோன நவீன் மூன்று கொள்ளை, கொலை முயற்சி, ஆயுதம் மற்றும் வெடி பொருள் சட்ட வழக்குகளில் சம்பந்தப்பட்டு, 2002-லேயிருந்து தேடப்பட்டு வந்த குற்றவாளியாவார்.

இந்த அரசு பதவியேற்ற நாளிலிருந்து மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கைப் பராமரிக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு, தமிழகத்தில் தொடர்ந்து சாதி, சமயப் பூசல்கள் ஏதுமின்றி, அமைதி காக்கப்பட்டு வருகிறது. இலங்கையில் நிலவி வரும் பதற்றமான சூழ்நிலையில், நாட்டில் இருந்து வரும் மதவாதத் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளையும், அண்டை மாநிலங்கள் உட்பட பல மாநிலங்களில் வளர்ந்துவரும் தீவிரவாதச் செயல்களையும் கருத்திற்கொண்டு, தமிழக அரசு மேற்குறிப்பிட்ட தீவிரவாதச் செயல்கள் தமிழகத்தில் நுழையாமல் பார்த்துக்கொள்ள, தேவையான அனைத்துத் தடுப்பு நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது.

காவல் துறையினர் கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 24 நக்சலைட்டுகளைக் கைது செய்து, அவர்களில் 8 நபர்களைத் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தடுப்புக் காவலில் வைத்துள்ளனர். ஆனால், கடந்த ஆட்சியில், மே 2001 முதல் 2006 வரை 11 வழக்குகள் பதிவு செய்து, 56 பேர் கைது செய்யப்பட்டும், அதில் எவரும் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்படவில்லையென்றாலும், அவர்கள் அப்பொழுது கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியின்போது, 8-5-2002 அன்று மாவோயிசப் பொதுவுடைமை நடுவத்தைச் சேர்ந்த கிருஷ்ணப்பா மற்றும் 11 நபர்கள், கிருஷ்ணகிரி மாவட்டம், தளி பஞ்சாயத்துத் தலைவர் வெங்கடேசன் என்பவரைக் கொலை செய்தார்கள். தருமபுரி மாவட்டம், சாலைஜோகிப்பட்டி கிராமத்தில், ஒரு மாந்தோப்பில் நக்சலைட்டுகள் பயிற்சி முகாம் நடத்துவதாகக் கிடைத்த தகவலின்பேரில், 24-11-2002 அன்று சின்னகலகம்பட்டி கிராமத்தில் 'Q' பிரிவினர் தேடுதல் வேட்டை நடத்தியபோது, நக்சலைட்டுகளுக்கும் காவல் துறையினருக்கும் நடந்த துப்பாக்கிச் சண்டையில், நக்சலைட் சிவா என்ற பார்த்திபன் சுட்டுக் கொல்லப்பட்டான். 29-11-2002 அன்று, கருகம்பட்டி கிராமத்தில் இதேபோன்று நடந்த தேடுதல் வேட்டையின்போது, காவல் துறையினருக்கும் நக்சலைட்டுகளுக்கும் மோதல் ஏற்பட்டு, 28 நக்சலைட்டுகள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இம்மோதல்களில் காவல் துறையினர் 7 பேர் காயம் அடைந்துள்ளார்கள்.





*முற்பகல் 11-20*

இதிலிருந்தே கடந்த ஆட்சிக் காலத்திலும், நக்சலைட் தீவிரவாதிகளினுடைய நடவடிக்கைகள் இருந்து வந்துள்ளன என்பதும், நக்சலைட்டுகள் பயிற்சி முகாம்களை நடத்த முயன்றுள்ளார்கள் என்பதும், தேடுதல் வேட்டையின்போது நக்சலைட்டுகளுக்கும், காவல் துறையினருக்கும் மோதல் ஏற்பட்டு, துப்பாக்கிப் பிரயோகம் நடந்துள்ளது என்பதும் தெளிவாகப் புரியும். இதை நான் சொல்கின்ற காரணத்தால், அது அந்த ஆட்சியில் நடந்தது; இது இந்த ஆட்சியில் நடைபெறவில்லை என்று வக்காலத்து வாங்கவோ, வாதிடவோ நான் விரும்பவில்லை. நான் அதற்காகத்தான் தொடக்கத்திலேயே சொன்னேன், இது வெள்ளத்தைப்போல், புயலைப்போல், பூகம்பத்தைப்போல், இயற்கைச் சீற்றம்போல் வந்த ஒன்று இந்தத் தீவிரவாதம் என்று. அதை எல்லோரும் கூடித்தான் எதிர்க்க வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். அதை எப்படி எதிர்ப்பது? அவர்களைப் போலவே ஆயுதம் தாங்கியா? அல்ல. அவர்களைப் போலவே வன்முறையில் ஈடுபட்டா? அல்ல. அவர்கள் ஏன் இந்த நிலைக்கு ஆளானார்கள்? நம்முடைய நண்பர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல், அவர்களுக்கு ஏன் படிப்பறிவு இல்லை? படிக்கவில்லை; படிக்காததற்கு என்ன காரணம்? வசதியில்லை; வசதியில்லாததற்கு என்ன காரணம்? அதை ஆழமாக, அந்த ஆணிவேரைத் தோண்டிப் பார்த்து அறிய வேண்டும். அப்படி அறிந்தால், அந்த ஆணிவேர் அகற்றப்பட்டால், அந்தக் காரணத்தைக் கண்டுபிடித்தால், மக்கள் நலமாக வாழ, நல்வாழ்வு வாழ, அமைதியாக வாழ—வருங்காலச் சமுதாயம்—வாலிபர்கள், புரட்சிகரமான

இளைஞர்களாக மாறாமல், புதிய நாட்டை உருவாக்குகின்ற இளைஞர்களாக மாறுவார்கள்; அதற்கு நாம் அனைவரும் நம்முடைய கடமையைச் செய்ய வேண்டும்; அந்தக் கடமைதான்— அவர்களுடைய தேவை என்ன என்பதை உணர்ந்து, அந்தத் தேவையை நிறைவு செய்கின்ற கடமை என்பதை நான் உணர்த்தி, இந்த அளவில் இந்தக் கருத்திற்கு என்னுடைய விளக்கத்தை அளிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 3. விதி 110–ன்கீழ் அறிக்கை

### ஊராட்சித் தலைவர்களின் தேசிய மாநாட்டில் தமிழ்நாட்டுப் பிரதிநிதிகள் பங்கேற்காதது குறித்து மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், எடுத்துக்கொள்கிறேன். மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள், புது தில்லியில் நடைபெறுகின்ற ஊராட்சித் தலைவர்கள் தேசிய மாநாட்டில், தமிழ்நாட்டிலிருந்து பிரதிநிதிகள் பங்கேற்காதது குறித்து மாநில அரசு மேற்கொண்டுள்ள நிலை குறித்து விவரம் கோரினார்கள். நானும், இன்றையதினம் அந்த விவரத்தை அவைக்குத் தெரிவிப்பதாகப் பதிலளித்தேன். அதன்படி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதி பெற்று, சட்டப் பேரவை விதி எண் 110-ன்கீழ் இந்த விவரத்தை அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு, மாண்புமிகு மத்திய அரசு, பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் திரு. மணி சங்கர் அய்யர் அவர்கள் எழுதிய 6-12-2007 ஆம் நாளிட்ட கடிதத்தில், ஏப்ரல் 22 முதல் 24 வரை புது தில்லியில், மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் மற்றும்





ஊராட்சி ஒன்றியத் தலைவர்களின் தேசிய மாநாடு நடைபெற உள்ளதாகத் தெரிவித்து, இதற்குத் தமிழ்நாட்டிலிருந்து பிரதிநிதிகளை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொண்டார். இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காகப் பல்வேறு கட்சிகளைச் சார்ந்த 68 பிரதிநிதிகள்கொண்ட குழுவின் பட்டியலைத் தமிழக அரசு, பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்திற்கு 20-3-2008 அன்று அனுப்பியது.

இதனிடையே, பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் சார்பாக ஒரு வரைவு சாசனம் தயாரிக்கப்பட்டு, தேசிய மாநாட்டில் நிறைவேற்றியபின், மாண்புமிகு இந்தியப் பிரதமரிடம் அளிக்கப்பட உள்ளதாகத் தெரிய வந்தது. இந்த வரைவு சாசனம், மாநில அரசையோ அல்லது ஊராட்சி மன்றத் தலைவர்களையோ கலந்தாலோசித்துத் தயாரிக்கப்படவில்லை. மேலும், மாநாட்டில் கலந்துகொள்ளும் பிரதிநிதிகள் தங்களது கருத்துகளை சுயமாகத் தெரிவிக்க வேண்டுமே தவிர, பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தின் சார்பாகத் தயாரிக்கப்பட்ட சாசனத்தை ஏற்றுக்கொள்ளுமாறு கட்டாயப்படுத்துவது தவறான நடைமுறையாகும்.

வரைவு சாசனத்தை ஆய்வு செய்தபோது, அதில், இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவுகளுக்கு முரணான வகையில், ஊராட்சிகள் என்ற பொருளை, மாநில அரசுப் பட்டியலிலிருந்து மைய அரசுப் பட்டியல் அல்லது இணைப் பட்டியலுக்கு மாற்றக் கோருவது மற்றும் ஊராட்சி அமைப்புகள் தொடர்பான மாநில அரசின் பொறுப்புகளைக் குறைப்பது போன்ற பல்வேறு ஆட்சேபணைக்குரிய பரிந்துரைகள் இடம்பெற்றிருந்தது தெரிய வந்தது.

இந்த வரைவு சாசனத்தில் இடம்பெற்றுள்ள ஆட்சேபகரமான பரிந்துரைகளை நீக்க வேண்டுமென்றும், அதனடிப்படையிலே தமிழ்நாட்டிலிருந்து இந்த மாநாட்டில் பிரதிநிதிகள் கலந்துகொள்வதுபற்றி முடிவு செய்ய இயலும் என்றும் தெரிவித்து, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கடந்த 29-3-2008 அன்று மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு ஒரு கடிதத்தை அனுப்பினார்கள். இதன் அடிப்படையில், இம்மாநாட்டிற்குத் தமிழ்நாட்டில் இருந்து பிரதிநிதிகளை அனுப்புவது இல்லை என்று பின்னர் முடிவு செய்யப்பட்டது.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2008 ஏப்ரல் 22

முற்பகல் 11-25

இந்தக் கடிதத்தில் எழுப்பப்பட்ட ஆட்சேபனைகளுக்கான பதிலை உள்ளடக்கி, மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கு அனுப்பிய கடிதம் தமிழக அரசிற்கு நேற்றையதினம், 21-4-2008 அன்று கிடைக்கப்பெற்றது.

இக்கடிதத்தில், மாநில அரசின் அதிகார வரம்பிற்குட்பட்ட ஊராட்சிகள் என்ற பொருளை மத்திய அரசுப் பட்டியலுக்கோ அல்லது இணைப் பட்டியலுக்கோ மாற்ற வேண்டுமென்று வரைவு சாசனத்தில் இடம்பெற்றுள்ள பரிந்துரையை இச்சாசனத்தில் சேர்க்க வேண்டாம் என்று பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்திற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளதாக மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் கடிதத்தின்மூலமாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

இதர ஆட்சேபனைக்குரிய பரிந்துரைகளைப் பொறுத்து, மேற்படி மாநாட்டில் இந்தச் சாசனம் சமர்ப்பிக்கப்பட்டாலும், அதனை ஏற்றுக்கொள்வது என்பது, தேசிய வளர்ச்சி மன்றம் போன்ற தகுந்த அமைப்பில், மாநில அரசுகளுடன் கலந்தாலோசித்து, இறுதி செய்வதன் அடிப்படையிலேயே முடிவு செய்யப்படும் என்று இந்தியப் பிரதமர் அவர்கள் தன்னுடைய கடிதத்திலே தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

எனினும், இன்றும், நாளை மற்றும் நாளை மறுநாளும் புது தில்லியில் நடைபெறவுள்ள இந்திய தேசிய மாநாட்டில் தமிழ்நாட்டிலிருந்து பிரதிநிதிகளை அனுப்புவதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்வதற்குத் தேவையான கால அவகாசம் இல்லாததால், தமிழ்நாட்டிலிருந்து ஊராட்சித் தலைவர்கள் இம்மாநாட்டில் கலந்துகொள்ள இயலாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

உள்ளாட்சிகளுக்கு அதிகாரப் பரவலாக்கம் செய்வதிலும், கூடுதல் நிதி வழங்குவதிலும், இந்தியாவிலேயே தமிழக அரசு முன்னணியில் உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 1996 ஆம் ஆண்டிற்குப் பிறகு, உள்ளாட்சிகளுக்கு அதிகாரப் பரவலாக்கம் செய்வது குறித்து மூன்று உயர்நிலைக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அவற்றின் பல பரிந்துரைகள் செயல்படுத்தப்பட்டிருக்கின்றன. ஊராட்சிகளுக்குக் கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதில் இந்த அரசுக்கு மாற்றுக் கருத்து இல்லை. எனினும், மாநில அரசின் பொறுப்புகளையும், அதிகாரங்களையும் விட்டுக் கொடுத்துத்தான் இவ்வாறு வழங்க வேண்டும் என்ற நிலை இந்த அரசுக்கு ஏற்புடையதல்ல.



2008 ஏப்ரல் 22] [திரு. மு.க. ஸ்டாலின்]

புது தில்லியில் நடைபெறுகின்ற தேசிய மாநாட்டில் சமர்ப்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள வரைவு சாசனத்தின் ஆட்சேபனைக்குரிய பரிந்துரைகள் குறித்து தமிழக அரசின் நிலையை மத்திய அரசு ஏற்றுக்கொண்டுள்ளது என்பது மகிழ்ச்சிக்குரியதாகும். மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களின் பதில் கடிதத்திற்கு இந்த அவையின்மூலமாக நான் நன்றி தெரிவித்து, அமைகிறேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

## 4. தகவல் கோரல்

### (அ) ஊராட்சித் தலைவர்களின் தேசிய மாநாட்டில் தமிழ்நாட்டுப் பிரதிநிதிகள் பங்கேற்க மத்திய பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் அனுப்பிய தகவல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மத்திய பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் அவர்கள் ஒரு தகவலை அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் இன்று அந்த மாநாட்டில் ஆற்றுகின்ற உரையில், நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்துகளை அவரும் வலியுறுத்தப் போவதாகவும், எந்தக் காரணம் கொண்டும் பஞ்சாயத்து ராஜ் அமைப்பை மாநிலப் பட்டியலிலிருந்து மத்தியப் பட்டியலுக்கோ அல்லது பொதுப் பட்டியலுக்கோ அனுப்ப மாட்டோம்; அனுப்பும் உத்தேசம் இல்லை என்பதையும் நம்முடைய மாண்புமிகு பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் அவர்கள் . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** He is not speaking on the statement under Rule 110. உட்காருங்கள். (குறுக்கீடு)

**THIRU. S. PETER ALPHONSE:** I am not speaking on the statement under Rule 110. (Interruptions)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை, இல்லை; உட்காருங்கள்.* No discussion on the statement under Rule *110, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை; 110-லே விவாதமே கிடையாது, விதி 110-ன்கீழ் அவர் விவாதம் செய்யவில்லை. உட்காருங்கள், எல்லோரும் அமைதியாக இருங்கள்.*

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த விதி 110 அறிக்கையின்மீதான விவாதத்திலே நான் உரையாற்றவில்லை. மாண்புமிகு மத்திய பஞ்சாயத்து ராஜ் துறை அமைச்சர் அவர்கள் அனுப்பியுள்ள சில தகவல்களை இந்த அவைக்கு நான் கொண்டு வருகிறேன். அவர்கள் தனிப்பட்ட முறையிலே, இப்போது நம்முடைய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு, 25 ஆம் தேதி நடக்க இருக்கின்ற ஊரக வளர்ச்சித் துறை மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்கள் மாநாட்டிலே அவர்கள் வந்து கலந்துகொண்டு, அவர்களுடைய மேலான கருத்துகளைக் கண்டிப்பாக வழங்க வேண்டுமென்று அழைப்பு கொடுத்திருக்கிறார்கள். அவர்களே வரவேண்டுமென்று அழைத்திருக்கிறார்கள். அந்த அழைப்பை ஏற்று (குறுக்கீடு) அந்தக் கடிதத்தினுடைய நகல் இருக்கிறது. எனவே, அந்த அழைப்பு வந்தால் நம்முடைய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அந்த மாநாட்டில் கலந்துகொண்டு, நம்முடைய தமிழக அரசினுடைய, தமிழகத்தினுடைய கருத்துகளைத் தெரிவிக்க வேண்டும் என்கிற வேண்டுகோளை வைத்து, நான் [illegible]மர்கிறேன்.*

*முற்பகல் 11-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், மத்திய அமைச்சர் அவர்கள் அவருக்கு ஒரு தகவலை அனுப்பியிருப்பதாக ஒரு செய்தியைச் சொன்னார்கள். அதுபோல எந்தத் தகவலும், எந்தச் செய்தியும் அரசுக்கு முறையாக வந்து சேரவில்லை. இருந்தாலும், அப்படி ஒருவேளை இன்றோ அல்லது நாளையோ வரும் என்ற ஒரு சூழ்நிலை வந்தாலும்கூட, இந்தக் குழுவிலே 68 பேர் இடம் பெற்றிருக்கிற காரணத்தினால்,*





*68 பேரையும் ஒரே நேரத்தில், ஒரே சமயத்தில் அனுப்பி வைக்க வாய்ப்பில்லை. அதனால், காலத்தினுடைய சூழ்நிலையைக் கருதி அனுப்பி வைக்க முடியாது என்பதை நான் அறிக்கையிலே படித்திருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No, *உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியிலே இருக்கின்ற அரசு . . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் வேறு சப்ஜெக்ட்டிற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன், அதாவது, 110* statement-*க்கு மேலே* discussion *கிடையாது என்று சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) அவர் அதைக் கேட்கவில்லை.*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *அவர் என்ன சொன்னார்?*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே விவாதிக்கப்படுகின்ற மிக முக்கியமான ஒரு கருத்தைப்பற்றித் தன்னுடைய கருத்தைச் சொல்கிறார். அதை அனுமதிப்பது எல்லோருக்கும் நல்லது என்று கருதுகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் சொல்லுங்கள்.*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியிலே இன்றைக்கு காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசு அங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. காங்கிரஸ், இங்கு மாநிலத்தில் ஆளுகின்ற திராவிட முன்னேற்றக் கழகம், பாட்டாளி மக்கள் கட்சி, வெளியிலேயிருந்து கம்யூனிஸ்டு இயக்கங்கள், இப்படி அந்த அரசுக்கு ஆதரவு கொடுத்துக்கொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலை. இன்றைக்கு இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் அங்கே அமைச்சர்களாக அங்கம் வகிக்கிறார்கள். ஒரு முக்கியமான பிரச்சினை, பஞ்சாயத்து ராஜ். அதனுடைய வரைவுப் பட்டியலை மாநாட்டிலே*

வைத்து நிறைவேற்றுவதற்கு முன்பாக, மத்திய அமைச்சரவை என்று ஒன்று இருக்கிறது; அதில் அவர்கள் வைத்தார்களா. அதில் விவாதித்தார்களா, ஏற்றுக்கொள்ளப்படலாம் என்று அதில் ஏதும் கருத்துகள் சொல்லப்பட்டனவா என்பதை நம்முடைய மாநில அரசும் விளக்க வேண்டும்.

அதோடு மட்டுமல்லாமல், ஒரு பிரச்சினை குறித்து, வரைவுப் பட்டியலை மாநாடுகளில் வைத்து நிறைவேற்றியதற்குப் பின்னால், தேசிய வளர்ச்சிக் கூட்டத்தில் விவாதிப்பது என்பது ஒரு மாறுபட்ட கருத்தாகும். மாநாட்டிற்கு முன்பாகவே, சம்பந்தப்பட்ட மத்திய அமைச்சரவையில் வைத்து, அந்த வரைவுப் பட்டியலை விவாதித்து, அது ஏற்றுக்கொள்ளக்கூடியதுதானா என்பதனைத் தீர்மானமாக முடிவு செய்துவிட்டுத்தான், மாநாட்டிலோ மற்றும் தேசிய வளர்ச்சிக் கூட்டத்திலோ வைக்கவேண்டுமேயொழிய, அதற்கு முன்பாகவே, மாநாட்டிலே வைத்து நிறைவேற்றிவிட்டு, அகில இந்தியாவில் இருக்கின்ற மக்கள் பிரதிநிதிகளை, உள்ளாட்சிகளினுடைய மக்கள் பிரதிநிதிகளை வைத்து மாநாட்டை நடத்தி, அதில் அந்த வரைவுப் பட்டியலை நிறைவேற்றியதற்குப் பின்னால், தேசிய வளர்ச்சிக் கூட்டத்தில் வைத்து விவாதிப்பது என்பது சிறந்த நடைமுறைதானா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்ன அந்தக் கருத்தின் அடிப்படையில் நான் ஒன்றிரண்டு செய்திகளைச் சொல்ல விரும்புகின்றேன். முதலில் அங்கேயிருந்து அனுப்பப்பட்ட அந்த ஆவணங்களில் குறிப்பாகவும், சிறப்பாகவும் நாம் ஏற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது, மாநில அரசாங்கத்தினுடைய அதிகாரங்களை அந்தக் கூட்டத்தில் எடுக்கின்ற முடிவுகள் நிச்சயமாக பலவீனப்படுத்தும் என்பது ஒன்று.

*முற்பகல் 11-35*

ஏற்கெனவே, நம்முடைய உள்ளாட்சி அதிகாரங்கள் மேலும் பெருக்கப்பட வேண்டும் என்று கருதுகின்ற நேரத்தில், மாநில அதிகாரங்கள் ஒவ்வொன்றாகப் பறிபோய், மத்தியிலே குவிவதை எதிர்த்துக்கொண்டிருக்கின்ற கட்சியாக இங்குள்ள ஆளுங்கட்சியும், தொடர்புடைய மற்ற கட்சிகளும் இருக்கின்ற காரணத்தால்,



நம்முடைய உரிமைகள் பறிபோகக்கூடிய அளவிற்கு, நாமும் போய் அங்கே உட்கார்ந்து, அந்தத் தீர்மானத்தை அல்லது அங்கே எடுக்கப்படுகின்ற முடிவுகளை அங்கீகரித்தோம் என்ற அபவாதத்திற்கு ஆளாகக்கூடாது என்பதால்தான், அந்த மாநாட்டிற்கு வர இயலாது—வர முடியாது என்று நாம் சொல்லவில்லை; வர இயலாது—ஏனென்றால், வந்தால் அவற்றையெல்லாம் ஒத்துக்கொண்டவர்களாக ஆவோம் என்றுதான், செல்லவில்லை. ஆனால், இதை அறிந்த மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் அதை உணர்ந்து, உடனடியாக நமக்கு, நாம் புண்பட்டு இருக்கிறோம் என்பதை உணர்ந்து, அந்தப் புண்ணுக்கு மருந்தாக ஒரு கடிதத்தை எழுதியிருக்கிறார்கள். ஆனால், அந்தக் கடிதத்தைத் தொடர்ந்து, தொடர்புடைய அமைச்சர் எழுதிய கடிதம், அது அவர் அரசை மதித்து, அரசுக்கு வராமல், என்னுடைய அருமை நண்பர் பீட்டர் அல்போன்ஸ் அவர்களுக்கு, (குறுக்கீடு) அது இங்கே வரவில்லை. நகலை, அசலாகக் கருத முடியாது அல்லவா? அதனால், வர இயலாது என்று நாம் அறிவித்திருக்கிறோம். இது நம்முடைய அதிகாரங்களை, ஏற்கெனவே கொடுக்கப்பட்ட கொஞ்சம் அதிகாரங்கள்தான் அதுவும்கூட; உள்ளாட்சி மன்றங்களுக்கு இருந்த பல அதிகாரங்கள் பறிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில், மாநிலத்தினுடைய அதிகாரங்கள் எல்லாம் மத்தியிலே குவிக்கப்பட்டுள்ள இந்தச் சூழ்நிலையில், நான் பேசுவது, இன்றைக்குள்ள அங்கிருக்கிற காங்கிரஸ் அரசு, இங்கிருக்கிற தி.மு.க. அரசு என்ற அளவிலே பேசவில்லை. பொதுவாக, ஆட்சி அமைப்பே, அரசியல் சட்ட அமைப்பே அவ்வாறு அமைந்திருக்கிற காரணத்தால், அது மாற்றப்படுவதற்கு நாம் இன்றைக்கு எடுக்கின்ற இந்த முயற்சி, காட்டுகின்ற இந்த எதிர்ப்பு ஒரு கருவியாக ஆகட்டும் என்பதற்காகத்தான் இதைச் செய்திருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) அது, இன்று இல்லாவிட்டாலும் பலன் தரும் என்று நம்புகிறேன். செல்லாமல் இருப்பது, முடியாது என்ற வார்த்தையால் அல்ல, இனி இயலாது, நேரம் இல்லை, நேரம் இடம் தராது என்ற அளவிலேதான் செல்லாமல் இருக்கின்றோம். ஆனாலும், மனமுவந்து இந்தியப் பிரதமர் அவர்கள் நம்முடைய கருத்துகளையும் மதித்து, நமக்கு எழுதியுள்ள இந்தக் கடிதத்திற்காக இந்த அவையின் சார்பாக, அரசின் சார்பாக நம்முடைய நன்றியை அவருக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, என்ன? இந்த matter-ஆ?

**திரு. ஜி.கே. மணி:** நான் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் உள்ளாட்சிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிற அதிகாரத்தைக் குறைப்பதிலோ அல்லது மாநில அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டிருக்கிற அதிகாரத்தை, நடுவண் அரசின் சார்பிலே பறிக்க நினைப்பதையோ நாம் ஏற்றுக்கொள்ள முடியாது என்ற கருத்தைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே மனதார வரவேற்கிறோம்; ஏற்றுக்கொள்கிறோம். நாம் கூடுதலாக அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்கிற நேரத்தில், நம்முடைய அதிகாரங்களை விட்டுக் கொடுப்பதற்கு மாநில அரசோ, உள்ளாட்சிகளோ தயாராக இல்லை. ஆனால், நான் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புவது, இதற்கு முன்னாலே ஒரு குழு நியமிக்கப்பட்டு, அந்தக் குழு இதற்கான வரைவு அறிக்கையைத் தயாரிப்பதாகச் செய்தி வந்து, அந்த வரைவு அறிக்கையைத் தயாரிக்கிற நிலைகளிலே, நம்முடைய தமிழ்நாட்டின் சார்பிலே பிரதிநிதிகள் அனுப்பப்பட்டார்களா; அனுப்பப்படவில்லையா; அதற்கு அழைப்பிதழ் ஏதாவது வந்ததா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமான பிரச்சினை என்ற முறையிலே எல்லோரும் பேசுகிறபோது, எங்கள் கருத்தையும் பதிவு செய்ய வேண்டும் என்பதற்காக நான் இங்கே நிற்கின்றேன். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, மத்தியிலே ஏராளமான அதிகாரங்கள் குவிந்துகிடக்கிற இந்தக் காலத்தில், அவற்றை, மாநிலங்களுக்குத் தேவையான அதிகாரங்களைப் பகிர்ந்து அளிக்க வேண்டும் என்கிற கோரிக்கை வலுவாக எழுப்பப்பட்டு வருகிற இந்தச் சூழலில், ஏற்கெனவே மாநிலங்கள் கையிலே இருக்கிற அதிகாரத்தையும் தட்டிப் பறிக்கிற வகையில், உள்ளாட்சி அதிகாரங்களை மாநிலப் பட்டியலிலிருந்து, மத்தியப் பட்டியலுக்கு மாற்றுவது என்கிற அந்த வரைவுத் திட்டம் உண்மையிலேயே கடுமையான ஆட்சேபனைக்கும், கண்டனத்திற்கும் உரிய முயற்சி. ஆகவே, அதற்காக மத்திய அரசிலே இடம் பெற்றிருந்தாலும் திராவிட முன்னேற்றக் கழகமும், திராவிட முன்னேற்றக் கழக அரசும், மிகச் சரியான முறையிலே தன்னுடைய எதிர்ப்பை வெளிப்படுத்துகிற வகையில், டெல்லியிலே நடைபெற்ற ஊராட்சித் 'தலைவர்கள் மாநாட்டைப் புறக்கணித்திருக்கிறது. உண்மையிலேயே அது வரவேற்பிற்குரியது. நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர்





சொன்னதைப்போல, ஆளும் கட்சியை வெளியிலிருந்து ஆதரிக்கிற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி ஆளுகிற மேற்கு வங்காளமும் இந்த மாநாட்டைப் புறக்கணித்து, மாநிலப் பட்டியலிலிருந்து மத்தியப் பட்டியலுக்கு மாற்றுகிற மத்திய அரசினுடைய முயற்சியை அல்லது பஞ்சாயத்து ராஜ் பொறுப்பை ஏற்றிருக்கிற அமைச்சர், அந்த அமைச்சகத்தினுடைய முயற்சியை ஆட்சேபித்து, அதைக் கைவிட வேண்டும் என்ற முறையிலே மேற்கு வங்கமும் நிராகரித்து இருக்கிறது.

அந்த வகையிலே, ஆளுகின்ற அரசை ஆதரித்தாலும் அல்லது திராவிட முன்னேற்றக் கழகம் அதிலே இடம் பெற்றிருந்தாலும், நம்முடைய மாநிலத்தின் உரிமை பறிக்கப்படுகின்றபோது, பொருத்தமான முறையிலே அதற்கு எதிரான, வலுவான குரலை எழுப்பி, அந்த உரிமையைப் பாதுகாக்க மாநில அரசும், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும் எடுத்திருக்கின்ற இந்த முயற்சி, முற்றிலும் வாவேற்கத்தக்க நல்ல முயற்சி என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் அதை வரவேற்று, அமைகின்றேன்.

*முற்பகல் 11-40*

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம் என்ன? (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்; short-ஆகச் சொல்லுங்கள்; சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** சுருக்கமாகத்தான் சொல்கின்றேன். இந்தப் பிரச்சினையின்மீது இப்பொழுது உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளைச் சொல்லியிருக்கின்றார்கள். மத்திய பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் வெளியிட்டிருக்கின்ற ஒரு வரைவுப் பட்டியலின் நகல் என் கையில் இருக்கின்றது. அதை நான் படித்துப் பார்த்தேன். அதில் பல்வேறு விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இருந்தாலும், குறிப்பாக மத்திய மாநில அரசுகளினுடைய உறவு நிலைகள் குறித்து, எவ்வாறு கையாளப்பட வேண்டுமென்பதுதான் இதில் இருக்கின்ற பிரச்சினை. மாநிலப் பட்டியலில் இருப்பதை மத்தியப் பட்டியலுக்கு மாற்றுவது என்பது, மாநிலங்களுக்கு வழங்கப்படுகின்ற அதிகாரத்தில் தலையிடுவதாக இது இருக்கின்றது. மாநில அரசு செயல்படுத்துகின்ற முறைகளைப்பற்றி வேண்டுமானால் அவர்கள் கருத்துகளைச் சொல்லலாமே தவிர, இதையே மத்திய அரசு எடுத்துக்கொள்வது என்பதுபற்றி இந்திய கம்யூனிஸ்டு கட்சி

அடிப்படையாகக் கருதுவது என்னவென்றால், பஞ்சாயத்து ராஜ் திட்டம் என்பதே, மாநில அளவில் இருக்கின்ற கிராமங்களைச் சென்றடைய வேண்டுமென்று இருக்கின்றது. ஆனால், அந்தப் பஞ்சாயத்து ராஜ் திட்டத்தை மத்திய அமைச்சரே வைத்துக்கொள்வதற்கான முயற்சி எடுப்பது என்பதை நேர்முரண்பாடான கருத்தாக நாங்கள் கருதுகின்றோம். இந்த முறையை மத்திய அமைச்சகம் செய்வது என்பது எந்த வகையிலும் பொருத்தமாக இல்லை என்பதுதான் எங்களுடைய கருத்தாகும். தமிழ்நாடு அரசு மேற்கொண்டிருக்கின்ற இந்த முடிவு பொருத்தமான, சரியான முடிவு. இதை ஒழுங்காக, சரியாக நடைமுறைப்படுத்துவதற்கு மத்திய அமைச்சகம் உரிய முறையில் கவனம் செலுத்தவேண்டும். நம்முடைய மாண்புமிகு பிரதமர் அவர்கள் அறிவித்திருக்கின்ற செய்தி நமக்கு ஆறுதல் அளிக்கின்றது. அதை உரிய வகையில், சட்ட ரீதியாக நிறைவேற்ற வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் இந்த அவையில் வலியுறுத்துகின்றேன். நமது அரசும் இதை வலியுறுத்தவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.க. மணி அவர்கள் இங்கே பேசும்போது ஒரு கேள்வியைக் கேட்டார்கள். வரைவு சாசனம் தயாரித்த நேரத்தில், மாநில அரசின் சார்பில் ஏதாவது குழுக்கள் அனுப்பி வைக்கப்பட்டனவா என்று ஒரு கேள்வியைக் கேட்டார்கள். நிச்சயமாக, நம்முடைய மாநில அரசின் சார்பில் எந்தப் பிரதிநிதியும் இது சம்பந்தமாக அனுப்பி வைக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

### (ஆ) மதுரை, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சிலையை அவமரியாதை செய்தது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடுகள்) அது என்னுடைய ஆய்வில் இருக்கின்றது. நீங்கள் எல்லோரும் கொடுத்திருக்கின்றீர்கள். நாளைக்கு அதுபற்றி முடிவு சொல்வேன். (குறுக்கீடுகள்) எல்லோரும் கொடுத்திருக்கின்றீர்கள்; நான் பார்த்தேன். (குறுக்கீடுகள்) சரி, mention பண்ணுங்கள். (குறுக்கீடுகள்) mention பண்ணுங்கள்; நாளை பதில் வந்த பிறகு எடுத்துக்கொள்ளலாம்.





திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன். (குறுக்கீடு) வரட்டுமே! அதற்கு என்ன இப்போது?

**திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரிலே நேற்றையதினம் நடைபெற்ற ஒரு அசாதாரணமான நிகழ்ச்சியை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன். பாரதப் பெருந்தலைவர் அன்னை சோனியா காந்தி அவர்களும், மாண்புமிகு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களும், மறைந்த தேசியத் தலைவர் முத்துராமலிங்கத் தேவர்மீதும், முக்குலத்தோர் சமூகத்தின்மீதும் மிகுந்த பற்றும், மரியாதையும் வைத்திருப்பதை முக்குலத்தோர் சமூக மக்கள் மிக நன்கு அறிவார்கள். மத்திய அரசும், மாநில அரசும் மக்கள் நலத் திட்டங்களை வேகமாகச் செயல்படுத்தி வருவதை, மக்களின் நம்பிக்கையைப் பெற்று வருவதைப் பொறுக்கமுடியாத சில விஷக் கிருமிகள், தேசியத் தலைவர், பசும்பொன் தேவர் திருமகனார் சிலையை அவமானப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு, சாதியக் கலவரம் உருவாக்க வேண்டுமென்ற சிந்தனையோடு இத்தகைய தீய செயலை இழைத்திருக்கின்றார்கள். இவ்வாறு தவறான செயல்களில் ஈடுபடும் நபர்களை அரசு விரைந்து கைது செய்து, எதிர்காலத்தில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ராஜேந்திரன், நீங்கள் சொன்ன விவரங்கள்பற்றி எல்லாக் கட்சிகளிலும் கொடுத்திருக்கின்றார்கள். அதுபற்றிய அறிக்கை அரசுக்கு வரவேண்டும். அதற்குப் பிறகு நாளை எடுத்துக்கொள்ளப்படும், எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சரி, நீங்கள் சொன்ன விவரத்தைப் புரிந்துகொண்டேன். எல்லாக் கட்சிகளின் சார்பாகவும் கொடுத்திருக்கின்றார்கள், ஆளும் கட்சி சார்பாகவும் கொடுத்திருக்கின்றார்கள், எதிர்க்கட்சி சார்பாகவும் கொடுத்திருக்கின்றார்கள். இதுபற்றிய அறிக்கை அரசுக்கு வந்தவுடன் நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும், உட்காருங்கள்.

*முற்பகல் 11-45*

## 5. கவன ஈர்ப்பு

### வேலூர் மாவட்டம், ஜவ்வாது மலை, வனத் துறைப் பள்ளிகளைப் பள்ளிக் கல்வித் துறையின்கீழ் கொண்டு வருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. தி.க. ராஜா, அவர்கள்

[பேரவைத் தலைவர்] [2008 ஏப்ரல் 22

கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா அவர்கள்.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், ஜவ்வாது மலையில் தற்பொழுது வனத் துறையைச் சார்ந்த பள்ளிகளைப் பள்ளிக் கல்வித் துறையின்கீழ் கொண்டு வர வேண்டிய அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

**அறிக்கை**

வேலூர் வன மண்டலத்தில், ஜவ்வாது மலையில் 18 பள்ளிகள் மற்றும் பொள்ளாச்சி, டாப் சிலிப்பில் 1 பள்ளி, ஆக மொத்தம் 19 பள்ளிகள் வனத் துறையின் கட்டுப்பாட்டில் 1930 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகின்றன. ஆசிரியர் பணியிடங்களில் உள்ள சில காலி இடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்பள்ளிகளில் மொத்தம் 5,212 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். சில பள்ளிகளில் போதுமான அளவு ஆசிரியர்கள் இல்லாமலிருந்தாலும், ஆசிரியர்களைச் சுழற்சி முறையில் பணிபுரியச் செய்து, மாணவர்களது படிப்பு எந்தவிதத்திலும் பாதிக்காத வண்ணம் பார்த்துக்கொள்ளப்படுகிறது. இப்பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியரின் தேர்ச்சி விகிதம் ஒவ்வோர் ஆண்டும் அதிகரித்து வருகிறது. 2006-2007 ஆம் ஆண்டில் திருப்பத்தூர் கோட்டத்தில் உள்ள பள்ளிகளில் பத்தாம் வகுப்பில் 75 விழுக்காடும், 12 ஆம் வகுப்பில் 68 விழுக்காடும் தேர்வுபெற்றுள்ளனர். திருவண்ணாமலை கோட்டத்தில் உள்ள பள்ளிகளில் பத்தாம் வகுப்பில் 94 விழுக்காடும், 12 ஆம் வகுப்பில் 69 விழுக்காடும் தேர்வு பெற்றுள்ளனர்.

வனத் துறைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம்மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வழக்கமான ஊதியத்துடன் மலைப் படியாக ரூ.450, சிறப்புப் படியாக ரூ.90 மற்றும் குடியிருப்பு வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன.



2008 ஏப்ரல் 22] [திரு. என். செல்வராஜ்]

இப்பள்ளிகளைப் பள்ளிக் கல்வித் துறைக்கு மாற்றினால் ஆசிரியர்கள் வேறு மாவட்டங்களுக்கு மாறுதலாகிச் சென்றுவிட வாய்ப்பு அதிகமாக உள்ளது. அதனால், இப்பள்ளிகளையே நம்பிக் கல்வி பயிலும் மாணவர்களின் கல்வித் தரம் மிகவும் பாதிக்கப்படும். மேலும், அரசாணை எண் 61, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள் 31-5-2007-ன்படி நபார்டு (NABARD) நிதி உதவித் திட்டத்தின்கீழ் வனத் துறைப் பள்ளிகளுக்கு ரூ.507.05 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் வேலூர் மண்டலத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூ. 491.79 இலட்சத்தில் 2007-2008 ஆம் ஆண்டு இலக்கு ரூ.98.37 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை 2008-2009 ஆம் ஆண்டு மற்றும் 2009-2010 ஆம் ஆண்டுகளில் செலவு செய்யப்பட்டு, பள்ளிகளின் தரம் மேம்படுத்தப்படும். 2007-2008 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகையில் 27 புதிய வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் உபயோகமற்ற நிலையில் இருந்த பழைய பள்ளிக் கட்டடங்களைப் புதுப்பித்தல், குடிநீர்த் தொட்டி கட்டுதல், ஆழ்துளைக் கிணற்றில் மின்சார மோட்டார் பொருத்தி, குழாய் இணைப்புமூலம் குடிநீர் வழங்குதல், புதிய ஆய்வுக் கூடம் கட்டுதல், கழிப்பறை வசதி செய்து கொடுத்தல், ஆசிரியர்களுக்குத் தங்கும் அறை கட்டுதல் ஆகிய பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இந்தப் பள்ளிகள் அனைத்தும் வனத்தைச் சார்ந்து வாழும் மலைவாழ் மக்களுக்கும், வனத் துறைக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்தும் பாலமாகச் செயல்படுகின்றன. வனங்களைப் பாதுகாக்க மலைவாழ் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும் உதவியாக உள்ளன. மலைவாழ் மக்கள் வனத்தையே சார்ந்திருப்பவர்கள். அவர்களின் மேம்பாடு, பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி ஒன்றுக்கொன்று இணைந்ததாகும். வனத் துறைப் பள்ளிகள் காப்புக் காடுகளுக்கு அருகில் உள்ளதால் அவற்றின் நிருவாகத்தைக் கண்காணிப்பது, வனத் துறைக்கு எளிதாக உள்ளது. இப்பள்ளிகளினால் மலைவாழ் மக்கள் மிகுந்த பயனடைந்துள்ளனர். எனவே, இப்பள்ளிகள் வனத் துறைக் கட்டுப்பாட்டில் இருந்து வருவது அவசியம் ஆகும். இந்தப் பள்ளிகளைப் பள்ளிக் கல்வித் துறையின்கீழ் கொண்டு வரவேண்டி, பழங்குடி மாணவ, மாணவியர் மத்தியில் பதற்றம் ஏதும் தற்போது ஏற்படவில்லை என்பதும் தெரிவிக்கப்படுகிறது. எனவே, வனத் துறையின் கட்டுப்பாட்டிலேயே இயக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

[திரு. என். செல்வராஜ்] [2008 ஏப்ரல் 22

நாம் பள்ளிக் கல்வித் துறைக்கு மாற்றுவோமேயானால், அவர்கள் இட மாற்றம் பெற்று வேறு இடங்களுக்குச் சென்றுவிட்டால் நிலைமை மோசமாக ஆகிவிடும். எனவேதான், வனத் துறை அதைத் தன் பொறுப்பிலே வைத்து நன்றாகப் பராமரித்து வருகின்றது. எனவே, அங்கு எந்தப் பதற்ற நிலையும் இல்லை. வனப் பகுதி மக்கள் வனத் துறையின்கீழ் அந்தப் பள்ளி இயங்குவதை விரும்புகிறார்கள் என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதற்றம் இல்லை என்று சொல்கிறார்கள். நான் ஒரு விஷயத்தை இங்கே சொல்ல வேண்டும். 12 ஆம் வகுப்பு அந்தப் பள்ளிக்கூடத்தில் 1996-ல் தொடங்கப்பட்டது. இன்றுவரையில் கணிதப் பாடப் பிரிவே அந்தப் பள்ளிக்கூடத்தில் அறிமுகப்படுத்தப்படவில்லை. கணிதம் படிக்காமல் எப்படி ஒருவர் பொறியாளர் ஆகமுடியும்? பொறியாளர்தான் நம்முடைய அமைச்சர்கூட. எனவே, மலைவாழ் மக்கள் இதுவரை பொறியாளராகப் போக முடியாத அளவிற்கு அங்கு கணிதப் பாடமே தொடங்கப்படவில்லை. இது மிகவும் வேதனையான செய்தி.

அது மட்டுமல்ல; ஆசிரியர் பணியிடங்கள் நிறைய காலியாக உள்ளன. கடந்த 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்புத் தேர்விலேகூட பார்த்தீர்கள் என்றால், கணித ஆசிரியர் இல்லை, விலங்கியல் ஆசிரியர் இல்லை; பொருளாதார ஆசிரியர்கள், இவர்களெல்லாம் இல்லாமலேயே அந்தப் பிள்ளைகள் பரீட்சை எழுதியிருக்கிறார்கள். அப்படி இருந்தால், எப்படி pass பண்ணுவார்கள் என்பதை அமைச்சருடைய கவனத்திற்கே நான் கொண்டு வர விரும்புகிறேன். 15 கிலோ மீட்டர் தூரம் நடைப்பயணமாக நடந்து வந்துதான் அந்தப் பிள்ளைகள் படிக்க வேண்டும். விடுதி ஒன்றுகூட கிடையாது. 25 பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. ஒரே ஒரு விடுதிகூட கிடையாது. பாருங்கள், பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் படிப்பது... (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடம்... அவர்கள் படிப்பது, உண்ணுவது, உறங்குவது எல்லாம் பள்ளிக்கூடத்திலேயேதான். இந்த மாதிரி நிலைமைகளை எல்லாம் ஒரு கமிட்டி அமைத்து ஆராய்ந்து



2008 ஏப்ரல் 22] [திரு. தி.க. ராஜா]

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைச் சீர் செய்ய வேண்டும். 34 கிராமங்கள் இருக்கின்றன; ஒரு கிராமத்தில் மட்டும்தான் சாலை இருக்கிறது. 33 கிராமங்களில் சாலைகள் இல்லை. அதற்கு வனத் துறை தடையாக இருக்கிறது. எனவே, அந்தத் தடையை நீக்க வேண்டும்; சாலைகளை ஊராட்சி ஒன்றியத்திடம் ஒப்படைக்க வேண்டும்; விடுதிகள் கட்டித் தரவேண்டும்; அங்கே கணிதப் பிரிவு ஆசிரியர்களை நியமித்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா, short-ஆக முடியுங்கள். One or two questions தான்.

**திரு. தி.க. ராஜா:** அங்கே கணிதப் பிரிவையும் தொடங்க வேண்டும்; இவற்றிற்கு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே வணிகவியலிலே இரண்டு இடமும், அதைப்போலவே விலங்கியலில் ஒரு இடமும், சமூகவியலில் ஒரு இடமும் என 4 இடங்கள் காலியாக இருக்கின்றன. கணிதப் பாடம் இல்லை என்று சொன்னார். அதற்கு அனுமதி பெறுகின்ற நேரத்திலே கணிதப் பாடம் பெறவில்லை என்பது ஒரு குறைதான். இப்போது அது தெரிந்தவுடன் உடனடியாகக் கணிதப் பாடத்தை இந்த ஆண்டே அங்கே துவக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு நான் அறிவுறுத்தி இருக்கிறேன். எனவே, அது நிறைவேற்றப்படும். அதைப்போலவே விடுதிகள் கட்டுவதற்கு, நபார்டு வங்கியினுடைய அந்த நிதி கிடைத்திருப்பதைப் பயன்படுத்தி அங்கே விடுதிகள் அமைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையச் சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர். அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 3–நீதி நிருவாகம்
### (ஆ) கோரிக்கை எண் 33–சட்டத் துறை

---

### (அ) கோரிக்கை எண் 3–நீதி நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008-2009 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 3, நீதி நிருவாகம். மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.260,67,47,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 3, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 215, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7832, திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9337, திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13583, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13781, திரு. மா. ராஜசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 14469, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 16658, திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1725, திரு. பெ. மோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2199, திரு. டி. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10718, திரு. கு. பாண்டுரங்கன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 12748, திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13369, திரு. சி. சண்முகவேலு,

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16495, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6330, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7605, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

*முற்பகல் 11-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9471, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9868, திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11076, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11333, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11940, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்தை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12081, திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13590, திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13924, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14808, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16298, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10400, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 15683, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14951, திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1466, டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1831, திரு. போ. சின்னப்பன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2673, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உயர் நீதிமன்றத்தில் தமிழில் உரையாட வலியுறுத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3155, டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3743, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஏழை, எளிய மக்களுக்கு எளிதில் இலவச சட்ட உதவிகள் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4033, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "Director of Prosecution" பதவிக்குச் சட்டம் படித்தவர்களை நியமனம் செய்து, I.P.S. அதிகாரிகளை அப்பதவிக்கு நியமிப்பதைத் தவிர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4902, திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதி, திருவட்டாறில் ஒருங்கிணைந்த நீதிமன்றம் மீண்டும் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5157, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இலவச சட்ட உதவி மையம்மூலம், ஏழைகளுக்கு உதவ வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5572, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காஞ்சிபுரம் மாவட்ட நீதிமன்றம் தற்பொழுது செங்கல்பட்டில் இயங்கி வருகிறது; இந்த மாவட்ட நீதிமன்றத்தைக் காஞ்சிபுரத்திற்கு மாறுதல் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7333, திருமதி எஸ். தேன்மொழி.

**திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நிலக்கோட்டை தொகுதியில் ஒரு புதிய மாவட்ட முதன்மை சார்பு நீதிமன்றம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8689, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி நீதிமன்றம் முன்புறத்தில், உயர் மின் கோபுர விளக்கு (High mast light) அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9127, திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் அதிகமான நீதிபதிகளை நியமித்து, வழக்குகளை உடன் தீர்வு காண வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9250, திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்.



**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செந்தூர் தொகுதி, திருச்செந்தூரில் சார்பு நீதிமன்றம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9651, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9983, திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் தொகுதியில் உள்ள அனைத்து ஊராட்சிப் பகுதிகளிலும் ஏழை மக்களுக்குப் பயன்படும் வகையில் இலவச சட்ட உதவி முகாம்கள் நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10070, திரு. ல. ராதாகிருஷ்ணன்.

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவில்பட்டியில் வழக்கறிஞர்களுக்கான சங்கக் கட்டடம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10142, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வழக்கறிஞர்களிடம் பணிபுரியும் பதிவுபெற்ற வழக்கறிஞர் குமாஸ்தாக்களுக்கு, அவர்கள் இறந்தால் அரசு ரூ.50,000/- உதவித் தொகை வழங்குகின்றது; அதனை ரூபாய் ஒரு இலட்சமாக உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10461, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசுத் திட்டப் பணிகளை முடக்கி வைக்கும் வழக்குகளை உடனடித் தீர்வு கண்டு செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10832, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொன்னேரியில் ஒருங்கிணைந்த சார்பு நீதிமன்றங்கள் கடந்த 28 ஆண்டுகளாக வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன; புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10870, திரு. பெ. கண்ணன்.



**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாரமங்கலம் தொகுதியில் உள்ள கிராம மக்கள் விழிப்புணர்வு அடையும் வகையில் கிராமங்கள்தோறும் இலவச சட்ட உதவி முகாம்கள் நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11245, திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் முழுவதும் உள்ள நீதிமன்றங்களில் காலியாக இருக்கும் பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11777, திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓமலூர், பேளூரில் உள்ள நீதிமன்றத்தில் அரசு வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தின் வெளியே அமர, கட்டடம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11802, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீதிமன்ற வளாகங்கள் திறப்பு விழாக்களில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரிய முக்கியத்துவமும், அழைப்பிதழில் பெயர்

அச்சிடவும் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11855, திருமதி மு. சந்திரா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 12386, திரு. தா. மலரவன்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12476, திரு. ராம. சுப்புராம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 12927, திருமதி பி. பத்மாவதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 12969, திரு. நா. இராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 13013, திரு. எல். ரவிச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 13081, திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணியில் சார்பு நீதிமன்றம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13180, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீதித் துறை விழாக்களில் மக்கள் பிரதிநிதிகளையும் பங்கேற்கச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13600, திரு. கே. உலகநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 13777, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிள்ளியூர் தொகுதிக்குட்பட்ட கருங்கலில் நீதிமன்றம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13842, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மன்னார்குடியில் இயங்கி வரும் ஐந்துக்கும் மேற்பட்ட நீதிமன்றங்களை ஒருங்கிணைத்து, புதிதாக ஒரு நீதிமன்ற வளாகம் அமைத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14263, திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர் தொகுதி, மேலூரிலுள்ள மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ஆகியவற்றுக்கு வரும் பொது மக்களின் பயன்பாட்டிற்குக் குடிநீர் வசதி, கழிப்பிட வசதி செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 15225, திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விவசாயிகளின் மின் மோட்டார், மின்சாரக் கேபிள் மற்றும் மின் வாரியத்தின் டிரான்ஸ்பார்மர் ஆகியவற்றைத் திருடும் கும்பலைத் தண்டிக்கக் கடுமையான சட்டம் இயற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 15829, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரூரில் தனியார் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் நீதிமன்றங்களுக்கு அரசால் புதிய கட்டடங்கள் கட்டப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16611, திருமதி செல்வி ராமஜெயம்.



**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை பேரூராட்சிப் பகுதியில் இயங்கிவரும் சார்பு நீதிமன்றம் மிகவும் பழுதடைந்துள்ள நிலையில் உள்ளது; புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16783, திரு. சு. குணசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 16821, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தளி தொகுதி, தேன்கனிக்கோட்டையில் நீதிபதிகளுக்குக் குடியிருப்புகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16942, திரு. ஆர். வைத்திலிங்கம்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒரத்தநாட்டில் நீதிமன்றக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16985, திரு. பி. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செங்கோடு தொகுதியில் இலவச சட்ட முகாம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 17037, திரு. ஞா. செந்தமிழன்.

**திரு. ஞா. செந்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோயில் இடங்களையும், கோயில் சொத்துக்களையும் ஒருசில தனியார்கள் அனுபவித்து வருவதும், பயனடைந்து வருவதும் குறித்து நீதிமன்றத்தில் உள்ள வழக்குகளை விரைந்து நடத்தி முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 17068, திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டத்தில் திருமங்கலம், மேலூர், உசிலம்பட்டி ஆகிய நகரங்களில் சார்பு நீதிமன்றம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.260,67,47,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 33—சட்டத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 33-சட்டத் துறை. மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.14,09,50,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 33, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 245, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,09,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9066, திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,09,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13584, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,09,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16902, திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,09,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2213, திரு. டி. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10742, திரு. கு. பாண்டுரங்கன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 12401, திரு. தா. மலரவன்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,09,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13174, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,09,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16485, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,09,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7687, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,09,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11334, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,09,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12027, திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,09,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

228379
சென்னை-600

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12293, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,09,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13919, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,09,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14571, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,09,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16110, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,09,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16289, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,09,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 17175, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,09,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13841, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,09,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 15006, திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,09,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 15688, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,09,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 15895, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,09,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16823, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,09,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3742, திருமதி ஜி. லதா.



**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "2000 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் அரசு அறிவித்தவாறு வேலூர் மாவட்டத்தில், வேலூர் நகரில் சட்டக் கல்லூரி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,09,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3943, திரு. எஸ். ராஜகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4034, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூரில் இந்த ஆண்டு அரசு சட்டக் கல்லூரியை, 2000 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் அவையில் அறிவித்தவாறு தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,09,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5758, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மத்திய மற்றும் மாநிலச் சட்டங்கள் அனைத்தும் தமிழில் மொழிபெயர்க்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,09,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9125, திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டங்களைத் தமிழில் தெரிந்துகொள்ள வசதியாக சட்டப் புத்தகங்களை அரசு சார்பாகத் தமிழாக்கம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,09,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9647, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9905, திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் முழுவதும் சட்டத் துறையில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,09,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9982, திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் மாவட்டத்தில் சட்டக் கல்லூரி ஒன்று துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,09,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10349, திரு. இல. வேலுசாமி.



**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தகவல் அறியும் உரிமைச் சட்டம் குறித்து மாணவ, மாணவியர், பொது மக்கள் தெரிந்துகொள்ளும் வகையில் தொலைக்காட்சி மற்றும் திரையரங்கங்களின்மூலம் விளம்பரம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,09,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10871, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாரமங்கலம் தொகுதியில் சட்டக் கல்லூரி ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,09,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11856, திருமதி மு. சந்திரா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 12132, திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓமலூர் பகுதியில் அரசால் ஒதுக்கப்பட்டுள்ள 75 சென்ட் நிலத்தில் ரூ.1½ கோடியில் தனி நீதிமன்றம் உடன் துவக்கிச் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,09,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12745, திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருதுநகர் மாவட்டத்தில் சட்டக் கல்லூரி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,09,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13002, திரு. எல். ரவிச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 13704, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை சட்டக் கல்லூரி மாணவர்களுக்கான நூலகத்தை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,09,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 15029, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஏழை மக்களுக்கு முழுமையாக சட்ட விதிகள் இலவசமாகக் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,09,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 15139, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள சட்டப் பல்கலைக்கழகத்தை உலகத் தரம் வாய்ந்ததாக உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,09,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16578, திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டத்தில் புதிய சட்டக் கல்லூரி ஒன்று துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,09,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16781, திரு. சு. குணசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 17001, திரு. பெ. மோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 17079, திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை சட்டக் கல்லூரிக்குத் தேவையான வசதிகள் ஏற்படுத்துவது குறித்தும், அங்கு சுகாதாரத்தைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,09,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம். மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிருவாகம், சட்டத் துறை ஆகியவை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள் மீது விவாதம். இன்று 2 மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் 2 மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்ந்தே பேசலாம். முதலில், மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.வி.ஆர். வீரகபிலன். உங்களுக்குப் பேச ஒதுக்கப்பட்டுள்ள நேரம் 15 நிமிடங்கள்.

***திரு. எம்.வி.ஆர். வீரகபிலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சி என்பது பழமையைக் கணப்பொழுதில் புரட்டிப் போட்டு, புதுமையை, புதிய சித்தாந்தத்தை அமைத்துத் தரும். ஐரோப்பாவில் எத்தனையோ புரட்சிகள் ஏற்பட்டதாக வரலாறு கூறும் தொழில் புரட்சி, இலக்கியத்தில் ஏற்பட்ட புரட்சி, மறுமலர்ச்சிக் காலம், இன்னும் பிரெஞ்சுப் புரட்சி, ரஷ்யப் புரட்சி, ஆதியிலே கிரேக்கத்தில் தோன்றிய அறிவுப் புரட்சி, இன்னும் பல. அந்த வகையில் தமிழகத்தில் 20 ஆம் நூற்றாண்டின் இறுதியில் புரட்சித் தலைவர் என்ற ஒரு புரட்சி ஏற்பட்டது. அது தனி மனிதப் புரட்சி மட்டுமல்ல; தனி மனித தெய்வத்தால் தமிழக மக்களைத் தட்டி எழுப்பிய தத்துவப் புரட்சி. அப்படிப்பட்ட புரட்சித் தலைவரால் அடையாளம் காட்டப்பட்ட எங்களது புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தலுக்கர்கத் தொலைக்காட்சித் திட்டம் அல்ல; தொலைநோக்குத் திட்டத்தால் புரட்சித் தலைவரின் உண்மையான வாரிசு தான்தான்

---

@ 175 முதல் 222 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I மற்றும் II ஆக அச்சிடப்பட்டுள்ளன.



என்பதை நிரூபித்தாரே, அது புரட்சி. தொட்டில் குழந்தைத் திட்டம், அது வாக்குக்காக அல்ல; பெண் குலத்தின் வாழ்வுக்காக அமைக்கப்பட்ட திட்டம். அன்னை தெரசா மாதர்குல மாணிக்கம், வாழும்போதே புனிதவதி பட்டத்திற்குச் சிபாரிசு செய்யப்பட்டு தெய்வத் தாயால் பாராட்டப்பட்ட திட்டம்; அதுவும் புரட்சி. மழை நீர் சேகரிப்புத் திட்டம்; இன்று நீர்ப் பற்றாக்குறை; குடிக்கின்ற நீருக்குப் பஞ்சம். வேளாண் நிலத்திற்குப் பஞ்சம். எதிர்காலத்தில் நீர் சார்ந்த பிரச்சினைகளை உலகம் எதிர்கொள்ளும் மிகப் பெரிய பிரச்சினையாக இருக்குமென்று விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றார்கள். ஆக, இதனைத் தொலைநோக்குப் பார்வையில் உணர்ந்து, மழை நீர் சேகரிப்புத் திட்டம் தந்தாரே, அது புரட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) உழவர் பாதுகாப்புத் திட்டம்; உலக வரலாற்றில் ஏழை உழவர்களுக்கு இப்படிப்பட்ட திட்டம் யாரும் தந்தது இல்லை என்று பொதுவுடைமை நாடுகளே பாராட்டக்கூடிய ஒரு திட்டம்; அதுவும் ஒரு புரட்சி. ஆகவே, இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம். எனவே, எங்களுடைய தாயைப் புரட்சித் தலைவி என்று சொல்வது சாலப் பொருத்தம் என்று இந்தச் சபைக்கு அறிவித்து, எனது உரையைத் தொடங்குகிறேன்.

எனது தொகுதியின் சார்பாக அநேக கோரிக்கைகளைச் சென்ற ஆண்டில் இம்மாமன்றத்தில் கேட்டிருந்தேன். தஞ்சை, புதுக்கோட்டை மாவட்டங்களின் எல்லைக் கோடாய் எனது தொகுதி இருந்து வருகிறது. மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு முன்பாக தொகுதி சார்பாகவும் பேசுவதற்கு இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்கிறேன். வருடத்திற்கு ஒரு முறை எங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கிறது.

நீர் வரத்து இல்லை; மேட்டூர் அணையின் பாசனத்தில் கடைசிப் பகுதி; விவசாயம் கேள்விக் குறியாகிவிட்டது. தூர் வாரப்பட திட்டங்கள் இயற்றியிருக்கின்றீர்கள். விரைந்து செயல்பட்டுத் தொகுதியைக் காப்பாற்றுங்கள் என்று வேண்டிக்கொள்கிறேன்.

தென்னை வணிக வளாகம் கேட்டிருந்தேன், இன்னும் செயற்குறிப்பில் உள்ளது என்கிறீர்கள். செயல்படுத்த வேண்டும். நிலையான விலையைத் தேங்காய்க்கு நிர்ணயம் செய்து, தென்னையையே வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள எங்கள் தொகுதியைக் காப்பாற்ற வேண்டுகிறோம்.

பிற்பகல் 12-05

அரசுக் கல்லூரிகள் எதுவும் என் தொகுதியில் இல்லை. முன்னுரிமை தரப்படும் என்றீர்கள். அறிக்கை மட்டும் போதாது; ஆக்கமும் வேண்டும். தொழில் சார்ந்த கல்லூரிகள் அமைத்துத் தர வேண்டும்.

பேராவூரணி அரசு மருத்துவமனைக்கு 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கியதாக அறிவித்தீர்கள். இன்று வரை எந்தவித வசதியும் செய்து தரப்படவில்லை. அதைப்போல, செருவாவிடுதியிலுள்ள மகப்பேறு மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதிகள்கொண்ட நிலையமாக உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, 1967-ல் சட்டமன்றத் தொகுதியான பேராவூரணி சட்டமன்றத் தொகுதி 1974-ல் தாலுகா ஆனது. மக்கள் தொகை 5 இலட்சம், 500 கிராமங்கள், இரண்டு பேரூராட்சிகள், முழுமையான ஒன்றியங்கள், பேராவூரணி, சேதுபாவாசத்திரம் என்று இரண்டு உள்ளன. 64 பஞ்சாயத்துகள் முழுமையாக அந்த இரண்டிலேயுமே உள்ளன. ஆக, பேராவூரணி, சேதுபாவாசத்திரம், திருச்சிற்றம்பலம், வாட்டாத்திக்கோட்டை என 4 காவல் நிலையங்கள் உள்ளன. ஒவ்வொரு தாலுகாவிற்கும் ஒரு நீதிமன்றம் தரப்படும் என அரசாணை உள்ளது. காலங்கடந்த நீதி, அநீதியே என்பது உண்மையே. இரு தினங்களுக்கு முன் மத்திய அமைச்சர் மாண்புமிகு பரத்வாஜ் அவர்கள், நீதி நிருவாகம் விரிவுபடுத்தப்பட்டாலொழிய அனைவரும் தக்க காலத்தில் நீதியைப் பெற வாய்ப்பில்லை என்ற கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். ஆகவே, பேராவூரணியில் குற்றவியல் நடுவர் நீதிமன்றமும், மாவட்ட உரிமையியல் நீதிமன்றமும் அமைத்துத் தரக் கோருகிறோம்.

1997-ல் பேராவூரணியில் நீதிமன்றம் அமைய உயர் நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது. Priority list-லே பேராவூரணி நீதிமன்றம் உள்ளது. எனவே, இந்த ஆண்டே அந்த நீதிமன்றங்கள் எனது தொகுதியில் அமைத்துத் தரப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

அடுத்து, சுனாமி வீடுகளைப் பொறுத்தவரையில், இன்னும் சில பெயர்கள் விடுபட்டுள்ளன. நன்கு ஆய்ந்து, கடலிலிருந்து 500 மீட்டருக்குள் உள்ளவர்களுக்கு என்பதைக் கொஞ்சம் தளர்த்தி, 1,000 மீட்டர் வரை உள்ளவர்களுக்கும் கட்டித் தரப்பட வேண்டும்.



ஆதி திராவிடர்கள் சார்பாகத் தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டு 30 ஆண்டுகளுக்கு மேலானதால், அனைத்து வீடுகளும் இடிந்து போகக்கூடிய ஒரு சூழ்நிலை. அவை பழுதுபார்க்கும் நிலையில் இல்லை. ஆகவே, புதிய வீடுகள் கட்டித் தரப்பட வேண்டும்.

பட்ஜெட்டைப்பற்றி—நிரந்தரமான தீர்வுகள் கிடைக்கக்கூடிய நிலையில் நிதிநிலை அறிக்கை இல்லை. அறிவுத் திறத்தால் வரையப்பட்ட, அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத வகையில், வார்த்தை ஜாலங்களால் வகைப்படுத்தித் தந்த பட்ஜெட்டாகவே உள்ளது. இன்று தாலித் தங்கத்திற்கு வரி விலக்கு என்கிறீர்கள். சென்ற ஆண்டு நாமக்கட்டிக்கும், விபூதி, குங்குமம் போன்ற அத்தியாவசியப் பொருள்களுக்கும், பஞ்சாமிர்தத்திற்கும் வரி விலக்குத் தந்தீர்கள். இந்த ஆண்டு,

“தனியொ ருவனுக் குணவிலை யெனில்
ஜகத்தினை யழித்திடுவோம்”

என்ற பாரதியின் அறைகூவல் சட்டமாக்கப்பட வேண்டும் என்ற நிலை இன்று கானல் நீராகிவிட்டது.

இலக்கியத்தைப் பற்றி ஆய்கிறோம். அண்ணல் காந்தி அவர்கள் கூறினார்கள், ஏழைகளுக்குப் பிடித்த இலக்கியம் எதுவென்று கேட்டால், அது உணவு என்பேன்; சோறு என்பேன் என்பதாக. இந்த அச்சம் இன்று உங்களுக்கும், உங்கள் கூட்டணிக்கும் வந்துவிட்டது. மனிதனுக்குப் பத்து வித உயர்ந்த குணம் என்பார்கள். ‘பசி வந்தால் பத்தும் பறந்து போகும்’ என்பது பழமொழி. பிறப்பும், இறப்பும், பசியும், தாகமும், உறக்கமும், உணர்வும், இவை சார்ந்த அனைத்தும் அனைவருக்கும் பொது என்பது உண்மை. பசிப் பிணி என்பதால், இன்று அத்தியாவசியப் பொருட்களின் விலையும், உணவுப் பொருட்களின் விலையும், சுதந்திர இந்தியாவில் இதுவரை வரலாறு காணாத அளவிற்கு விண்ணுக்கு எட்டிய தூரம் வளர்ந்து, கண்ணுக்கெட்டாத நிலைக்குப் போய்விட்டது; கவனியுங்கள். ஜனநாயகத்தில் மக்களுக்கு நம்பிக்கையில்லாத் தன்மை வருமுன் காக்க வேண்டுகிறேன்.

இன்று சபையில் நடந்த அந்த அவசரத் தீர்மானத்திற்குக்கூட, இந்தப் பட்டினியும், காலம் கடந்து கிடைத்த நீதியும் ஒரு காரணம் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

அதைப்போல, விவசாயிகள் பிரச்சினையைப் பொறுத்தவரைக்கும் 72 சதவீதம் விவசாயிகள் நமது நாட்டிலே இருக்கிறார்கள். (குறுக்கீடு) விவசாயிகளைப் பொறுத்தவரையிலே 72 சதவீதம் இருக்கிறார்கள். இந்த விவசாயம் சார்ந்த தொழில்களும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீரகபிலன், கொடுத்தனுப்பிய சீட்டைப் பார்த்தீர்கள் அல்லவா?

**திரு. எம்.வி.ஆர். வீரகபிலன்:** நான் உரையை விரைந்து முடித்துவிடுகிறேன், சார். I will finish it within 10 minutes, Sir. ஆகவே, விவசாயத்தைப் பொறுத்தவரையிலே விவசாயிகளுக்கு முக்கியத்துவம் தரப்படவில்லை. கடந்த 2 ஆண்டுக் காலமாக விலைவாசி விண்ணுக்குப் போய்விட்டது. அதைப்பற்றிய முழுமையான ஆர்வத்தை மத்திய அரசும் சரி, மாநில அரசும் சரி காட்டவில்லை. இன்று மத்திய அரசினர் தேர்தலை முன்னிறுத்திப் பல்வேறு கருத்துகளைச் சொல்கிறார்கள். இதில் பொதுவுடைமைக் கட்சிகள், இடையில் தேர்தல் stunt-க்காக அவர்கள் இந்த மாதிரி கருத்துகளைச் சொல்கிறார்கள் என்று, நான் சொல்லவில்லை; பெரியவர் நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் மாண்புமிகு திரு. டி. சுதர்சனம் அவர்கள் கூறினார்கள். ஆகவே, உங்களுடைய கேள்விகளை நீங்களே கேட்டு, உங்களுடைய பதில்களை நீங்களே கூறிக்கொள்கிறீர்கள். அதுபற்றி எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால், மக்களைப் பொறுத்தவரையிலே, அவர்களுக்கு நல்ல பல திட்டங்களை அறிவிக்க வேண்டும். விலைவாசி ஏற்றத்தைக் குறைக்க வேண்டும். அத்தியாவசியப் பொருள்கள் மட்டுமல்ல; இரும்பு, சிமெண்ட் போன்ற கட்டுமானப் பொருள்களினுடைய விலையையும் கட்டுப்பாட்டுக்குள் நீங்கள் கொண்டு வர வேண்டும்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

*பிற்பகல் 12-10*

நதி நீர்ப் பங்கீட்டில் Natural Justice என்ற இயற்கைச் சட்டம் இருக்கிறது. அதாவது, எவரொருவர் அந்த நதியினுடைய. ஆற்றினுடைய போக்கிலே அழிவுத் தன்மையை எதிர்கொள்கிறாரோ, அவர்களுக்கே அந்த நதியில் முழுப் பங்கும் உண்டு என்பது Natural Justice என்று சொல்வார்கள். இன்று பல்வேறு நதி நீர்ப் பிரச்சினைகள் இங்கு பரவலாகப் பேசப்பட்டிருக்கின்றன. நம்முடைய உரிமைகளைப் பெறவேண்டும். அந்தவகையில், Tribunal தீர்ப்புக்குப் பிறகு வேறு எந்தக் கோர்ட்டுக்கும் செல்லமுடியாது என்ற சட்டம் இருக்கிறது என்று சட்டம் தெரியாதவர்களுக்குச் சொல்கிறேன் என்று சென்ற ஆண்டு வாசிக்கப்பட்டது; இருக்கலாம். ஆனால், மத்திய அரசானது, அந்த Tribunal தீர்ப்புக்கு விரோதமாக இருந்தால், உறுதியான நடவடிக்கை எடுக்கலாம் என்று 'Union-State Relations in India' என்ற நூலிலே வருகிறது. அதன்படி, if any State, deliberately refuses to implement the decision of a Tribunal, the Central Government may issue directions to the State under Article 257 to implement the decision of the Tribunal. If the State fails to comply with or give effect to such directions, the coercive sanction provided in Article 365 would be attracted. ஆகவே, கூட்டணியை மட்டும் கவனத்தில்கொண்டு, நாட்டைப்பற்றிக் கவலையில்லாதவர்கள் அதைப்பற்றிப் பேசமாட்டீர்கள்; செய்யமாட்டீர்கள். எப்படியோ இங்கு நீதி கிடைக்கவில்லை. அந்தவகையில் பார்க்கும்போது, பொது மக்கள் நீதி வழங்க, தீர்ப்பு வழங்கத் தயாராக இருக்கிறார்கள். எந்தவகையில் பார்த்தாலும், இந்த ஆட்சி மக்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொள்ள வேண்டிய நேரம் வந்துவிட்டது.



நீதி நிருவாகத்தில் இன்னும் அநேக நீதிமன்றங்கள் அமைக்கப்படவேண்டும். கல்வி அறிவு அதிகமாக, அதிகமாக, இன்று தனி மனித சுதந்திர உணர்வு பெருகிவிட்டது. ஆகவே, நீதிமன்றத்தை அணுகி நீதி பெறும் கருத்து பரவலாகியுள்ளது. ஆனால், நீதித் துறைக்குப் போதுமான நிதி ஆதாரம் இல்லையென்ற கருத்து நிலைத்து இருந்தால், மக்கள் யாரிடம் செல்வார்கள்? ஆக, காலம் தாழ்ந்த நீதியே இன்று கட்டப் பஞ்சாயத்துக்கு வழிவகுத்துவிட்டது என்பதை எவராலும் மறுக்க முடியாது. இதை வேதனையுடன் குறிப்பிட வேண்டியிருக்கிறது. அடிப்படைத் தேவைகளைப் பெறவும், இன்று ஆக்கப்பூர்வமான திட்டம் தேவை. அது சட்டமாக்கப்பட வேண்டும். மனித உரிமைகள்பற்றி ஆயிரக்கணக்கில் இன்று சட்டங்கள் இயற்றியாகிவிட்டன. ஆனால், அந்த உரிமைகள் என்ன; அவற்றை எப்படிப் பெறுவது என்ற வகை தெரியாமல் இருக்கும் பாமர மக்களுக்கு, இந்தச் சட்டங்களின் மகத்துவத்தை எடுத்துச் செல்ல என்ன சட்டம் போடப் போகிறோம்? சிந்தியுங்கள். சார்பு நீதிமன்றங்களிலே, கணக்கின்படி சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகள் 9,28,046 வழக்குகள் நிலுவையில் உள்ளன. (குறுக்கீடுகள்) அதைப்போல, இரண்டு உயர் நீதிமன்றங்கள், மதுரை மற்றும் சென்னையிலே 4,28,832 வழக்குகள் தேக்க நிலையில் உள்ளன.

மனிதனுடைய கடைசிப் புகலிடம் நீதிமன்றம். அந்தவகையில், இப்படிப்பட்ட நிலுவைகள் இருக்கின்றபோது, ஏறக்குறைய ஆண்டுக்கு இலட்சக்கணக்கான வழக்குகள் புதியதாகத் தொடங்கப்படுகின்றன; போடப்படுகின்றன. எவ்விதம் அவர்களுக்கு நீதி கிடைக்கும்? ஆகவே, இந்த பட்ஜெட்டைப் பொறுத்தவரையிலே, நீதிக்கும், விவசாயத்திற்கும் நிச்சயமாக முன்னுரிமை தரப்படவேண்டும். ஒருவர் தனக்கு உணவு இல்லை என்று அங்கு வேதனைப்படுகிறார்; 72 சதவிகித மக்கள். இந்நிலையில் அதே நேரத்தில் நீதி கிடைக்காமல் எல்லோருமே போராடுகிறோம். நிச்சயமாக இவை இரண்டையும் நீங்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். அதேபோல், மூன்று தூண்களாக Legislature, Administration and Judiciary என்று சொல்கின்றோம். இதில் நான்காவது தூணாகப் பத்திரிகையைச் சேர்த்து இருக்கிறோம். ஆக நீதித் துறையிலே இன்று அதிகார துஷ்பிரயோகம் என்று சொல்லக்கூடிய அந்த யதார்த்த நிலை கொஞ்சம், கொஞ்சமாக வளர்ந்து வருகிறது. அதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். தேசிய அளவிலும் சரி அல்லது மாநில அளவிலும் சரி அல்லது அரசியல் வாய்ப்புப் பெற்றவர்கள் அமைச்சர்களாக இருப்பவர்கள் நீதிமன்றத் தீர்ப்பையே புறக்கணித்தால், பாமரர்கள் எவ்வாறு அதை மேற்கொள்வார்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். அதேபோல், சிறைக்குச் சென்று. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Time adjustment பண்ணியிருக்கிறோம்.

**திரு. எம்.வி.ஆர். வீரகபிலன்:** Nearly one minute, Sir. சிறைக்குச் செல்பவர்கள் முழுமையான அங்கீகாரத்தைச் சிறைத் துறை அதிகாரிகளிடம் பெறவேண்டும். அந்தச் சட்டமானது எல்லோருக்கும் பொதுவானதா அல்லது உயர் பதவிகளில் இருப்பவர்கள் அல்லது மத்தியில் ஆட்சியில் இருப்பவர்களின் வாரிசுகளுக்குத் தளர்த்தப்பட்டிருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள ஆசைப்பட்டு, இந்த நீதி நிருவாகத்தில் எந்த விவரமும் அதிகமாக இல்லை; வரியில்லாத பட்ஜெட் என்று சொன்னீர்கள்; மக்களுடைய நலனில் ஒரு வரிகூட இல்லாத பட்ஜெட் என்று சொல்லி, தந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மகேஷ் கிருஷ்ணசாமி அவர்கள்.



**திரு. த. மகேஷ் கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தலைவர் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களை வணங்கி, இந்த நீதி நிருவாகம் மற்றும் சட்டத் துறை மானியக் கோரிக்கைகளிலே எனக்குப் பேச வாய்ப்பு அளித்த, என்னைப் போன்ற இளைஞர்களுக்கெல்லாம் தலைவராய், தளபதியாய் இருந்து வழிநடத்திச் செல்கின்ற எங்களுடைய வழிகாட்டி, திராவிட இயக்கத்தின் அடுத்த வாரிசு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மத்திய நிதித் துறை இணை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Only ten minutes.

**திரு. த. மகேஷ் கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்களால் உணர்வு பெற்றோம்; அதன் விளைவாக உரிமை பெற்றோம். இழந்ததையெல்லாம் எப்பொழுது பெற்றோம் என்றால், தலைவர் கலைஞர் அவர்கள் எப்பொழுதெல்லாம் இந்த நாட்டினுடைய முதலமைச்சராக இருக்கிறார்களோ, (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட முன்னேற்றக் கழகம் எப்பொழுதெல்லாம் ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறதோ, அப்போது பெற்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றையதினம் தலைவர் கலைஞருடைய ஆட்சியில், எதிர்பார்த்தது எல்லாம் கிடைக்கிறது; எதிர்பார்க்காதது எல்லாம் நடக்கிறது; ஆனால், எதைச் செய்தாலும் ஒரு கூட்டம் குறை சொல்லிக்கொண்டுதான் இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தலைவர் கலைஞருடைய ஆட்சியில் ஏற்றத்தாழ்வு இல்லாமல் அனைவருக்கும் உணவு, உடை, கல்வி, வேலை என்பது மட்டுமல்லாமல், அதையும் தாண்டி, இனம் காக்கின்ற தலைவராக, மொழி காக்கின்ற தலைவராக, கலாச்சாரம், பண்பாட்டையும் காக்கின்ற தலைவராக இன்றையதினம் தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நினைவூட்ட விரும்புகிறேன்.

இன்றையதினம் நீதி நிருவாகம் மற்றும் சட்டத் துறை மானியக் கோரிக்கைகள்மீது விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. பொதுவாக, நீதி நிருவாகம் மற்றும் சட்டத் துறையினுடைய மேம்பாட்டிற்கு நம்முடைய தலைவர் அவர்கள் எப்போதெல்லாம் ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறாரோ, அந்தத் துறையை மேம்படுத்துவதற்காக அயராமல் பாடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பது வரலாறு.

இன்றையதினம் நீதிக்குத் தலை வணங்குகின்ற தலைவராக, அதேபோல் நீதிக்கும், சட்டத்திற்கும் கட்டுப்படுகிற ஒரு முதல்வராக, தலைவராகத் தலைவர் கலைஞர் அவர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். அதற்குச் சான்றாகத்தான் இந்தத் துறை மேம்படுவதற்கு என்னென்னவெல்லாம் செய்யலாம் என்று எண்ணி, அவர் பணியாற்றிக்கொண்டிருக்கிறார் என்பதை எடுத்துப் பார்த்தோமானால், 1996 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் இந்த நாட்டினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது, முதன்முதலாக சென்னையிலே டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தை அமைத்துக் கொடுத்தவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிப் பல்வேறு சாதனைகளை இன்றையதினம் இந்தத் துறையிலே நிகழ்த்திக்கொண்டிருக்கிறார் என்பதை நாம் இந்த நேரத்திலே நினைவுகூர வேண்டும். அதைப்போல, இன்றையதினம் இந்த மானியக் கோரிக்கையின் கொள்கை விளக்கக் குறிப்பில் பல்வேறு திட்டங்கள் இந்தத் துறையை மேம்படுத்துவதற்காக அறிவிக்கப்பட்டுள்ளதை நான் வரவேற்கிறேன்; பாராட்டுகிறேன்.

அதிலே குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நீதித் துறையில் கட்டடங்கள் கட்டுவதற்குக் கடந்த வருடம் நம்முடைய அரசு கிட்டத்தட்ட 102 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து, அந்தப் பணிகள் எல்லாம் இன்றையதினம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதை நாம் அறிவோம். அதேபோல, இந்த ஆண்டு கட்டடங்கள் கட்டுவதற்குக் கிட்டத்தட்ட 100 கோடி ரூபாயைத் தலைவர் கலைஞருடைய அரசு வழங்கி, அந்தப் பணிகள் எல்லாம் தொடங்க இருக்கின்றன. இந்த வரவு-செலவுத் திட்டத்தில்கூட சட்டத் துறைக்குக் கிட்டத்தட்ட 316 கோடி ரூபாயைத் தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



அதேபோல, முக்கியமான ஒரு அறிவிப்பாக இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருப்பது, உயர் நீதிமன்றத்தில் அனைத்து நடவடிக்கைகளும் தமிழ் மொழியிலே வரவேண்டும் என்று தலைவர் கலைஞர் அவர்கள், அதற்கான ஒரு தீர்மானத்தை அவரே முன்மொழிந்து, இந்தச் சட்டப் பேரவையிலே ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, மத்திய அரசினுடைய ஆணையைப் பெறுவதற்காகத் தொடர்ந்து தலைவர் கலைஞர் அவர்கள் முயற்சி மேற்கொண்டு வருகிறார் என்பதையும் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, சென்னை உயர் நீதிமன்றமானாலும் அல்லது உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளையானாலும், அதேபோல, மாவட்டத்தில் இருக்கின்ற நீதிமன்றங்கள் எல்லாம் முழுமையாகக் கணினிமயமாக்கப்படும் என்று இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே அறிவித்திருக்கிறார்கள். அதற்கு என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, இன்னும் பல்வேறு திட்டங்களைத் தலைவர் கலைஞருடைய அரசு இந்தத் துறைக்கு அறிவித்துக்கொண்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, பல்வேறு மாவட்டங்களில் ஒருங்கிணைந்த மாவட்ட நீதிமன்றத்தை இன்றையதினம் தலைவர் கலைஞருடைய அரசு உருவாக்கிக்கொண்டிருக்கிறது. அந்தவகையிலே இந்த அரசைப் பாராட்டுவதோடு, தஞ்சையிலும் தஞ்சை நீதிமன்றத்தை ஒருங்கிணைந்த நீதிமன்றமாக உருவாக்கிட வேண்டும் என்றும் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் *12-20*

வழக்கறிஞர்களுக்கு வழங்கப்படுகிற அந்த 'Advocate Welfare Fund' என்று சொல்லக்கூடிய நல நிதியாக தற்போது 2 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. அது போதுமானதாக இல்லை என்கிற காரணத்தினால், நம்முடைய முதல்வர் அவர்களும், அமைச்சர் அவர்களும் இந்த நிதியை 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இளம் வழக்கறிஞர்கள் தங்களுடைய தொழிலில் ஈடுபடுகின்ற அந்த ஆரம்பக் கட்டத்தில், வருமானம் இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகின்ற ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. அதைப்

போக்கிடும் வகையிலே, அண்டை மாநிலமான கர்நாடகத்தில் அதுபோன்ற இளம் வழக்கறிஞர்களுக்கு மூன்றாண்டுகளுக்கு மாதம் 5,000 ரூபாய் வீதம் வழங்கப்படுகிறது; அதுபோல, நம்முடைய அரசும் இளம் வழக்கறிஞர்களுக்கு மாத ஊதியம் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, அரசு வழக்கறிஞர்களாக இருந்தவர்களுக்கு ஒரு வருடத்திற்கு 3,000 ரூபாய் வழங்கப்பட்டது. நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் 1996 ஆம் ஆண்டு பொறுப்பேற்ற பிறகு அது உயர்த்தப்பட்டு, மாதம் 1,000 ரூபாய் வழங்கப்பட்டது. அதை இந்த நேரத்திலே நினைவுகூர்வதோடு, தற்போது மாவட்ட அளவில் இருக்கின்ற அரசு வழக்கறிஞர்களுக்கு, பெருநகரங்களில் இருக்கின்ற அரசு வழக்கறிஞர்களுக்கு இணையாகப் பயணப் படி வழங்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, எங்களுடைய தஞ்சை மாவட்டத்தில் உள்ள நீதிமன்றமானது தொடங்கப்பட்டு, கிட்டத்தட்ட 200 வருடங்கள் முடிந்த சூழ்நிலையில், அதற்காக விழா எடுக்க வேண்டுமென்று அங்கே இருக்கின்ற வழக்கறிஞர்கள் சங்கம் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. அந்த விழாவில் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் கலந்துகொண்டு எங்கள் மாவட்டத்தினுடைய மக்களுக்குப் பெருமை சேர்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, என்னுடைய தொகுதியில் உள்ள பல்வேறு கோரிக் கைகளை இன்றைய தினம் இந்த மன்றத்திலே முன்வைக்க விரும்புகிறேன். குறிப்பாக, ஒரத்தநாடு மாவட்ட உரிமையியல் நீதிமன்றமும், நடுவர் நீதிமன்றமும் அங்கு உள்ளது. அது தற்போது சத்திரத்திற்குச் சொந்தமான இடத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதற்கான இடம் ஒதுக்கப்பட்டும், இன்னும் புதிய கட்டடம் கட்டப்படவில்லை. நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் அங்கே புதிய கட்டடத்தை வருங்காலங்களில் கட்டித் தர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, என்னுடைய திருவோணம் தொகுதியில் அமைந்துள்ள கரம்பக்குடி ஒன்றியத்தில் கற்பகந்துறை-நரங்கிப்பட்டு சாலையும், அதேபோல திப்பன்விடுதி-நரங்கிப்பட்டு சாலையும் மிகவும் பழுதடைந்துள்ளன. கிட்டத்தட்ட 10 வருடங்களாக அதில் எந்தப்



பணியும் மேற்கொள்ளப்படாமல் இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்தச் சாலைகளைச் சீர் செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, எங்களுடைய. தொகுதியிலே குருங்குளம் ஊராட்சி, குருங்குளம் மேற்கு ஊராட்சி என்ற அந்த இரு ஊராட்சிகளிலும் தண்ணீர்ப் பற்றாக்குறை இருப்பதாலும், அதே நேரத்தில் தண்ணீர் உப்பு நீராக இருப்பதாலும், கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலே அந்த இரு பஞ்சாயத்துக்களையும் சேர்க்க நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு கோரிக்கை. என்னுடைய கல்லணைக் கால்வாய்ச் சாலையானது மிகவும் குறுகலாக உள்ளது. அந்தச் சாலையை அகலப்படுத்தித் தர வேண்டுமென்று அவர்களிடத்திலே நேரிலே பல முறை கேட்டிருக்கிறேன். அதை இந்த நேரத்திலே ஒரு கோரிக்கையாக வைத்து, நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நம்முடைய பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு கோரிக்கை. என்னுடைய தொகுதியான திருவோணம் தொகுதியில் அமைந்துள்ள மகாராஜபுரம் காட்டாற்றில் உள்ள அந்தத் தூர்களையெல்லாம் அகற்றி, கரைகளைப் பலப்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, வேதபுரி வாய்க்கால், வல்லம் முதலைமுத்துவாரி வாய்க்கால் இவற்றையெல்லாம் தூர் வாரி அகலப்படுத்தித் தரவேண்டும் என்றும் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-25*

அதேபோல, நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், எங்களுடைய விவசாயப் பெருமக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையான கல்லணைக் கால்வாயை நவீனப்படுத்தும் திட்டத்திற்காகக் கிட்டத்தட்ட 150 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். அது எங்களைப்போன்ற கடைமடைப் பகுதியான ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை, பேராவூரணி பகுதி மக்களுக்குப் பெரும் உதவியாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, நம்முடைய மாண்புமிகு

குளித்தலை சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கையான குளித்தலையில் புதிய நீதிமன்ற வளாகம் கட்டித் தரவேண்டும் என்றும் இந்த நேரத்திலே கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன். Lower Court, District Court grounds-ஐ எல்லாம் சொல்லாமல், Appeal Court grounds-ஐ மட்டும் *10* minutes-லே argue பண்ணுங்கள், பார்க்கலாம்.

**திரு. சி. ஞானசேகரன்:** *15* minutes; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பு நல்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக, சட்டத் துறை ஒரு முக்கியமான துறை. 'சட்டமானது சமூகக் கட்டுப்பாட்டிற்கான ஒரு கருவியாக மட்டுமே கருதப்படாமல் சமுதாய மாற்றத்திற்கான ஒரு கருவியாகவும்கூட கருதப்படுகிறது' என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே மிக அழகாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். 'இந்த அரசின் சட்டத் துறையானது, சமுதாய நலனிற்கான அரசின் கொள்கைகளைச் செயல்படுத்துவதற்காக மேற்சொன்ன கொள்கைகளைக் கவனத்திற்கொண்டு பல்வேறு சட்டங்களை இயற்றுகிறது' என்றும் கொள்கை விளக்கக் குறிப்பிலே மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அப்படியிருக்கிறபோது, சில முரண்பாடுகளை இந்த அரசு ஏற்றிருப்பது நியாயமா என்கிற கேள்விகளை நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, Tamil Nadu Prohibition Act என்று வைத்திருக்கிறோம். மதுவிலக்குக் கொள்கைக்காக உருவாக்கப்பட்டதுதான் Tamil Nadu Prohibition Act. அதேபோல, Prohibition Enforcement Wing என்று காவல் துறையில் மதுவிலக்கை அமல்படுத்துவற்காகத் தனியாக ஒரு Wing-ஐயே வைத்திருக்கிறோம். அதற்காக, I.G., D.G.P., S.P. என்றெல்லாம் பல பேரை வைத்துக் கொண்டிருக்கிறோம். அப்படி இருக்கிறபோது, முரண்பட்ட வகையில், Tamil Nadu Prohibition Act-க்கு ஒரு விதிவிலக்கைக் கொடுத்து, 'டாஸ்மாக்' மட்டும் தமிழகம் முழுமையிலும் கடைகளை வைத்து விற்பனை செய்யலாம் என்று இருக்கக்கூடிய முரண்பாடு சரிதானா என்பதை நான் இந்த அரசை நிச்சயமாகக் கேட்டு, பூரண மதுவிலக்குதான் எங்களுடைய இலட்சியம்; அதை நிச்சயமாக நிறைவேற்றுவதற்கு அரசு முனைய



வேண்டும் என்கிற கருத்தை நான் இங்கே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மணல் விலையைக் குறைப்பதற்காகத்தான், அந்த மணல் விலையைப் பொதுவாக அரசே நிர்ணயித்து ஏற்று நடத்த வேண்டும் என்ற கொள்கையை நீங்கள் ஏற்படுத்தினீர்கள். ஆனால், அந்த மணல் விலையை இரண்டு யூனிட் கொண்ட லோடு *600* ரூபாய் என்று வாருகிற இடத்திலே வைத்துவிட்டு, சென்னை போன்ற இடத்திற்கு, மற்ற இடத்திற்கு வருகிறபோது *5,000* ரூபாய் என்று விற்பனையாகிறதே! அது ஏன்? அதேபோல மண்ணை அள்ளுவதற்கு *65* ரூபாய் என்று வைத்துவிட்டு, அங்கே *500* ரூபாய் என்று வசூலித்து, பிறகு இரண்டாயிரம் ரூபாய் வசூலிக்கிறார்கள், லோடு மண்ணுக்கு என்று எங்களுடைய சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் மாண்புமிகு திரு. சுதர்சனம் அவர்கள் குறிப்பிட்டார்கள். அரசாங்கத்தினுடைய அந்தக் கொள்கையைச் சட்டத்தின் வாயிலாக நீங்கள் நிச்சயமாக நிறைவேற்றி, குறைந்த விலையில் அவற்றையெல்லாம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் இரண்டு யூனிட் கொண்ட ஒரு லோடுக்கு *650* ரூபாய், *690* ரூபாய் என வசூலிக்கிறது. ஆனால், அதற்கு மேல் வசூலிக்கிறார்கள்; வசூல் பண்ணுகிறார்கள் என்று ஆதாரம் இல்லாமல் சொல்லக் கூடாது. ஆனால், இதை எதற்காகச் சொல்கிறார் ஞானசேகரன் என்பது எனக்குத் தெரியும். ஆதாரம் இருந்தால் சொல்லட்டும். (குறுக்கீடுகள்)

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள், எதற்காக ஞானசேகரன் சொல்கிறார் என்பது எனக்குத் தெரியும் என்று சொன்னார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சொல்லச் சொல்கிறீர்களா?

**திரு. டி. சுதர்சனம்:** அதை எதற்காக என்பதை விளக்கிச் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், சொல்லிவிடுங்கள் அதை. சொல்லச் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** ஞானசேகரன் எதற்காகச் சொல்கிறார் என்று சொன்னால், இப்படிப்பட்ட நிலைமையிருக்கிறது என்பதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறார். நானும் அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எங்கள் மாவட்டத்துக்காரர் என்பதால் என்மீது பழி வந்துவிடக் கூடாதே என்ற நல்ல எண்ணத்தில் சொல்கிறார் என்று அர்த்தம்! *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோல Special Court என்று C.B.I. Case-க்காக இங்கே போட்டோம். எங்களுடைய தலைவர் ராஜீவ் காந்தி அவர்களைக் கொன்ற முதல் குற்றவாளி பிரபாகரன்மீது இன்னும் N.B.W. pending ஆக இருக்கிறது. அது எந்த நிலையில் இருக்கிறது; அந்த வழக்கினுடைய நிலை என்ன என்பதை விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-30*

அதேபோல, Designated Court for TADA என்று வைத்து, அங்கே நம்முடைய ம.தி.மு.க.-வினுடைய தலைவர் திரு. வைகோ. அவர்கள் ஜாமீனில் வந்ததாக அல்லது அவரை விடுவித்ததாக இரண்டு கருத்துகள் இங்கே வந்தன. அந்த வழக்கு என்ன நிலையில் இருக்கிறது என்பதையும் தாங்கள் அவைக்குத் தெரிவிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, sandalwood offence-க்காகத் தனியாக ஒரு court-ஐ வேலூர் மாவட்டம், திருப்பத்தூரிலே வைத்தோம். அதனுடைய நோக்கமே, உடனடியாக வழக்குகளையெல்லாம் நாம் முடித்துவிடலாம் என்று வைத்ததுபோக, அதற்கு நேர் எதிராகப் போய், இப்போது திருப்பத்தூரில் இயங்கக்கூடிய அந்த sandalwood court-ல், 1991 ஆம் ஆண்டிலிருந்து இருக்கக்கூடிய பல sandalwood வழக்குகள் அப்படியே அங்கே நிலுவையில் இருந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, அந்தந்தப் பகுதியில் இருக்கக்கூடிய court-களே அந்த வழக்குகளை நடத்தலாம் என்கிற நிலையைக் கொண்டுவருவதற்கு இந்த அரசு முயற்சித்து, sandalwood cases-இன் pendency-ஐக் குறைக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அதேபோல, 2000 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பிலேயே, எங்களுடைய வேலூரில், 'அரசு சட்டக் கல்லூரி தொடங்கப்படும்' என்று அப்போது சட்டத் துறை அமைச்சராக இருந்த அருமை அண்ணன் திரு. ஆலடி அருணா அவர்கள் இங்கே அறிவித்தார்கள். ஆனால், இன்று வரை அது தொடங்கப்படவில்லை. இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பினைத் திருப்பித் திருப்பிப் பார்த்தேன்; வேலூருக்கு இந்த ஆண்டு அரசு சட்டக் கல்லூரி வரக்கூடிய அறிவிப்பு இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைக் கருத்தில்கொண்டு, இந்த ஆண்டே வேலூரில் அரசு சட்டக் கல்லூரியைத் தொடங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வேலூரிலே, அந்த Court-இல் 'A' Block-ஐ கட்டப்படாமல், 'B' Block-ஐக் கட்டிவிட்டார்கள். 'A' Block-ஐக் கட்டுவதற்கு 5 கோடி ரூபாயை ஒதுக்கி, அந்த Court-இல் furniture இல்லாமல், அங்கே வக்கீல்கள் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, போதிய furnitures வாங்கிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலூருக்கு Family Court, Economic Offences-ஐ, Essential Commodities Act-ஐ try செய்யக்கூடிய Court, மகளிர் நீதிமன்றம் ஆகியவற்றைக் கொடுத்து அங்கிருக்கக்கூடிய வழக்குகளுடைய pendency-ஐக் குறைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையில், உச்ச நீதிமன்றத்தினுடைய கிளையை அமைப்பதற்கு ஒரு தீர்மானத்தை இந்த அவையில் இயற்றி, எப்படியாவது அதற்கான முயற்சிகளை இந்த அரசு எடுத்து, தென் மாநிலங்களுக்காக, உச்ச நீதிமன்றத்தினுடைய கிளையையே நம்முடைய சென்னையில் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற ஒரு கோரிக்கையை நான் இங்கே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உயர் நீதிமன்ற நடவடிக்கைகளைத் தமிழில் கொண்டுவரவேண்டுமென்று நாம் ஏற்கெனவே 6-12-2006 அன்று ஒரு தீர்மானத்தை இந்த அவையிலே இயற்றி அனுப்பியிருக்கிறோம். அது எந்த நிலையில் இருக்கிறது; தமிழ் மொழியை உயர் நீதிமன்றத்தில் நடைமுறை மொழியாக மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

அதேபோல, Advocates Welfare Fund Act என்ற ஒரு Act-ஐக் கொண்டு வந்து, இந்த அரசாங்கம் முதலிலே ஒரு கோடி ரூபாயை மட்டும் அவர்களுக்கு வழங்கியது. ஆனால், அதற்குப் பின்னால், எந்த நிதியும் வழங்காத காரணத்தினாலே, இப்போது வழக்கறிஞர்கள் இறந்தால், 2 இலட்சம் ரூபாய் மட்டுமே கொடுக்கக்கூடிய நிலை இருக்கிறது. அதை 5 இலட்சம் ரூபாயாக உயர்த்தித் தருவதற்கு உடனடியாக நாம் ஒரு amendment-ஐக் கொண்டு வரவேண்டும்.

அதேபோல, வக்கீல்கள் V.R.S. கொடுத்தார்கள் என்று சொன்னால், அதற்காக அவர்களுக்கு ரூ.3 இலட்சம் வழங்குவதற்கும், medical expenses-க்காக 25 ஆயிரம் ரூபாய் வழங்குவதற்கும், ஒரேயடியாக நீங்கள் 50 கோடி ரூபாயை corpus fund என்று ஒன்றைக் கொடுத்துவிட்டீர்களென்று சொன்னால், அவர்கள் வசூலிக்கக்கூடிய contribution-லிருந்தும், corpus fund-லிருந்தும் எடுத்து, தொடர்ந்து அந்த வழக்கறிஞர்களுக்கு அந்தப் பணத்தைக் கொடுக்கக்கூடிய ஒரு நிலை ஏற்படும். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, 50 கோடி ரூபாயை ஒதுக்குவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இரண்டாவது, Court Fee Act-லே வரக்கூடிய அந்த வருமானத்திலிருந்து, 20 சதவிகித வருவாயை, வரக்கூடிய பணத்தைக்கூட நாம் அந்த Advocates Welfare Fund Act-லே கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டோம் என்று சொன்னால், அந்த வழக்கறிஞர்களின் நல நிதியிலிருந்து நிச்சயமாக அவர்கள் எல்லோருக்கும் கொடுக்கக்கூடிய நிலை ஏற்படும். ஆகவே, Court Fee Act-லேயிருந்து 20% கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாவதாக, Judges vacancies. நம்முடைய நீதிமன்றத்தில் பார்த்தீர்களென்றால், கிட்டத்தட்ட 9,28,046 வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. நம்முடைய சென்னை உயர் நீதிமன்றத்திற்கும், மதுரை கிளைக்கும் சேர்த்து இப்போது 49 நீதிபதிகள் மட்டுமே இருக்கிறார்கள். குறைந்தபட்சம் 65 உயர் நீதிமன்ற நீதிபதிகள் தேவை. அந்த வழக்குகளினுடைய pendency-க்கு ஏற்றாற்போல் மொத்தமாக நீதிபதிகளுடைய எண்ணிக்கையை நீங்கள் உயர்த்தினால்தான், உடனடியாக நமக்கு ஒரு தீர்ப்பு கிடைக்கும். அதாவது, delayed



தீர்ப்பு கிடைத்து, ஒரு பிரயோஜனமும் இல்லை. ஆகவே, சில நேரங்களிலே, உடனடியாகத் தீர்ப்பு வழங்குவதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டும். அதற்கு judges-யினுடைய strength-ஐ increase செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மாவட்ட நீதிமன்றங்களிலே பார்த்தீர்களென்றால், D.J. பணியிடத்தில் 12 posts vacant ஆக உள்ளன. Sub-Judges-ஐப் பொறுத்தவரையில், 38 பணியிடங்கள் vacant ஆக உள்ளன; Magistrate posts 110 vacant ஆக உள்ளன. இவ்வளவு vacancy-களை வைத்துக்கொண்டிருந்தால், எப்படி வழக்குகள் நிலுவை இல்லாமல் இருக்கும்? பொதுவாக, வழக்குகள் வருவதே ஏராளம். அதை முடிப்பதற்கு, இந்த vacancy-களை நீங்கள் உடனடியாக fill-up செய்யவேண்டும். A.P.P.-II பார்த்தீர்களென்றால், 80 பணியிடங்கள் vacant. அதேபோல, A.P.P.-I-ல் 20 பணியிடங்கள் vacant ஆக இருக்கின்றன. அதேபோல, Director of Prosecution-ஐ எடுத்துக்கொண்டால், என்னுடைய கருத்து என்னவென்றால், அதற்குக்கூட சட்டம் படித்தவர்களை நீங்கள் Director of Prosecution-ஆகப் போடவேண்டும். I.P.S. படித்த அதிகாரிகளைப் போடுகிறீர்கள். அதிலே எனக்குக் கொஞ்சம் சங்கடம். காரணம் என்னவென்று சொன்னால், சட்டம் தெரிந்தவர்களைப் போட்டீர்கள் என்றால்தான், இந்தச் சட்டப் பிரச்சினை தெரியும். Law Secretary post-க்குப் பொதுவாக எப்படி B.L. படித்தவர்களை நியமிக்கிறோமோ, அதேபோல, இதற்கும் நீங்கள் சட்டம் படித்தவர்களை Director of Prosecution-ஆகப் போடவேண்டும். இப்போது J.D. post vacant ஆக இருக்கிறது. D.D. post-ல் 5 post vacant ஆக இருக்கிறது. அதேபோல், A.D. post vacant ஆக இருக்கிறது. அந்த vacancy-களையெல்லாம் நீங்கள் உடனடியாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

இந்த judicial activism என்பது—இதற்கு முன்னால் ஒரு G.O. இருந்தது. பொதுவாக, நம்முடைய உயர் நீதிமன்றத்திற்கும் அரசுக்கும் பெரிய இடைவெளி இருக்கிறது. ஏற்கெனவே இந்த அவையிலேகூட சில சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுடைய கருத்துகளைத் தெரிவித்தார்கள். நீதிமன்றக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறபோதோ அல்லது திறப்பு விழா நடக்கிறபோதோ சம்பந்தப்பட்ட தொகுதி உறுப்பினர்களுடைய பெயர்களை அங்கே

போடுவதேயில்லை. Invitation-இலும் சரி, அடிக்கல்லிலும் சரி போடுவதில்லை என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். High Court-உயர் நீதிமன்றத்தினுடைய Registrar-General அவர்கள் இங்கு வந்திருக்கிறார்கள். அவர்களாவது கொஞ்சம் பாலமாக இருந்து, அங்கே தலைமை நீதிபதிக்கு இந்தக் கருத்தை எடுத்துச் சென்று—அதற்கு G.O. ஏற்கெனவே இருக்கிறது; G.O. is there—stating that the local M.L.A. and the local M.P. should be invited and their names should be printed என்று ஒரு அரசாணை இருந்தும்கூட அதை நீதிமன்றமே புறக்கணிக்கலாமா என்கிற கருத்தைச் சொல்லவேண்டும் என்று நான் இங்கே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாக நான் கேட்டுக்கொள்வதெல்லாம் அந்தந்தப் பகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர்களுடைய (மணியடிக்கப்பெற்றது) மாவட்டச் சட்டமன்ற உறுப்பினர்களுடைய பெயர்களை தயவுசெய்து அந்த invitation-லே போட வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இரண்டாவது, Judges தீர்ப்பு சொல்வதென்பது, நாம் இயற்றக்கூடிய சட்டத்திற்கு ஏற்றாற்போலத்தான் அந்தத் தீர்ப்புகள் அமைய வேண்டுமேயொழிய, சட்டத்திற்கு வெளியே சென்று அவர்கள் தீர்ப்புகளைச் சொல்லக்கூடிய, Judicial activism நிறைய வந்திருக்கிறது. அப்படிப்பட்ட Judicial activism இல்லாமல், பொதுவாக நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, Court stamp shortage; Stamp-ஏ கிடைக்கமாட்டேன் என்கிறது. ஆகவே, துறையினுடைய அமைச்சரை நான் கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக இந்த stamp கிடைப்பதில் பெரிய பிரச்சினை. நீங்கள் agent போடுவதில் என்ன தப்பு? விற்பனையாளரைப் போட்டு, stamp விற்கவேண்டியதுதானே? Stamp கிடைக்கமாட்டேன் என்கிறது. ஆகவே, அந்த stamp கிடைப்பதற்கான நடவடிக்கைகளை நீங்கள் எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நீதித் துறையிலுங்கூட பொதுவாக இலஞ்சம் இருக்கக் கூடாது என்பதற்காக நிறைய நீதிபதிகளைக் கொண்டு விசாரிக்க வேண்டுமென்று இப்போதுகூட Prime Minister சொல்லியிருக்கிறார்கள். நீதித் துறையிலுங்கூட, நிதிக்கும் நீதிக்கும் எல்லா அத்தியாயங்களிலும் கடும் போர் நடந்து கடைசியில் நிதியே வென்றது என்ற நிலை



வரக்கூடாது; நீதிதான் வென்றது என்ற நிலை வரவேண்டுமென்று சொன்னால், Judicial Officer-ஐக்கூட நாம் அந்தச் சட்டத்திற்குள்ளே கொண்டுவந்து இலஞ்ச இலாவண்யத்திற்கு அப்பாற்பட்டு—ஏனென்றுசொன்னால், "மங்கை சூதகமானால் கங்கையிலே முழ்கலாம்; ஆனால், கங்கையே சூதகம் என்றால் எங்கே போய் மூழ்குவது?" என்று பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுடைய பொன்மொழியாகச் சொல்வார்கள். ஆகவே, நீதிமன்றம் என்பது நம்முடைய நம்பிக்கைக்காக இருக்கக்கூடிய ஒரு இடம். அங்கே தவறு நடக்கும் என்று சொன்னால் பிறகு எங்கே போய் நாம் முட்டிக்கொள்வது என்ற நிலை வருகிறது. ஆகவே, நீதித் துறையில் இலஞ்ச இலாவண்யம் இல்லாமல் பார்த்துக்கொள்வதற்கான நடவடிக்கையை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. த.அ. மேகநாதன். (குறுக்கீடு) Sir, நான் ஏற்கெனவே சொன்னேன். இப்படி எல்லோருமே எழுந்திருந்து பேசாதீர்கள். நான் time keep up செய்தாக வேண்டும். (குறுக்கீடு) Minister பதில் சொல்லியாக வேண்டும். (குறுக்கீடு) இல்லை, நான் திரு. மேகநாதன் அவர்களைக் கூப்பிட்டுவிட்டேன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதி நிருவாகம், சட்டத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் விவாதத்தின்மீது பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் பேச வாய்ப்பளித்த சமூக நீதிப் போராளி, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் விடிவெள்ளி, மருத்துவர் அய்யா அவர்களுக்கும், பசுமைத் தென்றல், மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் மாண்புமிகு சின்ன அய்யா அவர்களுக்கும், ஓய்வில்லா உழைப்பாளி, பா.ம.க. தலைவர் அண்ணன்மார் ஜி.கே. மணி அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்திய ஜனநாயக அமைப்பின் முக்கிய நான்கு தூண்களில் நீதித் துறை ஒரு முக்கியத் தூணாக விளங்குகிறது. நீதித் துறையானது மக்களுக்காக, மக்கள் நலனுக்காக, மக்கள் திருப்தி அடைகின்ற வகையிலே செயல்பட வேண்டும்.

ஒரு மாநிலத்தில் நீதி நிருவாகம் சிறந்து விளங்கினால்தான் அந்த மாநில மக்கள் நிம்மதியாக வாழ முடியும். தமிழகத்தில்தான் தந்தை பெரியாரின் வழிகாட்டுதலின் அடிப்படையில், சமுதாயச் சிந்தனை, சீர்திருத்தம், புரட்சிகர சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அதில் தமிழகம்தான் இந்தியாவுக்கே வழிகாட்டியாக இருந்து வருகிறது. உதாரணமாக, சுய மரியாதை திருமணச் சட்டங்கள், நில உச்ச வரம்புச் சட்டங்கள், வாரிசு உரிமைச் சட்டங்கள், பெண்களுக்குச் சொத்தில் சம உரிமைச் சட்டங்கள், தனி இட ஒதுக்கீட்டுச் சட்டங்கள், வரதட்சணைக் கொடுமைச் சட்டங்கள் முதலிய சட்டங்களையெல்லாம் மக்கள் உணருகின்ற வகையில் திருத்தி அமைத்து, அவற்றைச் சீராக்க வேண்டியது சட்டத் துறையின் மிக முக்கிய வேலையாகும்.

சட்டம் அனைவருக்கும் மேலானது; சட்டம் அனைவருக்கும் சமமானது என்பதால்தான் நாம் நீதிமன்றங்களை மதித்தாக வேண்டும் என்ற உணர்வு ஏற்படுகிறது. நாம் நீதிமன்றங்களை மதிக்கும்போதுதான் மக்களுக்குச் சமமாக நீதி கிடைக்கும். அதேபோல சட்டத்தையும், சட்டமன்றங்களையும் மதிக்கும்போதுதான் மக்களுக்குச் சமமான சமூக நீதி கிடைக்கும் என்ற வாய்ப்பு உள்ளது. அடிப்படைச் சட்டங்களைப் பள்ளிகளிலேயே ஒரு பாடமாகக் கொண்டு வரவேண்டும். அப்போதுதான் மனித வாழ்வில் சட்டத்தின் முக்கியத்துவம்பற்றித் தெரிந்துகொள்ள முடியும். உள்நாட்டுச் சட்டம், வெளிநாட்டுச் சட்டம், உலகளாவிய சட்டங்களைப் பற்றிக் கல்லூரிப் படிப்புகளில் அனைவருக்கும் ஒரு கட்டாயப் பாடமாக வழங்கப்பட வேண்டும். சட்டத் துறையின்மீதும் நீதித் துறையின் மீதும் மக்களுக்கு நம்பிக்கை வரும்வகையில் விரிவுபடுத்த வேண்டும். எளிமையாக்கப்பட வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதியாகும். நீதிமன்றத்தில் நீதி கிடைப்பதில் காலதாமதம் தவிர்க்கப்பட வேண்டும். நீதித் துறையானது ஒரு வழக்கை, வழக்கின் தன்மைக்கேற்ப குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க வேண்டும் எனக் கால நிர்ணயம் செய்யப்பட வேண்டும். கீழமை நீதிமன்றங்களில் மூன்றில் ஒரு பங்கு நீதிபதிகள் நியமிக்கப்படாமல் இருக்கின்றது. 201 Magistrate posts காலியாக உள்ளன. சார்பு நீதிமன்ற நீதிபதி இடங்க்ள் 17 காலியாக உள்ளன, District Judge இடங்கள், 7 காலியாக உள்ளன. இதனால் விரைவு நீதிமன்றங்களில் விரைந்து நீதி கிடைப்பது தாமதப்படுத்தப்படுகிறது.



பிற்பகல் 12-40

விரைவு நீதிமன்றங்கள் மற்றும் இரவு நேர நீதிமன்றங்களின்மூலம் விரைவுபடுத்தினாலும், வழக்குகளின் வரவு மேலும் அதிகமாகவே உள்ளதால், விரைவு நீதிமன்றங்களை அதிகப்படுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். நீதித் துறையில் அடிப்படைக் கட்டமைப்புகள் போதுமான அளவு இல்லை. அவற்றை ஏற்படுத்தித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். உரிய பணியாளர்கள் நியமிக்கப்படாமல் காலியாக உள்ளது. கணினி உண்டு; பணியாளர்கள் இல்லை என்ற நிலைமை மாற வேண்டும்.

தலைமை நீதிபதியைத் தவிர, வேறு நீதிபதிகள் மற்ற மாநிலங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கக் கூடாது. சென்னை உயர் நீதிமன்றம் மற்றுமுள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் அனைத்து நடவடிக்கைகளையும் தமிழை வழக்காடு மொழியாக எடுத்து நடத்த வேண்டும். அரசு வழக்கறிஞர்கள் மிகக் குறைந்த அளவில் சம்பளம் பெற்று வருகின்றனர். அதனை அரசு உயர்த்தித் தர வேண்டும். மேலும், பல ஆண்டுகளாக அரசு வழக்கறிஞர்களுக்குச் சம்பளம் வழங்கப்படாமல் இருந்து வருகின்றது. அதனையும் உரிய காலத்தில் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உச்ச நீதிமன்ற வழக்கறிஞர்களுக்கு வீடு ஒதுக்கியது போன்று சென்னையில் உள்ள உயர் நீதிமன்ற வழக்கறிஞர்களுக்கும் அடுக்குமாடிக் குடியிருப்பை, அரசு வழங்க வேண்டும்.

மத்திய அரசின் உயர் கல்வி நிறுவனங்களான I.I.T., I.I.M. போன்ற கல்வி நிறுவனங்களில், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 சதவிகித இட ஒதுக்கீடு, கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் கிடைத்திட அரும்பாடுபட்ட மருத்துவர் அய்யா அவர்களுக்கும், மருத்துவர் சின்னய்யா அவர்களுக்கும், அதற்கு ஆதரவு தெரிவித்து சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும், வழக்காடு மன்றத்திலும் உரிய குரல் கொடுத்த தமிழக முதல்வர் அவர்களுக்கும், பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அத்தோடு நில்லாமல் வருமான வரம்பு என்ற தடையை நீக்கி அனைத்து இதர பிற்படுத்தப்பட்ட மக்கள் பயனடைய 'creamy layer' முறை ஒழிக்கப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை இந்த ஆண்டே விரைவுபடுத்த வேண்டுமெனத் தமிழக அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

எங்கள் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் அண்ணன் கோ.க. மணி அவர்கள் தொடர்ந்து இந்தச் சட்டமன்றத்திலே வலியுறுத்திப் பேசி வருகின்ற பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் பிறந்த நாளான செப்டம்பர் 17, சமூக நீதி நாளாகக் கொண்டாடப்பட வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

உயர் நீதிமன்ற, உச்ச நீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தில் தகுதி, திறமையுடையவர்கள் அதிகம் பேர் இருந்தும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மை இனத்தவர், தாழ்த்தப்பட்டோர், மலைவாழ் மக்கள் ஆகியோருக்கு இன்னமும் சமூக நீதி கிடைக்கப் பெறவில்லை. எனவே, உயர் நீதிமன்ற உச்ச நீதிமன்ற நிதிபதிகள் உட்பட அனைத்து நீதிபதிகள் நியமனத்திலும் இட ஒதுக்கீட்டு முறையை அமல்படுத்த வேண்டும்.

எங்கள் பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனத் தலைவர் மருத்துவர் அய்யா அவர்கள், சென்னை உயர் நீதிமன்றத்திலும் மற்ற நீதிமன்றங்களிலும் உள்ள நடவடிக்கைகள் அனைத்திலும் வழக்காடு மொழியாகத் தமிழ் இடம் பெற வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து வந்துள்ளார்கள். அதற்கேற்ப மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், சட்டமன்றத்தில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளார்கள். அதற்காகவும் பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இட ஒதுக்கீட்டு நாயகர் அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்கு உச்ச நீதிமன்ற வளாகத்தில் சிலை அமைக்கப்பட்டுள்ளது. அதேபோல, உயர் நீதிமன்ற வளாகத்திலும் ஒரு சிலை அமைக்கப்பட வேண்டுமெனப் பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய இட ஒதுக்கீட்டு முறையான MBC, BC, OC போன்ற இட ஒதுக்கீட்டு முறையில், ஒவ்வொரு பிரிவிலும் நூற்றுக்கும் மேற்பட்ட சமுதாயங்கள் உள்ளடங்கி இருப்பதால், அந்தப் பட்டியலில் உள்ள அனைத்து சமூகங்களுக்கும் உரிய சமூக நீதி கிடைப்பதில்லை. எனவே, இந்தப் பெருங் குறையைப் போக்க, மக்கள் தொகை அடிப்படையில் மற்ற மாநிலங்களில் உள்ளவாறு, பெருத்த மக்கள் தொகை உள்ள சமூகங்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் தொகுப்பு முறையில் அவரவர்களுக்குத் தனியாக இட ஒதுக்கீடு அளிக்க தமிழக அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.



மேலும், சட்டங்கள், சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றும்பொழுது நிறைவேற்றப்படுகின்ற சட்டத்தின்மீது, அடிப்படைக் கருத்துகளை மேலோட்டமாக விவாதித்த பிறகே, தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். அப்போதுதான் அந்தச் சட்டத்தின் நிறை குறைகளைச் சட்டமன்ற உறுப்பினர்கள் அறிய முடியும்.

சட்டமன்றத்தில், தமது தொகுதிகளைப்பற்றி எடுத்துரைக்க, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும், ஒரு கூட்டத் தொடரில் குறைந்தது அரை மணி நேரமாவது ஒதுக்கப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

வழக்கறிஞர் தொழில் ஓர் உன்னதமான தொழில். அவர்களுக்கு வழங்கப்படும் சேம நல நிதியை ரூபாய் 2 இலட்சத்திலிருந்து ரூபாய் ஐந்து இலட்சமாக உயர்த்திக் கொடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல வழக்கறிஞர்களின் உதவியாளர்களுக்கும் நிதி உயர்த்தப்பட வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் செயல்பட்டுவரும் 'Cum Court'-களால், quick disposal கொடுக்க முடிவதில்லை. எனவே, அதனைத் தனித் தனியாகப் பிரித்து நீதிபதிகளை நியமிக்க வேண்டும். நிலுவையில் உள்ள வழக்குகளை முடிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. த.அ. மேகநாதன்:** Budget-இல் ஒவ்வொரு துறையின் அறிவிப்புகளை அறிவிக்கும்போதும் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும், இந்த வருடத்தில் என்ன செய்கிறோம் எனக் கவனித்து அந்தத் துறையின்மூலம் அறிவிப்பு செய்ய வேண்டும். அப்போதுதான் தொகுதி மக்கள், வளர்ச்சி அடைவது குறித்து தெரிந்துகொள்ள ஏதுவாக இருக்கும்.

பிற்பகல் *12-45*

அடுத்து, தொகுதிப் பிரச்சினைகள் குறித்து தெரிவிக்க விரும்புகிறேன். தருமபுரி மாவட்டம், பாலக்கோடு நீதிமன்றம், பல ஆண்டுகளாகத் தனியார் கட்டடத்தில், மக்கள் நெரிசல் அதிகம் உள்ள பகுதியில் இயங்கி வருகிறது. அந்த நீதிமன்றத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக்

கேட்டுக்கொள்கிறேன். கிருஷ்ணகிரி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில், கூடுதலாகக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைத்துத் தரப்பட வேண்டும்.

நீதித் துறையில் ஊழல் இருக்கக்கூடாது; இலஞ்சம் இருக்கக்கூடாது என்று மாண்புமிகு பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் அறிவித்துள்ளார்கள். அதனை நிறைவேற்றத் தீவிரம் காட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

***திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய நாட்டின் ஜனநாயகத்தின் மூன்றாவது தூணான நீதி நிருவாகம் மற்றும் சட்டத் துறையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது அரசமைப்புச் சட்டத்தின் முதன்மையான நோக்கம், அனைத்துக் குடிமக்களுக்கும் விரைவான நீதி கிடைக்க வேண்டுமென்பதேயாகும். தமிழகத்தில், கடந்த ஆறாண்டுக் காலமாக மாநில சட்ட ஆணையம் திருத்தியமைக்கப்படாமல் உள்ளது. இந்த அரசு ஆணையத் தலைவர் மற்றும் உறுப்பினர்களை உடனடியாக நியமனம் செய்து, ஆணையத்தைச் செயல்படச் செய்ய வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், 1965 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட மாநில ஆட்சி மொழி ஆணையம், சட்டச் சொற்களை அறுதி செய்து சட்டச் சொல்லகராதியை வெளியிடவும், சட்டப் புத்தகங்களை, மாநில மற்றும் மைய சட்டங்களைத் தமிழில் மொழிபெயர்ப்பு செய்திடவும் வேண்டுகிறோம்.

சென்ற 19-4-2008 அன்று புது டெல்லியில் நடைபெற்ற அனைத்து மாநில முதல்வர்கள் மற்றும் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதிகளின் மாநாட்டில், தமிழக முதல்வர் அவர்களின் வேண்டுகோளும், தமிழகச் சட்டப் பேரவையின் தீர்மானமும், சென்னை உயர் நீதிமன்ற ஆட்சி மொழியாகத் தமிழ் மொழி இருக்க வேண்டுமென்ற கோரிக்கை நிறைவேற்றப்படுவதற்கு உதவிகரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாநில மனித உரிமை ஆணையத்தின் ஆண்டறிக்கை, சுமார் பத்தாண்டுக் காலமாக சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்படவில்லை. அதனுடைய பரிந்துரைகளும், Action taken Report-ம் வைக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நீதிமன்றங்களில் வழக்குகள் நிலுவையாக இருப்பதால், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய காலத்தில் நீதி கிடைக்காமல் போகிறது. காலந்தாழ்ந்த நீதி மறுக்கப்பட்ட நீதிக்குச் சமம் என்பார்கள். 2007 ஆம் ஆண்டு டிசம்பர் 31 வரை, கீழமை நீதிமன்றங்களில் 5 இலட்சம் சிவில் வழக்குகளும், 4 இலட்சத்து, 30 ஆயிரம் கிரிமினல் வழக்குகளும் நிலுவையில் உள்ளன. சென்னை உயர் நீதிமன்றத்தில் மட்டும் 3 இலட்சத்து, 90 ஆயிரம் சிவில் வழக்குகளும், 36 ஆயிரம் கிரிமினல் வழக்குகளும் நிலுவையில் உள்ளன.

சமீபத்தில் புது டெல்லியில் நடைபெற்ற மாநாட்டில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். "ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் வழக்குகள் தீர்க்கப்படவில்லையென்றால், அதனால் ஏற்படும் விரக்தி காரணமாக மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டுவது என்பது இயலாமல் போய்விடும்" என்று உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்கள் அதே மாநாட்டில் தெரிவித்துள்ளதைக் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இங்கிருக்கக்கூடிய அத்தனை பேரும் தொலைக்காட்சி பார்க்கக்கூடியவர்கள். ஒரு விளம்பரம்கூட வருகிறது. இளம் வழக்கறிஞர்கள் அந்த வழக்கை ஆரம்பிக்கிறார்கள்; இறுதியாக, அவர்கள் வயது முதிர்வு வரும்வரை அந்த வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஏறக்குறைய 30, 40 ஆண்டுக் காலமாக ஒரு வழக்கு நடைபெறுவதாகத் தொலைக்காட்சியிலேகூட ஒரு விளம்பரம் வந்துகொண்டிருக்கிறது. நீதிமன்றங்களில் பல ஆண்டுக் காலமாக வழக்குகள் இழுத்தடிக்கப்படுவதால், சமுதாயத்தில், கிராமப்புறங்களில் கட்டப் பஞ்சாயத்துகளுக்கு இட்டுச் செல்கிறது. ஆதிக்க சக்திகளும், வசதி படைத்தவர்களும் அடியாட்கள்மூலமாகக் கட்டாயப்படுத்தி, நீதி கிடைக்க வேண்டியவர்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதே மாநாட்டில் "மிதமிஞ்சிய காலதாமதம், நேர்மையற்ற நடைமுறைகள், அதிகமான செலவினப் போக்குகளால், நீதித் துறை மக்களுக்குப் பயனற்று வருகிறது" என்று உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்கள் பேசியுள்ளதை மீண்டும் நினைவுபடுத்துகிறேன். "புதிய நீதிமன்றங்கள், மாலை நேர நீதிமன்றங்கள், சிறப்பு Magistrate நீதிமன்றங்கள் போன்றவற்றை நிறுவுவதற்கு மாநிலங்கள் தங்கள்

பட்ஜெட்டில் நிதியொதுக்கீடு செய்ய வேண்டும்" என்றும் தலைமை நீதிபதி அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

தமிழ்நாடு முழுவதும் உள்ள நீதிபதிகள் மற்றும் நீதிமன்ற ஊழியர்களது காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்பிட வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி வலியுறுத்த விரும்புகிறது. கடந்த ஒரு வார காலத்திற்கு முன்பு, நீதிபதிகளின் காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டுமென்ற வழக்குகளை விசாரிக்க வேண்டுமென்று தாக்கல் செய்யப்பட்ட பொதுநல வழக்கில், உச்ச நீதிமன்ற நீதிபதி மரியாதைக்குரிய திரு. இரவீந்திரன் அவர்கள் குறிப்பிட்டுள்ளதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். "தரமுள்ள வழக்கறிஞர்கள், தேசிய மற்றும் பன்னாட்டு நிறுவனங்களில் பணிக்குச் சென்றுவிடுகின்றனர். தகுதிவாய்ந்த நீதிபதிகள் கிடைப்பதென்பது, மிகக் குறைவாக உள்ளது. சீர்மிகு சிறப்புச் சட்டப் பள்ளிகளில் பயிற்றுவிக்கப்படும் கல்வியின் தரம், அனைத்துச் சட்டக் கல்லூரிகளிலும் தொடங்கப்பட வேண்டும். அதேபோல், பயிற்சியமர்த்தும் மையம் அனைத்துச் சட்டக் கல்லூரிகளிலும் ஆரம்பிக்கப்பட வேண்டும்."

உலகத்திலேயே பலம் வாய்ந்த நீதிபதிகள், இந்திய நீதிபதிகள் என்ற ஒரு கருத்து இருக்கிறது. Power corrupts; absolute power corrupts absolutely என்ற ஆங்கிலச் சொல் வழக்கில் உள்ளது. நீதிபதிகள் நியமனம், இட மாறுதல் மற்றும் அவர்கள் தவறு செய்தால், தண்டனை வழங்குவது குறித்து, ஒரு வெளிப்படையான நடவடிக்கை இருக்க வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்த விரும்புகிறது.

பிற்பகல் 12-50

அரசு நிர்வாகத்திலும், நீதித் துறையிலும் இலஞ்ச ஊழல் கடும் சவாலாக உள்ளது என்று இந்திய நாட்டின் பிரதமர் அவர்கள், நீதிபதிகள் மாநாட்டிலே சுட்டிக்காட்டியுள்ளதை இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். தேசிய நீதித் துறை ஆணையத்தை ஏற்படுத்துவதன்மூலமே இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். தமிழக அரசு National Judicial Commission அமைப்பதற்கு மத்திய அரசை வலியுறுத்தி, இச்சட்டமன்றத்தில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்திற்கு அமர்வு நீதிமன்றம் வழங்கிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் இந்தச் சந்தர்ப்பத்திலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலும், தருமபுரி மாவட்ட மக்கள் சார்பிலும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

15 ஆண்டுக் காலமாக அரூரிலே சார்பு நீதிமன்றம் அமைய வேண்டும் என்ற கோரிக்கையை, கடந்த 6-12-2007 அன்று உயர் நீதிமன்றம் அனுமதி அளித்தும், அரசுக்குப் பரிந்துரை செய்தும், இந்த நிதி ஆண்டிலாவது அரூரிலே சார்பு நீதிமன்றம் வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறிலும், குழித்துறையிலும் நீதிமன்றங்களும், நீதிமன்ற வளாகங்களும், சேலம் ஏற்காடு, வாழப்பாடி போன்ற தாலுகாக்களில் நீதிமன்றங்கள் அமைத்திடவும், வேலூரிலே சட்டக் கல்லூரி ஒன்று தொடங்கிடவும் வேண்டுகின்றோம்.

ஆதி திராவிடர், பழங்குடியினர் அதிகம் வாழும் மாவட்டங்களான விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, சேலம், தருமபுரி போன்ற வன்கொடுமை வழக்குகள் அதிகம் நடைபெற்ற மாவட்டங்களில் தனி நீதிமன்றங்கள் அமைத்திட வேண்டுமென்று மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது. வன்கொடுமை தடுப்புச் சட்டம் என்பது ஆதி திராவிட மக்களது வாழ்வுரிமையைப் பாதுகாப்பதற்கான சட்டம். சமுதாயத்திலே தீண்டாமை கொடுமை அறவே ஒழிக்கப்பட வேண்டுமானால், மனித உரிமைக் கல்விப் பாடத் திட்டம் தமிழகத்தில் அமலாக்கப்பட வேண்டும்.

அதேபோல, இந்திய வரலாற்றிலே தருமபுரி மாவட்டம், வாச்சாத்தியில் 18 பழங்குடியினப் பெண்கள் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டு அந்தக் கிராமத்தையே சின்னாபின்னமாக்கிச் சூறையாடிய வழக்கு, 16 ஆண்டுக் காலமாக நடைபெற்று வருகிறது. தனி நீதிமன்றம் அமைக்கப்பட்டிருந்தால், ஏறக்குறைய அந்த வழக்கு இப்பொழுது முடிந்திருக்கும். அந்த வழக்குக்கு வரக்கூடிய சாட்சிகளுக்குப் படித் தொகையாக ஒரு நாள் உணவிற்கு எட்டே ரூபாய் வழங்கப்படுகிறது. அது உயர்த்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சான்றுறுதி அலுவலர்கள், கடந்த 5 ஆண்டுக் காலமாக அமர்த்தப்படாத நிலையுள்ளது. அவர்கள் உடனடியாக அமர்த்தப்பட வேண்டும்.

விடுதிகள். விடுதிகள் இல்லாத சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு விடுதி வசதி ஏற்படுத்தித் தர வேண்டுகிறேன்.

வழக்கறிஞர்களுக்காக வழங்கப்படும் சேம நல நிதியை இரண்டு இலட்சம் ரூபாயிலிருந்து 5 இலட்சம் ரூபாயாக உயர்த்திட வேண்டுகிறோம் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன். (குறுக்கீடு) இல்லை, எனக்கு time இல்லை. பாருங்கள், மணி 12-55 ஆகிறது. இன்னும் ஐந்து பேர் பேச வேண்டும். Minister reply பண்ணவேண்டும். Please, இன்றைக்கு மட்டும் கொஞ்சம் co-operate பண்ணுங்கள். நீங்கள் நாளைக்குக்கூட இதே சப்ஜெக்டைப் பேசுங்கள். இன்றைக்கு மட்டும் please co-operate. திரு. எஸ். இராசசேகரன்.

***திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டம் மற்றும் நீதி நிருவாகத் துறையினுடைய மானியக் கோரிக்கையில் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக சில கருத்துகளை நான் இங்கே முன்வைக்க விரும்புகின்றேன். குறிப்பாக, நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு டாக்டர் கலைஞர் தலைமையிலே வந்ததற்குப் பின்னால் நீதிமன்றக் கட்டமைப்புகள் வலுப்படுத்தப்பட்டு வருகின்றன. நீதிமன்றங்களுக்கு வேண்டிய அத்தனை வசதிகளையும் ஒன்றன்பின் ஒன்றாக செய்து வருகின்றார்கள். அதற்கு இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்த வருடம் சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழை ஆட்சி மொழியாக... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முக்கியமான மானியக் கோரிக்கை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் கோரிக்கைகளை வைத்துக்கொண்டிருக்கின்றார்கள். அமைச்சர்



அவர்கள் அவையிலே இல்லை. இது முறைதானா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,, நாங்கள் எல்லோரும் இருக்கிறோம் குறிப்பு எடுத்துக்கொண்டிருக்கிறோம். அவர் வந்தவுடனே கொடுத்துவிடுவோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன். நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தமிழிலேயே நடத்தப்பட வேண்டுமென்று, இந்த அவையிலே சட்டத் திருத்தம் கொண்டுவந்து நிறைவேற்றி, அது உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று கடந்த வாரத்திலேகூட நம்முடைய முதல்வர் அவர்கள், சட்ட அமைச்சருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். சட்ட அமைச்சரும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக வழக்குகளைத் தமிழிலே நடத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதோடு, சட்டப் புத்தகங்கள் ஆங்கிலத்தில் இருப்பதைத் தமிழிலே மொழி பெயர்த்துக் கொடுப்பதற்கான முயற்சிகளையும் இந்த அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

அடுத்தபடியாக, வழக்குகள் தேக்கம்—இலட்சக்கணக்கான வழக்குகள் இந்திய நாட்டிலே தேங்கியிருக்கின்றன. வழக்குகள் தேங்கியிருப்பது என்பது, ஏழைகளைத்தான் அதிகமாக பாதிக்கின்றது. சினிமாப் படங்களில்கூட, அது சிரிப்பிற்காகக் காட்சிகள் எடுக்கப்படுகின்ற ஒரு நிலைக்கு வந்திருக்கின்றது. ஒரு மஞ்சள் பையோடு நீதிமன்றத்திற்கு வருகின்ற ஒரு விவசாயியைப் பார்த்து, இந்த வழக்குகளை எத்தனை ஆண்டுகளாக நடத்துகிறாய் என்று கேட்டால், 35 ஆண்டுகளாக வழக்கு நடக்கிறது என்று சொல்லக்கூடிய சிரிப்பான, கேளிக்கையான ஒரு நிகழ்ச்சியாக அது வளர்ந்திருக்கிறது. இதைத்தான் சென்ற வாரத்தில் டெல்லியிலே நடைபெற்ற அந்த மாநாட்டில் இன்றையப் பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள்கூட சுட்டிக்காட்டியுள்ளார்கள். ஊழலுக்கு வித்திடுகின்ற ஒரு நிலைக்கு அது வந்துவிட்டது; ஆகவே, வழக்குகள் தேங்காமல் நடத்தப்பட...

வேண்டுமென்பதைச் சொல்லியிருக்கின்றார். ஆகவே, தேங்கியிருக்கின்ற வழக்குகளை நடத்துவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, வழக்குரைஞர்கள். நீதிமன்றப் புறக்கணிப்பு என்பது தொடர்ந்து வந்துகொண்டேயிருக்கின்றது. காவல் துறைக்கும், அவர்களுக்கும் ஏதாவது ஓர் இடத்திலே தகராறு என்று சொன்னால், தமிழ்நாடு முழுவதும் நீதிமன்றப் புறக்கணிப்பு என்று வருகின்றது. ஆகவே, நீதிமன்றப் புறக்கணிப்பினைப்பற்றி அப்போதைக்கப்போது நடவடிக்கை எடுத்து, நீதிமன்றப் புறக்கணிப்பு என்பது தவிர்க்கப்பட வேண்டும். இன்றையதினம்கூட, நாகர்கோவிலில் கடந்த 45 நாட்களாக நீதிமன்றப் புறக்கணிப்பு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே, நீதிமன்றப் புறக்கணிப்பு என்பது, வருங்காலத்தில் தவிர்க்கப்பட வேண்டும்.

அடுத்து, தொழிலாளர் நல நீதிமன்றங்கள். தொழிலாளர் நல நீதிமன்றங்களில் ஆறு மாதங்களில் வழக்கினை முடிக்க வேண்டுமென்று அரசு சொல்லியிருக்கின்றது. ஆனால், தொழிலாளர் நீதிமன்றங்களைப் பார்த்தால் 15 வருடங்கள், 20 வருடங்கள் என்று வழக்குப் போட்டிருக்கின்றவன் இறந்துவிடுகின்ற சூழ்நிலைகூட உருவாகி இருக்கின்றது. ஆக, இப்படிப்பட்ட நிலையை எல்லாம் போக்க வேண்டும்.

அடுத்ததாக, வழக்குரைஞர்கள் இறந்தால் ரூ.2 இலட்சம் இன்றைக்கு கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். அதை ரூ.5 இலட்சமாக உயர்த்திக் கொடுக்க வேண்டும். அதைப்போல இளம் வழக்குரைஞர்களுக்கு உதவிப் பணம் கொடுக்க வேண்டும்.

சட்டம்பற்றி சில விவரங்களை நான் இங்கே சொல்ல விரும்புகின்றேன். நமது மாநிலத்தில், 7 சட்டக் கல்லூரிகள் இருக்கின்றன. இந்த 7 சட்டக் கல்லூரிகளும் போதாது என்று பெங்களூர், திருப்பதி என்ற முறையில் இங்கேயிருந்து அங்கே போய் படித்துக்கொண்டு வருகின்றார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதைப்போல, 2001 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட வேலூர் சட்டக் கல்லூரி, இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. அதோடு நானும் சேர்ந்து சொல்கின்றேன். மேலும் பல சட்டக் கல்லூரிகள் இந்த மாநிலத்தில் தொடங்கப்பட வேண்டும். ஏனென்று சொன்னால், இந்த மாநிலத்திலேயுள்ளவர்கள் இங்கேயே படிக்கவேண்டுமென்கின்ற நிலையில், மாணவர்களுக்குச் சட்டக் கல்லூரிகளில், அதாவது ஆண்கள்



சட்டக் கல்லூரிகளில் விடுதிகள் கிடையாது. ஆகவே, அவர்களுக்கும் விடுதிகள் அமைக்கப்பட வேண்டுமென்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு) பெண்களுக்கு என்று அதைத் திருத்திக்கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, சட்டக் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு உதவித் தொகை கொடுக்கப்படுவதில்லை. சட்டக் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்கள் வருடம் ரூபாய் 40 ஆயிரம் கட்ட வேண்டியிருக்கிறது. 5 ஆண்டுகளுக்கு ரூ.2 இலட்சம் கட்ட வேண்டியிருக்கிறது. இது குறைக்கப்பட வேண்டும்.

நன்னிலத்தில் நீதிமன்றக் கட்டடம் கட்டித் தரவேண்டும். திருத்துறைப்பூண்டியில் நீதிமன்றக் கட்டடம் கட்டித்தர வேண்டும். என்னுடைய தொகுதியான ஆலங்குடியில் நீதிமன்றக் கட்டடம் கட்டித்தர வேண்டும் என்று கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்ததாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீர. இளவரசன், உங்களுக்கு 5 நிமிடங்கள்.

***திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏழு நிமிடங்கள் கொடுங்கள். நீதி நிருவாகம், சட்டம் குறித்த மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு அனுமதியளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"சட்டம் என்பது சமுதாய மாற்றத்திற்கான ஒரு கருவி ஆகும்" என்று நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. மக்களுக்காக, மக்களுடைய நலனுக்காக சட்டமன்றத்திலே சட்டங்கள் இயற்றப்படுகிறது என்ற நம்பிக்கையை மக்கள் மனதிலே ஏற்படுத்துகின்றவகையில் சட்டங்கள் இயற்றப்பட வேண்டுமென்பதை முதலில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நீதியை நிலைநாட்டுவதற்கு எப்படி உயர் நீதிமன்றங்கள் ஒரு மாநிலத்தில் உயர்ந்த இடத்தை வகிக்கின்றனவோ, அதைப்போல சட்டங்களை நிறைவேற்றுவதற்கும் நம்முடைய சட்டமன்றங்கள் ஓர் உயர்ந்த அந்தஸ்தை இன்றைக்குப் பெற்றிருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். நீதியை நிலைநாட்டுகின்ற நீதிமன்றமும் சட்டத்தை இயற்றுகின்ற சட்டமன்றமும் ஒன்றையொன்று சார்ந்திருந்தால்தான், ஜனநாயகக் கோட்பாட்டின் பலனை ஜனநாயக நாட்டில் நாம் பெற முடியும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-00*

அதேபோல, நீதிமன்றம் அமைப்பதன் நோக்கம் என்ன என்பதைப்பற்றியும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். சட்டமன்றத்தில் இயற்றப்படுகிற சட்டங்கள் எல்லாம் அவை நிறைவேற்றப்படுகிற அந்த நோக்கத்தின் அடிப்படையில், நோக்கத்தை நிறைவேற்றுகிற அந்தக் காரணத்திற்காக, அதனைச் செயல்படுத்துவதற்காகத்தான் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்ற நிலையில், இந்த நோக்கத்திற்கு மாறாக சில வேளைகளில் தீர்ப்புகள்கூட வந்துவிடுவதை நாம் பார்க்கிறோம். எனவே, எந்த நோக்கத்திற்காகச் சட்டங்கள் இயற்றப்படுகின்றனவோ, அந்த நோக்கம் நிறைவேறுகிற வகையில் நீதிமன்றங்கள் தீர்ப்பினை வழங்கிட வேண்டும். அதற்கு அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதேபோல, 'சென்னை உயர் நீதிமன்றம்' என்ற பெயரில் இன்றைக்கு இயங்கி வருகிறது. பல மாநிலங்களைப் பொறுத்தமட்டிலும், அந்தந்த மாநிலத்தின் பெயரிலேயே உயர் நீதிமன்றங்கள் இருக்கிற காரணத்தால், நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் 'தமிழ்நாடு உயர் நீதிமன்றம்' என்ற பெயரை இங்கே கொண்டு வருவதற்கு அரசு முயற்சிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல தமிழில் வழக்காடுவதற்கும், வழக்கை நடத்துவதற்கும் பல மாநிலங்களில் அந்தந்த மாநில மொழிகளில் வாய்ப்புகள், உரிமைகள் இருப்பதை நாம் பார்க்கிறோம். ஆனால், தமிழ்நாட்டில் மட்டும் உயர் நீதிமன்றத்திலே தமிழில் வாதாடுவதற்கோ, வழக்காடுவதற்கோ உரிமைகள் மறுக்கப்பட்டு வருவதை காலங்காலமாக நாம் பார்க்கிறோம். இன்னும் சொல்லப்போனால், பல ஆண்டுக் காலமாக தமிழில் வாதாடுவதற்கு நாம் முயற்சிகளை எடுக்கிறோம் என்று நம்முடைய அறிவிப்பிலே சொல்லிக் கொண்டிருக்கிறோமே தவிர, அதற்கான எந்த நடைமுறைச் சாத்தியமும் இன்னும் உருவாகவில்லை. எனவே, அரசு இதனைக் கவனத்தில்கொண்டு, உயர் நீதிமன்றத்தில் மற்ற மாநிலங்களைப் போல நாமும் தமிழில் வழக்காடுகின்ற அந்த உரிமையைப் பெற வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.



இந்த அரசு பொறுப்பேற்றது முதலாக, தேவைக்கேற்ப புதிய நீதிமன்றங்கள் அமைக்கப்படும் என்று சொல்லிக்கொண்டே வருகிறது. ஆனால், இந்த ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பிலேகூட, குறிப்பிட்ட ஒரே இடத்தில் பல நீதிமன்றங்கள் செயல்படுவதைத் தவிர்க்கவும், வழக்காடும் பொது மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கவும், சார்நிலை நீதிமன்றங்கள் பரவலாக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் கேட்க விரும்புவது எல்லாம், இப்படிப் பரவலாக்கப்பட வேண்டும் என்று நீங்கள் சொல்கிறபோது, பல ஆண்டுக் காலமாக மதுரை மாவட்டம், திருமங்கலத்தில், மேலூரில், உசிலம்பட்டியில் போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது. மதுரையில், Sessions Court-இலேயே, 5 சார்பு நீதிமன்றங்கள் ஒரே இடத்தில் இருந்து வருகின்றன. அது வழக்கறிஞர் பெருமக்களுடைய கோரிக்கையாக மட்டுமல்லாமல், பொது மக்களும் அங்கே போராடி வருகிறார்கள். திருமங்கலத்தைப் பொறுத்தமட்டிலும், 100 ஆண்டுகளுக்கு முற்பட்ட மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குற்றவியல் நீதிமன்றம், 125 வழக்கறிஞர்களைக் கொண்ட அந்த நீதிமன்றம் அங்கே பல ஆண்டுக் காலமாக கோரிக்கை வைத்து வருகிறது. பல போராட்டங்களுக்குப் பிறகும், சட்டமன்றத்திலே இதுகுறித்து நான் பலமுறை பேசியதற்குப் பிறகும், அங்கே camp court ஒன்று அமைக்கப்படும் என்ற உறுதியைச் சொன்னதற்குப் பிறகும், ஏறத்தாழ ஓர் ஆண்டுக் காலம் ஆகியும், இன்னும் அதற்கான திட்டம் எதுவும் அங்கே நடைமுறைப்படுத்தப்படவில்லை. எனவே, சார்பு நீதிமன்றத்தை மதுரை மாவட்டம், திருமங்கலத்தில், மேலூரில், உசிலம்பட்டியில் அமைப்பதற்கு அரசு உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. வீர. இளவரசன்:** அதேபோல, 1888 ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம், சுமார் 10 இலட்சம் ரூபாயில் ஆரம்பிக்கப்பட்டு, 1892 ஆம் ஆண்டு 13 இலட்சம் ரூபாயில் கட்டி முடிக்கப்பட்ட நம்முடைய சென்னை உயர் நீதிமன்றம், அதற்குப் பிறகு பல ஆண்டுக் காலமாக, மதுரைக் கிளையைத் தென் பகுதியில், அந்த உயர் நீதிமன்றத்தின் கிளை அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை இருந்து வந்த நிலையில் அவையெல்லாம் மறுக்கப்பட்டு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத். (குறுக்கீடு) உட்காருங்கள். நேரமாகிவிட்டது. (குறுக்கீடு) 5 நிமிடங்கள்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) உரையை முடியுங்கள்.*

**திரு. வீர. இளவரசன்:** *அதற்குப் பிறகு, 50 ஆண்டுக் காலத்திற்கு முன்னால், இதே சட்டமன்றத்தில், சென்னை உயர் நீதிமன்றத்தின் கிளையை தமிழகத்தின் மத்தியப் பகுதியில் அல்லது தென் பகுதியில் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை குறித்து இந்தச் சபையிலே பேசப்பட்டபோது, அப்போது அமைச்சராக இருந்த மாண்புமிகு பக்தவத்சலம் அவர்கள், அதற்கு அவசியம் இல்லை என்ற ஒரு மறுப்பை அப்போது வெளியிட்டதற்குப் பிறகு, இதுநாள்வரையிலும் இல்லாமல், 2004 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24 ஆம் தேதி, சுமார் 57 கோடி ரூபாய் அளவில் அன்றைக்கு சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளையை, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் கட்டி முடித்து இருக்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் தெரிவிக்க விரும்புகிறேன். அந்த உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் 350 பணியாளர்கள் ...*

*பிற்பகல் 1-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத். (குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இதே அவையிலே நான் தெரிவித்திருக்கின்றேன். மதுரை உயர் நீதிமன்றக் கிளை அமைக்க ஆணையிட்டு, நிதி ஒதுக்கி, அடிக்கல் நாட்டியது மற்றும் அதற்கு வேண்டிய வரைபடங்களிலெல்லாம் design அமைத்துத் தந்து tender விடுகின்ற வரையில் நாங்கள்தான் இருந்தோம். கட்டி முடித்தது மட்டும்தான் அவர்கள். ஆரம்பமெல்லாம் எங்களுடையது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத், five minutes.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த உங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். சட்டமும், நீதியும் அனைவருக்கும் பொது என்ற காரணத்தால்தான், பொதுப் பணித் துறையைக்*



கவனித்துக்கொண்டிருக்கின்ற அமைச்சருக்கு, சட்டத் துறையைக் கூடுதலாக ஒதுக்கிக் கொடுத்ததற்கு மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். சட்டம் வேறு, நீதி வேறு. நீதி என்பது இயற்கையால் வகுக்கப்படுகின்ற நன்மை, தீமைகளை ஆராய்ந்த ஒன்று. எப்பொழுதெல்லாம் அநீதி தலைதூக்குகின்றதோ, அப்பொழுது சட்டத்தைக் கொண்டு நீதியை நிலைநாட்டுவதுதான் சட்டத்தின் கடமை. அதுதான் சட்டத்தின் பொருள். அதற்குத்தான், "Law is the manifestation of principles of justice, conscience and equity" என்று சொல்வார்கள். இந்த நூற்றாண்டிலேயே மிகச் சிறந்த சட்டம் என்னவென்று சொன்னால், அது Right to Information Act. அதாவது ஒரு சராசரி மனிதன்கூட, ஜனநாயக தேசத்திலே, அடிப்படையாக என்னென்ன தேவையோ, அதையெல்லாம் தெரிந்துகொள்வதற்காக, அத்தனை துறைகளிலிருந்து தெரிந்துகொள்வதற்காக வகுக்கப்பட்ட ஒரு சட்டம்தான் Right to Information Act. அதை வகுத்துக் கொடுத்த அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நீதி என்று வருகின்றபோது சமூக நீதியைப்பற்றி நாம் பேசுகின்றோம். 69 சதவீத இட ஒதுக்கீட்டில் சமூக நீதிபற்றிப் பேசுகின்ற நேரத்தில், எங்கே இருக்கின்றது 69 சதவீத இட ஒதுக்கீடு என்றால், இல்லை. 100 இடங்களில் 69 இடங்கள் ஆதி திராவிட மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் இட ஒதுக்கீடு தருகின்றார்களா என்றால், இல்லை கூடுதலாக 19 இடங்களை நிரப்பிக்கொள்கின்றார்கள். பல துறைகளில் இது நடக்கின்றது. எனவே நம்முடைய தமிழகத்தில்தான் சமூக நீதி காப்பதிலே முக்கியமான இடத்தை வகுத்துக் கொண்டிருக்கின்றோம் என்ற காரணத்தால், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இந்த 69 சதவீத இட ஒதுக்கீட்டை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதிலே அக்கறை எடுத்து, அதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே என்னுடைய கருத்தைப் பதிவுசெய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஒரு petition வருகின்றது. தனி மனிதன் ஒருவன் வழக்கறிஞரை வைத்துதான் வழக்கை வாதாடவேண்டுமென்று எந்தச் சட்டத்திலும் இடமில்லை. ஆனால் petition தரும்போது, நீதிபதி அவர்கள், 'வக்கீலைக் கொண்டு வா' என்று சொல்கின்றார்கள். ஆனால், வக்கீல்

அன்று Court புறக்கணிப்பிலே இருப்பார். இல்லையென்றால் late-ஆக வருவார். இதையெல்லாம் காரணமாகக் கொண்டுதான், ஏழை எளிய மக்களுக்குப் பயன்படவேண்டுமென்பதற்காக இலவச சட்ட உதவியைத் தருகின்றார்கள். ஆனால் எத்தனை வழக்குகள் இலவச சட்ட உதவியைக் கொண்டு வெற்றி பெற்றிருக்கின்றன என்பதை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். ஏனென்றால் இலவச சட்ட உதவி அளிக்கும்போது, அவர்களுக்குக் கொடுக்கின்ற சம்பளம் மிகக் குறைவாக இருக்கின்ற காரணத்தினால், ஏழையெளிய சாமானிய மக்களுக்கு நீதி சரியான முறையிலே கிடைக்கவில்லை என்ற கருத்து நிலவுகிறது. இதற்கும் இந்த அரசாங்கம் செவி சாய்த்து, இலவச சட்ட உதவிக்கு வழங்குகின்ற தொகையை அதிகப்படுத்தி, ஏழை மக்களுக்கும் நீதியை நிலைநாட்டும் அரசாங்கம் இந்த அரசாங்கம் என்ற பெயரை எடுக்கவேண்டும்.

அடுத்து, Civil, Criminal என்று பிரிக்கும்போது, Civil case என்பது தனி நபருக்கும், தனி நபருக்கும் உள்ள பிரச்சினை. ஆனால் Criminal case-ல் மட்டும்தான் Individual Vs. State என்ற ஒரு நிலை ஏற்படுகின்றது. இதற்கு மத்திய சர்க்காரும் பரிந்துரை செய்திருக்கின்றது. மேலும் இங்கே P.P. என்றும், A.P.P. என்றும் இருக்கின்றார்கள். நல்ல அனுபவமிக்க, திறமைவாய்ந்த வழக்கறிஞர்களாக இருந்தால் பரவாயில்லை. ஆனால் அரசியல் கட்சியின் குறுக்கீட்டால், அவர்களுடைய பரிந்துரையிலே சில வழக்கறிஞர்கள் P.P. ஆகவும், A.P. ஆகவும், A.P.P.-ஆகவும் வரும்போது, மாறி மாறி அரசாங்கம் வரும்போது நீதி நிலைநாட்டப்படுவதில்லை. சட்டத்தை ஒழுங்காகக் கையாளவில்லை என்ற ஒரு கருத்தும் நிலவுகிறது. இனிமேல் வருங்காலத்திலே P.P. நியமனத்திலோ, A.P.P. நியமனத்திலோ அரசியல் கட்சிகளின் குறுக்கீடு இல்லாமல் இருந்தால், நிச்சயமாக நீதி நிலைநாட்டப்படும் என்ற கருத்தும் இங்கே வலியுறுத்தப்படுகின்றது.

அடுத்து, நடமாடும் நீதிமன்றம் என்ற ஒன்று இருக்கின்றது. இந்த நடமாடும் நீதிமன்றம் எப்படிச் செயல்படுகின்றது என்று சொன்னால், ஓரிடத்திலே போய் அவர்கள் நின்றுவிடுவார்கள். நான்கு சார்ஜன்ட் இங்கும் அங்கும் அலைந்து, சாலையில் கடக்கின்றவர்களையெல்லாம் பிடித்து ஒரு கேஸைப் போடுவார்கள். ஆனால், உண்மையிலேயே நடமாடும் நீதிமன்றம் அமைத்ததன் நோக்கம் என்ன, அது எப்படி இருக்கவேண்டுமென்பதை பதிலுரையில் தந்தால் நலமாக இருக்கும்.



அடுத்து Family Court. அதைப் பார்த்தால் நிரம்ப பாவமாக இருக்கின்றது. கணவன்-மனைவி பிரிந்திருக்கின்ற வேளையிலே, 100 பேர், 200 பேர் என்று ஒரே வெராந்தாவிலேயே அவர்களையும் நிற்க வைத்து மிகவும் அவமானப்படுத்தப்படுகின்றார்கள். ஆனால், பெங்களூருவில் Family Court-க்குத் தனியாக complex இருக்கின்றது. எனவே, இதற்கும் இந்த அரசாங்கம் ஒரு நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்று என்னுடைய தாழ்மையான கருத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1-10

எங்குப் பார்த்தாலும் தமிழ், தமிழ் என்று பேசுகின்றோம், ஆனால் தமிழில் வாதாடும் நிலை உருவாக்கப்படவில்லை. நாம் சங்கம் வைத்துத் தமிழை வளர்த்த மதுரையிலே, தனியாக High Court வந்தாலும் சரி, அங்கேயும், High Court-லே எங்குப் பார்த்தாலும், ஆங்கிலத்திலேதான் வாதாடுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. வாதிக்கும் தமிழ் தெரிகிறது; பிரதிவாதிக்கும் தமிழ் தெரிகிறது; வழக்கறிஞருக்கும் தமிழ் தெரிகிறது; நீதிபதிக்கும் தமிழ் தெரிகிறது; ஆனால், தமிழிலே எங்கும் வாதாடாமல் இருக்கின்ற ஒரு சூழ்நிலை இப்போது நிலவுகின்றது.

சட்டத்தைக் கட்டாயப் பாடமாக ஆக்க வேண்டும். அப்படி ஆக்கினால்தான், மனித உரிமை மீறல் இல்லாமல் இருக்கும் என்ற என்னுடைய தாழ்மையான கருத்தையும் தெரிவித்துக்கொண்டு, Criminal Procedure Code, 1973 Section 2A-இன்படி Directorate of Prosecution; இப்போது காவல் துறையின் கட்டுப்பாட்டிலே, அதில் Director இருக்கிறார், Deputy Director இருக்கிறார். இரண்டு அளவிலேயே அத்துறை முடிந்து விடுகிறது. ஆனால், இதனால் speedy and effective administration of justice இல்லை என்ற ஒரு கருத்தும் நிலவுகிறது. எனவே, மூத்த வழக்கறிஞர்களையோ, நீதிபதிகளையோ Director of Prosecution ஆக நியமிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர், உங்களுக்கு அனுமதிக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது. உட்காருங்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரெ. நெடுஞ்செழியன். (குறுக்கீடு)

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** என்னுடைய தொகுதியிலும், ஆத்தூரிலும் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்கவேண்டுமென்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். பதிலுரையிலே,

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தருவார்கள் என்ற நம்பிக்கையோடு, ரூபாய் 2 இலட்சம் என்கிற Advocate Welfare Fund-ஐ 5 இலட்சமாக உயர்த்தி, ஜூனியர் Advocate-களுக்கு எப்போதும் சம்பளம் இல்லை; Stipend கிடையாது. அவர்களுக்கும் சம்பளத்தை இந்த அரசாங்கம் தரவேண்டும். நீதிமன்றப் புறக்கணிப்பு இல்லாமல் இருப்பதற்கு, Bench and Bar Co-ordination Committee-ஐ அமைத்தால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரெ. நெடுஞ்செழியன்.

**திரு. ரெ. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெறுகின்ற சட்டத் துறை மற்றும் நீதி நிருவாகம் ஆகிய மானியக் கோரிக்கைகளிலே பேசுவதற்கு வாய்ப்பளித்த, உலகத் தமிழர்களின் இதய சிம்மாசனத்திலே வீற்றிருக்கும் ஒப்புயர்வற்ற தியாகத் திருவிளக்கு, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரெ. நெடுஞ்செழியன், உங்களுக்கு 7 நிமிடங்கள்.

**திரு. ரெ. நெடுஞ்செழியன்:** மோட்டார் வாகன விபத்துச் சட்டத்தில், லாரிகளில் பயணம் செய்யும் ஏழை எளிய மக்கள் விபத்தில் இறந்துவிட்டால், அவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை கிடைத்திட வாய்ப்பில்லா நிலை உள்ளது. காரணம் உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி, லாரிகளில் இலவசமாகப் பயணம் செய்பவர்கள் இறந்தால், இழப்பீட்டுத் தொகை இல்லை எனத் தீர்ப்பு வந்துள்ளது. அதனால், கூலி வேலை செய்யும் ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படுகின்றார்கள். அவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை பெறுவதற்கான சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது, நீதிமன்றக் கட்டணமாக 100 ரூபாய்க்கு 7 ரூபாய் 50 பைசா செலுத்த வேண்டிய நிலையுள்ளது. அதனைக் குறைத்து, 1 ரூபாய் 50 பைசா செலுத்த அரசு ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். நீதிமன்றங்களின் தீர்ப்பின் நகல் கிடைக்க மாதக் கணக்கில் காலதாமதம் ஆகின்றது, அவற்றை உடனே வழங்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தாலுகாவிற்கு ஒரு Sub-Court கட்டாயம் வழங்க வேண்டும் என்கிற அடிப்படையில் கந்தர்வக்கோட்டை தாலுகாவிற்கும், புதியதாகத்



துவக்கியிருக்கின்ற தாலுகாவான கரம்பக்குடி, பொன்னமராவதி, இலுப்பூர் மற்றும் மதுரை மாவட்டம், பேரையூர் தாலுகாவிற்கும் புதியதாக நீதிமன்றம் அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் பல இடங்களில் குற்றவியல் நடுவர் நீதிபதி பதவியும், உதவி அரசு வழக்கறிஞர்கள் பதவிகளும் மற்றும் நீதிமன்றப் பணியாளர்களின் பதவிகளும் காலியாக உள்ளன. இக்காலியிடங்களை நிரப்ப வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். தமிழகத்தில் பல நீதிமன்றங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. அதற்கு அரசுக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் 400-க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்குக் கழிப்பிட வசதிகளும், அமர்வதற்கு இருக்கை வசதிகளும்கூட இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகையால், அவர்களுக்குக் கட்டடம் மற்றும் அத்தியாவசிய வசதிகளைச் செய்து தரவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை நீதிமன்றத்தில், கடந்த ஒரு வருடமாக காலியாக உள்ள தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிபதி பதவியை நியமனம் செய்யக் கேட்டுக்கொள்கிறேன். தமிழகம் முழுவதும் மாவட்ட நீதிமன்றங்களில் பணிபுரிந்த, அரசு வழக்கறிஞர்களுக்கு இலட்சக் கணக்கில் சம்பளம் நிலுவையில் உள்ளது. தமிழக அரசு அவர்களுக்கு உடனடியாக ஊதியத்தை வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் இயங்கிவரும் நீதிமன்றக் கட்டடங்களிலே கூடுதலாக தாசில்தார் அலுவலகம், கோட்ட ஆட்சியர் அலுவலகம், கருவூலம் மற்றும் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. கூடுதலாக இயங்கிவரும் மேற்கூறிய அலுவலகங்களைத் தனியாகப் பிரித்து, 99 ஏக்கர் இட வசதியுள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இட மாறுதல் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில், வழக்கறிஞர் ஒருவர் இறந்துவிட்டால் வழக்கறிஞர் நல நிதிமூலமாக 2 இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது. இதை 5 இலட்சம் ரூபாயாக உயர்த்துவதற்குத் தமிழ்நாடு வழக்கறிஞர் சங்கத்திற்கு அரசு நிதி அளிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகம் முழுவதும் ஏழையெளிய மக்கள் சட்ட விழிப்புணர்வு அடைகின்ற விதத்தில், இலவச சட்ட ஆலோசனை, குறிப்பாக, அதிக அளவில் கிராமங்களிலே நடத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தி.மு.க. ஆட்சியில், கடந்த இரண்டாண்டுக் கால ஆட்சியைத் திரும்பிப் பார்க்க வேண்டும். புதுக்கோட்டை மாவட்ட மக்கள் மீள முடியாத துன்பங்களை அடைந்து, உரிமைகளையும் உங்கள் ஆட்சியில் பறிகொடுத்துத் தவிக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

புதுக்கோட்டை, மாமன்னர் தொண்டைமான் ஆண்ட பூமியாகும். தனி சமஸ்தானமாக விளங்கிய வரலாற்றுச் சிறப்புமிக்க ஊராகும். மாவட்டத் தலைநகராக விளங்கி வருகிற புதுக்கோட்டை நாடாளுமன்றத் தொகுதி, கடந்த 1952 ஆம் ஆண்டு முதல் இருந்து வந்ததை முன்னறிவிப்பின்றி, தேர்தல் ஆணையத்தால் நீக்கம் செய்யப்பட்டது. மேலும், மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்றத் தொகுதிகள் இருந்தும், அவற்றைத் தனித் தனியாகப் பிரித்து நான்கு வெவ்வேறு மாவட்டத்தோடு இணைத்து சிதறடிக்கப்பட்டுள்ளது.

இது, புதுக்கோட்டை மாவட்ட மக்களுக்குச் செய்த துரோகம். இதை எதிர்த்து ஒட்டுமொத்த புதுக்கோட்டை மாவட்ட மக்களும், கடையடைப்பு, உண்ணாவிரதம் மற்றும் இரயில் மறியல் போன்ற போராட்டங்களைச் செய்து வருகிறார்கள். எனவே புதுக்கோட்டை நாடாளுமன்றத் தொகுதியை மீண்டும் கொண்டுவர நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று மத்திய தேர்தல் ஆணையத்தை மாநில அரசு வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-15

தி.மு.க. அரசு ஆட்சிக்கு வந்தவுடன், கடந்த 2006-2007 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்போது காவிரிக் கொள்ளிட உபரி நீரைப் புதுக்கோட்டை மாவட்டத்திற்குக் கொண்டு வரும் திட்டத்தை, ரூ. 290 கோடி திட்ட மதிப்பீட்டில் அறிவித்தீர்கள். ஆனால், இன்றுவரை எந்த முயற்சியும், எந்த வேலையும் தொடங்கப்படவில்லை. அது எந்த நிலையில் உள்ளது என்பதை மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



புதுக்கோட்டை மாவட்டத்தில் 35 ஆண்டுகளாக இயங்கி வந்த கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் எந்தவித முன்னறிவிப்புமின்றி லால்குடிக்கு மாற்றப்பட்டு உள்ளது. இதனால் பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளன. எனவே உடனடியாக மீண்டும் புதுக்கோட்டைக்கு உரிமையியல் நீதிமன்றத்தை மாற்றித் தரும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

கடந்த 4 மாதங்களுக்கு முன்பாகத் தமிழக முதலமைச்சர் அவர்கள் பட்டா வழங்கவும், பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டு விழாவிற்கும் புதுக்கோட்டைக்கு வந்தார்கள். ஆனால் அவர்கள் அமர்ந்திருந்த மேடையின் அருகிலேயே 30 ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்ற ஏழையெளிய மக்களின் வீடுகளுக்குப் பட்டா வழங்கப்படவில்லை. குறிப்பாக திருவப்பூர், அடப்பன்வயல், பிச்சத்தான்பட்டி, காமராஜபுரம், போஸ் நகர், பாலன் நகர், ராஜவிஜய நகர், மாலையிடு, ரிசர்வ் கிரவுண்டு பின்புறம் உள்ள பகுதிகளுக்குப் பட்டா வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், புதுக்கோட்டையில் நகரப் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்குப் பொது மக்களிடமிருந்து வசூலிக்கப்படும் கட்டணத்தைத் தவிர்த்து, அரசே முழுத் தொகையையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

புதுக்கோட்டையில் பழமைவாய்ந்த மாமன்னர் கல்லூரியின் அடையாளச் சின்னமாக 100 ஆண்டுகளாக இருந்துவந்த சந்தன மரம் ஒன்று வெட்டித் திருடப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடத்தக்கது என்னவென்றால் இக்கல்லூரியைச் சுற்றி மாவட்ட ஆட்சித் தலைவருடைய வீடு, மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளர் வீடு, மாவட்ட நீதிபதியினுடைய வீடு இருந்தும் திருடப்பட்டுள்ளது என்பது வேதனைக்குரிய விஷயமாகும். எனவே இதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

பெருங்களூர், ஆதனக்கோட்டை, புதுநகர், பழைய கந்தர்வக்கோட்டை சுற்று வட்டார கிராமங்களுக்கும், கோமாபுரம், வடுகப்பட்டி, துருசுப்பட்டி ஆகிய கிராமங்களுக்கும் 24 மணி நேர மின்சாரம் வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் 1,000 ஏக்கர் நிலம் மற்றும் தேவையான வசதிகள் இருக்கின்றன. மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்ற அடிப்படையிலே புதுக்கோட்டைக்கு ஒரு மருத்துவக் கல்லூரி அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழக அரசு, புதுக்கோட்டை மாவட்டத்திற்குப் புதியதாக அறிவித்துள்ள அரசுப் பொறியியல் கல்லூரியை, மாவட்டத் தலைமை இடத்தில் அமைக்க வேண்டும். அதற்கான இடம் புதுக்கோட்டை நகரத்தின் அருகில் உள்ள செம்பாட்டூரில் 100 ஏக்கர் அரசு நிலமும், காவேரி நகரில் 166 ஏக்கர் அரசு நிலமும், அரியூரில் 27 ஏக்கரும் மற்றும் வல்லத்திராகோட்டையில் 50 ஏக்கர் அரசு நிலமும் உள்ளன. இவற்றில் ஏதாவது ஒரு இடத்தில் கல்லூரி அமைத்தால் மாவட்டத்தில் உள்ள மாணவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

தலைமை அரசு மருத்துவமனை மற்றும் இராணியார் மகப்பேறு மருத்துவமனை, அண்டக்குளம், கந்தர்வக்கோட்டை, பெருங்களூர் மற்றும் வாராப்பூரில் உள்ள மருத்துவமனைகளில் மருத்துவர் மற்றும் செவிலியர் உதவியாளர்களைக் கூடுதலாக நியமிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

கந்தர்வக்கோட்டையிலிருந்து காட்டுநாவல், சுந்தம்பட்டி, வேலாடிப்பட்டி, வெள்ளாள விடுதி ஆகிய கிராமங்கள் வழியாகக் கரம்பக்குடி செல்லும் வழித் தடங்களில் மேலும் இரண்டு கூடுதல் பேருந்துகள் இயக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

கந்தர்வக்கோட்டையிலிருந்து மட்டங்கால், வேம்பன்குடி, கல்லாக்கோட்டை வழியாகச் செல்லக்கூடிய பேருந்துகளைக் கூடுதலாக இயக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

கிள்ளுக்கோட்டையிலிருந்து மாணவ, மாணவியர் பள்ளிக்குச் செல்ல, விளாரிப்பட்டி, நத்தமாடிப்பட்டி வழியாகக் கள்ளிப்பட்டி வரை பேருந்துகள் இயக்க வேண்டுமெனவும், மேலும் வைத்தூர் வழியாகச் சிரங்கப்பட்டி, மாந்தாங்குடி ஆகிய கிராமங்களுக்குக் கூடுதலாகப் பேருந்துகள் இயக்க வேண்டும் எனவும், வடவாளம், புத்தாம்பூர், செம்பாட்டூர், முள்ளூர் ஆகிய கிராமங்களுக்கும் மேலும் அண்டக்குளம் சுற்றியுள்ள கிராமங்களுக்கும் 24 மணி நேர மின்சாரம் வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றேன்.

புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட அடப்பன்வயல், காந்தி நகர் மற்றும் உசிலங்குளம் ஆகிய பகுதியில் O.H.T., 30 இலட்சம் லிட்டர் கொள்ளளவில் நீர்த் தேக்கத் தொட்டி அமைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.



புதுக்கோட்டை தலைமை மருத்துவமனைக்கு நரம்பியல் துறையும், துறையைச் சார்ந்த மருத்துவரும் மற்றும் M.R.I. ஸ்கேன் கருவி இயந்திரமும் அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நெடுஞ்செழியன், ஏதாவது கோரிக்கை இருந்தால் எழுத்துமூலமாகக் கொடுத்துவிடுங்கள். (குறுக்கீடு) இன்னும் அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. ரெ. நெடுஞ்செழியன்:** கிராமப்புறங்களில் மாணவர்களின் முன்னேற்றத்திற்காக வடவாளம், புத்தாம்பூர், கோமாபுரம், புதுநகர், வாராப்பூர், கல்லாக்கோட்டை ஆகிய கிராமங்களில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தித் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

புதுக்கோட்டையிலிருந்து அண்டக்குளம் வழியாக செங்கிப்பட்டி வரை செல்லும் சாலையைப் புதுப்பித்துத் தருமாறு அன்போடு கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

பிற்பகல் 1-20

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் நான் வைத்த மானியக் கோரிக்கைகளின்மீது, இந்த மாமன்றத்தில் உள்ள பல்வேறு இயக்கங்களைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள், தங்களுடைய கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு திரு. வீரகபிலன், மாண்புமிகு திரு. மகேஷ் கிருஷ்ணசாமி, மாண்புமிகு திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு திரு. மேகநாதன், மாண்புமிகு திரு. டில்லி பாபு, மாண்புமிகு திரு. இராசசேகரன், மாண்புமிகு திரு. வீர. இளவரசன், மாண்புமிகு டாக்டர் விஷ்ணுபிரசாத், மாண்புமிகு திரு. நெடுஞ்செழியன் ஆகியோர் தங்களுடைய கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். நல்ல கருத்துகளை, தாங்கள் அறிந்த கருத்துகளை, தெரிந்த கருத்துகளை, புரிந்த கருத்துகளை வகுத்தும், தொகுத்தும் எல்லோருக்கும் புரிகிறவண்ணம் பேசி

இருக்கிறார்கள். நல்ல கருத்துகள்; அதாவது, நீதி நிருவாகம், சட்டத் துறை என்ற மானியக் கோரிக்கைகளாக இருந்தாலும், பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, மக்கள் நல்வாழ்வுத் துறை, மின்சாரத் துறை, போலீஸ் துறை, சுற்றுலாத் துறை ஆகிய எல்லாத் துறைகளிலும் தாங்கள் அறிந்தவைகளைத் தொகுத்துச் சொல்லி இருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு வரவேற்புதான் தேவை. ஊடாக சட்டத்தைப் பற்றியும் நீதியைப் பற்றியும் கொஞ்சம் பேசி இருக்கிறார்கள். அதற்காக நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். காரணம் நம்முடைய உறுப்பினர்களுக்கு ஒன்றைத்தான் பேச வேண்டும் என்பதல்ல. ஒரே நேரத்தில் பலவற்றையும் Two-in-one என்பதைப் போல, Two-in-five and six, என்று பேசக்கூடிய ஆற்றல் நம்முடைய உறுப்பினர்களுக்கு இருப்பதைப் பார்த்து, நான் உள்ளபடியே பெருமகிழ்ச்சியடைகிறேன். எல்லாவற்றிற்கும் நான் பதில் சொல்ல முடியாது. அவரவர்களுடைய கருத்துகளை அமைச்சர்கள் கிரகித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கான விளக்கங்களை உங்களுக்குத் தருவார்கள்.

பொதுவாக, நீதித் துறைமீது இவ்வளவு விளக்கமாகப் பேசுவார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. காரணம், இந்தத் துறையின்மீது, நீதியின்மீது, பற்று, பாசம், நிலைக்க வேண்டும் என்பதில் கட்சி மனமாச்சரியம் இல்லாமல் பேசி இருக்கிறீர்கள். அதை நான் எப்படிப் பாராட்டுவது என்றே தெரியவில்லை! இங்கே பேசிய நண்பர்கள் ஒவ்வொருவரும் தமிழிலேதான் நீதிமன்றம் இயங்க வேண்டுமென்று தங்களுடைய கருத்துகளைப் பேசி இருக்கிறார்கள். நீதிபதிகளை அதிகமாக்க வேண்டும்; காரணம், வழக்குகள் தேங்கி இருக்கின்றன எனவும், அதிகமான நீதிமன்றங்களை உருவாக்க வேண்டும் என்பதைப் பற்றியும், கட்டடங்கள் கட்டித் தரப்பட வேண்டும் என்றும் பல்வேறு கோரிக்கைகளை அடுக்கடுக்காக வைத்திருக்கிறார்கள். அவற்றிற்கெல்லாம் நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் அவற்றைச் செய்வதற்கு இவையெல்லாம் ஊக்கப்படுத்துகிற வகையிலே அமைந்திருக்கின்றன என்பதில் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக, சிறப்பாக, நம்முடைய ஞானசேகரன் அவர்கள் நல்ல பல கருத்துகளை இங்கே சொல்லியிருக்கிறார்கள். அவர் சொன்னார், sandal wood case—ஐப் பற்றி. திருப்பத்தூரிலிருந்து வாரிக் கொண்டு போகிறபோதே, பாதி பல பேருக்குப் போய்விடுகிறது; இங்கே பிடிப்பார்கள்; ஐமுனாமரத்தூரில் பிடிப்பார்கள்; அது



திருப்பத்தூருக்குள் ஒவ்வொரு முறையும் கொண்டுபோய் கொண்டு வருவதற்குள் சில தேய்ந்து போய்விடுகின்றன; சில மாய்ந்தே போய்விடுகின்றன; ஆகையினால், ஆங்காங்கு இருக்கின்ற கோர்ட்டுக்கே மாற்ற வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். நல்ல கருத்து; வரவேற்கத்தக்க கருத்து என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உச்ச நீதிமன்றத்தினுடைய கிளையை நம்முடைய மாநிலத்திலேயும் வைக்க வேண்டும் என்று கேட்கிறார். அதிலே யாருக்கும் மாறுபாடு இருக்க முடியாது. இன்று இல்லாவிட்டாலும், நாளை, நாளை இல்லாவிட்டாலும் நாளைக்கு மறு நாள், நிச்சயம் ஒரு நாள் உச்ச நீதிமன்றத்தின் கிளை, தமிழ்நாட்டில் அமைய வேண்டும்; அமைவதற்கு இந்த அரசு பாடுபடும் என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-25

அடுத்து, வழக்குமன்றங்களிலே, நீதிமன்றங்களிலே, தமிழ் இருக்க வேண்டும் என்பது. உங்களுக்குத் தெரியும். சென்னை உயர் நீதிமன்றத்தின் அனைத்து நடவடிக்கைகளும் தமிழ் மொழியில் இருக்க வேண்டும் என்றும், இதுசம்பந்தமாக, மேதகு குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலைப் பெறலாம் என்றும், ஒரு தீர்மானம் மாண்புமிகு முதல்வரால் கொண்டுவரப்பட்டு, இந்த மாமன்றத்தில் 6-12-2006 அன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. 7-12-2006 அன்று அந்தத் தீர்மானம் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. 1965 ஆம் ஆண்டு உயர் நீதிமன்ற நீதிபதிகள் மாநாட்டில், ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி இருந்தார்கள். அதாவது (1) உச்ச நீதிமன்றம் மற்றும் அனைத்து நீதிமன்றங்களும் பொதுவான ஒரு மொழியையே பயன்படுத்த வேண்டும். (2) உச்ச நீதிமன்றம், மற்றும் அனைத்து நீதிமன்றங்களிலும் இந்தி மொழியைப் பயன்படுத்த, காலம் கனியும்வரை ஆங்கில மொழியையே தொடரலாம். (3) வட்டார மொழிகளை உயர் நீதிமன்ற மொழிகளாக ஏற்கக் கூடாது என்று 1965-லே அந்த நீதிபதிகள் மாநாட்டிலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி இருந்தார்கள். இந்தக் கருத்தை வலியுறுத்தி 1967-1968 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற மாநாடுகளிலும் இதையே வலியுறுத்தினார்கள். எனவே, 27-2-2007 அன்று மேற்கண்ட தீர்மானத்தைச் சுட்டிக்காட்டி வட்டார மொழிகளைப் பயன்படுத்துவது தற்சமயம் உகந்ததல்ல என்று மத்திய அரசு, தமிழக அரசுக்கு ஒரு கடிதம் எழுதியது. உடனடியாக 11-3-2007 அன்று நம்முடைய முதல்வர் அவர்கள், பிகார்,

உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய 4 மாநிலங்களில் உள்ள உயர் நீதிமன்றங்களில் அந்தந்த மாநில மொழிகளே ஆட்சி மொழியாக இருக்கலாம் என்று அனுமதிக்கப்பட்டிருக்கிறபோது, அதைச் சுட்டிக்காட்டி தமிழ்நாட்டுக்கும் அதன் அடிப்படையில் தமிழைச் சென்னை உயர் நீதிமன்றத்தில் பயன்படுத்த வேண்டுமென்று மத்திய அரசின் உள் துறை அமைச்சர், மத்திய சட்ட அமைச்சர் மற்றும் திருமதி சோனியா காந்தி ஆகியோருக்குக் கடிதம் எழுதினார்கள். அந்தக் கடிதம் எழுதியதற்குப் பிறகுதான் இதைப்பற்றி மத்திய அரசு கவனிக்கிறது என்று அவர்கள் மறுபடியும் எழுதினார்கள். 25-2-2008 அன்று முதல்வர் அவர்கள் மத்திய அரசுக்கு ஒரு நினைவூட்டுக் கடிதம் எழுதினார்கள். 29-4-2008 அன்றும் இதை நானும் நேரிலே வலியுறுத்தினேன். கடந்த 19 ஆம் தேதி அன்று டெல்லியில் நடந்த முதலமைச்சர்கள் மற்றும் உயர் நீதிமன்றத்தினுடைய நீதிபதிகள் மாநாட்டில் முதலமைச்சர் சார்பில் நான் கலந்துகொண்டு அதுபற்றிப் பேசினேன். ஆனால் அதற்குப் பதிலளித்த மத்திய சட்டத் துறை அமைச்சர் திரு. பரத்வாஜ் அவர்கள், இந்தக் கருத்துக்கு நாங்கள் எதிராளிகள் அல்ல; தமிழ் உயர் நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாக இருப்பதற்கு நாங்கள் எதிரிகள் அல்ல என்று ஒரு பேட்டியிலே தெரிவித்தார்கள். 'இப்படிக் கேட்டிருக்கிறாரே, தமிழ்நாட்டினுடைய Law Minister' என்று கேட்டதற்கு, அவர் இவ்வாறு பதில் சொன்னார். உடனே அது குறித்து நேற்று ஒரு கடிதம் எழுதப்பட்டது. அவர்களுக்கு கலைஞர் அவர்கள், உங்களுடைய கருத்தை நான் வரவேற்கிறேன், அதற்கு ஆவன செய்யுங்கள் என்று நேற்றே கடிதம் எழுதியிருக்கிறார்கள். ஆகவே, இது தொடர்ந்து வலியுறுத்தப்படும். இது நம்மிடையே உள்ள உள்ளுணர்வு. கட்சிக்கு அப்பாற்பட்டு நிற்கின்ற உணர்வு. எனவே, இந்த உணர்வோடு நாம் அனைவரும் சேர்ந்து வெற்றி பெறுவதற்கு வழிவகை செய்ய வேண்டும். நிச்சயமாக, விரைவில் சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழ் வழக்காடு மொழியாக வரும் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் சொன்னார்கள்: "Advocate Fund—இப்போதெல்லாம் ஒரு வழக்கறிஞர் இறந்துபோனால் அவர்களுக்கு 2 இலட்சம் ரூபாய் கொடுக்கிறார்கள், அதை 5 இலட்சம் ரூபாயாகக் கொடுக்க வேண்டும்" என்று சொன்னார்கள். அதிலே எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. நான் ஒரு வக்கீல். ஒரு காலத்தில் பெரிய வக்கீல்; வேண்டுமானால்,



அவ்வாறு இல்லையென்று முன்னாள் முதலமைச்சர் சொல்லலாம். வக்கீல் என்றால் வக்கீல்தான்; அதில் பெரிய வக்கீல், சிறிய வக்கீல் என்று கிடையாது. ஆமாம், வக்காலத்து போட்டவன் எல்லாம் வக்கீல்தான். ஆகையால் அதெல்லாம் ஒன்றுதான். வேண்டுமானால் fees அதிகமாக வாங்குவார்கள். சமீபத்தில், 19 ஆம் தேதி அன்று நடந்த முதலமைச்சர்கள், High Court Judges, Chief Justice ஆகியோர் மாநாட்டில் திரு. பாதல் அவர்கள் பேசினார்கள். எல்லாம் பேசுகிறீர்கள், சரி; சட்டம் போடுகிறீர்கள், சரி; High Court-லிருந்து Supreme Court-க்கு வழக்கு வந்தால் ஒரு மணி நேரத்திற்கு 5 இலட்சம், 10 இலட்சம் என்று கேட்கிறார்களே வக்கீல்கள், எங்கிருந்து ஐயா, ஏழை நீதியை எதிர்பார்ப்பான்? Supreme Court-லே 5 இலட்சம், 10 இலட்சம் என்று கேட்கிறார்கள் என்று அவர் பேசினார். அதிலே பேசாமல் ஆகிவிடுவார்களே எல்லோரும்; அதனால் நீதிபதிகளை இதில் ஒன்றும் சொல்ல முடியாது; வக்கீல்கள்தான் சொல்ல வேண்டுமென்று சொன்னார்கள். ஆகையால் வக்கீல்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பதில் எனக்கு மாறுபட்ட கருத்து அல்ல. ஆனால் ஏற்கெனவே ஒரு முறை சென்ற ஆட்சியில் ஒரு கோடி ரூபாய் கொடுத்தார்கள். அதற்கு என்ன சொல்லிவிட்டார்கள் என்றால், "Audit-ல் பிடித்துவிட்டார்கள்; இதை எப்படிக் கொடுத்தீர்கள்? கொடுக்கக்கூடாது" என்று சொல்லியிருக்கிறார்கள். Auditor சொல்லிவிட்டதனாலே அது தீர்ப்பாகிவிடாது; அது வேறு. அதற்கு மாற்று வழி கண்டுபிடிக்க வேண்டும். இப்போது audit objection raise செய்து விட்டார்கள். ஆகையால், வேறு வழிகளைக் கண்டுபிடித்து, அதற்கு உதவ வேண்டும் என்பதில் நான் கவனமாக இருக்கிறேன்; முதல்வரிடத்திலே இதுகுறித்து மறுபடியும் நான் பேசுவதற்குத் தயாராக இருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலேகூட கேட்கலாம், Court Fee Stamp Act-லே கொஞ்சம் amendment கொடுத்தால் என்ன என்று. அதற்கு ஒரு amendment தேவை. அதைக்கூட நான் சட்டத் துறை அமைச்சரிடம் கேட்டிருக்கிறேன். அது இருந்தால், இந்த முறையேகூட நாம் move செய்துவிட்டுப் போய்விடலாம்.

அடுத்து, நீதிபதிகளை அதிகமாக்க வேண்டும் என்று அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். இது ஒரு நியாயமான கோரிக்கைதான். காரணம், உங்களுக்கெல்லாம் தெரியும். இதில் 2 வகை; ஒன்று, உயர் நீதிமன்றத்தில் 49 நீதிபதிகள் இருக்க வேண்டும். ஆனால் இப்போது இல்லை. 45 அல்லது 46 என்றுதான் இருக்கிறார்கள். மேற்கொண்டு,

வழக்குகள்பற்றியும் சொல்லிருக்கிறேன், எவ்வளவு pending cases இருக்கின்றன என்று. இதுபற்றித் திரும்பவும் சொல்ல விரும்பவில்லை. ஆனால் உச்ச நீதிமன்றத்திலேயே நீதிபதிகளினுடைய எண்ணிக்கையை அதிகமாக்கியிருக்கிறார்கள். அதன் அடிப்படையில், உயர் நீதிமன்றத்திலும் நீதிபதிகளினுடைய எண்ணிக்கையை அதிகமாக்க வேண்டுமென்பதில் இந்த அரசுக்கு மாறுபட்ட கருத்து இல்லை. நேற்றுகூட நம்முடைய உயர் நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி திரு. ஷா அவர்கள், ஒரு விழாவிலே கலந்து கொண்டபோது, என்னிடத்திலே இதுபற்றிப் பேசினார்கள். நான் இன்றைக்கு இந்தத் துறையினுடைய அமைச்சராக இருக்கிற காரணத்தால், முதலமைச்சரோடுகூட இதுபற்றிப் பேசினேன். அவர்களும் இந்தக் கருத்தைப்பற்றிக் கேட்டிருக்கிறார்கள். எனவே, விரைவில் நம்முடைய உயர் நீதிமன்றத்தில் நீதிபதிகளின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு...

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** அது தேவையே இல்லை. இப்போதேகூட விவாதத்தை முடித்துவிடலாம்! (சிரிப்பு) முதலமைச்சர் அவர்களும் இதை உயர்த்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். எனவே, விரைவில் நம்முடைய உயர் நீதிமன்றத்தில் இருக்கிற நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யும் என்ற உறுதியை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று, மற்ற இடங்களில் எல்லாம் நிறைய Judge பதவிகள் காலியாக இருக்கின்றன; கோர்ட்டுகளிலேயெல்லாம் காலியாக இருக்கின்றன என்பது. இப்போதுகூட நீங்கள் பார்த்திருப்பீர்கள், ஓர் அறிவிப்பு. Service Commission-லே apply பண்ணச் சொன்னதை நாங்கள் நிறுத்திவிட்டோம். 2004-2005, 2005-2006 ஆம் ஆண்டுகளின் கணக்குப்படி உரிமையியல் நீதிபதிகள்-District Munsifs, Civil Judges (Junior Division) இவர்களுக்கான காலியிடங்கள் 81 என்று கணக்கிட்டார்கள். Estimate of vacancies எவ்வளவு என்று பார்த்தார்கள். அதாவது 2004-2005, 2005-2006 ஆம் ஆண்டுகளில், அந்த இரண்டு வருடங்களிலே 81 Estimate of vacancies என்று கணக்கிட்டார்கள். அதை நிரப்புவதற்கு 19-1-2007-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. 81 பேரை நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள் என்று



நாங்கள் ஆணை போட்டோம். Tamil Nadu Public Service Commission-க்கு அனுப்பிவிட்டோம். ஆனால், 2007-2008 ஆம் ஆண்டுவரைக்கும் காலியாகும் இடங்கள் எவ்வளவு என்று இன்னொரு கணக்குப் போட்டார்கள். ஏற்கெனவே காலியாக இருக்கிற இடங்கள் 81 என்று சொன்னார்கள்; நாங்கள் எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னோம். உடனே, 'ஓஹோ' பரவாயில்லையே! கொடுக்கிறார்களே என்று சொல்லி, 2007-2008 வரையிலேயும் எவ்வளவு காலியிருக்கிறது என்பதற்கான இன்னொரு கணக்கையும் வைத்துக்கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். அந்தக் கணக்கு என்ன என்று கேட்டோம். அந்தக் கணக்கு, 181. 81, 181 ஆகிவிட்டது என்று கணக்கிட்டார்கள். உடனே அரசு அதையும் மறுக்கவில்லை. 8-5-2007 அன்று, Tamil Nadu Public Service Commission-க்கு ஓர் ஆணை பிறப்பித்து, இதையும் நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள்; 181-ஐயும் நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள் என்று ஆணையிட்டது. 7-2-2008 அன்று, Tamil Nadu Public Service Commission பத்திரிகையிலே ஒரு அறிக்கை வெளியிட்டது. என்ன அறிக்கை என்றால், நாங்கள் ஆணை போட்டது 181 பேர்களுக்கு. ஆனால், அவர்கள் எடுக்கப் போகிறோம் என்று தெரிவித்தது, 201 பேர்களுக்கு. இது எங்கள் ஆணைக்குப் புறம்பானது. அரசாங்கம் 181 பேர்களைத்தான் எடுப்பதற்கு ஆணை கொடுக்கிறது. ஆனால், பத்திரிகையில் வந்த advertisement-ஐப் பார்த்தீர்கள் என்றால், 201 என்று வந்துவிட்டது. ஆகையினால், நாங்கள் "இது தவறு; எங்களுடைய ஆணைக்குப் புறம்பானது; இதை உடனே வாபஸ் வாங்குங்கள்" என்று கேட்டோம். உடனே, Tamil Nadu Public Service Commission-க்கு letter-ம் எழுதிவிட்டோம். அவர்கள் அதை withdraw பண்ணிவிட்டார்கள்.

அதுமட்டுமல்லாமல், இதற்கிடையிலே என்ன ஆயிற்று என்று கேட்டீர்கள் என்றால், இந்தப் பதவிக்கான தேர்வு விதிகளிலே சில மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்று உயர் நீதிமன்றம் இந்த பிப்ரவரி மாதம் ஒரு கோரிக்கை வைத்தது. அது பரிசீலனையில் இருக்கிறது. எப்படி என்று கேட்டீர்கள் என்றால், ஒருவரை Judge-ஆக எடுக்கப் போகிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள்; அவருக்குக் கடைசியாக, மார்க்கிலே 50 per cent, 40 per cent என்று அது ஒரு கணக்கு. அது வேறு பெரிய பிரச்சினை. அதை வைத்துவிட்டார்கள். மேலும், சில வழக்கறிஞர் சங்கங்கள், அதற்கான வயது வரம்பைத் தளர்த்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதையும் கேட்டிருக்கிறார்கள். மூன்றாவதாக—இதுவரையிலே அப்படி

எடுக்கப்படுகிற நீதிபதிகளுக்காக Tamil Nadu Public Service Commission-தான் question paper தயார் பண்ணும்; correct பண்ணும்; interview பண்ணும்; select பண்ணி அனுப்பும். ஆனால், இப்போது அப்படியில்லை. Question paper தயார் பண்ணுவது ஒருவர்; திருத்துவது நாங்கள்; உட்கார்ந்து interview பண்ணுவது நாம் இரண்டு பேரும். அதிலே நாங்கள் அதிகம் பேர் இருப்போம்; நீங்கள் அதிகம் பேர் இருப்பீர்கள்; ஒரு Judge இருப்பார், 3 Judges இருப்பார்கள் என்று இவர்களுக்கும் அவர்களுக்கும் தகராறு வந்து, அது case ஆகி, Supreme Court வரையிலும் போய்விட்டது. இன்னும் Supreme Court-லே அது நிலுவையிலே இருக்கிறது. ஆகையினால், இந்த ஆட்சியைப் பொறுத்தவரையிலே நீதிபதிகள் நியமனத்திற்கு எந்தத் தடையும் இல்லை. அது ஒரு Constitutional Body, Tamil Nadu Public Service Commission is a Constitutional Body. High Court is also a Constitutional Body. இரண்டு Constitutional Body-களுக்கும் தகராறு, இப்போது யார் தேர்வு செய்வது என்று. Tamil Nadu Public Service Commission என்ன கேட்கிறதென்றால், இதுவரையிலேயும் நாங்கள்தானே பண்ணினோம்; இப்போதிருக்கிற Judge-களை நாங்கள்தானே ஐயா—Tamil Nadu Public Service Commissionதானே தேர்வு பண்ணியது? நாங்கள்தானே question paper தயார் பண்ணினோம்? நாங்கள்தானே திருத்தினோம்? இப்போது நீங்கள் question paper தயார் பண்ணுகிறோம் என்கிறீர்களே, நீங்கள் திருத்துகிறோம் என்கிறீர்களே, இது என்ன நியாயம்? அப்படி என்றால், நாங்கள் என்ன de-grade-ஆ? எங்களுக்கு question paper தயார் பண்ண முடியாதா? என்று அவர்கள் கேட்கிறார்கள். இதற்கு நாங்கள் பதில் சொல்ல முடியாது. Supreme Court சொல்ல வேண்டும், ஏனென்றால், case அங்கேதான் இருக்கிறது. ஆகையினாலேதான், அந்த அடிப்படையிலே அது இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் *1-35*

அடுத்து, இங்கே எம்.எல்.ஏ.-க்கள் Court தேவையைப்பற்றிச் சொன்னார்கள். நியாயம்தான். இன்றைக்கு என்னுடைய கையிலிருக்கிற பேப்பர்களைப் பார்த்தீர்கள் என்றால் எல்லா எம்.எல்.ஏ.-க்களும் எங்கள் ஊருக்கு ஒரு Court கொடுங்கள்; அந்த Court கொடுங்கள்; இந்த Court கொடுங்கள் என்று சண்டை போட்டு Court வாங்குகிறவர்கள் சட்டப் பேரவை உறுப்பினர்கள். அதற்குப் பிறகு, அந்த Court-க்கு இடம் தேடிக் கொடுப்பவர்கள் சட்டப் பேரவை உறுப்பினர்கள்; அதைக் கட்டுவதற்காக உதவி செய்பவர்கள் சட்டப்



பேரவை உறுப்பினர்கள்; அங்கு விழா நடந்தால் செலவுக்கு help பண்ணுபவர்களும் சட்டப் பேரவை உறுப்பினர்கள்; இவ்வளவு விளம்பரம் செய்பவர்கள் சட்டப் பேரவை உறுப்பினர்கள். இவ்வளவையும் பண்ணிவிட்டு, 'நீங்கள் உள்ளே வராதீர்கள்' என்று சொன்னால், நானும் ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் என் உள்ளம் அதிலே பாதிக்கப்பட்டது. ஆனாலும், அது என்னுடைய கடமை—ஒரு அமைச்சர் என்ற முறையிலே இருக்கிறேன். இதை நான் பலமுறை, இந்த மன்றத்திலே தெரிவித்து இருக்கிறேன். உயர் நீதிமன்றத்திலிருந்து வந்த அதனுடைய பிரதிநிதிகள் இந்த மன்றத்திலே உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள். இது சட்டம் அல்ல; ஒரு G.O. இந்த ஊரில் போடப்பட்டிருக்கிற ஒரு G.O., அவ்வளவுதான். அதை நாம் முடியாது என்று சொல்லமுடியும். ஆனால் ஒரு writ வரக்கூடாது. அதேமாதிரி Service Commission எடுக்கக்கூடாது—இப்படி Judge-களை—நாங்கள்தான் Courtதான் எடுக்கவேண்டும் என்று போட்டார்கள் பாருங்கள். மேற்கு வங்கத்தில் சொல்லிவிட்டார்கள், "இந்த வேலையை எங்களிடம் வைத்துக்கொள்ளாதீர்கள்" என்று. 'முடியாது' என்று சொல்லிவிட்டார்கள். என்ன போட்டாலும் சரி, மேற்கு வங்கத்தில் மட்டும் அதெல்லாம் நடக்காது. 'எங்களிடம் முடியாது' என்றார்கள். கேரளாவிலும் நடக்காது என்கிறார்கள். அங்கும் பேசாமல் ஆகிவிடுகிறார்கள். நாம்தான் இப்போது... நாம் மதிப்பதனாலேயே நம்மை மிதிப்பது என்று வந்துவிடக் கூடாது. ஆகையினால், இந்த வேண்டுகோளை, சட்டமன்ற சக சட்டமன்ற உறுப்பினர்கள் உரிமையை இழக்கக்கூடாது; அவர்களுக்கு அந்த உரிமை வேண்டும் என்பதில் நானும் உங்களோடு சேர்ந்து என்னுடைய உணர்வைப் பகிர்ந்துகொள்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே கேட்டார், நம்முடைய டில்லி பாபு அவர்கள், State Law Commission என்ன ஆனது என்று. முக்கியமானது பாருங்கள். State Law Commission ஏன் போடவில்லை என்று கேட்டார். நான் அதற்குப் பதில் சொல்வதைவிட, அதேமாதிரி கேட்டிருக்கிறார்கள் முன்பு; 'ஏன் State Law Commission போடவில்லை' என்று. அப்போது நம் ஜெயக்குமார் அவர்கள்தான் Law Minister. அவர் சொல்கிறார், ஏனென்றால், அவர் சொன்னதையே சொல்லிவிட்டால் புரிந்துவிட்டது; கேள்வி வராது பாருங்கள். "சட்ட ஆணையத்துடைய நோக்கம், ஆங்கிலேயர் காலத்திலேயே இயற்றப்பட்ட சட்டங்கள், இந்தக் காலத்திற்குப் பொருந்துகின்றனவா என்பதைப் பார்ப்பதும், காலத்திற்கு ஒவ்வாத சட்டங்களை எல்லாம்

திருத்தி அமைப்பதுமான வேலை; எனவே, அதற்கு அவ்வளவு வேலையில்லாத காரணத்தினாலேதான் அது திருத்தி அமைக்கப்படவில்லை; அவசியம் இருந்தால், அது நிச்சயம் திருத்தியமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்."—அவர் சொன்னதை நானும் வழிமொழிகிறேன்! (சிரிப்பு). எதிர்க்கட்சி என்பதால் எல்லாவற்றையும் எதிர்க்கக்கூடாது சார். நியாயம் இருந்தால் ஏற்றுக் கொள்ளவேண்டும். அதுதான் ஜனநாயகவாதி. ஒரு பிரதான எதிர்கட்சியாக இருந்தாலும், அதனுடைய கருத்து சரியில்லை என்றாலும் நியாயமான கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள் என்றால், அதற்காக நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அதையும் நாங்கள் தெரிவித்துக்கொள்கிறோம். (குறுக்கீடுகள்)

அடுத்து, நம்முடைய Staff-ஐப் பற்றி. High Court-ல் நிறைய staff-ஐ ban பண்ணிவிட்டார்கள்; வேலையாட்கள் இல்லாது நிறைய வேலைகள்; அந்த வேலையாட்களை எல்லாம் எடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். முன்பெல்லாம் நாம்தான் எடுப்போம், High Court-க்கும் சேர்த்து. வேண்டுமென்றால், நீங்களே எவ்வளவு வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டோம். இப்போது பார்த்தோம் என்று சொன்னால், சென்னை உயர் நீதிமன்றத்தில் 96 புதுப் பணி நியமனங்களை மேற்கொள்வதற்கு, இந்த அரசு அவர்களுக்கு ஆணையைத் தந்திருக்கிறது. அதுமட்டுமின்றி, மதுரையில் இருக்கின்ற உயர் நீதிமன்றத்திற்கு 200 புதிய பதவிகள் நியமித்துக்கொள்ளவும் இந்த அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது என்பதை நான் உங்களுக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-40

மூன்றாவதாக, சட்டக் கல்லூரியில் students சேர்க்கையைப் பற்றிச் சொன்னார்கள். ஏற்கெனவே, சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு கிட்டத்தட்ட ஒரு 2,500 பேர்களுக்கு மேலே அதிகமாகச் சேர்த்து இருக்கிறோம். எனவே, அந்த வகையிலே அதிகமாகத்தான் செய்து இருக்கிறோம். இந்த ஒதுக்கீடுகளைப் பொறுத்தவரையில் போன முறை நாங்கள் என்ன செய்தோம் என்று கேட்கலாம். போன முறை நீங்கள் எல்லாம் அறிவித்தீர்களே, அது என்ன ஆனது என்று கேட்டார்கள். 2007 ஆம் ஆண்டு அறிவித்த அறிவிப்புகள்—2007-2008 ஆம் ஆண்டு நீதி நிருவாகம் பற்றிய மானியக் கோரிக்கை இந்த அவையில் 13-4-2007 அன்று விவாதத்திற்கு வந்தபோது, என்னுடைய பதிலுரையில்



சில அறிவிப்புகள் செய்தேன். புதிய நீதிமன்றக் கட்டடங்கள் 19 இடங்களில் கட்டப்படும் என்று அறிவித்தேன். அவற்றில், எழும்பூர், கடலூர், கரூர், நாமக்கல், அறந்தாங்கி, பரமக்குடி, சிவகங்கை, தூத்துக்குடி, பூந்தமல்லி, ஆரணி, குடியாத்தம், அருப்புக்கோட்டை, ஈரோடு, கும்பகோணம் மற்றும் அரூர் ஆகிய 15 இடங்களில் நீதிமன்றக் கட்டடங்களும், சில இடங்களில் நீதிபதிகள் குடியிருப்பும் கட்டித் தருவதற்கு ரூபாய் 102 கோடி ஒதுக்கி ஆணைகள் வெளியிடப்பட்டுவிட்டன. மீதமுள்ள திருவண்ணாமலை, வேதாரண்யம், திருப்பூர், மேட்டூர் ஆகிய 4 இடங்களில் நீதிமன்றக் கட்டடங்கள் கட்ட இடம் தேர்வு செய்யப்படாத காரணத்தால் ஆணைகள் வெளியிடப்படவில்லை. நீங்கள் கேட்கலாம், நீங்கள் என்ன பண்ணினீர்கள் என்று. திரு. பீட்டருக்கும், நம்முடைய திரு. ஞானசேகரனுக்கும் அது clean-ஆகத் தெரியும். High Court தான் நமக்கு இடத்தை identify பண்ண வேண்டும், இந்த இடத்தில் கட்டு என்று. நாங்கள் ஒரு இடத்தில் காட்டினால், அவர்கள் ஒத்துக்கொள்ளமாட்டார்கள். அவர்கள் சொல்லவேண்டும், இது correct என்று. அப்போது நாம் ஒத்துக்கொள்ள வேண்டும். அதுதான் முறை. அந்த இடங்களை இன்னும் நமக்கு identify பண்ணவில்லை. ஆகையினாலே, அதை நாங்கள் கேட்கிறோம்.

புதிய நீதிமன்றங்கள், கட்டடங்கள் பற்றிச் சொன்னேன். முன்பு எப்போதும் இல்லாத அளவிற்குக் கடந்த ஆண்டு மானியக் கோரிக்கையின்போது 77 புதிய நீதிமன்றங்கள் தொடங்க மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அனுமதியளித்தார்கள். அவற்றில் 27 நீதிமன்றங்கள் ஆரம்பிப்பதற்கான அறிவிக்கைகள், செயற்குறிப்புகள்—proposals—மட்டுமே உயர் நீதிமன்றத்திடமிருந்து அரசுக்கு வந்திருக்கின்றன. ஆக 77; அவற்றில் 27-க்குத்தான் proposals வந்திருக்கின்றன. இந்த 27 நீதிமன்றங்களில் 26 நீதிமன்றங்கள் தொடங்க, notifications வெளியிடப்பட்டுவிட்டன. மீதமுள்ள நீதிமன்றங்களுக்கு proposals-ஐ உயர் நீதிமன்றத்திலிருந்து எதிர்பார்க்கிறோம், வந்த பிறகு அவை தொடங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டத் துறையைப் பொறுத்தவரையில் 13-4-2007 அன்று சட்டப் பேரவையில் சட்டத் துறை சம்பந்தமான மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்தின்போது பதிலளிக்கையில், அரசு சட்டக் கல்லூரிகளில், 1997 மற்றும் 1998 ஆம் ஆண்டுகளில் ஒப்பந்த அடிப்படையில் விரிவுரையாளர்களாக நியமனம் செய்யப்பட்டுப்

பணிபுரியும் 15 விரிவுரையாளர்களின் கோரிக்கையை ஏற்று, அவர்களது பணி வரன்முறை செய்யப்படும் என்று அறிவித்திருந்தேன். அதற்கிணங்க, அவ்விரிவுரையாளர்களின் பணியினை வரன்முறை செய்யத்தக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, மேலும், 38 விரிவுரையாளர் பணியிடங்களை நிரப்புவதற்கு ஆசிரியர் தேர்வு ஆணையம் கோரப்பட்டிருக்கிறது என்பதையும் மகிழ்ச்சியோடு நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, ஒரு முக்கியமானது; Court-கள் எல்லாம் நிறைய ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டார்கள். சரி என்று சொல்லிவிட்டு, போன ஆட்சியில் பார்த்தேன்—தமாஷாக, கெட்டிக்காரத்தனமாக, ஜெயக்குமாரிடம் நான் கற்றுக்கொள்ள வேண்டும்—என்ன பண்ணினார் Mr. Jeyakumar? அவர் படித்தார், "அறந்தாங்கியில் ஒருங்கிணைந்த நீதிமன்றம் 3 கோடியே 45 இலட்சத்து 18 ஆயிரம் ரூபாய்" நீங்கள் correct-ஆகக் குறித்து வைத்துக்கொள்ள வேண்டும். அப்புறம், "பண்ருட்டியில் சார்பு நீதிமன்றம் கட்ட 184 இலட்சத்து 34 ஆயிரம் ரூபாய்; திருவையாறில் ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்ட 172 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய்; விழுப்புரம், திண்டிவனத்திலே ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்ட 3 கோடியே 84 இலட்சத்து 48 ஆயிரம் ரூபாய்; திருவண்ணாமலை, ஆரணியில் ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்ட" என்று, இப்படி எல்லா ஊர்களிலும்-- திருவண்ணாமலை, பத்மநாபபுரம், விளாத்திகுளம், பரமக்குடி, கள்ளக்குறிச்சி, ஆம்பூர், பூந்தமல்லி, குழித்துறை, கடலூர், ராசிபுரம், ஈரோடு, திருச்செங்கோடு என எல்லா ஊர்களிலும் கட்டப்படும்; கட்டப்படும் என்று சொல்கிறார். எல்லாவற்றுக்கும் 40-க்கு 40 தொகுதி என்கிறார்களே, இவர்கள் டெல்லி சென்றால், அங்கிருந்து பணம் வாங்கிக் கொடுத்தால், இவற்றையெல்லாம் ஒரே வாரத்தில் கட்டிக் கொடுக்கத் தயார்! (சிரிப்பு) நான்கூட என்ன நினைத்தேன்? இவ்வளவையும் accurate-ஆகச் சொல்கிறாரே, 34 இலட்சத்து 72 ஆயிரத்து 712 ரூபாய் என்று சொல்கின்றாரே, எனக்கு என்னவென்றால் இந்த court-கள் எல்லாம் இன்னும் கட்டப்படவில்லை என்று இப்போது தெரிகிறது. இதற்குச் சந்தேகப்பட்டு பார்த்தால், கடைசியில் அடிக்கிறார் அண்ணன், இவ்வளவு பணம் வாங்கிக் கொடுத்தால் ஒரே வாரத்தில் அம்மா ஆட்சி கட்டும் என்று சொல்லிவிட்டார். ஜனங்கள் அவர்களைக் கட்டி விட்டார்கள்! (சிரிப்பு)



அடுத்து, முக்கியமானது, நம்முடைய திரு. ஞானசேகரன் அவர்கள், சட்டக் கல்லூரி ஒன்றை வேலூரிலே தொடங்கவேண்டும், தொடங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார். நான் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே கேட்டேன். நானே அறிவித்து, நீண்ட நாட்கள் ஆகின்றன. திரு. ஞானசேகரன் கேட்டுக்கொண்டே இருக்கிறார். நான் இந்தப் பக்கம் இருப்பதனால் கேட்காவிட்டாலும், நானும் கேட்கிறேன் என்றுதான் அதற்குப் பொருள். எனவே, இந்த ஆண்டு சட்டக் கல்லூரி வேலூரிலே தொடங்கப்படும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-45

அடுத்து, இந்த ஆண்டு அறிவிப்புகள், சட்டத் துறை.

1. தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. கே.ஆர். நாராயணன் அவர்களால் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் 20-9-1997 அன்று தொடங்கப்பட்டது. இப் பல்கலைக்கழகம் 3-10-1997 அன்று முதல் செயல்படத் தொடங்கியிருக்கிறது. இந்தப் பல்கலைக்கழகம் டாக்டர் குமாரசாமி ராஜா சாலையில் உள்ள ஏறத்தாழ 5 ஏக்கர் பரப்பளவு உள்ள "பூம்பொழில்" என்ற அரசுக் கட்டடத்தில் தொடங்கப்பட்டது. இதுவரை இந்தப் பல்கலைக்கழகத்திற்கு வேறு எந்த இடமும் வழங்கப்படாததால், பல்கலைக்கழக மானியக் குழுவினால் (University Grants Commission) நிதி வழங்குவது தொடர்பாக இதுவரையில் அங்கீகாரம் வழங்கப்படவில்லை. பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு, இப் பல்கலைக்கழகத்திற்குத் தக்க இடம் வழங்க கலைஞர் அவர்கள் முடிவு எடுத்திருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2. சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் செங்கல்பட்டு ஆகிய இடங்களில் செயல்படும் 6 அரசு சட்டக் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவிகளின் நலனைக் கருத்தில்கொண்டு, நூலகங்களுக்குத் தேவையான புத்தகங்கள் வாங்குவதற்கு நடப்பு நிதியாண்டில் 12 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

3. செங்கல்பட்டிலுள்ள அரசு சட்டக் கல்லூரியில், மாணவ, மாணவிகளின் நலன் கருதி, கூடுதலாக வகுப்பறைக் கட்டடங்கள் ரூபாய் 80 இலட்சத்தில் கட்டித் தரப்பட உள்ளன. இதன்பொருட்டு நடப்பு நிதியாண்டில் ரூபாய் 32 இலட்சம் வழங்கப்படும்.

4. சென்னை டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் பணியாளர்களின் நலன் கருதி, கூடுதலாகக் கட்டடம் கட்டுவதற்கு இந்த நிதியாண்டில் 15 இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது.

5. சென்னை டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் சீர்மிகு சட்டப் பள்ளி மற்றும் முதுகலைப் படிப்பு மற்றும் ஆராய்ச்சித் துறைகளுக்குப் புத்தகங்கள் வாங்குவதற்கு இந்த நிதியாண்டில் ரூபாய் 5 இலட்சம் வழங்கப்படுகிறது.

6. 2003-2004 ஆம் ஆண்டு கடந்த கால ஆட்சியில் அரசு சட்டக் கல்லூரிகளில் உள்ள பணியிடங்களில், 16 ஆசிரியர் பணியிடங்களையும், 14 பணியாளர் பணியிடங்களையும் நீட்டிப்பு வழங்காமலேயே விட்டுவிட்டார்கள். இதில் 8 ஆசிரியர்கள், 11 பணியாளர்கள், இந்த 19 பணியிடங்களையும் உடனடியாக உருவாக்க அரசு முடிவு எடுத்திருக்கிறது என்கிற மகிழ்ச்சியான செய்தியை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நீதி நிருவாகம்.

I. உயர் நீதிமன்றம் அரசுக்கு அனுப்பியுள்ள செயற்குறிப்புகளைப் பரிசீலனை செய்ததன் அடிப்படையிலும், மாண்புமிகு அமைச்சர்கள், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் வைத்த கோரிக்கைகளின் அடிப்படையிலும் பின்வரும் இடங்களில் நீதிமன்றங்களுக்கான கட்டடங்களும், தேவையின் அடிப்படையில் அங்குள்ள நீதிபதிகளுக்கான குடியிருப்புகளும் கட்டப்படும்:

1. ஆம்பூர்-வேலூர் மாவட்டம், 2. தென்காசி, வள்ளியூர்-திருநெல்வேலி மாவட்டம், 3. திருச்செந்தூர்-தூத்துக்குடி மாவட்டம், 4. திருமயம்-புதுக்கோட்டை மாவட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) 5. பெண்ணாகரம்-தருமபுரி மாவட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) 6. மேட்டுப்பாளையம்-கோயம்புத்தூர் மாவட்டம், 7. பழனி-திண்டுக்கல் மாவட்டம், 8. காங்கேயம், பவானி-ஈரோடு மாவட்டம், (மேசையைத் தட்டும் ஒலி) பார்த்தீர்களா? சிறிது நேரத்திற்கு முன்னால்தான் கோரிக்கை கொடுத்தீர்கள். அறிவிப்பில் சேர்ந்திருக்கிறது! 9. திருச்செங்கோடு, ராசிபுரம்-நாமக்கல் மாவட்டம்,



10. பத்மநாபபுரம்-கன்னியாகுமரி மாவட்டம், 11. உத்தமபாளையம்-தேனி மாவட்டம், 12. குளித்தலை-கரூர் மாவட்டம், 13. திருவையாறு-தஞ்சை மாவட்டம், 14. கள்ளக்குறிச்சி, திண்டிவனம்-விழுப்புரம் மாவட்டம், 15. சங்ககிரி, ஆத்தூர்-சேலம் மாவட்டம், 16. அரக்கோணம்-வேலூர் மாவட்டம், 17. திருச்சி-திருச்சி மாவட்டம். (மேசையைத் தட்டும் ஒலி)

II. மாண்புமிகு உயர் நீதிமன்றத்தின் செயற்குறிப்புகளை ஏற்று, அதிக வழக்குகள் நிலுவையில் உள்ளதன் அடிப்படையிலும், நிதிநிலைமைக்கேற்பவும் இந்த ஆண்டு 25 புதிய நீதிமன்றங்கள் தொடங்கப்படும்.

1. சென்னையில் இரண்டு, மதுரையில் ஒன்று, ஆக போதை மருந்துகள் மற்றும் மனமயக்கப் பொருட்கள் தடுப்புச் சட்டம் சம்பந்தப்பட்ட வழக்குகளுக்கான 3 தனி நீதிமன்றங்கள்.

2. வாணியம்பாடி, தாம்பரம், தேனி மற்றும் அரூர் ஆகிய இடங்களில் சார் நீதிமன்றங்கள் (Sub-Courts) தொடங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. குன்னூர், அம்பத்தூர், திருவொற்றியூர், பல்லடம், அவிநாசி, முதுகுளத்தூர், சிவகாசி மற்றும் பாலக்கோடு ஆகிய இடங்களில் மாவட்டத் தனி உரிமையியல் நீதிமன்றங்கள் (Munsif Courts) தொடங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. திருச்செங்கோடு, ஆலந்தூர் மற்றும் திட்டக்குடி (கடலூர் மாவட்டம்) ஆகிய இடங்களில் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் (Additional District Munsif Courts) தொடங்கப்படும்.

5. பண்ருட்டி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் கூடுதல் குற்றவியல் நீதிமன்றங்கள் (Additional Judicial Magistrate Courts) தொடங்கப்படும்.

6. திருப்பூர், கரூர் மற்றும் சேலம் ஆகிய இடங்களில் கூடுதல் சார்பு நீதிமன்றங்கள் (Additional Sub-Courts) தொடங்கப்படும்.

பிற்பகல் 1-50

7. சங்கராபுரத்தில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் (District Munsif Court) தொடங்கப்படும்.

கடைசியாக, 8. காட்பாடியில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் (District Munsif cum Judicial Magistrate Court) தொடங்கப்படும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை நான் உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.

III. அடுத்து, உயர் நீதிமன்றத்தின் செயற்குறிப்பினை ஏற்று பரீட்சார்த்த முறையில் முகாம் நீதிமன்றங்கள் (Camp Courts) தொடங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. புதியதாக சார்பு நீதிமன்றங்கள் தொடங்குவதற்குப் பதிலாக பக்கத்திலுள்ள சார் நீதிபதி (Senior Division) இந்த இடங்களுக்குச் சென்று முகாம் நீதிமன்றங்கள் நடத்த ஆணை பிறப்பிக்கப்படும். இந்த ஆண்டு மேலூர், திருமங்கலம், உசிலம்பட்டி, கொடைக்கானல் மற்றும் அரக்கோணம் ஆகிய இடங்களில் ரூ.8.18 இலட்சம் செலவில் இதுபோன்ற முகாம் நீதிமன்றங்கள் (Camp Courts) தொடங்கப்படும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(குறுக்கீடு)*

அது வாங்காமலா விட்டுவிடுவார்கள்? ஆகையினாலே இங்கே பெரும் பகுதி உறுப்பினர்களுடைய கோரிக்கைகளை முன்வைத்து எங்களுடைய நிதிநிலைக்கேற்ப செய்திருக்கிறோம். இதிலே ஏதாவது ஒன்றிரண்டு விடுபட்டிருந்தால்கூட, நான் அவற்றைக் கவனிப்பதற்குத் தயாராக இருக்கிறேன் என்பதை சூசகமாகத் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களை நான் படித்துப் பார்த்தேன்; அவற்றையெல்லாம் எங்கள் நெஞ்சில் நிறுத்தியிருக்கிறோம். அவற்றை அவ்வப்போது எடுத்து, எவ்வப்போது செய்ய வேண்டுமோ, அவ்வப்போது செய்து, அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். எனவே, பெருமனது வைத்து தங்களது வெட்டுத் தீர்மானங்களை வாபஸ் பெற்று, நாம் எல்லோரும் விரைவிலே மன்ற அலுவல் முடிவதற்கு வழிவகுக்க வேண்டுமென்று கேட்டு, எங்களுக்கு இந்த அரிய யோசனைகளைத் தந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் நிறைய அறிவிப்புகளை வெளியிட்டார்கள். இந்த அறிவிப்புகள் எல்லாம் முன்னாள் சட்ட



அமைச்சர் ஜெயக்குமார் அறிவித்த அறிவிப்புகளைப் போன்றதுதானா அல்லது உண்மையான அறிவிப்புகளா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, போன வருடம் நான் செய்த அறிவிப்புகளை இந்த ஆண்டு முடித்துவிட்டேன் என்று உங்களிடத்திலே certificate கொண்டு வந்து காட்டி, certificate பெற்றேன். சொன்னதைச் செய்வது கலைஞர் அரசு; சொல்லாததைச் செய்வது யாருடைய அரசோ? யாம் அறியோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சரிடத்திலே ஒரே ஒரு கேள்வி. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 100 கோடி ரூபாய் அளவிற்கு நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுவதற்கு மட்டும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, மதுரை High Court கிளை, ஸ்ரீவில்லிபுத்தூர், விழுப்புரம், திருப்பத்தூர், தேனி போன்ற மாவட்டங்களிலே ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் எல்லாம் கட்டப்பட்டன. பொதுவாக நீதிமன்றக் கட்டடங்கள் என்று சொல்லும்போது, matching grant—அதாவது மாநில அரசு 50 சதவீதம்; மத்திய அரசு 50 சதவீதம்—அவர்கள் கொடுக்கின்ற பட்சத்திலே நாம் திட்டத்தை நிறைவேற்றுகின்ற ஒரு சூழ்நிலையிலே இருக்கின்றோம். ஒரு தொலைநோக்குப் பார்வையோடு முன்பெல்லாம் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் "எங்கள் ஊரிலே நீதிமன்றக் கட்டடம் வேண்டும்; எங்களுக்கு ஒரு ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் வேண்டும்" என்று சொல்லும்போது, ஒரே வருடத்திலே எல்லா இடங்களிலும் நீதிமன்றக் கட்டடம் கட்டுவது என்பது இயலாத காரியம். எனவேதான், ஒரு concrete proposal—ஒட்டுமொத்தமாக இரண்டு ஆண்டு காலத்திற்குள் எல்லா மாவட்டங்களிலும் தேவையான அளவிற்கு நீதிமன்றக் கட்டடங்களை எல்லாம் கட்டி, நல்ல வசதியுள்ள நீதிமன்றங்களாக அமைக்க வேண்டும் என்கின்ற ஒரு எண்ணத்தோடுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு திட்டத்தைத் தீட்டி மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்தார்கள். மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்து, இதே சட்டமன்றத்திலே நாங்கள் சொன்னோம்; "206 கோடி ரூபாய் அளவிற்கு இதற்குச் செலவாகிறது; 103 கோடி ரூபாய் நாங்கள் ஒதுக்கீடு செய்யத் தயாராக இருக்கிறோம்; நீங்கள் அங்கே இருக்கிறீர்கள்; உங்கள் அரசாங்கம்

இருக்கிறது; 103 கோடி ரூபாய் நீங்கள் பெற்றுத் தருவதற்குத் தயாரா?" என்று கேட்டதற்குக் காழ்ப்புணர்ச்சியோடு, அந்த 103 கோடி ரூபாயை நீங்கள் பெற்றுத் தரவில்லை; அதனால் திட்டத்தை நிறைவேற்றவில்லை. என்னுடைய கேள்வி, இந்த இரண்டு ஆண்டுகளில் மத்திய அரசாங்கத்திடமிருந்து இதற்காக நீங்கள் எவ்வளவு பெற்றீர்கள்? எத்தனை நீதிமன்றங்களை நீங்கள் கட்டினீர்கள்? அதை நீங்கள் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** Right, right. அவர் சொன்னார். எங்களை நம்பித்தான் அவர் வாக்குறுதி கொடுத்திருக்கிறார், பாருங்கள். நீங்கள் பெற்றுத் தரவில்லை, நாங்கள் சொல்லிவிட்டோம் என்று சொன்னார். முடிந்து போன காரியம். அதாவது, உங்கள் சாமர்த்தியத்தைப் பாராட்டுகிறேன் நான். இவ்வளவையும் சொல்லி முடித்துவிட்டு, பணம் வாங்கிக் கொடுத்தால் செய்கிறேன் என்றால், பரவாயில்லை. "இந்த மலையைத் தூக்கி என் மேலே வையுங்கள்; தூக்கிக்கொண்டு போகிறேன்" என்றானாம் யாரோ ஒருவன். பரவாயில்லை, நான் சொல்லக் கூடாது என்று நினைத்தேன். அதனால்தான், வேகமாக ஒரு jovial-ஆகப் போகட்டும் என்று விட்டுவிட்டேன். அவர்கள் ஆட்சியில் ஒதுக்கிய நீதிமன்றங்களின் புள்ளிவிவரங்கள் எல்லாம் இருக்கின்றன. அவற்றையெல்லாம் இப்போது நான் சொல்ல விரும்பவில்லை. இருந்தாலும் ஒன்று சொல்கிறேன். போன வருடத்திலே எது, எது சொன்னோம், எது, எதைக் கட்டி முடித்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு சுதர்சனம் அவர்களுக்குச் சொல்லியிருக்கிறேன். இதேபோன்று, அடுத்த ஆண்டு மானியக் கோரிக்கையில் எல்லாம் நிறைவேற்றப்பட்டன என்ற கருத்தை உங்களுக்குத் தருவோம் என்ற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, திருவாரூரில் ஒருங்கிணைந்த Court. அதற்கு ஏற்கெனவே நாங்கள் ஆர்டர் போட்டுவிட்டோம் என்பதை நான் அமைச்சருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-55*

பண்ருட்டியைப் பொறுத்தவரையிலே, (குறுக்கீடு) உங்களுடைய தொகுதிக்கு நீங்கள் கேட்டீர்கள்; அங்கே போடச் சொன்னால், Guest House-ஐயும் சேர்த்துப் போட்டுவிட்டார்கள். Guest House-ஐக் கட்டுகிற அளவிற்குப் பணமில்லை. ஆகையினாலே, அதை மாற்றி எடுத்துவிட்டு, அதைக் கழித்துவிட்டு, மிச்சமிருப்பதற்கு order போட்டுவிட்டோம். எனவே, முடிந்தது. (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். விவாதம் முடிவுற்றது, இப்போது வாக்கெடுப்பு.

### (அ) கோரிக்கை எண் 3-நீதி நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 3-நீதி நிருவாகம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"நீதி நிருவாகம் பற்றிய 3 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.260,67,47,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது.

### (ஆ) கோரிக்கை எண் 33-சட்டத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 33-சட்டத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"சட்டத் துறை பற்றிய 33 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.14,09,50,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (23-4-2008) புதன்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-56 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

-ஏதுமில்லை-

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

109. மானியக் கோரிக்கை எண் 3-நீதி நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009 (தமிழ், ஆங்கிலம்)

110. மானியக் கோரிக்கை எண் 33-சட்டத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009 (தமிழ், ஆங்கிலம்)

111. ஊனமுற்றோர் நலனுக்காகத் தமிழக அரசினால் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்கள் என்கிற சிறு நூல் (தமிழ், ஆங்கிலம்)

112. ஊனமுற்றோர் நலம்-ஒரு கண்ணோட்டம் என்கிற சிறு நூல் (தமிழ், ஆங்கிலம்)



113. தாயாகப் போகும் பெண்ணே! உனக்கும் 10 கட்டளைகள் என்கிற சிறு நூல் (தமிழ்)

114. தத்துத் திட்டம் குறித்த கையேடு (தமிழ்)

115. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் மகப்பேறு பாதுகாப்பு தகவல் அட்டை. (தமிழ்)

116. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நோய்த் தடுப்பு - பாதுகாப்பு அட்டை. (தமிழ்)

117. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்தின்போது மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள், 2008-2009. (தமிழ்)

---

# இணைப்பு-I

(110 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 3—நீதி நிருவாகம்

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2008–2009

### I. முன்னுரை:

அனைத்துக் குடிமக்களுக்கும் விரைவான நீதி கிடைக்கப் பெற வேண்டும் என்பது நமது அரசியலமைப்புச் சட்டத்தின் முதன்மையான நோக்கங்களுள் ஒன்றாகும். அதன் அடிப்படையில் பொதுமக்களுக்கு விரைவாக நீதி வழங்கப்படுதலை எளிதாக்கும் பொருட்டு நீதிமன்றங்களுக்குத் தேவையான கட்டட வசதி, மனித ஆற்றல் மற்றும் பிற உள்கட்டமைப்பு வசதிகளைச் செய்து கொடுப்பதில் இந்த அரசு எப்பொழுதும் உறுதியாக உள்ளது.

### II. நீதிமன்றங்களின் படிநிலை அமைப்பு:

2. பல்வேறு மாநிலங்களில் செயல்பட்டுவரும் அனைத்து உயர் நீதிமன்றங்களையும் நாட்டின் உச்சநிலை நீதிமன்றமான உச்ச நீதிமன்றம் தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுள்ளது. மாநில அளவிலான நீதித் துறையின் படிநிலை அமைப்பு இணைப்பு-I-(அ)வில் கொடுக்கப்பட்டுள்ளது.

3. இவற்றுடன் பல்வேறு சட்டப் பிரிவுகளின்கீழ் பின்வரும் நீதிமன்றங்களும், அலுவலகங்களும் செயல்பட்டு வருகின்றன:

i. நொடித்தவர் சொத்தாட்சியர், உயர் நீதிமன்றம், சென்னை.

ii. அரசு சொத்து தலைமைப் பொறுப்பாட்சியர், சென்னை.

iii. சென்னை, (சென்னையில் 3) மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, கடலூர், சேலம், திருச்சிராப்பள்ளி, வேலூர் ஆகிய இடங்களில் உள்ள தொழிலாளர் நீதிமன்றங்கள்.

iv. தொழில் நடுவர் நீதிமன்றம், சென்னை.

v. சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய இடங்களில் உள்ள குடும்ப நல நீதிமன்றங்கள்.

[2008 ஏப்ரல் 22

vi. சென்னை, மதுரை ஆகிய இடங்களில் உள்ள பொருளாதாரக் குற்றங்களை விசாரிப்பதற்கான தனி நீதிமன்றங்கள்.

vii. குடிமையியல் உரிமைகள் பாதுகாப்பிற்கான தனி நீதிமன்றங்கள்.

viii. தடா சட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்ட தனி நீதிமன்றங்கள்.

ix. இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளையும், போதை மருந்துகள் மற்றும் போதை மயக்கப் பொருட்கள் தடுப்பு (NDPS) சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளையும் விசாரிப்பதற்கான தனி நீதிமன்றங்கள்.

x. சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களிலுள்ள மத்திய குற்றப் புலனாய்வுத் துறை வழக்குகளை விசாரிப்பதற்கென்றே அமைக்கப்பட்ட தனி நீதிமன்றங்கள்.

xi. சென்னை மற்றும் கோயம்புத்தூரிலுள்ள குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரிப்பதற்கென்றே அமைக்கப்பட்ட தனி நீதிமன்றங்கள்.

xii. மதுரையில் ஏற்பட்ட சாதிக் கலவரங்கள் குறித்த வழக்குகளை விசாரிப்பதற்கான தனி நீதிமன்றம்.

xiii. சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம், பெரம்பலூர், கடலூர் ஆகிய இடங்களில் உள்ள மகளிர் நீதிமன்றங்கள் (Mahila Courts).

xiv. விரைவு நீதிமன்றங்கள் (எண்ணிக்கை 49).

xv. சென்னையில் உள்ள தமிழ்நாடு 1997 ஆம் ஆண்டு முதலீட்டாளர்கள் (நிதி நிறுவனங்களில்) பாதுகாப்புச் சட்டம் தொடர்பான வழக்குகளை விசாரிக்க தனி நீதிமன்றம்.

xvi. பெரம்பலூரில் உள்ள நில எடுப்பு சம்பந்தமான வழக்குகளை விசாரிப்பதற்கான தனி நீதிமன்றம்.

## III. நீதிமன்றங்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள்:

4. தற்போதுள்ள நீதிமன்றங்களின் எண்ணிக்கை பற்றிய விவரம் இணைப்பு II-(ஆ)-வில் கொடுக்கப்பட்டுள்ளது



2008 ஏப்ரல் 22]

## IV. உயர் நீதிமன்றம், சென்னை:

5. மாநிலத்தின் உச்சநிலை நீதிமன்றமாக உயர் நீதிமன்றம் அமையப் பெற்றுள்ளது. உயர் நீதிமன்றத்திற்காக ஒப்புதல் வழங்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை 49 ஆகும். தற்போது உயர் நீதிமன்றம் (சென்னையிலுள்ள முதன்மை நடுவர் ஆயம் மற்றும் மதுரைக் கிளை நடுவர் ஆயம்) 45 நீதிபதிகளுடன் இயங்கி வருகிறது.

6. உயர் நீதிமன்றம் நீதிப் பேராணை, (சிறப்பு அதிகாரம்) மற்றும் உரிமையியல் விவகார அசல் வழக்கு விசாரணை அதிகாரங்களைப் பெற்றுள்ளது. உரிமையியல் மற்றும் குற்றவியல் விவகார வழக்குகளின் மேல் முறையீடு விசாரணை அதிகாரமும் உயர் நீதிமன்றத்திற்கு உண்டு. உரிமையியல் விவகார அசல் வழக்குகளைப் பொறுத்தவரை சென்னை மாநகரத்துக்குள் எழும் ரூ. 10,00,000-க்கும் அதிகமான மதிப்புள்ள வழக்குகளை உயர் நீதிமன்றம் விசாரிக்கிறது. நீதிபதிகளுக்கிடையிலான பணி மாண்புமிகு தலைமை நீதிபதி அவர்களால் பிரித்தளிக்கப்படுகின்றது. மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதியான புதுச்சேரி நீதிமன்றங்கள் தொடர்பாகவும் அதிகார வரம்பைக் கொண்டுள்ளது. புதுச்சேரி தொடர்பான பணிகளைக் கவனிக்கும் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் குறித்த செலவு முதற்கண் தமிழ்நாடு அரசால் செய்யப்பட்டு, பின்னர் அச்செலவுத் தொகை புதுச்சேரி அரசிடமிருந்து திரும்பப் பெறப்படுகிறது. 2008-2009 ஆம் ஆண்டிற்கு சென்னை உயர் நீதிமன்றத்திற்கு (புதுச்சேரி அதிகார வரம்பு உள்பட) ஆகும் செலவு ரூ.40.65 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

7. தலைமைப் பதிவாளர் உயர் நீதிமன்றத்தின் நிருவாகத்தின் தலைவராக விளங்குகிறார். அவருக்குத் துணையாக பதிவாளர் (கண்காணிப்பு), பதிவாளர் (நீதி), பதிவாளர் (நிருவாகம்) மற்றும் பதிவாளர் (மேலாண்மை) ஆகியோர் உள்ளனர். மேற்காணும் பதிவாளர்களுக்கு உதவியாக மாஸ்டர் (Master), துணைப் பதிவாளர்கள், உதவிப் பதிவாளர்கள், முதன்மைக் கணக்கு அலுவலர் மற்றும் சார் உதவிப் பதிவாளர்களும் உள்ளனர்.

8. நீதி வழங்குவதுடன், இம்மாநிலத்திலுள்ள அனைத்து சார்நிலை நீதிமன்றங்களின் முழு நிருவாகப் பொறுப்பையும் சென்னை உயர் நீதிமன்றம் மேற்கொள்கிறது.

## V. மதுரையில் உள்ள சென்னை உயர் நீதிமன்றக் கிளை:

9. 06-07-2004 நாளிட்ட ஜி.எஸ்.ஆர். எண். 446 (இ)-ல் மேதகு இந்திய குடியரசுத் தலைவர் அவர்களால் "சென்னை உயர் நீதிமன்ற (மதுரையில் நிலையான ஒரு நடுவர் ஆயம் அமைத்தல்) ஆணை 2004"-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கையின்படி, சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளையானது 24-07-2004 அன்று திறக்கப்பட்டு இயங்கிவருகிறது. இதன் அதிகார எல்லையானது மதுரை, திண்டுக்கல், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கரூர், சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தேனி மாவட்டங்களை உள்ளடக்கியதாகும். சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளையானது தற்பொழுது 12 மாண்புமிகு நீதிபதிகளைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

10. அசல் வழக்குகள் அதிகார வரம்பினைத் தவிர்த்து ஏனைய விவகார வழக்குகளில், சென்னை உயர் நீதிமன்றத்திற்கு உள்ள அதிகாரங்களைப் போன்றே, சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளையின் அதிகார வரம்பு அமைந்துள்ளது. மதுரையில் உள்ள சென்னை உயர் நீதிமன்றக் கிளையின் நிருவாகத் தலைவராக பதிவாளர் (நிருவாகம்) உள்ளார். அவருக்குத் துணையாக பதிவாளர் (நீதி) உள்ளார். 2008-2009 ஆம் ஆண்டிற்கு மதுரையிலுள்ள சென்னை உயர் நீதிமன்றக் கிளைக்கான செலவினம் ரூ.10.28 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

## VI. உரிமையியல் நீதிமன்றங்கள்:

### 11.1. சென்னை நகர்

#### (அ) மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை:

ஒரு மகளிர் நீதிமன்ற நீதிபதி உட்பட 12 மாவட்ட நீதிபதிகள், 18 உரிமையியல் நீதிபதிகள் (முதுநிலை) மற்றும் ஒரு உரிமையியல் நீதிபதி (இளநிலை) பதவித் தரத்தில் நிருவாகப் பொறுப்பு வகிக்கும் பதிவாளர் ஒருவர் உட்பட ஆக 31 நீதிபதிகள் சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் பணிபுரிகின்றனர். மாநகர உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு, சென்னை மாநகர் எல்லை முழுமைக்கும் விரிவடைந்துள்ளது. ரூ.10,00,000/-ற்கு மேற்பட்ட மதிப்புள்ள வழக்குகள் சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட் வேண்டும். சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை செஷன்ஸ் பிரிவுக்கு அமர்வு நீதிமன்றமாகவும் செயல்பட்டு வருகிறது. ஊழல் தடுப்புச்



சட்டம் 1988 சட்டத்தின்கீழ் ஊழல் போன்ற வழக்குகளை விசாரிப்பதற்கென்று ஒரு கூடுதல் மாநகர உரிமையியல் நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது. 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு முதலீட்டாளர்கள் (நிதி நிறுவனங்களில்) பாதுகாப்புச் சட்டம் தொடர்பான வழக்குகளை விசாரிக்க சென்னையில் ஒரு சிறப்பு நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது. 2008-2009 ஆம் ஆண்டிற்கு மாநகர உரிமையியல் நீதிமன்றத்தைப் பொறுத்தவரையில் உத்தேச செலவினம் ரூ.9.07 கோடி ஆகும்.

#### (ஆ) சிறு வழக்குகள் நீதிமன்றம், சென்னை:

இந்நீதிமன்றத்திற்கு மாவட்ட நீதிபதி பதவித் தரத்திலுள்ள நீதிபதி தலைமை வகிக்கிறார். மேலும், உரிமையியல் நீதிபதி (முதுநிலை) பதவித் தரத்தில் எட்டு நீதிபதிகளும், நிருவாகத்திற்குப் பொறுப்பு வகிக்கிற பதிவாளர் உட்பட உரிமையியல் நீதிபதி (இளநிலை) பதவித் தரத்தில் எட்டு நீதிபதிகளும் உள்ளனர். குறிப்பிட்ட சில ஆணைகளை நிறைவேற்றி, மனுக்களை முடிவு செய்தல் போன்ற நீதி நிருவாகப் பணிகளையும் பதிவாளர் கவனிக்கிறார். தலைமை வகிக்கும் நீதிபதியும், இதர நீதிபதிகளும் 1882 ஆம் ஆண்டு மாகாணச் சிறு வழக்கு நீதிமன்றங்கள் சட்டத்தின்கீழ் வரும் சிறு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரங்களைச் செலுத்துவர். ஐந்தாவது மற்றும் ஆறாவது நீதிபதிகள், மோட்டார் வாகனச் சட்டத்தின்கீழ் உள்ள வழக்குகளை விசாரிப்பதற்கான நடுவர் நீதிமன்றங்களாகச் செயல்படுகின்றனர். தலைமை நீதிபதி மற்றும் இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது நீதிபதிகளும் மோட்டார் வாகனச் சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளனர். பத்து முதல் பதினாறு வரையிலுள்ள நீதிபதிகள் சென்னை நகரத்திற்கான வாடகைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளாகச் செயல்படுகின்றனர். தலைமை நீதிபதியும் இரண்டு முதல் நான்கு வரை, ஏழு மற்றும் எட்டாவது நீதிபதிகளும் வாடகைக் கட்டுப்பாடு குறித்த மேல் முறையீடுகளை விசாரிக்க அதிகாரம் பெற்றுள்ளனர். சிறு வழக்குகள் நீதிமன்றத்திற்கான செலவினம் 2008-2009 ஆம் ஆண்டில் ரூபாய் 4.25 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

### 11.2. வெளியூர் நீதிமன்றங்கள்:

#### (அ) மாவட்ட நீதிமன்றங்கள்

ஏற்கெனவே இயங்கும் 28 மாவட்ட நீதிமன்றங்கள் இயங்கி வரும் நிலையில் தற்சமயம் திருவாரூரில் ஒரு மாவட்ட நீதிமன்றம் 2007-2008 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட நீதிபதிகள், அவரவர்

பகுதிகளுக்கான குற்றவியல் அமர்வு நீதிமன்ற நீதிபதிகளும் ஆவர். தொழிலாளர் காப்புறுதிச் சட்டம், ஜமீன் சொத்து ஒழிப்புச் சட்டம், மோட்டார் வாகனச் சட்டம் மற்றும் சில குறிப்பிட்ட தனி சட்டங்களின்கீழ் தனித் தீர்ப்பாயங்களாகவும் அவரவர்கள் பணியாற்றுகின்றனர். தமிழ்நாடு 1873 ஆம் ஆண்டு உரிமையியல் நீதிமன்றங்கள் சட்டம் மற்றும் 1892 ஆம் ஆண்டு மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் சட்டம், சட்டம் 1/2004-இன்மூலம் திருத்தம் செய்யப்பட்டு, மாவட்டங்களிலுள்ள உரிமையியல் நீதிமன்றங்கள் பண விவகார அதிகார வரம்பில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. சார்நிலை நீதிமன்றங்களின் அதிகார வரம்பு பின்வருமாறு திருத்தி அமைக்கப்படுள்ளது:—

| மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் | சார்நிலை நீதிமன்றம் | மாவட்ட நீதிமன்றம் |
|---|---|---|
| ரூபாய் 30,000/-ல் (ரூபாய் முப்பது ஆயிரம்), இருந்து ரூபாய் 1,00,000/-க்கு (ரூபாய் ஒரு இலட்சத்திற்கு) உயர்த்தப்பட்டுள்ளது. | ரூபாய் 1,00,000/—க்கு (ரூபாய் ஒரு இலட்சம்) மேலும் ரூபாய் 5,00,000/-க்கு (ரூபாய் ஐந்து இலட்சத்திற்கு) மிகாமல் | ரூபாய் 5,00,000/-க்கு (ரூபாய் ஐந்து இலட்சம்) மேல் உச்சவரம்பின்றி |

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் சார்பு நீதிமன்றங்களின் மேல்முறையீட்டு வழக்குகள் மாவட்ட நீதிமன்றத்தின்கீழ் வரும். மாவட்ட நீதிபதிகள் அவரவர்கள் மாவட்டத்திலுள்ள சார்நிலை நீதிமன்றங்களை ஆய்வு செய்கின்றனர்.

**(ஆ) உரிமையியல் நீதிபதி-முதுநிலைப் பிரிவு**

உரிமையியல் செயல்பாடு ஆணை வழக்குகளுக்கான உரிமையியல் நீதிபதிகளின், (முதுநிலைப் பிரிவு) பண விவகார அதிகார வரம்பானது ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டும், ரூபாய் 5 இலட்சத்திற்கு உட்பட்டும் உள்ளது. உரிமையியல் நீதிமன்றச் சட்டத்தில் அவர்களின் அதிகார வரம்பின் எல்லை தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அவரவர் அதிகார வரம்பிற்கு உட்பட்ட பகுதியில் இருக்கும் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற நடுவர்களின் முடிவிற்கெதிராக ரூபாய் ஒரு இலட்சம் மதிப்புக்குட்பட்டுத் தொடரப்படும் மேல்முறையீடுகளுக்கான மேல்முறையீட்டு அதிகாரத்தையும் பெற்று, உரிமையியல் நீதிபதிகள் (முதுநிலை பிரிவு) உதவி குற்றவியல் அமர்வு நீதிபதிகளாகவும் செயல்படுகின்றனர். மேலும், சார்நிலை நீதிமன்றங்கள் மோட்டார்



விபத்து உரிமைக் கோரிக்கைகளின் தீர்ப்பாயங்களாகவும் செயல்படுகின்றன. இம்மாநிலத்தில் 107 சார்நிலை நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. நாமக்கல் மாவட்டத்தில் திருச்செங்கோடு, ராசிபுரம், கடலூர் மாவட்டத்தில் நெய்வேலி, பெரம்பலூர் மாவட்டத்தில் பெரம்பலூர் ஆகிய இடங்களில் சார்நிலை திமன்றங்கள் அமைக்க 2007-2008 ஆம் ஆண்டில் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

**(இ) உரிமையியல் நீதிபதி—இளநிலைப் பிரிவு**

உரிமையியல் நீதிபதி பதவி (இளநிலைப் பிரிவு), ரூபாய் ஒரு இலட்சம் வரையிலான வழக்குகளை விசாரித்து வருகின்றது. மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் ஒவ்வொன்றும் அவற்றிற்கென்று அதிகார வரம்பைப் பெற்றுள்ளன. அவை, தங்களின் வரம்புக்கு உட்பட்ட பகுதிகளுக்கு வாடகை கட்டுப்பாட்டு அதிகாரிகளாக செயலாற்றுவதுடன் ரூ.20,000 வரையிலான சிறு வழக்குகளையும் விசாரித்து வருகின்றன. இம்மாநிலத்தில் 160 மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், மூன்று கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் நீலகிரி மாவட்டத்தில் கூடலூர், திருவள்ளூர் மாவட்டத்தில் பூந்தமல்லி மற்றும் வேலூர் மாவட்டத்தில் வாணியம்பாடி ஆகிய இடங்களில் அமைக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

**(ஈ) மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்**

இம்மாநிலத்தின் ஒரு சில பகுதிகளில் உள்ள வழக்காடும் பொதுமக்கள் தங்கள் உரிமையியல் தொடர்பான குறைகளைத் தீர்த்துக் கொள்வதில் மிகுந்த இடர்ப்பாடுகளைச் சந்தித்து வருகின்றனர். அவர்கள் வசிக்கும் பகுதியில் உரிமையியல் நீதிமன்றங்கள் இல்லாத காரணத்தால் அதற்காக அவர்கள் வெளியே உள்ள நீதிமன்றங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. எனவே, அவர்களுடைய இடர்ப்பாடுகளைக் களையும் பொருட்டு மாவட்ட குற்றவியல் (ம) நடுவர் நீதிமன்றங்கள், உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளைத் தீர்த்து வைக்கின்றன. அத்தகைய நீதிமன்றங்கள் மொத்தம் 66 உள்ளன. மேலும், ஐந்து புதிய மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களைத் திருவள்ளூர் மாவட்டத்தில் ஊத்துக்கோட்டை, நாகப்பட்டினம் மாவட்டத்தில் வேதாரண்யம், தர்மபுரி மாவட்டத்தில் பாப்பிரெட்டிப்பட்டி, மதுரை மாவட்டத்தில் வாடிப்பட்டி மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் திருப்பெரும்புதூர் ஆகிய இடங்களில் அமைக்க அரசு 2007-2008 ஆம் ஆண்டில் ஒப்பளிப்பு அளித்துள்ளது.

[2008 ஏப்ரல் 22

ஓர் உரிமையியல் நீதிமன்றம் வழக்கமான பணியமைப்பு, நகலகப் பணியமைப்பு மற்றும் கட்டளை நிறைவேற்றுனர் பணியமைப்பு ஆகிய மூன்று பணியமைப்புகளைக் கொண்டு செயல்படுகிறது. வெளியூர்களில் உள்ள அனைத்து மாவட்ட நீதிமன்றங்கள், சார்நிலை நீதிமன்றங்கள், மற்றும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் தொடர்பாக 2008-2009 ஆம் ஆண்டிற்குச் செலவு, ரூபாய் 140.86 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

**(உ) தொழிலாளர் நல நீதிமன்றங்கள்**

சென்னையில் மூன்று நீதிமன்றங்களும் மற்றும் மதுரை, கோயம்புத்தூர், வேலூர், சேலம், திருச்சிராப்பள்ளி, கடலூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் ஒவ்வொன்றுமாக மொத்தம் பத்து தொழிலாளர் நல நீதிமன்றங்கள் இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. மேலும் சென்னையில் ஒன்றும், வேலூரில் மற்றொன்றுமாக இரண்டு தொழிலாளர் நல நீதி மன்றங்கள் அமைக்க, அரசு 2007-2008 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளித்துள்ளது. மாநிலத்தில் அனைத்துப் பகுதிகள்மீதும் அதிகார வரம்பு கொண்ட தொழில் நடுவர்மன்றம் ஒன்றும் சென்னையில் உள்ளது. தொழிலாளர் நல நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நடுவர் நீதிமன்றம் ஆகியவற்றுக்குத் தலைமை தாங்குபவர்கள் மாவட்ட நீதிபதிகள் பதவித் தரத்தில் உள்ளவர்கள் ஆவர். அரசு அனுப்பி வைக்கும் தொழிலாளர் குறித்த தகராறுகளையும், பாதிக்கப்பட்ட தரப்பினர் தாக்கல் செய்யும் உரிமை கோரிக்கை மனுக்களையும் தொழிலாளர் நல நீதிமன்றங்கள் விசாரிக்கின்றன. தொழிலாளர் நல நீதிமன்றங்கள் மற்றும் நடுவர் நீதிமன்றம் ஆகியவற்றின் நடுவர்கள் தங்கள் அதிகார வரம்புக்குட்பட்ட பகுதிகளுக்குச் சுற்றுப்பயணம் சென்று, முகாம் நீதிமன்றம் நடத்தித் தொழிலாளர்பற்றிய வழக்குகள் மற்றும் உரிமை கோரிக்கை மனுக்கள்மீது விசாரித்துத் தீர்ப்பு வழங்குகின்றனர். சென்னையிலுள்ள தொழிலாளர் நல நீதிமன்றங்கள் மற்றும் நடுவர் நீதிமன்றம் ஆகியவற்றுக்கு 2008-2009 ஆம் ஆண்டு ரூபாய். 2.94 கோடி செலவு ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## VII. குற்றவியல் நீதிமன்றங்கள்:

### 12.1. சென்னை நகரம்

சென்னை நகரில், தலைமைப் பெருநகரக் குற்றவியல் நீதிமன்றம் மற்றும் கூடுதல் தலைமைப் பெருநகரக் குற்றவியல் நீதிமன்றம் உட்பட



2008 ஏப்ரல் 22]

மொத்தம் 24 பெருநகரக் குற்றவியல் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. மொத்தமுள்ள 24 பெருநகரக் குற்றவியல் நீதிமன்றங்களில் ஏழு நீதிமன்றங்களில், உரிமையியல் நீதிபதி (முதுநிலை) பதவி நிலையைச் சார்ந்தவர்களும் மீதமுள்ள நீதிமன்றங்களில் உரிமையியல் நீதிபதி (இளநிலை) பதவி நிலையைச் சார்ந்தவர்களும் ஆவர். பெருநகரக் குற்றவியல் நடுவர்கள் சென்னை நகரில் அவரவர் அதிகார வரம்புக்குட்பட்ட குறிப்பிட்ட காவல் நிலைய வழக்குகள் குறித்து விசாரிக்கும் அதிகாரம் பெற்றவராவர். மாநகரிலுள்ள பெருநகரக் நீதிமன்றங்களுக்கு 2008-2009 ஆம் ஆண்டில் ரூபாய் 6.45 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

### 12.2. வெளியூர்

**(அ) தலைமைக் குற்றவியல் நீதிமன்றங்கள்**

தற்போது மாநிலத்தில் 28 தலைமைக் குற்றவியல் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், திருவாரூரில் ஒரு தலைமைக் குற்றவியல் நீதிமன்றம் அமைக்க 2007-2008 ஆம் ஆண்டில் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. சிலவகை வழக்குகளில் உதவிக் குற்றவியல் நடுவருக்குரிய அதிகாரங்கள் தலைமைக் குற்றவியல் நடுவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. மேற்படி நீதித் துறை தலைமை நடுவர்கள் அவரவர் மாவட்டத்திலுள்ள குற்றவியல் நீதிமன்றங்களை ஆய்வு செய்வர்.

**(ஆ) குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்**

இம்மாநிலத்தில் மொத்தம் 181 குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. மேலும் 2008-2009 ஆம் ஆண்டிற்கு வெளியூர்களில் உள்ள குற்றவியல் நீதிமன்றங்களுக்கான மதிப்பீடு செய்யப்பட்ட செலவுத் தொகை ரூபாய் 64.14 கோடி.

## VIII. தமிழ்நாட்டில் செயல்படும் தனி நீதிமன்றங்கள்:

**(அ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிராக இழைக்கப்படும் வன்கொடுமைகள் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் தனி நீதிமன்றங்கள்:—**

1989 ஆம் ஆண்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்புச் சட்டம்) குடியுரிமை பாதுகாப்புச் சட்டம் ஆகியவற்றின்கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கென 14 மாவட்டங்களின் ஆட்சி எல்லையை உள்ளடக்கிய நான்கு கூடுதல்

[2008 ஏப்ரல் 22

அமர்வு நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. அவற்றின் அதிகார வரம்பு இக்கொள்கை விளக்கக் குறிப்பின் இணைப்பு-II(இ)-ல் கொடுக்கப்பட்டுள்ளது. எஞ்சிய மாவட்டங்களைப் பொறுத்தமட்டில், தொடர்புடைய முதன்மை அமர்வு நீதிமன்றம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை) தடுப்புச் சட்டத்தின்கீழ் வரும் குற்றங்களை விசாரணை செய்யும். குடியுரிமை பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் வரும் வழக்குகளை விசாரிப்பதற்கான தனி நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில் 2008-2009 ஆம் ஆண்டில் ரூ.1.08 கோடி செலவு என்று மதிப்பிடப்படுகிறது.

**(ஆ) பொருளாதாரக் குற்றங்களை விசாரணை செய்வதற்கான தனி நீதிமன்றம்:—**

பொருளாதாரக் குற்றங்களை விசாரணை செய்ய சென்னையில் இரண்டு தனி நீதிமன்றங்களும், அதாவது கூடுதல் தலைமைப் பெருநகரக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களும் (பொருளாதாரக் குற்றப் பிரிவு-1 மற்றும் பொருளாதாரக் குற்றப் பிரிவு-2) மற்றும் மதுரையில் ஒரு நீதிமன்றமுமாக மூன்று தனி நீதிமன்றங்கள் உள்ளன. கூடுதல் தலைமைப் பெருநகரக் குற்றவியல் நடுவர் (பொருளாதாரக் குற்றப் பிரிவு-1 மற்றும் பொருளாதாரக் குற்றப் பிரிவு-2), மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் உள்ளார். மதுரையிலுள்ள தலைமைக் குற்றவியல் நடுவர் உரிமையியல் நீதிபதி (முதுநிலைத் தரம்), பதவித் தரத்தில் உள்ளார். 2008-2009 ஆம் ஆண்டிற்கு இந்நீதிமன்றங்களுக்கு ஆகும் செலவு ரூ.75.91 இலட்சம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

**(இ) குடும்ப நல நீதிமன்றங்கள்:—**

சென்னையில் மூன்றும், மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய ஒவ்வோர் இடத்தில் ஒன்றுமாக மொத்தம் ஆறு குடும்ப நல நீதிமன்றங்கள் உள்ளன. குடும்ப நல நீதிமன்றங்கள் குறித்த செலவு 2008-2009 ஆம் ஆண்டிற்கு ரூ.2.29 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

**(ஈ) மத்தியப் புலனாய்வுத் துறை சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிக்க தனி நீதிமன்றங்கள்:—**

மத்தியப் புலனாய்வுத் துறை வழக்குகளை விசாரிப்பதற்கான தனி நீதிமன்றங்கள் சென்னையில் இரண்டும், மதுரை மற்றும் கோயம்புத்தூரில் ஒவ்வொன்றுமாக மொத்தம் 4 நீதிமன்றங்கள் உள்ளன. மேற்படி மத்தியப் புலனாய்வுத் துறை வழக்குகளை விசாரிப்பதற்கான தனி நீதிமன்றங்கள் குறித்த செலவு 2008-2009 ஆம் ஆண்டிற்கு ரூ.1.58 கோடி ஆகும் என



2008 ஏப்ரல் 22]

மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், 2007-2008 நடப்பாண்டில் சென்னையில் ஒரு மத்தியப் புலனாய்வு வழக்குகளை விசாரிப்பதற்காக மேலும் ஒரு தனி நீதிமன்றம் ஏற்படுத்த அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.

**(உ) போதை மருந்துகள் மற்றும் மயக்கப் பொருட்கள் சட்டத்தின்கீழ் வழக்குகளை விசாரிக்கும் தனி நீதிமன்றம்:—**

போதை மருந்துகள் மற்றும் மயக்கப் பொருட்கள் சட்டத்தின்கீழ் வழக்குகளை விசாரணை செய்வதற்காக சென்னையில் கூடுதல் தனி நீதிமன்றம் ஒன்று உள்ளது. மேற்படி நீதிமன்றத்திற்கு 2008-2009 ஆம் ஆண்டில் ரூ.27.73 இலட்சம் செலவு ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**(ஊ) 1908 ஆம் ஆண்டு குற்றவியல் திருத்த சட்டத்தின்கீழ் நடுவர் மன்றம்:—**

1908 ஆம் ஆண்டு குற்றவியல் திருத்தச் சட்டத்தின்கீழ் நடுவர் மன்றம் ஒன்று சென்னை உயர் நீதிமன்றத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்படி 1908 ஆம் ஆண்டு குற்றவியல் திருத்தச் சட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்ட நடுவர் மன்றத்திற்கு 2008-2009 ஆம் ஆண்டிற்கு ரூ.29.30 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**(எ) சந்தனக் கட்டை கடத்தல் தொடர்பான குற்றங்களுக்கான தனி நீதிமன்றம்:—**

சந்தனக் கட்டை கடத்தல் தொடர்பான குற்றங்களை விசாரிப்பதற்காக வேலூர் மாவட்டத்திலுள்ள திருப்பத்தூரில் ஒரு தனி நீதிமன்றம் செயல்படுகிறது.

**(ஏ) இருப்பூர்தி நீதிமன்றங்கள்:—**

இந்திய இருப்பூர்திச் சட்டத்தின்கீழ், பயணச் சீட்டில்லா பயணம் மற்றும் ஏனைய குற்றங்கள் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்வதற்காக வேலூர், கடலூர், கோயம்புத்தூர், சேலம், மதுரை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் சென்னையில் எழும்பூர் மற்றும் சென்ட்ரல் ஆகிய இருப்பூர்தி நிலையங்களிலும், இருப்பூர்தி நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

**(ஐ) நடமாடும் நீதிமன்றங்கள்:—**

போக்குவரத்துத் தொடர்பான குற்றங்களை விசாரணை செய்வதற்காக சென்னையில் இரண்டு நடமாடும் நீதிமன்றங்கள் உள்ளன. அரசு 2006-2007 ஆம் ஆண்டில் மேலும் 10 நடமாடும் நீதிமன்றங்களுக்கு ஒப்பளிப்பு செய்துள்ளது.

**(ஓ) 1987 தடா சட்டம் சம்பந்தப்பட்ட தனி நீதிமன்றம்:—**

தடா சட்டம் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரணை செய்வதற்காக சென்னையில் இரண்டும் திருநெல்வேலி மற்றும் திருச்சிராப்பள்ளியில் ஒவ்வொன்றுமாக மொத்தம் நான்கு தனி நீதிமன்றங்கள் உள்ளன.

**(ஓ) இன்றியமையாப் பொருட்கள் சட்டம் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிக்க தனி நீதிமன்றங்கள்:—**

இன்றியமையாப் பொருட்கள் சட்டம் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரணை செய்வதற்காக சென்னை, மதுரை, கோயம்புத்தூர், புதுக்கோட்டை, சேலம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் ஒவ்வொன்று என்ற வகையில் ஆறு தனி நீதிமன்றங்கள் உள்ளன. மாவட்ட அமர்வு நீதிபதி தரத்தில் உள்ள முதன்மை அலுவலர் தரத்தில் நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன.

**(ஔ) குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரணை செய்வதற்காக சென்னை மற்றும் கோயம்புத்தூரில் கூடுதல் அமர்வு தனி நீதிமன்றங்கள்:—**

குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரணை செய்வதற்கு சென்னையில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றுமாக இரண்டு நீதிமன்றங்கள் உள்ளன. பொடா சட்டம், 2002 (மத்திய சட்டம் 15/2002) சம்பந்தப்பட்ட குற்றங்களுக்கான வழக்குகள் சென்னையில் பூந்தமல்லியில் உள்ள இத்தனி நீதிமன்றத்தில் நடத்தப்படுகின்றன.

**(க) இனக் கலவரம் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்வதற்காக மதுரையில் ஒரு அமர்வு நீதிமன்றம்:—**

இனக் கலவரம் தொடர்பான வழக்குகளை விசாரணை செய்வதற்காக மதுரையில் ஒரு அமர்வு நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது.

**(ங) மகளிர் நீதிமன்றங்கள்:—**

பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்கள் குறித்த வழக்குகளை விசாரிப்பதற்காக மட்டும், சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, சேலம், பெரம்பலூர் மற்றும் கடலூர் ஆகிய இடங்களில் தலா ஒவ்வொன்று வீதம் எட்டு மகளிர் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. அரசு 2007-2008 ஆம் ஆண்டில் செங்கல்பட்டு மற்றும் புதுக்கோட்டையில் மேலும் இரு மகளிர் நீதிமன்றங்களுக்கு ஒப்பளிப்பு செய்துள்ளது.



**(ச) மனித உரிமைகள் நீதிமன்றங்கள்:—**

மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1993 (மத்திய சட்டம் 10/1994)-ன்படி, மாநில அரசு, மாநிலத்திலுள்ள ஒவ்வொரு மாவட்ட அமர்வு நீதிமன்றங்களை மனித உரிமை நீதிமன்றங்களாக மனித உரிமை மீறல் குறித்த குற்ற வழக்குகளை விரைந்து விசாரிக்கும் பொருட்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இதுகுறித்த வழக்குகளை கையாளுவதற்குக் குற்றவியல் சிறப்பு வழக்குகள் நடத்துநர்களை அரசு நியமித்துள்ளது. மேற்கண்ட சட்டக் காப்புகளின்படி, உயர் நீதிமன்றத்தின் இசைவுடன் மாநிலத்திலுள்ள அனைத்து முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றங்களை மனித உரிமைகள் நீதிமன்றங்களாக அரசு குறிப்பிட்டுள்ளது. சென்னை நகர உரிமையியல் நீதிமன்ற முதன்மை நீதிபதியும், இப்பொருள்பற்றி கவனிப்பார். மேற்படி நீதிமன்றங்கள் 29-1-1996 முதல் செயல்பட்டு வருகின்றன. மாவட்ட நீதிமன்றங்களிலுள்ள அரசுக் குற்றவியல் வழக்குரைஞர்களை மனித உரிமைகள் நீதிமன்றங்களில் சிறப்புக் குற்றவியல் வழக்குரைஞர்களாக அரசு நியமித்துள்ளது. மேலும் சென்னை உயர் நீதிமன்ற வழிகாட்டுதலின்படி, மனித உரிமை மீறல் வழக்குகளைக் கவனிப்பதற்குப் பிரத்யேகமாக சிறப்புக் குற்றவியல் வழக்குரைஞர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

**(ஞ) வெள்ளை ரவி மற்றும் சேரா மீதான வழக்குகளை விசாரணை செய்வதற்கென்றே ஒரு கூடுதல் அமர்வு நீதிமன்றம் சென்னையில் செயல்பட்டு வருகிறது.**

**(ட) விரைவு நீதிமன்றங்கள்:—**

பதினொன்றாவது நிதி ஆணையத்தின் பரிந்துரையின்படி, நீதிமன்றங்களில் வழக்குகளின் தேக்க நிலையைக் குறைக்கும் பொருட்டு, குறிப்பாக மாவட்ட அமர்வு நீதிமன்றங்கள் மற்றும் சார்நிலை நீதிமன்றங்களில் 31-12-1998 வரை தேங்கியுள்ள குற்ற வழக்குகளில் விரைவாக தீர்வு காண்பதற்கு ஏதுவாக மாநிலத்தில் 49 விரைவு நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. ஆகஸ்ட் 2001-ல் பகுதி-1 திட்டத்தின்கீழ் 30 விரைவு நீதிமன்றங்களும், டிசம்பர் 2001-ல் பகுதி-2 திட்டத்தின்கீழ் 19 விரைவு நீதிமன்றங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்நீதிமன்றங்களுக்கு 2008-2009 ஆம் ஆண்டிற்கு ரூ.6.80 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த விரைவு நீதிமன்றங்கள் அமர்வு நீதிமன்ற வழக்குகளையே குறிப்பாகக் கவனிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளன. மேலும் மற்றப் பிரிவு வழக்குகளும் விரைவு

[2008 ஏப்ரல் 22

நீதிமன்றங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. மேலும், சென்னை உயர் நீதிமன்றம், விரைவு நீதிமன்றங்களுக்குக் கீழ்க்கண்ட வழக்குகளை முன்னுரிமை அடிப்படையில் முடித்து வைக்க அறிவுறுத்தியுள்ளது:—

(1) அமர்வு நீதிமன்ற வழக்குகள்

(2) மோட்டார் வாகன விபத்து வழக்குகள் மற்றும் நில எடுப்பு வழக்குகள்

(3) குற்றவியல் மேல் முறையீடுகள்

(4) குற்றவியல் மறு ஆய்வு வழக்குகள்

(5) உரிமையியல் வழக்குகள் (ரூபாய் ஐந்து இலட்சம் மதிப்பிற்கு மேற்பட்டது)

(6) உரிமையியல் மேல் முறையீடு வழக்குகள்

(7) பலதரப்பட்ட உரிமையியல் மேல்முறையீட்டு வழக்குகள் மற்றும் மூத்த குடிமக்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள்.

விரைவு நீதிமன்றங்களில் வழக்கு முடிக்கும் விகிதாச்சாரம், வழக்கு சம்பந்தப்பட்ட மேன்மைதங்கிய நீதிபதிகளால் மாதம் ஒருமுறை மேற்படி விரைவு நீதிமன்றங்கள், சிறப்பாகச் செயல்பட சீராய்வு செய்யப்படுகிறது. செப்டம்பர் 2007-ல் மேலும் 50 நடுவர் நீதிமன்றங்களை ஏற்படுத்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதைச் செயல்படுத்துவதற்கான வழிமுறைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**(ண) சென்னை அரசு தலைமை சொத்தாட்சியர்–பொறுப்பு சொத்தாட்சியர்:—**

சென்னையில் உள்ள அரசுத் தலைமைச் சொத்தாட்சியர்-பொறுப்பு சொத்தாட்சியர், மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் உள்ளவராவார். அவருக்கு உதவியாக உரிமையியல் நீதிபதி (இளநிலை) பதவித் தரத்தில் துணைத் தலைமைச் சொத்தாட்சியர்-பொறுப்புச் சொத்தாட்சியர் உள்ளார். அறக்கட்டளைகளின் சொத்துக்களுக்கும் மற்றும் உரிய வயதடையாதவர்கள் மற்றும் காலஞ்சென்றவர்களின் சொத்துக்களுக்கும் இவ்விரு அதிகாரிகளும் பொறுப்பு வகிக்கின்றனர். இவர்கள் அரசுத் தலைமைச் சொத்தாட்சியர் மற்றும் பொறுப்புச் சொத்தாட்சியர் சட்டத்தின் விதிமுறைகளின்படி அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றி வருகின்றார்கள். 2008-2009 ஆம் ஆண்டிற்கான



2008 ஏப்ரல் 22]

செலவு, தலைமைச் சொத்தாட்சியர் மற்றும் பொறுப்புச் சொத்தாட்சியர் அலுவலகத்தைப் பொறுத்தமட்டில் ரூ.63.72 இலட்சம் ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## IX. தமிழ்ச் சட்ட இதழ்:

13. மாதத்திற்கு இருமுறை "தீர்ப்புத் திரட்டு" என்னும் பெயரில் வெளிவரும் தமிழ்ச் சட்ட இதழை வெளியிடுவதற்கான பணியாளரமைப்புச் செலவு 2008-2009 ஆம் ஆண்டிற்கு ரூ.32.37 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. மாதமிருமுறை வெளிவரும் சட்ட இதழ் (தமிழ்) வழக்கறிஞர்கள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது.

## X. நீதித் துறைப் பயிற்சிக் கழகம்:

14. மாவட்ட நீதிபதிகள், சார்நிலை நீதிபதிகள், மாவட்ட உரிமையியல் நீதிபதிகள் மற்றும் குற்றவியல் நீதிபதிகள் போன்ற நீதித் துறை அதிகாரிகளுக்கும் மற்றும் நீதித் துறைப் பணியாளர்களுக்கும் பயிற்சி அளிப்பதற்காக நீதித் துறைப் பயிற்சிக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது. 2008-2009 ஆம் ஆண்டிற்கான உத்தேச செலவு ரூ.77.24 இலட்சம் ஆகும்.

## XI. சார்நிலை நீதிமன்றங்களைப் பரவலாக்குதல்:

15. குறிப்பிட்ட ஒரே இடத்தில் பல நீதிமன்றங்கள் செயல்படுவதைத் தவிர்க்கவும், வழக்காடும் பொதுமக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கவும், வெளியூர்களிலுள்ள சார்நிலை நீதிமன்றங்கள் பரவலாக்கப்பட்டுள்ளன. வெளியூர்களிலுள்ள உரிமையியல் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு, தற்போது, தமிழ்நாடு உரிமையியல் நீதிமன்றங்கள் சட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது. அதைப்போன்று சென்னை மாநகரத்தில் மாநகர உரிமையியல் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு, சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் சட்டத்தின்கீழும், சிறு வழக்குகள் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு, மாகாண சிறு வழக்குகள் நீதிமன்றச் சட்டத்தின் கீழும் வரையறுக்கப்பட்டுள்ளன. மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்களின் அதிகார வரம்பு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வட்டங்களுக்கும், சார்நிலை நீதிமன்றங்களின் அதிகார வரம்பு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உரிமையியல் நீதிமன்றங்களுக்கும் பரந்துள்ளது. திருவாரூர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களைப் பொறுத்தவரை

மாவட்ட அமர்வு நீதிமன்றத்தின் அதிகார வரம்பு, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வருவாய் மாவட்டங்களில் பரந்திருக்கிறது. குற்றவியல் நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில் அதன் அதிகார வரம்பு, குற்றவியல் நடைமுறைச் சட்ட விதித் தொகுப்பின்கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது. குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தின் அதிகார வரம்பானது, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காவல் நிலையங்களுக்குப் பரந்திருக்கிறது.

## XII. கணினிமயமாக்கல்:

### (அ) சென்னை உயர் நீதிமன்றத்தைக் கணினிமயமாக்குதல்:—

16. உயர் நீதிமன்றத்தில் கணினிமயமாக்கல் தேசிய தகவல் மையத்தின் ஒரு கிளை, உயர் நீதிமன்ற வளாகத்தில் அமைக்கப்பட்டதன்மூலம் துவங்கியுள்ளது. முதலில் 30 தன்னிச்சையாக இயங்காத (dumb terminals) மற்றும் 30 பிரிண்டர்கள் வழங்கப்பட்டு, பின்னர் அவை 60 Terminal-களாகவும் 30 பிரிண்டர்களாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளன. அவை உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளில் இடைக்கால மற்றும் இறுதி ஆணைகள் வெளியிடவும், தினசரி வழக்குகள் பட்டியல் (Daily Cause list) தயாரிக்கவும் பயன்படுத்தப்படுகின்றன. பின்னர் இவை 3 கணினிகள் மற்றும் 3 நகல் இயந்திரங்கள் மற்றும் தடையற்ற மின்சாரம் வழங்கும் சாதனத்தை மாநில அரசு நிதி ஆதாரத்திலிருந்து மாற்றப்பட்டுள்ளது .

17. மாண்புமிகு தலைமை நீதிபதி மற்றும் மாண்புமிகு நீதிபதிகளின் இல்ல அலுவலகப் பயன்பாட்டிற்குத் துணை பாகங்களுடன்கூடிய சொந்த பயன்பாட்டுக் கணினிகள் இணைய தள வசதியுடன் வழங்கப்பட்டுள்ளன. இதைத் தவிர, மாண்புமிகு நீதிபதிகளுக்கு மடிக்கணினிகளும் வழங்கப்பட்டுள்ளன. உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளைக் கொண்ட (See-online-full text) CD roms மாண்புமிகு தலைமை நீதிபதி மற்றும் மாண்புமிகு நீதிபதிகளின் இல்ல அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. குரல் அடையாளம் காணும் மென்பொருட்களும் இல்ல அலுவலகங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

18. மாண்புமிகு நீதிபதிகளின் நேர்முக உதவியாளர்கள் பிரிவுக்கு தீர்ப்புரைகள் மற்றும் ஆணைகள் ஆகியவற்றை வழங்க 63 கணினிகள், 2 சொ்வர்கள் (servers) மற்றும் 60 நகல் இயந்திரங்கள் அமைக்கப்பட்டு கணினிமயமாக்கப்பட்டுள்ளன. இதனை மாண்புமிகு தலைமை நீதிபதி





உயர் நீதிமன்றம், சென்னை அவர்கள் 24-12-2001-ல் துவங்கி வைத்தார். 17-1-2002 முதல் எல்லாத் தீர்ப்புரைகளும் கணினியில் மட்டுமே மாண்புமிகு நீதிபதிகளின் நேர்முக உதவியாளர்களால் தட்டச்சு செய்யப்படுகின்றன. 17-1-2002 முதல் அப்போதைய மாண்புமிகு நீதிபதிகளால் வெளியிடப்பட்ட எல்லாத் தீர்ப்புகளும் டிஜிட்டல் வடிவில் கிடைக்கின்றன.

19. உரிமையியல் வழக்குகள் தொடர்பான ஜாமீன் / முன்ஜாமீன் ஆணைகள் மற்றும் இடைக்கால ஆணைகள் போன்ற நாள்தோறும் பிறப்பிக்கப்படும் ஆணைகள் 2001 பிப்ரவரி திங்கள் முதல் கணினி மூலம் அதே நாளிலேயே வழங்கப்பட்டு வருகின்றன. முடிவுறாத வழக்குகள் மீதான ஆணையின் நகல்களும் ஒரு வார காலத்திற்குள்ளேயே வழங்கப்படுகின்றன.

20. சென்னை ஆயம் மற்றும் மதுரை ஆயம் ஆகிய இரண்டு இடங்களிலும் வழக்குரைஞர்கள் மற்றும் வழக்காடும் பொதுமக்களின் வசதிக்காக கணினிமயமாக்கப்பட்ட தகவல் மற்றும் அட்டவணை மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

### (ஆ) உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் கணினிமயமாக்கல்:—

21. உயர் நீதிமன்ற மதுரைக் கிளையின் பணிகளுக்கு ரூ.68.99 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு அக்டோபர் 2006-ல் கணினிமயமாக்கப்பட்டுள்ளது.

### (இ) கணினிமயமாக்கலுக்கு மைய அரசிடமிருந்து உதவி:—

22. (i) மைய அரசின் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்திலிருந்து 2006 ஜனவரியில் ரூபாய் 3.48 கோடி ஒப்பளிப்பு பெறப்பட்டு, மதுரைக் கிளையில் முதன்மை நடுவர் ஆயத்திற்கு (Principal Bench) மின்னணுக் காட்சித் திரைப் பலகைகள் நிறுவப்பட்டுள்ளன.

(ii) மேலும், சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் மதுரையில் உள்ள சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை இடைவழிக் கலந்தாய்வுக்காக (Video Conferencing) காட்சித் திரை கலந்துரையாடல் சாதனத்தை நிறுவுவதற்காக மாநில அரசு ரூ.12 இலட்சம் ஒதுக்கீடு செய்து, இச்சாதனம் நிறுவும் பணி நடைபெற்று வருகிறது.

(iii) புது டில்லியில் உள்ள சட்டம், நீதி மற்றும் நிறுவன விவகாரங்கள் (Law, Justice and Company Affairs) அமைச்சகம் (நீதித் துறை) சென்னை மாநகர நீதிமன்றங்களை வலைதளத்தில் இணைக்கவும்

கணினிமயமாக்கவும் (Computerisation and networking) தேசிய தகவல் மையத்தால் உருவாக்கப்பட்ட ரூ.2.19 கோடி திட்டத்திற்கான கருத்துருவை அனுப்பியுள்ளது. அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்டதில் எழும்பூர், சைதாப்பேட்டை, ஜார்ஜ் டவுன் ஆகிய இடங்களில் உள்ள மாநகரக் குற்றவியல் நீதிமன்றங்களுக்குக் கணிணி வன்பொருள் (Hardware) வழங்கப்பட்டு அவை வலைதளத்தில் இணைக்கப்பட்டு பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மேலும் மாநகர நீதிமன்றங்கள் இணையதளத்தில் ISDN வசதியின்மூலம் இணைக்கப்படவுள்ளன.

**(iv) சார்பு நீதிமன்றங்களில் கணினிமயமாக்கல் :—**

மத்தியச் சட்டம் மற்றும் நீதி அமைச்சகம், மின்னணுத் திட்டம் (E-to devise)-ஐ உருவாக்கி நாட்டில் உள்ள அனைத்து நீதிமன்றங்களையும் ஒன்றுடன் ஒன்று இணைக்க செயல் திட்டம் (blue print) தயாரித்துள்ளது. அதன்படி மின்னணுக் குழு (e-committee) அதற்கான திட்டத்தை உருவாக்கி அதனைச் செயற்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது. அதன் தொடக்கமாக 2007 ஜூலை 9-ல் மேதகு இந்திய குடியரசுத் தலைவர் மின்னணு நீதிமன்றத் (e-courts) திட்டத்தை நாட்டில் உள்ள நீதித் துறை அதிகாரிகளுக்கு மடிக்கணினி வழங்கி துவக்கி வைத்தார். தமிழ்நாட்டில் 695 நீதித் துறை அதிகாரிகளுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

23. மேலும் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு கணினி செர்வர் (Server) அறை மற்றும் நீதி முறை பணி மையம் (Judicial Service Centre) அமைக்க இடம் ஏற்படுத்த உயர் நீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள், சென்னை தேசிய தகவல் மையத்தின் துணை இயக்குனர் ஜெனரல் (Deputy Director General NIC) மற்றும் பொதுப் பணித் துறைச் செயலாளர் ஆகியோர் அடங்கிய உயர்மட்டக் குழு மற்றும் மாவட்ட அளவிலான குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கணினி செர்வர் அறைகள், நீதிமன்றப் பணிகள் மையங்கள் தெரிவு செய்வதற்காக மாவட்ட அளவிலான குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன. இப்பணி நிறைவானதும் கணினிகள் வாங்கி வழங்கும் பணியைத் தொடங்க தேசிய தகவல் மையம் உறுதி செய்துள்ளது. எனவே இடம் தெரிவு செய்யும் பணிக்கு மதிப்பீடு அனுப்புமாறு அனைத்து மாவட்ட முதன்மை நீதிபதிகள் கேட்டுக்கொள்ளப்பட்டு அவர்களின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.



## XIII. உயர் நீதிமன்ற அனைத்து நடவடிக்கைகளிலும் தமிழ் மொழியை அறிமுகப்படுத்துதல்:

24. மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தின் நடவடிக்கைகளில் தமிழ் மொழியை அறிமுகப்படுத்திட இந்த அரசு ஏற்கெனவே நடவடிக்கை மேற்கொண்டு அதற்கான செயற்குறிப்பை மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது. இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டு, 6-12-2006 அன்று சட்டமன்றப் பேரவையில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மாண்புமிகு உயர் நீதிமன்றத்தின் நடவடிக்கைகளில் தமிழை அறிமுகப்படுத்திட வேண்டும் என்ற அரசின் கொள்கை முடிவினை நடைமுறைக்குக் கொண்டுவர மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மத்திய அரசின் சாதகமான ஆணையைப் பெற்றிட எல்லாவித முயற்சிகளையும் தொடர்ந்து மேற்கொண்டுள்ளார்.

## XIV. மத்திய அரசு சார்புத் திட்டத்தின்கீழ் நீதிமன்றங்களின் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான திட்டம்:

25. நீதிமன்றங்களின் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக 5 ஆண்டுகளில் நீதிமன்றத்திற்குத் தேவையான கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்ட ரூ.213 கோடி அளவிலான தொலைநோக்குத் திட்டத்தை மத்திய அரசிற்கு இவ்வரசு கடந்த 2006 ஆம் ஆண்டு அனுப்பியுள்ளது.

மத்திய அரசு, ஒவ்வோர் ஆண்டும் நீதிமன்றங்களின் உட்கட்டமைப்பை மேம்படுத்த, மத்திய அரசு சார்புத் திட்டத்தின் கீழ் நிதி உதவி அளித்து வருகிறது. நவம்பர் 2006-ல் ரூ.2.45 கோடி ரூபாய் பெறப்பட்டு, அதற்கு இணையாக ரூ.2.51 கோடி மாநில அரசின் பங்காக அளிக்கப்பட்டு, நீதிமன்றங்களுக்கான கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளின் குடியிருப்புகள் கட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் 2007 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் ரூ.2.48 கோடி தொகை மத்திய அரசிடமிருந்து பெற்று, அதற்கு இணையாக அரசு ரூ.2.51 கோடியை ஒதுக்கீடு செய்து செங்கல்பட்டு மாவட்டம் (காஞ்சிபுரம் மாவட்டம்) ஆலந்தூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டவும் திண்டுக்கல் மாவட்டத்தில் பழனியில் குற்றவியல் நீதிமன்றத்திற்கான பதவியோடு இணைந்த குடியிருப்புகள் கட்டவும், கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் சார்பு நீதிமன்றத்திற்கான பதவியோடு

இணைந்த குடியிருப்புகள் கட்டவும் ரூ.4.99 கோடி செலவில் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டது. மேலும், 2007-2008 ஆம் ஆண்டின் நிதியாண்டு இறுதியில் மத்திய அரசு இத்திட்டத்தின்கீழ் ரூ.6.76 கோடி நிதி பெறப்பட்டுள்ளது. அதற்கு இணையான தொகை மாநில அரசின் பங்கினையும் இணைத்து நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்ட ஆணை பிறப்பிக்கப்படும்.

## XV. தமிழகத்திலுள்ள நீதிமன்றங்களில் உட்கட்டமைப்பு வசதிகள்:

26. மாநிலத்தில் உள்ள சார்நிலை நீதிமன்றங்களில் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகள் நான்கு ஆண்டுகளில் மேற்கொள்ள ரூ.300 கோடி ஒதுக்க அரசு 2007-2008-ல் கொள்கை முடிவு எடுத்து, அதன்படி 2007-2008-ல் மட்டும் நீதிமன்றக் கட்டடங்கள் கட்ட ரூ.90.30 கோடியும் நீதிமன்றத் தலைமை அலுவலர்களுக்குக் குடியிருப்புகள் (Quarters for Presiding Officers) கட்ட ரூ.11.12 கோடியும் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. அதன் விவரங்கள் இணைப்பு I(ஈ)-ல் உள்ளது.

27. இது தவிர 2007-2008-ல் புதிதாக 77 நீதிமன்றங்கள் ஏற்படுத்த அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது. இது மாநிலத்தில் அண்மைக் காலங்களில் இல்லாத ஒன்று. இதன் விவரங்கள் இணைப்பு I(உ)-ல் உள்ளது. நிதிநிலை அறிக்கை 2008-2009-ல் கூறியபடி உட்கட்டமைப்பு வசதிகளுக்காக அரசு 2008-2009-ல் ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யும்.

## XVI. நிலுவையிலுள்ள வழக்குகள்:

28. மாநிலத்தில் உள்ள பல்வேறு நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகள் தொடர்ந்து அதிகரித்துள்ளது கவலைக்குரியது. உயர் நீதிமன்றம் சென்னை, உயர் நீதிமன்றக் கிளை மதுரை மற்றும் சார்நிலை நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகள் பற்றிய விவரங்கள் இணைப்பு I(ஊ)-ல் மற்றும் I(எ)-ல் உள்ளன.

29. அதிகமான நிலுவையில் உள்ள வழக்குகளை விரைவில் முடிப்பதற்காக உயர் நீதிமன்றத்தின் செயற்குறிப்பை அரசு ஏற்றுக்கொண்டு 2007-2008-ல் மாநிலத்தில் 56 மாலை நேர நீதிமன்றங்கள் ஏற்படுத்த ஒப்பளித்துள்ளது. இதில் 37 மாலை நேர நீதிமன்றங்கள் செயல்படுத்தப்பட்டு இவை ஆறு மாதங்களில் 57,322 சிறு குற்ற வழக்குகளை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளன.



## XVII. பகுதி-2 திட்டம், 2008-2009:

30. 2008-2009 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டத்தின்கீழ், கீழ்க்காணும் திட்டங்கள் செயல்படுத்தப்படும்:

| வ. எண் | திட்டத்தின் பெயர் | ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வேலூர் தொழிலாளர் நீதிமன்றத் தலைமை அலுவலர் மற்றும் வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரியில் நீதித் துறை குற்றவியல் நீதிபதி-2 மற்றும் நீதித் துறை குற்றவியல் நீதிபதி-5 ஆகியோருக்குக் குடியிருப்பு கட்டுதல் | 75.63 |
| 2. | தேனி மாவட்டம், பெரிய குளம் சார்பு நீதிபதிக்குக் குடியிருப்பு கட்டுதல் | 19.58 |
| | மொத்தம் | 95.21 |

## XVIII. தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழு:

31. சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினர்களுக்கு இலவசமாக, பொருத்தமான சட்டப் பணிகளை வழங்குவதற்கும், பொருளாதார அல்லது ஏனைய இயலாமைகள் காரணமாக யாதொரு குடிமக்களுக்கும் நீதி கிடைப்பதற்கான வாய்ப்புகள் மறுக்கப்படக் கூடாது என்பதை உறுதி செய்வதற்கும், ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சமுதாயத்தின் ஏனைய வறிய பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கும் அவர்களுடைய உரிமைகள் குறித்துப் பயிற்றுவிப்பதற்கும் பல்வேறு சமூக நலச் சட்டங்கள் மற்றும் நிருவாக ஆணைகளில் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பயன்கள் மற்றும் சலுகைகளை அவர்கள் பெற இயலச் செய்வதற்கும், தகராறுகளுக்குத் தீர்வு காணும் ஒரு மாற்று அமைப்பாக சட்டப்படியான அடிப்படையில் மக்கள் நீதிமன்றங்களை ஏற்படுத்துவதற்கும் 1987 ஆம் ஆண்டு சட்டப் பணிகள் ஆணைக் குழுக்கள் சட்டம் (59/1994 ஆம் எண் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறு) இயற்றப்பட்டது.

## அமைப்பு:—

32. தமிழ்நாட்டில் மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழு மற்றும் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழு முறையே மே 1997 மற்றும் நவம்பர் 1997 முதல் செயல்பட்டு வருகின்றன. கடந்த இருபது ஆண்டுகளாகச் செயல்பட்டு வந்த இலவச சட்ட உதவி மற்றும் ஆலோசனை வாரியத்தால் வகுக்கப்பட்ட பல்வகையான சட்ட உதவித் திட்டங்கள் அனைத்தும் இப்புதிய ஆணைக் குழுவின் வரம்புக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. எனவே முந்தைய சட்ட உதவி வாரியத்திற்கான அனைத்துத் திட்டங்களையும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தத் தீர்மானித்து முந்தைய சட்ட உதவி ஆணைய சுற்றறிக்கைகள், விதிகள், வழிகாட்டு விதிமுறைகள் ஆகியவைகளை புதிய சட்ட உதவித் திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு புதிய குழுமத்தால் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும்.

## செய்து வரும் பணிகள்:—

33. சட்டப் பணிகள் ஆணைக் குழு, சமூகத்தின் பல்வேறு பிரிவுகளுக்கும் ஆலோசனை மற்றும் சமரச மையங்கள் பெண்களுக்கான சமரச மையங்கள், குற்ற வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டோர், நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் மற்றும் தண்டனை பெற்றவர்களுக்கும்கூட சட்ட உதவிகள் ஏற்பாடு செய்வதன்மூலம் அவர்களின் உரிமையைப் பாதுகாப்பதுடன், சுரண்டலில் இருந்தும் காக்கின்றது. அரசால் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத் திட்ட உதவிகளை பொதுமக்கள் பெறவும் இந்த ஆணைக் குழு உதவுகிறது.

34. மோட்டார் வாகன விபத்து வழக்குகளில் பாதிப்புக்குள்ளானோரின் குடும்பங்கள், சட்டத்தின்கீழ் அதிகபட்ச பலனைப் பெறும் வகையில், மனு தாக்கல் செய்வதற்கு, இந்த ஆணைக் குழு உதவி புரிகிறது. மேலும் அக்குடும்பத்தாருக்குக் கிடைக்கும் இழப்பீட்டு நிதியினை முதலீடு செய்வதற்கான ஆலோசனைகளை வழங்குவதன்மூலமும் உதவி புரிகிறது.

35. லோக் அதாலத், மக்கள் நீதிமன்றம் இப்புதிய சட்டயியற்றலின் கீழ் சட்டபூர்வமான தகுதியினைப் பெற்றுள்ளது. லோக் அதாலத் வழங்கும் இழப்பீடு (அவார்டு) ஒவ்வொன்றும் உரிமையியல் நீதிமன்ற [illegible]ணக்கு அல்லது வழக்கைப் பொறுத்து ஏனைய பிற நீதிமன்ற [illegible]க இணையானதாகக் கருதப்படும். அரசு தற்போது





(சமீபத்தில்) லோக் அதாலத்மூலம் ஏற்படும் தீர்வுகள் அல்லது சமரசங்களில், நீதிமன்றக் கட்டணத்தைத் திரும்பப் பெறும் வகையில் நீதிமன்றக் கட்டண முத்திரைச் சட்டத்தைத் திருத்தியுள்ளது. அக்டோபர் 2007 முதல் உயர் நீதிமன்ற சட்டப் பணிகள் ஆணைக் குழு, நிரந்தரமான மற்றும் தொடர் லோக் அதாலத்துகளை நாள்தோறும் நடத்தி வருகிறது. சட்ட உதவி மற்றும் சட்ட அறிவு விளக்க முகாம்களை நடத்தி வருவதுடன் அம்முகாம்களுக்கு வருவாய்த் துறை மற்றும் காவல் துறையினைச் சேர்ந்த அலுவலர்களும் அழைக்கப்படுகின்றனர். இம்முகாம்கள், மைய மற்றும் மாநில அரசுகளின் சமூகப் பொருளாதார சட்டயியற்றல்கள் / சட்ட உரிமைகள் குறித்து ஊரகப் பகுதியைச் சார்ந்த மக்களை விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

## சட்ட உதவி ஆலோசனைத் திட்டம்:—

36. இத்திட்டத்தின்கீழ் ஜாமீனில் விடுவிக்கப்படுவதற்கு மற்றும் காவலில் வைப்பதற்கான விண்ணப்பங்களுக்கு மறுப்பு தெரிவிப்பதற்காகவும், குற்றச்சாட்டுக்கு எதிராக, தன்னிலை விளக்கம் அளிப்பதற்கான விசாரணையின்போதும், பாதகமான ஆணைகள் பிறப்பிக்கப்படும் வழக்குகளில் மேல்முறையீடுகள் அல்லது சீராய்வு மனுக்கள் தாக்கல் செய்வதற்கும், சட்ட உதவி வழங்குவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

37. சட்டப் பணிகள் ஆணைக் குழு, ஒரு சட்ட உதவித் தொலைபேசி இணைப்பினை அமைத்துள்ளது. அனைத்து வேலை நாட்களிலும் தொலைபேசி அழைப்புகளைக் கவனிப்பதற்கும், காலையிலும், மாலையிலும் அடிப்படையில் கருத்துகளை அளிப்பதற்கும் அனைத்து வேலை நாட்களிலும் வழக்குரைஞர்கள் பணிக்கு அமர்த்தப்படுகின்றனர். இது மட்டுமன்றி, வழக்காடுபவர்கள் (litigant) (வழக்கு தொடர்ந்தவர்கள் மற்றும் தங்கள்மீது வழக்கு தொடரப்பட்டுள்ளவர்கள்) தங்களின் வழக்கு குறித்து தொழில் ரீதியான உதவியினைப் பெற சட்ட உதவி மையங்களையும் (Legal aid clinic) நேரில் அணுகுகின்றனர்.

38. மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழு, தனது பல்வேறு திட்டங்கள், கலந்துரையாடல்மூலம், டிசம்பர் 2007 இல் துவங்கியதிலிருந்து 10 இலட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு உதவி செய்ய முடிந்திருக்கிறது. மேலும் இக்குழு மூலம், நீதிமன்றத்திற்கு வெளியே 11,238 குடும்பப் பிரச்சினைகள் உட்பட ஏறத்தாழ 30,000 வழக்குகளில் தீர்வு காண முடிந்திருக்கிறது.

## XIX. குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம்:

39. மாநிலத்தில் குற்ற வழக்குகளை திறம்பட நடத்தி நிருவகிப்பதுடன், மாநிலம் முழுவதிலுமுள்ள பெருநகரக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள், குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் மற்றும் தலைமை நீதித் துறை நடுவர் நீதிமன்றங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் சட்ட அலுவலர்கள் குற்றவியல் வழக்குரைஞர்கள் ஆகியோரின் பணிகளைக் கண்காணிப்பதே குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககத்தின் தலையாய நோக்கமாகும். இவ்வியக்ககம் 1984 ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டு பின்னர் 1992 ஆம் ஆண்டு புத்தாக்கம் செய்யப்பட்டது. காவல் துறைத் தலைவர் பதவித் தரத்தில் உள்ள ஓர் இயக்குநர் இத்துறைக்குத் தலைமை வகிக்கிறார்.

### அமைப்பு முறை:—

40. தலைமையிடத்தில் குற்ற வழக்குத் தொடர்வுத் துறை இயக்குநருக்கு குற்ற வழக்குத் தொடர்வு இணை இயக்குநர் உதவி செய்கிறார். இவர் இத்துறையின் பொது நிருவாக மேற்பார்வைப் பணிகளைச் செய்கிறார். வட்டாரங்களில் 11 குற்ற வழக்குத் தொடர்வு துணை இயக்குநர்கள் மற்றும் 14 குற்ற வழக்குத் தொடர்வு உதவி இயக்குநர்கள் தம்முடைய மாவட்டங்கள் தொடர்பான பணிகளை மேற்பார்வை செய்கின்றனர். இது தவிர தலைமை நீதித் துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களைச் சார்ந்த 25 அரசு கூடுதல் குற்றவியல் வழக்கு நடத்துநர்களும் மற்றும் பல்வேறு குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களைச் சார்ந்த அரசு உதவி குற்றவியல் வழக்கு நடத்துநர்கள் நிலை 1 மற்றும் 2 ஆகியோர்களும் தாம் சார்ந்த நீதிமன்றங்களில் குற்ற வழக்குகள் தொடரும் பணியைக் கவனிக்கின்றனர்.

### குற்றவியல் வழக்குத் தொடரும் அதிகாரிகளின் பணிகள்:—

41. அரசுக் உதவிக் குற்றவியல் வழக்கு நடத்துநர்களின் பணியினை மேற்பார்வை செய்வதோடு, துணை இயக்குநர்கள் மற்றும் உதவி இயக்குநர்கள், சட்டக் கருத்துகள் வழங்குதல், குற்ற அறிக்கை வரைவு செய்தல் போன்ற பணிகளையும் செய்கின்றனர். அரசு கூடுதல் குற்றவியல் வழக்கு நடத்துநர்கள் உதவிக் குற்றவியல் அமர்வு நீதிமன்றங்களில் அரசின் சார்பாக வழக்குகளை நடத்துகின்றனர். அரசு உதவிக் குற்றவியல் வழக்கு நடத்துநர்கள் சில ஒழுக்கக் கண்காணிப்பு மற்றும் ஊழல் தடுப்பு, பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துகள் மற்றும் குற்றப் புலனாய்வுத் துறையின்



குற்றப் பிரிவு (CBCID) போன்ற பிரிவுகளுக்குச் சட்ட உதவி செய்வதற்காக முகமையில் நியமிக்கப்படுகின்றனர்.

### உரிமைக் கால அடிப்படையில் நியமிக்கப்படும் சட்ட அலுவலர்கள்:—

42. அமர்வு நீதிமன்றங்கள், கூடுதல் அமர்வு நீதிமன்றங்கள் மற்றும் எல்லா உரிமையியல் நீதிமன்றங்களில் குற்ற வழக்குத் தொடர்வுப் பணிகளைக் கவனிக்க உரிமைக் கால அடிப்படையில் (tenure basis) சட்ட அலுவலர்களை அரசு நியமிக்கிறது. எனினும் குற்ற வழக்குத் தொடர்வுத் துறை இயக்குநர் அனைத்துச் சட்ட அலுவலர்களின் பணிகளும் காலமுறை அடிப்படையில் (periodical basis) கண்காணிக்கப்பட வேண்டும்.

### கணினிமயமாக்குதல்:—

43. குற்ற வழக்கு தொடர்வுத் துறை இயக்ககத்தைக் கணினிமயமாக்க ரூ.8.55 இலட்சம் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் குற்ற வழக்குத் தொடர்வு அலுவலர்களின் பணிகளைத் திறம்பட கண்காணிக்க வட்டார துணை இயக்குநர் அலுவலகங்களையும் மற்றும் உதவி இயக்குநர் அலுவலகங்களையும் தலைமையிடத்துடன் இணைக்க (Inter-link) நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### புதிய திட்டங்கள்:—

44. குற்ற வழக்குத் தொடர்வுத் துறை இயக்ககத்திற்காகக் கீழ்க்காணும் திட்டங்கள், 2008-2009 ஆம் ஆண்டிற்கான பகுதி-II திட்டத்தில் சேர்க்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன:

| வ. எண் | திட்டத்தின் பெயர் | ரூபாய் (இலட்சங்களில்) |
|---|---|---|
| 1. | குற்ற வழக்குத் தொடர்வுத் துறை இயக்குநரின் பயன்பாட்டிற்காக புதிய அலுவலகச் சீருந்து வாங்க | 5.00 |
| 2. | 10 கணினிகள் (Desktop computers) துணை பாகங்களுடன் வாங்க | 3.50 |
| 3. | கேபிள் மூலம் LAN அமைக்க | 0.75 |
| 4. | ஒரு மடியமர் கணினி வாங்குதல் | 0.75 |
| | மொத்தம் | 10.00 |

## XX. அரசு வழக்காடும் துறை, உயர் நீதிமன்றம், சென்னை:

45. 1997 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் வெளியிடப்பட்ட அரசு ஆணைப்படி, அரசு வழக்காடும் துறை அமைக்கப்பட்டது. தமிழ்நாடு அரசின் மாநில அரசு தலைமை வழக்குரைஞர், அதன் துறைத் தலைவராவார். அரசுக் கூடுதல் தலைமை வழக்குரைஞர்கள் I-V, அரசுக் குற்றவியல் வழக்கறிஞர், கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர், அரசு வழக்குரைஞர் மற்றும் சிறப்பு அரசு வழக்குரைஞர்கள் அனைவரும் மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர் அவர்களின் கட்டுப்பாட்டில் பணிபுரிகின்றனர்.

46. தற்சமயம் சென்னை உயர் நீதிமன்றத்திலுள்ள அரசு வழக்காட்டுத் துறையில் 10 பகுதி அலுவலகங்களையும், 100-க்கும் மேற்பட்ட சட்ட அலுவலர்களையும் 200 அலுவலகப் பணியாளர்களையும் கொண்டுள்ளது. சென்னை உயர் நீதிமன்ற மாநில அரசின் தலைமை வழக்குரைஞர், மதுரைக் கிளை உயர் நீதிமன்றத்தில் முக்கியமான வழக்குகளுக்காக வழக்காடுகிறார். மதுரைப் பிரிவு அலுவலகங்களின் பணிகளைச் சீரமைக்கும் பொருட்டும், சட்ட அலுவலர்கள் தங்கள் கடமைகளையும், பொறுப்புகளையும், சிறந்த முறையில் ஆற்றிடும் பொருட்டும், அரசுக் குற்றவியல் வழக்குரைஞரும் உயர் நீதிமன்ற வழக்கறிஞரும் அவரவர் சம்பந்தப்பட்ட பிரிவு அலுவலகங்களை அவ்வப்போது பார்வையிடுகின்றனர்.

47. சிறந்த முறையில் திறம்படப் பணிகளை மேற்கொள்ளுவதற்காக அரசுத் தலைமை வழக்குரைஞர் அலுவலகம் மற்றும் இதர சட்ட அலுவலர் அலுவலகங்களுக்கான போதிய உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தர அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

### பகுதி—II திட்டங்கள்:—

48. அரசு வழக்காடும் துறைக்கு, 2008-2009 பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் அரசு வழக்காடு துறைக்கான அறைகலன்கள் இணையதள வசதியுடன்கூடிய மடியமர் கணினிகள், நகல் எடுக்கும் இயந்திரங்கள் மற்றும் சட்டப் புத்தகங்கள் வாங்குவதற்காக ரூ.43.82 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## XXI. முடிவுரை:

வழக்காடும் பொது மக்களுக்கு, விரைவாக நீதி பெறுதலை உறுதி செய்யும் வண்ணம் நீதிமன்றங்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை இந்த அரசு தொடர்ந்து வழங்கும்.





| உரிமைகுற்றவியல் நீதிமன்றங்கள் | |
|---|---|
| சென்னை நகர் | வெளியூர் |
| யியல் ள் சென்னை நகரத்துக்குள் எழும் ரூபாய் பத்து இலட்சத்திற்கும் அதிகமா மதிப்புள்ள வழக்குகளை உயர் நீதிமன்றம் விசாரிக்கின்றது<br><br>மாநகர உரிமையியல் நீதிமன்றம்<br><br>சிறு வழக்குகள் நீதிமன்றங்கள் | மாவட்ட நீதிமன்றங்கள், தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள், குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் |

ண்க)

முடிவு மற்றும் நிலுவையில் உள்ள வழக்குகள் குறித்த அட்டவணை
மம், சென்னை

| குற்றவியல் வழக்குகள் | | | | |
|---|---|---|---|---|
| ...பரி ...ல் ...ன்று ...ம்ப ...ப்பு | புது வழக்குகள் | தீர்க்கப்பட்டவை | டிசம்பர் 31 அன்று நிலுவை விவரம் | மொத்த நிலுவையில் உள்ள சிவில் மற்றும் குற்றவியல் வழக்கு விவரம் |
| ...579 | 42225 | 45646 | 33258 | 347820 |
| ...258 | 53213 | 51738 | 34733 | 368309 |
| ...733 | 64615 | 84140 | 15208 | 239313 |
| ...208 | 58272 | 55559 | 17921 | 267866 |
| ...921 | 49535 | 45956 | 21500 | 310425 |
| ...500 | 47652 | 42738 | 26414 | 342510 |
| ...414 | 56272 | 53274 | 29412 | 365496 |

| ஆண்டு | வழக்குகள் | | |
|---|---|---|---|
| | ...க்கப்பட்டவை | டிசம்பர் 31 அன்று நிலுவை விவரம் | சிவில் மற்றும் குற்றவியல் வழக்குகளின் மொத்த விவரம் |
| 2004 | 8598 | 5108 | 30893 |
| 2005 | 18118 | 7668 | 53126 |
| 2006 | 15651 | 7571 | 64448 |
| 2007 | 16841 | 6596 | 63336 |

## இணைப்பு II

*(110 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 33—சட்டத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009

**முன்னுரை :**

இந்திய அரசமைப்புச் சட்டம் என்பது நாட்டின் மிக உயர்ந்த சட்டமாகும்; அதன் வகைமுறைகளை மீறுகிற வகையில் அமைந்த சட்டம் எதனையும் செயற்படுத்த இயலாது. சட்டம் என்பது மனித சமுதாயத்தின் ஒரு பகுதியே ஆகும். சமுதாயத்தின் நலனை மேம்படுத்துவதும் பாதுகாப்பதுமே அதன் நோக்கமாகும். மக்கள் நல அரசு ஒன்றில் மற்றும் மக்கள் நல சமுதாயம் ஒன்றில் மனிதனின் ஒவ்வொரு அலுவலிலும் சட்டமானது மிக முக்கியமானதொரு பங்கினை ஆற்றுகிறது. சமூகப்பொருளாதார வளர்ச்சியை எய்துவதற்குச் சட்டமானது முக்கியமானதொரு கருவியாகப் பயன்படுகிறது. இன்றையதினம் சட்டமானது சமூகக் கட்டுப்பாட்டிற்கான ஒரு கருவியாக மட்டுமே கருதப்படாமல் சமுதாய மாற்றத்திற்கான ஒரு கருவியாகவும்கூட கருதப்படுகிறது.

மிக அதிக எண்ணிக்கையிலான மக்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்து அவர்களை மேம்படுத்த சட்டங்கள் முயற்சி செய்யவேண்டும். இந்த நோக்கத்தை எய்துவதற்காகத் தனி மனிதனின் நலமானது சமுதாய நலத்துடன் இணைந்தவாறு சம நிலையில் இருத்தல் வேண்டும். சமுதாயத்திற்கு மாறான நடத்தையானது, நலம் பயக்காது என்ற நிலையை ஏற்படுத்தும் வகையில் சட்டங்கள் இயற்றப்படுதல் வேண்டும். சட்டம் என்பது சமுதாய மாற்றத்திற்கான ஒரு கருவி ஆகும்; சட்டமன்றமானது, சட்டம் இயற்றும் நடவடிக்கையைக் கட்டுப்பாட்டில் வைத்துள்ள அதிகார அமைப்பாகும். குறிப்பிட்டதொரு சமுதாயத் தேவையின் அடிப்படையில் சட்டமொன்று இயற்றப்படுவதானது, அந்தச் சமுதாயத் தேவையைக் கோருகிறவர்களிடம் அமைந்த ஆர்வத்தின் சட்டமுறையிலான ஆதரவினைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது. கருத்தியல் நோக்கில் பார்த்தால் சட்டத்தை உருவாக்குபவர்களாக இருக்கிற சட்டம் இயற்றுபவர்கள், சமுதாயத்தில் மதிப்பீட்டுத் தகுதிகளைப்

[2008 ஏப்ரல் 22

பங்கீடு செய்வது. சமூகம் சார்ந்த புதிய முயற்சிகளை ஒருங்கிணைத்து மேம்பாடு செய்வது, சமூகம் சார்ந்த நிலையில் பெறும் அனுபவத்தைச் சமன் செய்து சரி செய்வது ஆகிய பணிகளை ஆற்றுவது தொடர்பான நபர்களாக இருத்தல் வேண்டும். அவர்களுக்கு விருப்பத்தெரிவு செய்வதற்கு வாய்ப்பிருந்தாலும், அவர்கள் சமூக நலனுக்காகப் பணியாற்றுவதால் தமது உணர்ச்சிக்கு இடம் கொடாதவர்களாக இருத்தல் வேண்டும்.

இந்த அரசின் சட்டத் துறையானது, சமுதாய நலனிற்கான அரசின் கொள்கைகளைச் செயற்படுத்துவதற்காக மேற்சொன்ன கொள்கைகளைக் கவனத்திற்கொண்டு பல்வேறு சட்டங்களை இயற்றுகிறது.

அரசின் கொள்கைகளை நிறைவேற்றுவதற்காக சட்டங்கள் தேவைப்படும்போது, சட்டத் துறை, தொடர்புடைய துறையுடன் ஒருங்கிணைந்து அக்கொள்கைகளுக்கு சட்டவடிவமளித்து சட்டமுன்வடிவுகளை உருவாக்குகிறது.

சட்டப் பேரவை சட்ட வரைவிற்கு ஒப்புதல் அளித்த பின்னர், ஆளுநரின் அல்லது குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்றபின் அது சட்டமாகும் வரையில் சட்டத் துறையின் பணி தொடர்கிறது. சட்டப் பேரவை ஒத்திவைக்கப்பட்டு, அமர்வில் இல்லாத காலங்களிலும் அரசமைப்பின் 213-ஆவது உறுப்பின்படி அவசரச் சட்டம் வாயிலாக சட்டங்களை அவசரத் தேவைக்கேற்ப உருவாக்குகிறது. சட்டத் துறையின் பணி அவசரச் சட்டத்திற்கான முன்வரைவுகளை அதன் நோக்கத்திற்கேற்ப தயாரித்து அதை பிரகடனப்படுத்தும் வரையில் தொடர்கிறது.

மேலும் சட்டத் துறையின் முக்கியப் பணியானது, சட்டமன்றப் பேரவைச் செயலகம் உட்பட, தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகளுக்கும் சட்டப் பிரச்சினை தொடர்பாக ஆலோசனை வழங்குவதாகும்.

இவை தவிர, சட்ட விதிகள், அறிவிக்கைகள், ஆணைகள் மற்றும் மாநில அரசு ஒரு தரப்பினராக இருக்கிற ஆவணங்கள் ஆகியவற்றையும் அவற்றின் சட்ட வகைமுறைகள் தொடர்பாகவும் சட்டத் துறை கூர்ந்தாய்வு செய்து அறுதி செய்கிறது.



2008 ஏப்ரல் 22]

மாநில அரசு தரப்பினராக உள்ள அனைத்து வழக்குகளிலும், உறுதிமொழி ஆவணங்களின் வரைவும், எதிர் உறுதி மொழி ஆவணங்களின் வரைவும், அவற்றிற்கான வரைவு மறுமொழிகளும் சட்டத் துறையால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு அறுதி செய்யப்படுகின்றன.

மேலும், பின்வருவன தொடர்பான நிருவாகப் பணிகளையும் சட்டத் துறை செய்து வருகிறது:—

(1) சட்டக் கல்வி

(2) சான்றுறுதி அலுவலர்கள்

(3) மாநிலச் சட்ட ஆணையம்

(4) மாநில ஆட்சி மொழி (சட்டப்) பிரிவு

(5) தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்

**சட்டக் கல்வி:**

சட்டக் கல்வியின் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் சட்டக் கல்வித் துறையானது 1953 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, தொடர்ந்து பணியாற்றி வருகிறது. இத்துறை தோற்றுவிக்கப்பட்ட பிறகு, தமிழ்நாட்டில் சட்டக் கல்வியின் தரம் அனைத்து வகைகளிலும் முன்னேற்றம் அடைந்துள்ளதோடு, மென்மேலும் முன்னேற்றமடைய இத்துறை தொடர்ந்து செயற்பட்டு வருகிறது.

சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, 1891 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மதுரையில் ஒரு சட்டக் கல்லூரி 1974 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 1979-1980 ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளியில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றுமாக இரு அரசு சட்டக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. 1996-1997 ஆம் கல்வியாண்டில் திருநெல்வேலியில் ஒரு அரசு சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டது. 2006-2007 ஆம் கல்வியாண்டில் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழகத்தால் செங்கல்பட்டில் நடத்தப்பட்டு வந்த சட்டக் கல்லூரியை அரசு சட்டக் கல்லூரியாக அறிவித்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. தற்போது தமிழ்நாட்டில் ஆறு அரசு சட்டக் கல்லூரிகள் செயற்பட்டு வருகின்றன.

[2008 ஏப்ரல் 22

2008-2009 ஆம் கல்வியாண்டில் அரசு சட்டக் கல்லூரிகளில் ஒப்பளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளன:

| சட்டக் கல்லூரியின் பெயர் | மொத்தம் ஒப்பளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, சென்னை (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1840 |
| அரசு சட்டக் கல்லூரி, மதுரை (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1438 |
| அரசு சட்டக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1430 |
| அரசு சட்டக் கல்லூரி, கோயம்புத்தூர் (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1430 |
| அரசு சட்டக் கல்லூரி, திருநெல்வேலி (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1415 |
| அரசு சட்டக் கல்லூரி, செங்கல்பட்டு (இளநிலை சட்டப் படிப்பு மட்டும்) | 1045 |

அனைத்து அரசு சட்டக் கல்லூரிகளும் சொந்தக் கட்டடங்களில் செயற்பட்டு வருகின்றன. சென்னை, மதுரை ஆகிய அரசு சட்டக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கும், மாணவியர்களுக்கும் தனித் தனி விடுதி வசதி செய்து தரப்பட்டுள்ளன. கோயம்புத்தூர் அரசு சட்டக் கல்லூரியில் மாணவர்களுக்கும், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரிகளில் மாணவிகளுக்கும் விடுதி வசதி செய்து தரப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் அரசு சட்டக் கல்லூரியில் பயிலுகின்ற மாணவிகளுக்கான விடுதி கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரிகளில் பயிலுகின்ற மாணவர்களுக்கான விடுதிக் கட்டடங்கள் கட்ட, முறையே அபிஷேகபுரம் மற்றும் குலவணிகர்புரம் கிராமங்களில் நிலங்கள் ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரி மாணவர்களுக்கான விடுதிக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



2008 ஏப்ரல் 22]

ரூபாய் 80 இலட்சம் செலவில் செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரியில் கூடுதல் வகுப்பறைகள் கட்ட அனுமதிக்கப்படவுள்ளது.

**சான்றுறுதி அலுவலர்கள்:**

1952 ஆம் ஆண்டு சான்றுறுதி அலுவலர்கள் சட்டத்தின்படி முறையாவணங்களைச் சான்றொப்பமிடும் நோக்கத்திற்காகவும் மற்றும் சான்றுறுதி அலுவலரின் ஏற்பளிக்கப்பட்ட செயல்களுக்காகவும் சான்றுறுதி அலுவலர் அமர்த்தப்படுவர். 1-1-2008 அன்று உள்ளபடி இந்த அரசால் சான்றுறுதி அலுவலர்களாக அமர்த்தப்பட்டு இம்மாநிலத்தில் செயல்படுபவர்களின் எண்ணிக்கை 1,652 ஆகும்.

**மாநிலச் சட்ட ஆணையம்:**

மாநிலச் சட்ட ஆணையம் இதுவரையில் பின்வரும் பொருள் குறித்த ஏழு அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளது:-

(1) ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தின்போது இயற்றப்பட்ட “நீக்கறவு செய்யப்படாத தமிழ்நாடு ஒழுங்குமுறை விதிகள்”

(2) நீக்கறவு செய்யப்படாத தமிழ்நாடு மாநிலத்திற்குப் பொருந்துகிற மையச் சட்டங்கள்

(3) 1884 ஆம் ஆண்டு தமிழ்நாடு கிராம நீதிமன்றங்கள் சட்டத்தின் பொருள் வழி “கிராமத்தினர்களுக்கு நீதி வழங்குதல்”

(4) 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீடு சட்டம்

(5) 1867 மற்றும் 1891ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது வகைமுறைகள் விளக்கச் சட்டம்

(6) 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் கேலி தடைச் சட்டம்

(7) 1960 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாட்டுச்) சட்டம்

திருத்தியமைக்கப்பட்ட மாநிலச் சட்ட ஆணையத்தின் தலைவர், முழுநேர உறுப்பினர்கள் மற்றும் பகுதிநேர உறுப்பினர் பதவிக் காலம் 28-01-2002 பிற்பகலுடன் முடிவுற்று அவர்களது பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டனர். மாநிலச் சட்ட ஆணையம் இன்னும் திருத்தி அமைக்கப்படவில்லை.

## மாநில ஆட்சி மொழி (சட்டப்) பிரிவு:

1965 ஆம் ஆண்டு முதன்முதலாக மாநிலச் சட்ட ஆட்சி மொழி ஆணையம், சட்டச் சொற்களை அறுதி செய்து சட்டச் சொல் அகராதி வெளியிடுவதற்காகவும், மையச் சட்டங்களையும், மாநிலச் சட்டங்களையும், அவசரச் சட்டங்களையும் அவற்றின்படி செய்யப்படும் விதிகள் மற்றும் அறிவிக்கைகள் ஆகிய அனைத்தையும் தமிழில் மொழி பெயர்ப்பதற்காகவும் அரசால் அவ்வப்போது ஒப்படைக்கப்படலாகும் பிற பணி எதனையும் மேற்கொள்வதற்காகவும் அமைக்கப்பட்டது.

2. மாநிலச் சட்ட ஆட்சி மொழி ஆணையம், சட்டத் துறைச் செயலாளரின் ஒட்டுமொத்த மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டின் கீழும், சட்டத் துறை கூடுதல் செயலாளரின் தலைமையிலும், சட்டத் துறையின் ஒரு பிரிவாக 1992 ஆம் ஆண்டு சட்டத் துறையுடன் சேர்க்கப்பட்டது. இது மையச் சட்டங்களையும், மாநிலச் சட்டங்களையும் மொழி பெயர்த்து வருகிறது. மையச் சட்டங்களை மொழி பெயர்த்து புத்தகவடிவில் அச்சிடுவதற்கான செலவினை, மைய அரசு ஏற்றுக்கொள்கிறது. மாநிலச் சட்டங்களை மொழிபெயர்த்து அச்சிடும் செலவினை மாநில அரசு ஏற்றுக் கொள்கிறது.

## தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்:

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் தமிழ்நாட்டில் சட்டக் கல்வியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திடவும், சிறந்த சட்ட வல்லுநர்களை உருவாக்கும் நோக்கத்துடனும், தோற்றுவிக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம் 1997 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20 ஆம் நாளன்று அப்போதைய மேதகு குடியரசுத் தலைவர் திரு.கே.ஆர். நாராயணன் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகமானது 03-10-1997 அன்று முதல் செயல்படத் தொடங்கியது. தெற்காசிய நாடுகளில் சட்டக் கல்விக்கென தோற்றுவிக்கப்பட்ட முதல் பல்கலைக்கழகமாக இது திகழ்கின்றது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சட்டக் கல்லூரிகளையும் தன்னகத்தே ஒருங்கிணைத்து செயல்பட்டு வருவதால் சட்டக் கல்வியின் தரம் மேம்பட்டு வருகிறது.



சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் செங்கல்பட்டு ஆகிய இடங்களில் செயல்படும் ஆறு அரசு சட்டக் கல்லூரிகளும் மற்றும் சேலத்தில் செயல்படும் ஒரு தனியார் சட்டக் கல்லூரியும் இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

2007-2008 ஆம் கல்வியாண்டு முதல் தமிழ்நாட்டில் அனைத்துச் சட்டக் கல்லூரிகளிலும், முதன்முதலாக நுழைவுத் தேர்வற்ற சட்டப் பட்டப் படிப்பு மாணவர் சேர்க்கை வெற்றிகரமாக நடந்தேறியது. இதன்மூலம் நகர்ப்புற மற்றும் கிராமப்புற மாணவர்களிடையே நிலவிவந்த இடைவெளியும் இன்னலும் நீக்கப்பட்டு, மேல்நிலை கல்வியில் பெற்ற மதிப்பெண்களை மட்டுமே மையமாக வைத்து மாணவர் சேர்க்கை சிரமமின்றி நடந்தது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக வளாகத்தில் ஒரு பணியமர்த்து மையம் 12-04-2007 அன்று துவக்கி வைக்கப்பட்டது. அதன்மூலம் ஒருசில மாதங்களிலேயே சீர்மிகு சிறப்புச் சட்டப் பள்ளியில் பயின்ற பெரும்பாலான மாணவர்கள் அவர்களின் விருப்பத்திற்கிணங்க பல்வேறு தேசிய மற்றும் பன்னாட்டு நிறுவனங்களில் பணிகள் பெறும் வாய்ப்பினைப் பெற்றார்கள்.

இந்தப் பல்கலைக்கழகத்தின் நோக்கம், சட்டத் துறையில் அவ்வப்போது ஏற்படும் மாற்றத்திற்கேற்ப மாணவர்களுக்கு மாறிவரும் சட்டக் கோட்பாடுகளையும் சட்டச் சிந்தனைகளையும் புகட்டுவதேயாகும்., இந்த நோக்கினை நிறைவேற்றும்பொருட்டு அயல்நாட்டு சட்ட நிபுணர்களை இப்பல்கலைக்கழகத்திற்கு அவ்வப்போது வரவழைத்து சிறப்புச் சொற்பொழிவாற்றவும், கலந்துரையாடவும் வழிவகை செய்கிறது. இதன்மூலம் மாணவர்களுடைய அறிவையும் அனுபவத்தையும் விரிவுபடுத்தவும், வேலைவாய்ப்பைப் பெருக்கவும் இப்பல்கலைக்கழகம் உதவுகிறது. மாறி வரும் உலகச் சூழலுக்கேற்ப இப்பல்கலைக்கழகத்தினுடைய செயல்பாட்டைப் பன்னாட்டு அளவில் மேலும் விரிவாக்க சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்துடனும், அமெரிக்க ஐக்கிய நாட்டைச் சார்ந்த ஒக்லஹாமா பல்கலைக்கழகத்துடனும், லண்டன் மெட்ரோபாலிடன் பல்கலைக்கழகத்துடனும் மற்றும் கொரியாவைச் சார்ந்த யங்சான் பல்கலைக்கழகத்துடனும் இப்பல்கலைக்கழகம் புரிந்துணர்வு உடன்பாடுகள் செய்து கொண்டுள்ளது.

[2008 ஏப்ரல் 22

முனைவர் ஆராய்ச்சிக் கல்வி முதலில் சட்டக் கல்வி ஆசிரியர்களுக்கு மட்டும் பகுதிநேரப் படிப்பாக துவக்கப்பட்டது. 2007 ஆம் கல்வி ஆண்டு முதல் இது முழுநேரப் படிப்பாகவும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இப்பல்கலைக்கழகத்தில் 2007ஆம் ஆண்டு முதல் தொலைதூரக் கல்விமூலம் பி.ஏ.எல் பட்டப் படிப்பும், 7 முதுநிலை பட்டயப் படிப்புகளும் மற்றும் ஒரு சான்றிதழ்ப் படிப்பும் தொடங்கப்பட்டு வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இப்பல்கலைக்கழகத்தில் 2005 ஆம் ஆண்டு முதல் 4 முதுநிலை பட்டயப் படிப்பு (மாலை நேரம்) துவங்கப்பட்டு வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது.

24-12-2007 அன்று பல்கலைக்கழகத்தின் மூன்றாவது பட்டமளிப்பு விழா நடத்தப்பட்டது. பட்டமளிப்பு விழாவில் மேதகு தமிழக ஆளுநர் மற்றும் பல்கலைக்கழக வேந்தர் அவர்கள் தலைமை வகித்து 1,862 சட்டப் பட்டதாரிகளுக்கு பட்டங்கள் மற்றும் பட்டயங்களை வழங்கினார். விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் பட்டமளிப்பு விழாப் பேருரையாற்றினார்கள்.

இப்பல்கலைக்கழகத்தில் உயர் சக்தி நகல் எடுக்கும் கருவி வாங்குவதற்கும், சீர்மிகு சட்டப் பள்ளிக்கு அறைகலன்கள் வாங்குவதற்கும், முதுநிலை சட்டப் படிப்புத் துறை மற்றும் ஆராய்ச்சி படிப்புத் துறை நூலகத்திற்கு புத்தகங்கள் வாங்குவதற்கும் 2007-2008 ஆம் ஆண்டில் பகுதி இரண்டாவது திட்டத்தின்கீழ் ரூ.10 இலட்சம் அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

2006-2007 ஆம் ஆண்டில் சீர்மிகு சட்டப் பள்ளியில் துணைக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.54 இலட்சமும், பல்கலைக்கழகத்திற்கு அறைகலன்கள் மற்றும் நூலகத்திற்குப் புத்தகங்கள் வாங்குவதற்கு ரூ.24 இலட்சமும் மற்றும் பல்கலைக்கழக வளாகத்தில் மாணவிகளுக்கு தங்கும் விடுதி கட்டுவதற்கு ரூ.76 இலட்சமும் அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இதன் பணிகள் அனைத்தும் முடிவடையும் தறுவாயில் உள்ளன.



2008 ஏப்ரல் 22]

ஆஸ்திரேலியாவிலுள்ள மர்டாக் பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்ட சர்வதேச மாதிரி நீதிமன்றப் போட்டிகளில் பங்கேற்ற சட்டப் பல்கலைக்கழகத்தைச் சார்பாற்றம் செய்த இப்பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப் பள்ளி மாணவர்களுக்கு நிதி உதவியாக அரசானது ரூ.3.00 இலட்சம் அளவிலான தொகையை ஒப்பளித்துள்ளது. பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கெனத் தனியே ஒரு மாணவர் விடுதியும், பல்கலைக்கழகத்திற்கென 1,000 இருக்கைகள் கொண்ட அனைத்து வசதிகளுடன்கூடிய ஒரு கலையரங்கமும் கட்ட தீர்மானிக்கப்பட்டுள்ளது. முதுகலை மற்றும் ஆராய்ச்சிக் கட்டடத்தின் மூன்றாம் தளத்தில் ரூ.29.50 இலட்சத்தில் தேர்வுக் கூடம் கட்ட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கணினி ஆய்வகத்துடன்கூடிய ஓய்வறைக் பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் மற்றும் பார்வையாளர்களுக்கும் ரூ.35 இலட்சம் செலவில் கட்ட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப்பல்கலைக்கழகத்தில் சகல வசதிகளுடன்கூடிய தானியங்கும் மைய நூலகக் கட்டடம், தொலைதூரக் கல்வி இயக்ககத்திற்கென தனிக் கட்டடம் மற்றும் விருந்தினர் மாளிகைக் கட்டடம் ஆகியவற்றைக் கட்டுவதற்குத் தீர்மானம் செய்யப்பட்டுள்ளது.

ரூ.125 இலட்சம் மதிப்பில் முதுகலை கட்டடத்தில் மூன்றாவது தளம் கட்டவும், சீர்மிகு சட்டப் பள்ளியின் கட்டடத்தில் இரண்டாவது தளம் கட்டவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப்பல்கலைக்கழகம் ரூ.50 இலட்சம் செலவில் நூலகத்திற்கு வெளிநாடு மற்றும் உள்நாட்டுச் சட்டம் மற்றும் சட்டம் சார்ந்த பத்திரிகைகள், அறிவுசார் சட்டக் களஞ்சியங்கள் மற்றும் சட்டம் சார்ந்த மாதாந்திர ஏடுகள் ஆகியவற்றினை சீர்மிகு சட்டப் பள்ளி மாணவர்கள், முதுகலைப் பட்டப் படிப்பு மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்களின் பயன்பாட்டிற்காக வாங்குவதற்கு தீர்மானம் செய்துள்ளது.

இப்பல்கலைக்கழகம் ரூ.75 இலட்சம் செலவில் ஆராய்ச்சி மாணவர்கள் இணையதளத்தைப் பயன்படுத்துவதற்காக 35 கணினிகள் மற்றும் அதன் உதிரி பாகங்கள் வாங்கவும், மேலும் நூலகம் மற்றும் முதுநிலை ஆராய்ச்சித் துறைகளுக்காக நகல் எடுக்கும் இயந்திரம், எல்.சி.டி.திரை இயந்திரம் ஆகியவற்றை வாங்கவும் தீர்மானித்துள்ளது.

[2008 ஏப்ரல் 22

இப்பல்கலைக்கழகத்தில் சட்டம் மற்றும் இலக்கியம், சட்டம் மற்றும் பொருளாதாரம், சட்டம் மற்றும் அரசியல் அறிவியல், சட்டம் மற்றும் மருத்துவம் ஆகிய துறைகளில் புதியதாக ஆராய்ச்சிப் படிப்புகள் தோற்றுவிக்கப்படவுள்ளன.

இப்பல்கலைக்கழகம், இந்திராகாந்தி திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் சட்டப் பள்ளியுடன் இணைந்து சட்டப் படிப்பில் திறந்தநிலைப் படிப்புகளை தமிழகத்தில் உள்ள சட்டக் கல்லூரிகளில் தொடங்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

இப்பல்கலைக்கழகம், புது தில்லியில் உள்ள சர்வதேச சட்ட இந்திய கூட்டமைப்பின் உதவியுடன் தென்னிந்தியாவில் அதன் மையத்தை இப்பல்கலைக்கழகத்தில் தோற்றுவிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.



2008 ஏப்ரல் 22]

**2008-2009 ஆம் ஆண்டுகளுக்கான பகுதி-II திட்டப் பணிகளுக்கான விவரப் பட்டியல்**

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டப் பணிகளின் விவரம் | இறுதி நிலைச் செலவு | | | 2008-2009-ல் செலவு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | தொடர் செலவு | தொடராச் செலவு | மொத்தம் | வருவாய் கணக்கில் செலவு | மூலதனக் கணக்கில் செலவு | கடன் கணக்கில் செலவு | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1. | சட்டத் துறைக்கு கணினி, அச்சுப் பொறி மற்றும் துணை பாகங்கள் வாங்குதல் | – | 4.00 | 4.00 | 4.00 | – | – | 4.00 |
| 2. | அரசு சட்டக் கல்லூரிகளுக்கு புத்தகங்கள் வாங்குதல் | 0.0 | 12.00 | 12.00 | 12.00 | – | – | 12.00 |
| 3. | செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரியில் கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் கட்டுதல் | – | 80.00 | 80.00 | – | 32.00 | – | 32.00 |

| (1) (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
|---|---|---|---|---|---|---|---|
| 4. தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக சீர்மிகு சட்டப் பள்ளி, பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சித் துறை நூலகத்திற்குத் தேவையான புத்தகங்கள் வாங்குதல் | – | 5.00 | 5.00 | 5.00 | – | – | 5.00 |
| 5. தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகப் பணியாளர்களுக்காக உணவுக் கூடம் மற்றும் கழிப்பறை வசதிகளுடன்கூடிய கட்டடம் கட்டுதல் | – | 15.00 | 15.00 | – | 15.00 | – | 15.00 |
| மொத்தம் | – | 116.00 | 116.00 | 21.00 | 47.00 | – | 68.00 |

228379 சென்னை-600 008 நூலகம்